மொழியியல்

# சொல்லியல்

1

பெயரியல்

டாக்டர் ச. அகத்தியலிங்கம்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகம்
அண்ணாமலைநகர்

# மொழியியல்

# சொல்லியல்

## 1

## பெயரியல்

டாக்டர் ச. அகத்தியலிங்கம்

அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகம்
அண்ணாமலைநகர்

சண்முகம்பிள்ளை அகத்தியலிங்கம் (1929)
அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழக வெளியீடு - 10
அண்ணாமலைநகர் - 608 002
உரிமை ஆசிரியருக்கே
முதற் பதிப்பு 1979
விலை ரூ. 21

நூல் கிடைக்கும் இடங்கள் :

அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகம்
அண்ணாமலைநகர் 608 002

பாரி நிலையம்
59, பிராட்வே, சென்னை 600 001

Printed at:
Sri Vinayaga Press, Chidambaram

# முன்னுரை

மனிதனை மனிதனாக்குவது மொழி. மொழியின்றேல் மனிதன் இல்லை. அவன் எண்ணத்தில் ஊறும் எண்ணங்களுக்கெல்லாம் உருக்கொடுத்து உணர்ச்சிமிக்க ஒரு கருவியாக அவற்றை வெளிப்படுத்துவது மொழி. பகுத்தறிவு உடைய அவனுடைய சக்திபெற்ற ஒரு கருவியாக இயங்குவது அது. கவிதையாகட்டும்; இல்லை, கட்டுரையாகட்டும்; இல்லை, காப்பியமாகத்தான் ஆகட்டும். இவற்றுக்கெல்லாம் மூலமாக விளங்குவது மொழியே.

இத்தகைய மொழியை ஆராய்வதுதான் மொழியியல். அறிவியல் அடிப்படையில் அதன் அமைப்பை, அதன் ஆக்கத்தை, அது வெளிக்கொணரும் கருத்தை ஆராய்ந்து அக்குவேறு ஆணிவேறாகப் பிரித்துக் காட்டுவது மொழியியல். இதன் கண்ணும் எத்தனையோ பிரிவுகள். எனினும் விளக்கமுறைக்கு ஒரு தனி முக்கியத்துவம் உண்டு. விளக்கமுறையின்றேல் வரலாற்றுமுறை இல்லை; ஒப்புமுறை இல்லை.

இத்தகைய விளக்கமொழியியலும் (Descriptive Linguistics) ஒலியன் இயல், சொல்லியல், தொடரியல் என்ற மூன்று பிரிவுகளைக் கொண்டது. இவற்றுள் ஒலியன் இயல் ஒரு மொழியின் ஒலியமைப்பை ஒலிகளின் அடிப்படையில் ஆராய்வது. இதைப் போன்றே சொல்லியல் சொல்லின் அமைப்பையும் தொடரியல் தொடர்களின் அமைப்பையும் ஆராய்ந்து அறிவுறுத்துவது.

சொல்லியல் மொழிகளில் காணப்படும் சொற்களை அடிப்படை அலகுகளாகக் கொண்டு அவற்றின் அமைப்பை ஆராய்ந்து நிற்கும். எத்தனையோ நூற்றாண்டுகளாக வளர்ந்துவரும் இவ்வாராய்ச்சியிலும் எத்தனையோ மாற்றங்கள்; எத்தனையோ கோட்பாடுகள்; காலத்திற்குக் காலம் எத்தனையோ மாற்றம். தொல்

காப்பியம் கண்ட எல்லா நிலையையும் இன்று நாம் ஒத்துக்கொள் வதில்லை. எத்தனையோ மாற்றங்களை இன்று நாம் காண்கி றோம். எனினும் பலவற்றை அப்படியே ஒத்துக்கொள்ளுகிறோம். இதுபோன்றுதான் அரிஸ்டாட்டிலும் ஆட்டோ ஜெஸ்பர்ஸனும் கொண்ட கொள்கைகள் அனைத்தும் நமக்கு உடன்பாடு கொண் டவையல்ல. ஆயினும் அவர்கள் இன்றைய வளர்ச்சிக்கு வித் திட்டவர்கள்.

இந்நிலையில் சொல்லியல் கொள்கைகளையும் அவற்றின் அடிப்படையில் தமிழ்மொழியின் சொல்லியலையும் விளக்க எழுந்த நூலே இந்நூல். மேனாட்டு முறைகளையும் கீழ்நாட்டு எண்ணங் களையும் அடிப்படையாக வைத்து எழுந்த இந்நூல் தமிழ்ப் பெயர்ச்சொற்களின் அமைப்பையும் ஆக்கத்தையும் ஆராய்ந்து நிற்கும். பெயர் என்றால் என்ன? அதன் அமைப்பு என்ன? பெயர்ச்சொல்லின் வகைப்பாடுகள் எவை? எவை? அவற்றின் கார ணங்கள் என்னென்ன? பெயரில் காணப்படும் ஒட்டுக்கள் எவை? அவற்றின் பகிர்வுகள் என்ன? என்பன போன்ற செய்திகளை யெல்லாம் சுட்டிக்காட்டி நிற்கும் இந்நூல். இவற்றை அடிப் படையாக வைத்து பல்வேறு விளக்கங்களும் இதன்கண் காணப் படும்.

இந்நூல் சொல்லியல் கொள்கைகளும் விளக்கங்களும், பெய ரியல், எண்-பால் பகுப்பு, வேற்றுமை என்ற தலைப்புகளைக் கொண்டது. பலவேறு கொள்கைகளையும் அவற்றின் விளக்கங் களையும் மட்டுமே கொண்டது முதல் பகுதி. அமைப்பு மொழி யியல் அடிப்படையில் எழுதப்பட்ட இப்பகுதி சொல்லியல் ஆராய்ச் சியில் பின்பற்றப்படும் சில உண்மைகளை உணர்த்துவது. உருபு, உருபன், மாற்றுருபுகள் அவற்றின் வகைகள் போன்ற இன்னோ ரன்ன பிறவற்றை விளக்குவது. இது நிச்சயமாக சொல்லியல் ஆராய்ச்சிக்கு உதவுவது. மேனாட்டார் கண்ட பலவேறு எண்ணங் களைத் தொகுத்து வகுத்துத் தமிழ் எடுத்துக்காட்டுக்கள் தந்து விளக்கிச் செல்லுவது.

இரண்டாவது பகுதி பெயர்ச்சொல்லைப் பற்றியது. பெயர்ச் சொல் வகைப்பாடுகள், அவற்றின் ஆக்கங்கள், பதிலீடு பெயர்களின்

போன்ற இன்னோரன்ன செய்திகளைத் தருவது. விளக்கமுறை என்ற அடிப்படையில் தொல்காப்பியம் போன்ற இலக்கணங்கள் குறிததுச் செல்லுவதை இந்நூலின்கண் காணமுடியாது. அவ் வாறு கூறுவது என் நோக்கமும் அன்று. எங்கெங்கு மிகமிகத் தேவையோ அங்கு மட்டும்தான் தொல்காப்பிய எண்ணங்களைக் குறிப்பிட்டுள்ளேன். விளக்கத்திற்காகச் சில இடங்களில் வேறு மொழிகளின் பண்புகள் சிலவற்றை ஒப்புப்படுத்திக் குறிப்பிட்டுள் ளேன். இதே நிலையினைப் பிற பகுதிகளிலும் காணலாம்.

எண்–பால் பகுப்பு என்ற பகுதியில் இவ்விரு இலக்கணக் கூறு கள் பற்றிப் பரக்கக் குறிப்பிட்டுள்ளேன். இலக்கணப் பால்பகுப்பு, அவற்றின் காரணங்கள் போன்ற பல செய்திகள் இங்குக் குறிப் பிடப்பட்டுள்ளன. எண்–பால் காட்டும் பலவேறு உருபுகள், அவற் றின் பகிர்வுகள் போன்றவை நன்கு ஆராயப்பட்டுள்ளன.

நான்காவது பகுதி வேற்றுமை பற்றியது. வேற்றுமை என்றால் என்ன, அதன் புதைநிலை, புறநிலை, காரகம், விபக்தி, வேற்றுமையின் எண்ணிக்கை போன்ற பொதுப் பண்புகள் பல ஆராயப்படுகின்றன. இவ்வாராய்ச்சி வேற்றுமை பற்றிய சில புதிய எண்ணங்களைத் தரும் என்பதில் ஐயமில்லை. இவற்றை யடுத்துத் தமிழில் காணப்படும் பலவேறு வேற்றுமைகள் பற்றி ஆரா யப்படுகின்றது. பொருள் அடிப்படையில் அவற்றைப் பகுத்து ஆராய்தல் ஒரு புதிய திருப்பம் என எண்ணுகிறேன். தற்கால மொழியியல் கண்ணோட்டத்தில் அவற்றைத் தந்து நிற்பது இப் பகுதி. வேற்றுமைகளின் பலவேறு உருபுகள், அவற்றின் பகிர்வு கள் போன்றவை விளக்கமாகத் தரப்படுகின்றன. தமிழ்மொழியில் காணப்படும் வேற்றுமைகள் பற்றித் தொடரியல் அடிப்படையில் சில அடிப்படை வினாக்களை எழுப்பி அவற்றிற்குச் சில விளக்கங் களும் தர முயற்சித்திருக்கிறேன். இவை நிச்சயமாக தமிழ் மாண வர்களிடையே புதிய சில சிந்தனைகளை உருவாக்கும் என நம்புகிறேன்.

புதிய சிந்தனைகளுக்கு இந்நாட்டில் என்றும் வரவேற்பும் மதிப்பும் உண்டு என்பதை என்னுடைய இருபத்தைந்து ஆண்டு ஆசிரிய வாழ்க்கையில் நான் நன்கு உணர்ந்தவன். எனவேதான்

தொடர்ந்து பல நூல்களைத் தர என்னால் முடிந்தது. இந்நிலையில்தான் சொல்லியல் என்ற வரிசை நூலில் முதற்பகுதி உங்கள் கையில் வருகிறது. வினையியலும் இடையியலும் இரண்டாவது மூன்றாவது வரிசை நூல்களாக வர உள்ளன.

இந்நூல் உருவாக உதவியவர்கள் பலர். இவர்களில் பலர் என் மாணவர்கள். சிலர் என் உடனுறை ஆசிரியர்கள். டாக்டர் இரா. பாலகிருஷ்ணன், டாக்டர் சு. சக்திவேல், செல்வி எம். சுசீலா, மாணவநண்பன் மு. ஞானம் போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்களைப் போன்றே டாக்டர் செ. வை. சண்முகம், டாக்டர் ந. குமாரசுவாமி ராஜா, திரு, க. பாலசுப்பிரமணியம் போன்றவர்கள் அவ்வப்போது என் கருத்துக்குத் தெளிவு தந்துள்ளார்கள். ஆயினும் இவர்கள் எல்லாம் இந்நூலில் காணப்படும் குறைகளுக்குக் காரணமானவர்கள் இல்லை. இவர்களுக்கு என் நன்றி.

இந்நூல் வெளியிட அனுமதி தந்த அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தாருக்கு நான் என்றும் கடப்பாடு உடையேன். இந்நூலை அழகுற அச்சிட்டுத் தந்த வினாயகா அச்சகத்தாருக்கு என் நன்றி.

ச. அகத்தியலிங்கம்

# உள்ளுறை

முன்னுரை

உள்ளுறை

1. சொல்லியல் கொள்கைகளும் விளக்கங்களும் 1-72

| | | |
|---|---|---|
| 1.0 | மொழியும் அமைப்பும் | 1 |
| 1.1 | சொல்லமைப்பு | 2 |
| 1.2 | சொல்லியல் வரலாறு | 3 |
| 1.3 | சொல்லியலும் தொடரியலும் | 4 |
| 1.4 | சொல் | 8 |
| 1.5 | ஆக்கப்பாடும் திரிவும் | 9 |
| 1.6 | உருபன் | 12 |
| 1.7 | உருபன்களைப் பகுத்தறிதல் | 13 |
| 1.8 | உருபன்களின் வகைகள் | 17 |
| 1.8.1 | தனிநிலை உருபன் | 18 |
| 1.8.2 | கட்டுநிலை உருபன் | 19 |
| 1.9 | வேர்ச் சொற்களும் ஒட்டுக்களும் | 20 |
| 1.10 | வேர்ச்சொற்களும் அடிச்சொற்களும் | 21 |
| 1.11 | ஒட்டுக்கள் | 21 |
| 1.11.1 | முன்னொட்டு | 22 |
| 1.11.2 | பின்னொட்டு | 22 |
| 1.11.3 | உள்ளொட்டு | 23 |
| 1.11.4 | மேலொட்டு | 24 |
| 1.12 | தொடர் உருபனும் தொடரல் உருபனும் | 24 |
| 1.12.1 | தொடர் உருபன் | 24 |
| 1.12.2 | தொடரல் உருபன் | 24 |
| 1.13 | கூட்டுருபன்களும் குறைப்புருபன்களும் | 25 |
| 1.13.1 | கூட்டுருபன் | 25 |
| 1.13.2 | குறைப்புருபன் | 26 |

| | | |
|---|---|---|
| 1.13.3 | மாற்றீட்டு உருபன் | 27 |
| 1.14 | சூனிய உருபு | 27 |
| 1.15 | பதிலீடு | 28 |
| 1.16 | இரட்டிப்பு | 29 |
| 1.17 | உருபு, மாற்றுருபு, உருபன் | 30 |
| 1.18 | பலவேறு வகை ஒலி மாற்றங்கள் | 34 |
| 1.18.1 | ஓரினமாக்கம் | 36 |
| 1.18.1.1 | முன்வழி ஓரினாமக்கம் | 37 |
| 1.18.1.2 | பின்வழி ஓரினமாக்கம் | 38 |
| 1.18.1.3 | பரஸ்பர ஓரினமாக்கம் | 38 |
| 1.18.1.3.1 | தொடர் வழி ஓரினமாக்கம் | 39 |
| 1.18.1.3.2 | சேய்மைவழி ஓரினமாக்கம் | 39 |
| 1.18.1.4 | முழுநிலை ஓரினமாக்கம் | 40 |
| 1.18.1.5 | பகுதிநிலை ஓரினமாக்கம் | 40 |
| 1.18.2 | அண்ணமாக்கம் | 42 |
| 1.18.3 | வேற்றினமாக்கம் | 43 |
| 1.18.4 | ஈடுசெய் நீட்டம் | 44 |
| 1.18.5 | இடம் பெயரல் | 45 |
| 1.18.6 | அடிப்படை உருவமும் மாற்றுருபும் | 45 |
| 1.19 | உருபன்களையும் உருபுகளையும் கண்டறிதல் | 46 |
| 1.20 | மாற்றுருபுகளை விவரிக்கும் முறை | 48 |
| 1.20.1 | விதிமுறை | 48 |
| 1.20.2 | சேர்க்கைமுறை | 52 |
| 1.20.3 | சொல்லடுக்குமுறை | 55 |
| 1.21 | மாற்றும் மாற்றமும் | 59 |
| 1.21.1 | ஒலியன் அடிப்படை மாற்றம் | 60 |
| 1.21.2 | உருபு அடிப்படை மாற்றம் | 60 |
| 1.21.3 | மாற்றங்களின் வகைகள் | 60 |
| 1.22 | சொல்வகைப்பாடு | 61 |
| 1.23 | தமிழில் சொல்வகை | 64 |
| 1.24 | இலக்கணக்கூறுகள் | 66 |
| 1.24.1 | எண் | 68 |
| 1.24.2 | பால் | 69 |
| 1.24.3 | உயர்வுச்சிறப்பு | 70 |

| | | |
|---|---|---|
| 1.24.4 | வேற்றுமை | 70 |
| 1·24.5 | காலம் | 72 |
| 2. | பெயரியல் | 73-150 |
| 2.1 | பெயர்ச்சொல் | 73 |
| 2.2 | பெயர் வகைப்பாடு | 75 |
| 2.3 | தமிழ்மொழியில் பெயர்பாகுபாடு | 76 |
| 2.3.1 | சிறப்புப் பெயர் | 76 |
| 2·3.2 | பொதுப் பெயர் | 77 |
| 2.3.3 | இடப்பெயர் | 78 |
| 2.3.4 | நேரப்பெயர்கள் | 78 |
| 2.3.5 | பதிலிடு பெயர்கள் | 79 |
| 2.3.6 | பதிலிடுபெயர்களின் வகைகள் | 81 |
| 2.3.6.1 | மூவிடப்பெயர்கள் | 82 |
| 2.3.6.1.1 | தன்மை மூவிடப் பெயர் | 83 |
| | அ. தன்மை ஒருமை | 82 |
| | ஆ தன்மைப் பன்மை | 83 |
| | ஆ. 1 உளப்பாட்டுத் தன்மைப் பன்மை | 84 |
| | ஆ. 2 விலக்கீட்டுத் தன்மைப் பன்மை | 85 |
| 2.3 6.1.2 | முன்னிலை மூவிடப்பெயர் | 86 |
| | அ. முன்னிலை ஒருமைப் பெயர் | 86 |
| | ஆ. முன்னிலை பன்மைப் பெயர் | 87 |
| 2.3.6.13.1 | படர்க்கை மூவிடப்பெயர்கள் | 88 |
| 2 3.7 | சுட்டுப்பெயர்கள் | 89 |
| 2.3.7.1 | சேய்மைச் சுட்டுப் பெயர் | 92 |
| 2.3.7.2 | அண்மைச் சுட்டுப் பெயர் | 92 |
| 2.3·7.3 | இடைச் சுட்டுப்பெயர் | 92 |
| 2.3.8 | உயர்வுப் பதிலிடு பெயர்கள் | 93 |
| 2 3.8.1 | முன்னிலை உயர்வுப் பதிலிடு பெயர்கள் | 93 |
| 2.3.8.2 | படர்க்கை உயர்வுப் பதிலிடு பெயர்கள் | 94 |
| 2.3.9 | வினாப் பதிலிடு பெயர்கள் | 95 |
| 2.3.9.1 | யார் | 96 |
| 2.3.9.2 | ஆர் | 98 |
| 2.3.9.3 | எவன் | 98 |

| | | |
|---|---|---|
| 2.3.9.4 | எவள் | 99 |
| 2.3.9.5 | எவர் | 99 |
| 2.3.9.6 | என்ன | 99 |
| 2.3.9.7 | எது | 100 |
| 2.3.9.8 | எவை | 101 |
| 2.3.9.9 | எத்தனை | 101 |
| 2.3.9.10 | எவ்வளவு | 102 |
| 2.3.9.11 | எத்துணை | 102 |
| 2.3.10 | வரையறையில்லாப் பதிலிடு பெயர்கள் | 102 |
| 2.3.10.1 | யாரோ, யாரையோ.... | 105 |
| 2.3.10.2 | எவனோ, எவனையோ.... | 107 |
| 2.3.10.3 | எவளோ, எவளையோ ... | 108 |
| 2.3.10.4 | யாராவது, யாரையாவது.... | 109 |
| 2.3.10 5 | எதாவது, எதையாவது ... | 110 |
| 2.3.10.6 | என்னவாவது, என்னத்தையாவது.... | 111 |
| 2.3 10.7 | எவனாவது, எவனையாவது.... | 111 |
| 2.3.10.8 | எவையாவது, எவற்றையாவது.... | 113 |
| 2.3.11 | உள்ளடக்குப் பதிலிடு பெயர்கள் | 114 |
| 2.3.11.1 | யாரும், யாரையும்.... | 114 |
| 2.3.11.2 | எவனும், எவனையும்.... | 116 |
| 2.3.11.3 | எவளும், எவளையும் ... | 117 |
| 2.3.11.4 | எதுவும், எதையும்.... | 118 |
| 2.3.11.5 | என்னவும், என்னத்தையும்.... | 120 |
| 2.3.12 | பகிர்வுப் பதிலிடு பெயர்கள் | 120 |
| 2.3.12.1 | ஒவ்வொருவரும் | 120 |
| 2.3.12.2 | ஒவ்வொருவனும் | 122 |
| 2.3.12.3 | ஒவ்வொருத்தியும் | 123 |
| 2.3.12.4 | ஒவ்வொன்றும் | 124 |
| 2.3.13 | தற்சுட்டுப் பதிலிடு பெயர்கள் | 125 |
| 2.3.14 | பரஸ்பரப் பதிலிடு பெயர் | 127 |
| 2.3.15 | முழுமைப் பதிலிடு பெயர்கள் | 129 |
| 2.3.16 | உடைமைப் பதிலிடு பெயர்கள் | 130 |
| 2.4 | எண்ணுப் பெயர்கள் | 131 |
| 2.4.1 | எண்ணடை | 133 |

| | | |
|---|---|---|
| 2.4.2 | எண் | 134 |
| 2.4.3 | தமிழ் எண்ணுப்பெயர்களின் அமைப்பு | 135 |
| 2.4.3.1 | ஒன்று | 136 |
| 2.4.3.2 | இரண்டு | 138 |
| 2.4.3.3 | மூன்று | 138 |
| 2.4.3.4 | நான்கு | 139 |
| 2.4.3.5 | ஐந்து | 140 |
| 2.4.3.6 | ஆறு | 140 |
| 2.4.3.7 | ஏழு | 140 |
| 2.4.3.8 | எட்டு | 141 |
| 2.4.3.9 | ஒன்பது | 141 |
| 2 4.3.10 | பத்து | 142 |
| 2.4.3.11 | நூறு | 143 |
| 2.4.3.12 | ஆயிரம் | 144 |
| 2.4.3.13 | இலட்சம் | 144 |
| 2.4.3.14 | கோடி | 144 |
| 2.5.0 | பின்னங்கள் | 145 |
| 2.5 1 | அரை | 145 |
| 2.5.2 | கால் | 145 |
| 2.5.3 | முக்கால் | 145 |
| 2.5.4 | அரைக்கால் | 146 |
| 2.5.5 | மாகாணி | 146 |
| 2.6.0 | வரையறையில்லா எண்ணுப்பெயர்கள் | 146 |
| 2.6.1 | பலர் | 147 |
| 2.6.2 | சிலர் | 148 |
| 2.6.3 | பல | 149 |
| 2.6.4 | சில | 149 |

**3 எண், பால் பகுப்பு** **151-194**

| | | |
|---|---|---|
| 3.1.0 | எண் பகுப்பு | 152 |
| 3.1.1 | ஒருமை-பன்மைப் பகுப்பு | 153 |
| 3.1.2 | பெயரடைகளில் எண் வேற்றுமை | 155 |
| 3.1.3 | வேற்றுமையில் எண் வேற்றுமை | 156 |
| 3.1.4 | சிறப்புச் சுட்டுகளிலும் எண் வேற்றுமை | 157 |

| | | |
|---|---|---|
| 3.1.5 | பல்வேறு நிலைகளில் ஒருமை-பன்மைப் பகுப்பு | 158 |
| 3.1.6 | ஒருமை- பன்மை- கூட்டம் | 159 |
| 3.1.6.1 | ஒருமை- பன்மை- பெரு அளவு | 159 |
| 3.1.7 | ஒன்றுக்கு மேற்பட்ட பன்மைகள் | 159 |
| 3.1.8 | எண் வேற்றுமை இல்லா மொழிகள் | 159 |
| 3.1.9 | ஒருமை- இருமை- பன்மை | 161 |
| 3.1.10 | திரட்பெயர்களில் எண் வேற்றுமை | 161 |
| 3.1.11 | தமிழ்மொழியில் எண் பகுப்பு | 163 |
| 3.1.11.1 | ஒருமை | 164 |
| 3.1.11.2 | பன்மை | 164 |
| 3.1.11.3 | உளப்பாட்டுத் தன்மைப் பன்மை | 165 |
| 3.1.11.4 | விலக்கீட்டுத் தன்மைப் பன்மை | 166 |
| 3.2.0 | பால் பகுப்பு | 166 |
| 3.2.1 | உயிர்த்திணையும் உயிரல்திணையும் | 168 |
| 3.2.1.1 | உயிர்த்திணையில் வேறுபாடு | 169 |
| 3.3 | மனித இனம்- பிற உயிருள்ளவை- உயிரல்லாதவை | 170 |
| 3.4 | பெண்பால் - பிற பால் | 170 |
| 3.5 | ஆண்பால் – பிற பால் | 171 |
| 3.6 | பால் காட்டும் ஒட்டுக்கள் | 171 |
| 3.7 | பால் பகுப்பில் மாற்றம் | 172 |
| 3.8 | தமிழ் மொழியில் பால் பகுப்பு | 172 |
| 3.9 | ஆண்பால் பெயர்கள் | 173 |
| 3.9.1 | – அன் | 174 |
| 3.9.2 | – ஆன் | 174 |
| 3.9.3 | – வன் | 174 |
| 3.9.4 | – ஞன் | 174 |
| 3.9.5 | – காரன் | 175 |
| 3.9.6 | - மான் | 175 |
| 3.9.7 | – அவன் | 175 |
| 3.10 | பெண்பால் பெயர்கள் | 175 |
| 3.10.1 | – அள் | 176 |
| 3.10.2 | – த்தி | 176 |
| 3.10.3 | – ஆத்தி | 176 |
| 3.10.4 | – ச்சி | 176 |

| | | |
|---|---|---|
| 3.10.5 | – அச்சி | 176 |
| 3.10.6 | – ஐ | 176 |
| 3.10.7 | – ஆள் | 176 |
| 3.10.8 | – ஆட்டி | 176 |
| 3.10.9 | – மாட்டி | 177 |
| 3.10.10 | – காரி | 177 |
| 3.10.11 | –அவள் | 177 |
| 3.10.12 | –வி | 177 |
| 3.10.13 | – அம்மாள் | 177 |
| 3.11.0 | பலர்பால் பெயர்கள் | 178 |
| 3.11.1 | பலர்பால் ஒட்டுக்கள் | 179 |
| 3.11.1.1 | –அர் | 179 |
| 3.11.1.2 | –அர்கள் | 180 |
| 3.11.1.3 | – வர் | 181 |
| 3.11.1.4 | – வர்கள் | 181 |
| 3.11.1.5 | -ஞர் | 181 |
| 3.11.1.6 | – ஞர்கள் | 182 |
| 3.11.1.7 | – மார் | 182 |
| 3.11.1.8 | – மார்கள் | 183 |
| 3.11.1.9 | -கள் | 184 |
| 3.11.1.10 | -இர் | 184 |
| 3.11.2 | கூட்டுப் பன்மை | 184 |
| 3.12.0 | ஒன்றன்பால் பெயர்கள் | 185 |
| 3.13.0 | பலவின்பால் பெயர்கள் | 188 |
| 3.13.1 | பலவின்பால் ஒட்டுக்கள் | 190 |
| 3.13.1.1 | -க்கள் | 190 |
| 3.13.1.2 | -கள் | 190 |
| 3.14 | உயர்வு ஒருமைப்பெயர்கள் | 191 |
| 3.14.1 | உயர்வு ஒருமை ஒட்டுக்கள் | 192 |
| 3.14.1.1 | –அர் | 192 |
| 3.14.1.2 | -ஆர் | 193 |
| 3.14.1.3 | -வர் | 193 |
| 3.14.1.4 | -ஞர் | 193 |
| 3.14.1.5 | அவர்கள் | 194 |

| | | |
|---|---|---|
| 3.14.1.6 | அடிகள் | 193 |
| 3.14.1.7 | அம்மையார் | 194 |
| 3.14.1.8 | அம்மையார் + அவர்கள் | 194 |

**4. வேற்றுமைகள் 195-261**

| | | |
|---|---|---|
| 4.0 | வேற்றுமையும் வேற்றுமை என்ற பெயரும் | 195 |
| 4.0.1 | வேற்றுமை உருபும் பிற ஒட்டுக்களும் | 197 |
| 4.0.2 | பொருள் காட்டும் முறை | 198 |
| 4.0.3 | வேற்றுமைகளின் எண்ணிக்கை | 198 |
| 4.0.4 | வேற்றுமை ஏற்கும் பெயர்கள் | 200 |
| 4.0.5 | வேற்றுமை உருபும் அவை வரும் இடமும் | 201 |
| 4.0.6 | வேற்றுமைப் பொருளும் காட்டும் வழியும் | 202 |
| 4.0.7 | காரகம், விபக்தி | 203 |
| 4.0.8 | புதைநிலையும் புறநிலையும் | 204 |
| 4.0.9 | ஓர் ஒருபு, பல பொருள்கள் | 205 |
| 4.0.10 | வேற்றுமை உருபுகளும் அவற்றின் முக்கியத்துவமும் | 208 |
| 4.1 | எழுவாய் வேற்றுமை | 210 |
| 4.2 | செயப்படுபொருள் வேற்றுமை | 217 |
| 4.2.1 | - ஐ | 222 |
| 4.2.2 | - ∅ | 222 |
| 4.3 | கருவி வேற்றுமை | 223 |
| 4.3.1 | ஆயுத வேற்றுமை | 224 |
| 4.3.1.1 | உருபுகள் | 226 |
| 4.3.2 | பொருள் வேற்றுமை | 226 |
| 4.3.2.1 | உருபுகள் | 228 |
| 4.3.3 | காரணவேற்றுமை | 229 |
| 4.3.3.1 | உருபுகள் | 230 |
| 4.3.3.1.1 | -ஆல் | 230 |
| 4.3.3.1.2 | -இல் | 230 |
| 4.3.4 | உடனிகழ்ச்சி வேற்றுமை | 230 |
| 4.3.4.1 | உருபுகள் | 232 |
| 4.4 | குறிவேற்றுமை | 234 |
| 4.4.1 | உடைமைப்பொருள் | 235 |
| 4.4.2 | உறவுப்பொருள் | 237 |

| | | |
|---|---|---|
| 4.4.3 | உணர்வுப்பொருள் | 237 |
| 4.4.4 | பயனுறுபொருளும் நோக்கப்பொருளும் | 238 |
| 4.4.5 | உருபுகள் | 239 |
| 4.4.2.1 | -க்கு | 239 |
| 4.4.5.2 | -அக்கு | 240 |
| 4.4.5.3 | -உக்கு | 240 |
| 4.5 | -இன் வேற்றுமை | 240 |
| 4.6 | உடைமை வேற்றுமை | 241 |
| 4.6.1 | உடைமைப் பொருள் காட்டுபவை | 245 |
| 4.6.2 | வேறு பொருள் காட்டுபவை | 246 |
| 4.6.3 | உடைமை வேற்றுமை வகைகள் | 246 |
| 4.6.3.1 | தற்கிழமை | 246 |
| 4.6.3.1 | பிறிதின் கிழமை | 247 |
| 4.6.4 | உருபுகள் | 247 |
| 4.6.4.1 | -அது | 248 |
| 4.6.4.2 | -உடைய | 248 |
| 4.6.4.3 | -∅ | 248 |
| 4.6.5 | -இன், உடைமை வேற்றுமை உருபா? | 246 |
| 4.7 | இடவேற்றுமை | 250 |
| 4.7.1 | இடப்பொருளும் காலப்பொருளும் ஒரே வேற்றுமைப் பொருளா? | 253 |
| 4.7.2 | இவ் வேற்றுமை காட்டும் உருபுகள் | 256 |
| 4·7.2.1 | - இல் | 257 |
| 4.7.2.2 | - இடம் | 257 |
| 4.7.2.3 | - இடத்தில் | 258 |
| 4.7.2.4 | - உள் | 258 |
| 4.8 | விளி வேற்றுமை | 258 |
| 4.8.1 | - அன் > ஆ | 260 |
| 4.8.2 | - ஏ | 261 |
| 4.8.3 | - இ > ஈ | 261 |

உதவிய நூல்களும் கட்டுரைகளும் 263-267

பொருளடைவு 269-280

# 1

# சொல்லியல் கொள்கைகளும் விளக்கங்களும்

## 1.0 மொழியும் அமைப்பும்

மனிதர் பேசும் மொழிகள் அனைத்திலும் பலவேறு வாக்கியங்கள் உள்ளன என்பதை நாம் அறிவோம். இவ்வாக்கியங்கள் அனைத்தும் பலவேறு சொற்களால் ஆனவை என்பதும் நாம் அறிந்த செய்தியாகும். இச்சொற்களும் ஒரு வகையான கட்டுக்கோப்பை உடைய நிலையில்தான் வாக்கியங்களாக உருவாகின்றன என்பதும், வெறும் சொற்களின் சேர்க்கையே வாக்கியங்களை உருவாக்கிவிடும் என்பது உண்மையன்று என்பதும் இங்குக் குறிப்பிடத்தக்கவை.

அவன் கண்ணனை அடித்தான்

என்பது இலக்கண வாக்கியம். ஆனால்,

அவன் கண்ணனை நடந்தான்

என்பது இலக்கணப் பிழையான வாக்கியம். ஒருவன் தமிழ் மொழியிலுள்ள சொற்களை எல்லாம் தெரிந்திருந்தாலும், வாக்கியத்தின் அமைப்பினைத் தெரிந்திராவிடின், தமிழ் பேசுதல் முடியாத காரியமாகும். அகராதியில் காணப்படும் சொற்களை மட்டும் தெரிந்து கொண்டால் போதாது; சொற்களை வாக்கியமாக அமைக்கும் திறன் இருக்க வேண்டும். இதற்குக் காரணம் வாக்கியங்கள் ஒரு திட்டவட்டமான அமைப்பைக் கொண்டிருப்பதே ஆகும்.

He beatiful saw woman a

என்பதில் காணப்படும் சொற்கள் அனைத்தும் இலக்கணவரம்பிற்கு உட்பட்டவையே. ஆனால் அவற்றின் சேர்க்கை நல்ல வாக்கி

யத்தை உருவாக்கவில்லை திட்டவட்டமான ஒரு அமைப்பில் அவை வந்தால்தான், நல்ல வாக்கியங்களாக இருக்கும்.

இதைப்போன்றே சொற்களும் தனித்தனி அமைப்பைக் (structure) கொண்டவை. இவ்வமைப்பும் மொழிக்கு மொழி வேறுபாடு கொண்டது. தமிழ் மொழிச் சொற்கள் அமைப்பைப் போல ஆங்கில மொழிச் சொற்களின் அமைப்பு இருப்பதில்லை. நடந்தான் என்ற சொல்லில் (நட + ந்த் + ஆன்) இறந்தகால இடைநிலையை நடுவிலும், walked என்ற சொல்லில் இறுதியிலும் காண்கிறோம். இதை மாற்றிவிட்டால் (நட + ஆன் + ந்த்) தமிழ்ச் சொல்லாகாது. இதைப்போன்றே அமெரிக்க-இந்திய மொழிச் சொற்களின் அமைப்பும், பின்னிஷ் மொழிச் சொற்களின் அமைப்பும் ஒன்றுபோல் அமைவதில்லை. மொழிக்கு மொழி சொல்லமைப்பில் வேறுபாட்டினைக் காணலாம்.

## 1.1 சொல்லமைப்பு

மொழிகளில் காணப்படும் சொற்களின் உள் அமைப்பை (internal structure) ஆராய்வதே சொல்லியல் எனப்படும்.[1] இதனை ஆங்கிலத்தில் Morphology என்பர். இச்சொல் கி.பி ஆயிரத்து எண்ணூற்று அறுபதில் இப்பொருளில் ஆங்கில மொழியில் பயிலத் தொடங்கியது. எனினும், இதற்கு முன்னரே விலங்கியல் துறையில் ஆயிரத்து எண்ணூற்று முப்பது முதலே உபயோகப்படுத்தப்பட்டது என்றும், டார்வின் கொள்கைக்கு மொழியியல் துறையில் ஏற்பட்ட செல்வாக்கினால், இச்சொல் மொழியியல் துறையிலும் வந்து புகுந்தது என்றும் கூறுவர் (Matthews, 1974: 2-3). இச்சொல் 'study of forms' என்ற பொருளைக் குறிக்கும். எனவே, சொல்

1. Morphology deals with the internal structure of words.
—Bloomfield, 1933 : 194.
Morphology is the study of morphemes and their arrangements in forming words. Morphemes are the minimal meaningful units which may constitute words or parts of words.
—Nida, 1946:1.
Etymologically speaking, 'morphology' is simply the study of forms.
—Loyns, 1968 : 184
Morphology deals with the structure of words.
—Bloch, 1972: 53.

வியல் என்பது சொற்களின் உருவ அமைப்பினைப் பற்றிப் பேசுவது எனக் கருதலாம். தமிழ் மொழியில் இதனைச் சொல் லியல் என்றும் உருபனியல் என்றும் குறிப்பிடுவர். உருபனியல் என்ற சொல் உருபன எனப் புதிதாக ஆக்கப்பட்ட சொல்லிலிருந்து உருவானதாகும். இச்சொல் Morpheme என்ற ஆங்கிலச் சொல்லின் தமிழாக்கமாகும். எனினும், சொல் (சொல்லதிகாரம்) என்ற பழந் தமிழ்ச் சொல்லை அடிப்படையாகக் கொண்ட நிலையில் தான் சொல்லியல் என்ற சொல் இங்கும் பயன்படுத்தப்படுகிறது.

## 1.2 சொல்லியல் வரலாறு

மொழியியல் வரலாற்றை நோக்கின் இன்று சொல்லியல் ஆராய்ச்சி மிக முக்கியமான ஒரு இடத்தை இழந்து விட்டது எனக் கருதலாம். தொடரியல் (syntax), சொற்பொருளியல் (semantics) போன்ற பகுதிகள் இன்று விரிவாக ஆராயப்படுகின்றன. இதற்குப் பலவேறு காரணங்கள் உண்டு. இன்றைய மொழியியல் ஒரு அறிவியல் துறையாக இந்த நூற்றாண்டில் வளர்ந்த நேரத்தில், முதன் முதலில் ஒலியியல் (phonetics), ஒலியன் இயல் (phonemics) ஆகியவற்றில் மிகக் கவனம் செலுத்தப்பட்டது. முன்னர்க் குறிப் பிட்டபடி ஆயிரத்துத் தொள்ளாயிரத்து நாற்பது வரையிலும் இவ் விரு பகுதிகளும் நன்கு ஆராயப்பட்டன. சொல்லியலைப் பொறுத்த மட்டில் போயாஸ், சபீர் போன்ற அமெரிக்க அறிஞர்கள் அமெரிக்க-இந்திய மொழிகளை ஆராயும் போது, அம்மொழிகளின் அமைப் பினை அறியச் சில வழிமுறைகளை வகுத்தனர். இம்முறைகளை விதி முறை (item and process–IP) என்பர். பின்னர் அமைப்பு மொழியியலாளர்களான புளூம்பீல்டு, பிளாக் போன்றவர்கள் சேர்க்கை முறையினை (item and arrangement–IA) உருவாக்கினர். மரபு இலக்கண அறிஞர்கள் சொல்லடுக்கு (word and paradigm -WP) முறையைப் பயன்படுத்திச் சொல்லியல் நுட்பங்களை ஆராய்ந் துள்ளனர். கி.பி. ஆயிரத்துத் தொள்ளாயிரத்து முப்பது முதல் ஆயிரத்துத் தொள்ளாயிரத்து ஐம்பது வரையிலும் சொல்லியல் ஆராய்ச்சியில் நல்லதொரு வளர்ச்சி ஏற்பட்டது. பலவேறு சொல் லியல் எண்ணங்களையும் கருத்துக்களையும் அமைப்பு மொழியியல் அறிஞர்கள் (structural linguists) வளர்த்தனர். ஹாரிஸ் (Harris, 1951), புளூம்பீல்டு (Bloomfield, 1933), பிளாக் (Bloch, 1972),

ஹாக்கட் (Hockett, 1958). நைடா (Nida, 1946) போன்ற பலவேறு அறிஞர்கள் சொல்லியல் கொள்கைகளை உருவாக்கினர். இவர்களைப் போன்ற அறிஞர்களின் கைவண்ணத்தில்தான் சொல்லியல் இன்றைய வாழ்வையும் வளர்ச்சியையும் கண்டது எனலாம். நைடா எழுதிய சொல்லியல் (*Morphology: The Descriptive Analysis of words*) என்ற நூல் இன்றும் பயனுள்ள ஒன்றாகக் கருதப் படுகிறது.

## 1.3 சொல்லியலும் தொடரியலும்

*சொல்லியலும் தொடரியலும் இலக்கணத்தின் அடிப்படைப் பகுதிகள்.*

சொல்லியலைப் போன்றே தொடரியலும் மொழிகளின் இலக்கணத்தின் மிக முக்கியமான ஒரு கூறு. ஒரு மொழியின்கண் காணப்படும் பலவேறு வாக்கியங்களின் அமைப்பினை ஆராய்வது தொடரியல். வாக்கியங்களில் காணப்படும் பலவேறு உறுப்புக்களின் ஆக்கம், அவற்றிடையே காணப்படும் தொடர்பு, அவற்றினால் உணரப்படும் பொருள், அப்பொருள் தருவதற்குரிய அடிப்படைக் காரணங்கள், வாக்கியங்களின் புதைநிலை அமைப்பு (deep structure), புறநிலை அமைப்பு (surface structure) போன்றின்னோரன்னவற்றை ஆராய்வதுதான் தொடரியல்.

ஒன்றிலிருந்து மற்றொன்றைப் பிரித்து ஆராய்வது மிகக் கடினம் எனக் கருதுவர் மொழியியல் அறிஞர்கள். அமைப்பு மொழியியலாளர்கள் சொல்லியல், தொடரியல் எனப் பிரித்துக் கருதினும். ஒன்றோடு ஒன்று கலந்து கிடக்கின்ற நிலையினை நன்கு உணர்ந்திருந்தனர். நைடா இதுபற்றிக் கூறும்போது.

> It would be quite wrong to assume, however, that morphology and syntax constitute airtight compartments in the structure of any language (Nida, 1946: 1)

என்றும், ஹாக்கட்

> The line of demarcation between morphology and syntax is not always as clear-cut as our discussion so far may have suggested (Hockett, 1958:178)

என்றும் கூறுவது இங்குக் கருதத்தக்கன. இந்நிலைக்குப் பல்வேறு காரணங்கள் உண்டு.

சில மொழிகளில் காணப்படும் சொற்களை ஆராய்ந்தால், இவ்வுண்மை நன்கு தெரியவரும்; ஒரு பகுதியை ஆராய்வதற்கு மற்றொரு பகுதியும் துணைபுரியும் என்பதும் தெரியவரும்[1]. மாற்றிலக்கணத்தார் தொடரியலிலிருந்து சொல்லியலை மட்டுமின்றி, ஒலியியலையும் பிரிப்பது தவறு எனக் கூறுவது கவனிக்கத் தக்கதாகும்.


பொதுவாக ஒட்டுக்களைத் தனிச் சொற்களோடு இணைப்பது தான் வழக்கம். இதன் அடிப்படையில்தான் ஒட்டு என்கின்றோம். ஆனால்,

The king of England's

போன்றவற்றில் – s என்ற ஒட்டு பெயர்த்தொடருடன் இணைக்கப்பட்டிருத்தல் காணலாம். இந்நிலையில் 'The king of England' போன்றவற்றைச் சொல் எனச் சொல்வதா? அல்லது தொடர் என்று சொல்வதா? என்று ஒரு வினா எழுவது இயற்கை. மேலும், இது சொல்லியலின் கீழ் ஆராயப்படுமா? அல்லது தொடரியலின் கீழ் வருமா? என்பதும் கேள்விக்குரிய ஒன்றாகும். இத்தகைய ஒரு நிலையினைப் பல தொடர்களில் காணலாம்.

twenty–eighth
three hundred seventy–fourth
the mayor of Boston's

போன்றவை இந்நிலையினைக் காட்டும். -th என்ற ஒட்டு ஒரு சொல்லுடன் இணையாமல், ஒருதொடரோடு இணைந்திருப்பதைக் காண்கிறோம்.




1. In some languages there is constant overlapping of structure, and in a few instances it seems almost impossible to draw a line between word structure and phrase structure.
—Nida, 1946:1.

என்ற பிரிப்பு -th என்ற ஒட்டு ஒரு சொல்லுடனும் (ninth), ஒரு தொடருடனும் (twenty-eighth) இணையும் நிலையில், இவற்றை ஒரு தொடராகக் கொள்வதா? அல்லது ஒரு சொல்லாகக் கொள் வதா? என்ற குழப்பம் ஏற்படுகிறது.

சில மொழிகளை ஆராயின், சொல்லியல் மிக எளிமையாகக் காணப்படும். சீன மொழி ஓரசை மொழி (monosyllabic) எனக் கூறுவர். இத்தகைய மொழிகளின் சொற்களில் ஒரு உருபனே காணப்படும். இந்நிலையில் ஆங்கிலம், தமிழ் போன்ற மொழி களிலுள்ள சொற்களின் அமைப்பினை ஆராய்வது போல் ஆராய் தல் முடியாது. சொல்லின் உருபன்களின் வரிசைமுறை, அவற்றின் ஆக்கம் போன்ற நிலை இங்கு இல்லை. எனவே, சொல்லியல் என்ற நிலை சீன மொழியைப் பொறுத்தமட்டில் இல்லை. இம் மொழிகளில் தொடரியல்தான் முக்கியமானது. எனவே சொல்லியல், தொடரியல் என்ற பிரிவு இம்மொழிகளைப் பொறுத்தவரை அர்த்த மற்ற ஒன்றாக மாறிவிடுகிறது. ஒரு மொழி சிக்கல் நிறைந்த சொல்லியலைக் கொண்டிருந்தால், தொடரியலில் வாக்கியங்களி டையே காணப்படும் சொற்களின் வரிசைமுறை எப்படி வேண்டு மானாலும் இருக்கலாம். எடுத்துக்காட்டாகத் தமிழ் மொழியின் சொல்லியல் வளம்பெற்றது. பலவேறு இலக்கணக் கூறுகள், பல வேறு ஒட்டுக்களால் காட்டப்படுவன. ஐகார வேற்றுமையை உணர்த்துவதற்கு 'ஐ' உருபைப் பயன்படுத்துகிறோம். எனவே வாக்கியங்களில் காணப்படும் வரிசைமுறையில் ஒரு நெகிழ்ச்சி ஏற்படுகிறது.

நான் இராமனைப் பார்த்தேன்
இராமனை நான் பார்த்தேன்
பார்த்தேன் நான் இராமனை
நான் பார்த்தேன் இராமனை
இராமனைப் பார்த்தேன் நான்

என்றெல்லாம் வரிசைமுறையை மாற்றி விடுகிறோம். ஆனால், ஆங்கில மொழியில் இது முடியாத ஒன்றாகும்.

John saw Bill

என்ற வாக்கியத்தை

Bill saw John

என்று மாற்றினால், பொருள் மாறிவிடும். இந்நிலையில் ஒரு மொழியில் தொடரியலால் காட்டப்படும் உண்மைகள் மற்றொரு மொழியில் சொல்லியலால் காட்டப்படுகின்றன.

ஒரே மொழியில்கூடச் சில இலக்கணக் கூறுகள் சொல்லியலாலும் தொடரியலாலும் காட்டப்படுதல் உண்டு. தமிழ் மொழியில் காணப்படும் நிபந்தனை எச்சம், எதிர்மறை போன்றவை ஒரு சொல்லாலும், ஒன்றுக்கு மேற்பட்ட சொல்லாலும் காட்டப்படுகின்றன.

வந்திலன் — வந்தான் இல்லை

வாரான் — வர மாட்டான்

வந்தால் — வந்தான் ஆனால்

வரின் — வந்தான் ஆயின்

போன்றவை இப்பண்பினைக் காட்டும்.

இன்னும் சில இலக்கணக் கூறுகளில் உடன்பாடு ஒரே சொல்லில் இருக்க, எதிர்மறை இரு சொல்லில் வரக் காணலாம்.

வர — வராமல் இருக்க

வந்தால் — வராமல் இருந்தால்

வரா விட்டால்

போன்றவை இப்பண்பைக் காட்டும்.

எஸ்கிமோ, மினோமினி போன்ற மொழிகளில் காணப்படும் பல வாக்கியங்கள் ஒரே சொல்லால் ஆக்கப்பட்டிருக்கக் காணலாம்.

'நான் அவனுக்கு உணவு கொடுத்தேன்' என நாம் ஒரு வாக்கியத்தில் கூறுவதை மினோமினி மொழியினர்,

*/neta-h amaw/* 'I feed him'

என ஒரிரு சொல்லில் கூறிவிடுவர். இதைப் போன்றே எஸ்கிமோ மொழியினர் 'ஒருவன் தங்குவதற்கேற்ற இடம் எதையும் கண்டு பிடிக்கவில்லை' எனக் கூறுவதை,

*/ qusuersarfigssarsingitdulinarnarnarpoq /*

என ஒரு சொல்லில் கூறிவிடுவர். இந்நிலையில் இவற்றை ஒரு சொல்லாக ஆராய்வதா? அல்லது ஒரு வாக்கியமாக ஆராய்வதா? என்ற நிலை ஏற்படும். எனவே, சொல்லியலும் தொடரியலும் மயங்கக் காண்கிறோம். இதனால்தான் அமைப்பு மொழியியலா ளர்கள் இவ்விரண்டையும் தனித்தனியாக எண்ணிப்பார்க்க முடி யாது என்று கருதினர். முன்னர்க் குறிப்பிட்டது போல நைடா,

> It would be quite wrong to assume, however, that morphology and syntax constitute airtight compartments in the structure of any language (Nida, 1946:1)

எனக் கூறிப் போந்தார்.

## 1.4 சொல் (Word)

மனிதன் பேசும் மொழிகளில் பலவகையான சொற்களைக் காண்கிறோம். ஓரசைச் சொல, ஈரசைச் சொல் எனப் பிரிப்பது போன்று ஒருருபன் சொல் (காது), ஈருருபன் சொல் (காதுகள்) என்றும் சொற்களைப் பிரிக்க முடியும். சொற்கள் பொருள் தருவன என்பதை நாம் அறிவோம். பொருளைத் (lexical meaning) தந்து நிற்கும் சொற்கள் ஒன்றுக்கு மேற்பட்ட பொருள்களையும் தந்து நிற்கும். 'பெட்டி' எனக் கூறும்போது அது ஒரு பொருளைத் தரும். 'பெட்டியை' என்று குறிப்பிடும்போது 'பெட்டி' என்ற பொருளோடு ஐகாரவேற்றுமைப் பொருளையும் (grammatical meaning) தருதல் காணலாம். எனவே,'பெட்டியை' என்பது ஒரு சொல் என்றாலும், இரு பொருளைத் தருகிறது. இதைப் போன்றே 'வந்தான்' என்று சொல்லும்போது வருகிற தொழிலோடு கடந்த காலத்தை யும், அத்தொழிலைச் செய்தவன் ஒரு ஆண்மகன் என்பதையும், அது படர்க்கை இடத்தில் உள்ளது என்பதையும் நாம் உணரமுடியும். எனவே, ஒரேசொல் ஒன்றிற்கு மேற்பட்ட பொருள்களையும் தந்து

நிற்கக் காண்கின்றோம். ஒவ்வொரு பொருளையும் இவ்வாறு சுட்டு கின்ற நிலையிலுள்ள ஒன்றையோ அல்லது ஒன்றுக்குமேற்பட்ட உரு பன்கள் அடங்கியதையோ 'சொல்' என அழைப்பர். சொல் தனியாக நிற்கவல்லது என்பதும், எழுதும்போது இரண்டு சொற்களிடையே இடம்விட்டு எழுதுவது இயற்கை என்பதும் உணரற்பாலன.[1]

### 1.5 ஆக்கப்பாடும் திரிவும் (Derivation and Inflection)

சொற்களில் காணப்படும் ஒட்டுக்களையும் இரண்டு வகையாகப் பிரிக்கலாம். சில ஒட்டுக்கள் சில சொற்களுடன் இணைந்து புதிய சொல் வகையாக மாறி நின்று, புதிய சொல் ஆக்கத்திற்குத் துணை செய்கின்றன. எனவே, இத்தகைய நிலையை ஆக்கப்பாடு (derivation) என்பர். இன்னும் சிலவொட்டுக்களோ புதிய சொற்களை உருவாக்காமல், இலக்கணக் கூறுகளை உருவாக்கு கின்றன. இந்நிலையில் இதனைத் திரிவு (inflection) என்பர். எனவே, இவ்வொட்டுக்களை இரண்டு வகையாகப் பிரிப்பர்.

(1) திரிவொட்டுக்கள் (inflectinal suffixes)
(2) ஆக்க வொட்டுக்கள் (derivational suffixes)

மொழிகளில் காணப்படும் பலவேறு ஒட்டுக்களை ஆராயின், சில தெளிவான பண்புகள் தெரியவரும். ஒருசில ஒட்டுக்களைச் சில அடிச்சொற்களுடன் இணைக்கும் போது, அவற்றின் பணி மாறு பட்டதாக இருக்கும்.

கொல், நட போன்ற சொற்களுடன் -ஐ, -ப்பு ஆகிய ஒட்டுக் களை இணைக்கும் போது கொலை, நடப்பு என்ற சொற்கள் உருவாகின்றன. இச் சொற்கள் பெயர்ச் சொற்கள் என்பதை நாம் அறிவோம் சொல்லியல் அடிப்படையாலும், தொடரியல் அடிப் படையாலும் இவை பெயர்ச் சொற்களாகும் அந்தக் கொலை, அவனுடைய நடப்பு, கொலையால், நடப்பினால் போன்றவை இப் பண்பினைக் காட்டும். இந்நிலையில் இவ்வொட்டுக்கள் வினைச் சொல்லைப் பெயர்ச் சொல்லாக மாற்றி நிற்கக் காண்கிறோம்.

ஆனால் கொன்றான், நடந்தான் போன்ற சொற்கள் கொல், நட ஆகிய சொற்களுடன் கடந்த காலம் காட்டும் ஒட்டுக்களையும்

1. The word is a minimum free form.
—Lyons, 1968: 201.

விகுதியையும் இணைத்த நிலையில் உருவாவன. இச்சொற்கள் பெயர்ச்சொற்களாக மாறாமல் வினைச்சொல்லாகவே உள்ளன. எனவே, இவ்வொட்டுக்களுக்கும், -ப்பு, -ஐ ஆகிய ஒட்டுக்களுக்கும் இடையே ஒரு வகை வேறுபாட்டினைக் காண்கிறோம். இந் நிலையில் இவற்றை முறையே ஆக்கவொட்டுக்கள், திரிவொட்டுக் கள் என்று கூறுவர்.

ஆக்கவொட்டுக்கள் பொதுவாக அடிச்சொற்களுடன் (stem) இணைந்து, வேறுவகையான சொற்களை உருவாக்கும். இத்தகைய மாற்றங்களையே ஆக்கப்பாடு (derivation) எனக் கூறுவர். ஒரு வகைச் சொல்லிலிருந்து இன்னொரு வகைச் சொல்லை உருவாக்கும் மாற்றத்தையே இப்பெயரால் அழைக்கின்றனர். இவை புதுவகைச் சொற்களை உருவாக்குவதால், இச்சொற்கள் பொதுவாக அகரா தியில் இடம் பெறும். தமிழ் அகராதியைப் பொறுத்தமட்டில் நட, நடப்பு, நடத்தை போன்ற சொற்களைக் காணமுடியும். காரணம் அகராதி என்பது சொற்களைப் பொருளுடன் தருவது.

இது சொல்லாக்கத்தின் கீழ் வருவது. சொல்லாக்கம் இரு வகையில் வரும். சில சொற்களுடன் சில ஒட்டுக்களை இணைப்ப தால் வரும் சொற்கள் ஒரு வகை. முன்னே கூறிய நடப்பு, நடத்தை (<நட); விளைச்சல், விளையுள் (<விளை) போன்றவை இவ்வகையைச் சாரும். ஆங்கில மொழியிலும இந்நிலையைக் காணலாம்.

deep: depth
gloom: gloomy
filth: filthy
health: healthy

போன்றவை எடுத்துக்காட்டுகளாகும். ஒரு சில சொற்களை இணைப்பதால் உண்டாகும் புதிய சொற்கள் இன்னொரு வகை. புகைவண்டி, வானொலி போன்றவை இந்த வகையைச் சாரும். முதல் வகை ஆக்கப்பாடு எனப்படும். இரண்டாவது வகையை இணைப்பாக்கம் (composition) என்பர்.

நடப்பு, நடத்தை போன்றவை இரண்டு கூறுகளைக் கொண்டு இருந்த போதிலும், ஒரு எளிய பெயரைப் போலவே (கண்) பயன்படக் காணலாம்.

அவனுடைய நடத்தை சரியில்லை
அவனுடைய கண் சரியில்லை

எனக் கூறமுடியும்.

வினைச் சொல்லிலிருந்து பெயர்ச் சொல்லை உருவாக்குவது போலவே பெயரிலிருந்தும் வினைச்சொற்களை உருவாக்க முடியும்.

காதல் — காதலித்தான்
அலங்காரம் — அலங்கரித்தான்

போன்ற சொற்கள் இந்நிலையில் உருவானவையே. -இ என்ற ஒட்டை இணைத்த நிலையில்தான் இவை உருவாயின. காதல், காதலி என்று இரண்டு சொற்களுமே அகராதியில் காணப்படும்.

அவளைக் காதலி
அவளைப் பார்

என்ற வாக்கியங்களில் காதலி என்பது இரண்டு கூறுகளைக் (பகுதி + இ) கொண்டிருந்த போதிலும், பகுதியை மட்டும் கொண்ட பார் என்ற சொல் வரும் இடத்தில் வருதல் காணலாம்.

இந்நிலையை,

அழகு — அழகான
அழகு — அழகாக
வேகம் — வேகமான
வேகம் — வேகமாக
முன் — முன்னோர்
பின் — பின்னோர்

போன்றவற்றில் எல்லாம் காணலாம்.

இத்தகைய ஒட்டுக்கள் புதிய வகையான சொற்களை உருவாக்குகின்ற நிலையில், இவற்றைச் சொல்லாக்கிகள் (lexical formatives) என்றழைப்பர்.

ஆனால், திரிவொட்டுக்கள் பொதுவாகப் புதிய சொல் வகைகளை உருவாக்குவதில்லை. நட என்பதுடன் -ந்த், -ஆன்

ஆகிய ஒட்டுக்களை இணைத்த போதிலும், வினைச் சொல்லாகவே இருக்கக் காண்கிறோம். ஒருமை-பன்மை மாற்றமோ, கால மாற்றமோ ஏற்படலாம். ஆனால், அடிப்படையில் ஒரே வகையைச் சார்ந்தனவாகவே உள்ளன. இலக்கணக்கூற்றில் வேறுபாடு இருக் கலாம்.

அகராதியில் இவ்வகைச் சொற்கள் எல்லாவற்றையும் காண முடிவதில்லை. எந்த அகராதியும் நடந்தான், நடந்தாள், நடப்பான் போன்ற எல்லா சொற்களையும் தருவதில்லை. இலக்கணம்தான் இவைபற்றிப் பேசுமேயன்றி, அகராதியில் இவை இடம் பெறுவ தில்லை.

மேலும், நடந்தான் என்ற சொல்லுக்குப் பதிலாக

அவன் நேற்று நடந்தான்

அவன் நேற்று நட

எனக் கூறுதலும் முடியாது. நடந்தான் என்ற சொல்லுக்குப் பதிலாக இவ்வொட்டுக்கள் இல்லாத இன்னொரு சொலலை இட்டுக் கூறுதல் முடியாது. ஆனல், நடத்தை (நட+த்தை) என்ற ஆக்கப்பெயருக்குப் பதில் வேறு பெயர்களை இட்டுக் கூறுதல் இயலும்.

ஆக்கப்பாடு சொல்லாக்கம் செய்யும்; ஆனால், திரிவு சொல்லாக்கம் செய்யாது பலவேறு இலக்கணக் கூறுகளைக் காட்டும். பொதுவாக இலக்கணங்கள் இலக்கணக் கூறுகளைப் பற்றியே பெரும்பாலும் கூறும்.

### 1.6 உருபன் (Morpheme)

ஒரு மொழியில் காணப்படும் சொற்கள் பொதுவாகப் பொருளைக் காட்டுவன என்பதும், இவற்றைக் காட்டும் கூறுகள் ஒன்றையோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவற்றையோ கொண்டவை என்பதும் முன்னர்க் குறிப்பிடப்பட்டன. இவ்வாறு ஒரு மொழியில் காணப் படும் பொருளைக் காட்டும் சின்னஞ்சிறு கூறுகளே 'உருபன்' எனப்

படும்.[1] 'கண்' போன்ற சொற்கள் ஒரு உருபனைக் கொண்டவை. 'கண்கள்' போன்ற சொற்கள் இரு உருபன்களை உடையன. உருபன்களைச் சிறிய சிறிய துணுக்குகளாகப் பிரித்தல் முடியாது என்பதும் இங்கு நினைவுகூரத்தக்கது.

பொதுவாக உருபன்கள் ஒன்று அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட ஒலியன்களைக் கொண்டவை.

தமிழ்மொழியில் காணப்படும் -ர் (நீர்) போன்றவை ஒரு ஒலியனால் ஆனவை. -அன் (வருவன்), -அர் (வருவர்) போன்றவை இரு ஒலியன்களால் ஆனவை. -வன் (தலைவன்), -வர் (தலைவர்), கண், மண் போன்றவை மூன்று ஒலியன்களால் ஆனவை.

இவற்றைப் போன்றே ஆங்கிலத்தில் காணப்படும் cat என்ற சொல் தனி ஒரு உருபனைக் கொண்டது. cats, books, cups போன்றவை இரு உருபன்களைக் கொண்டவை.

## 1.7 உருபன்களைப் பகுத்தறிதல் (Identification of Morphemes)

மொழிகளில் பலவேறு வாக்கியங்கள் காணப்படுகின்றன. இவ்வாக்கியங்கள் அனைத்தும் பல சொற்களால் உருவானவை. இச்சொற்களும் ஒன்று அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட உருபன்களால் ஆக்கப் பெற்றவை. இவ்வுருபன்களைப் பிரித்து அறிந்து, அவற்றின் பொருள்களைத் தெரிந்து கொள்ளாவிடின் வாக்கியங்களின் பொருள்களை அறிந்து கொள்ள முடியாது. எனவே, உருபன்களைப் பிரித்து அறிதல் ஒரு மொழியினைப் புரிந்துகொள்ளுவதற்கு இன்றியமையாத ஒன்றாகும். இவற்றைப் பிரித்து அறிவதற்குப் பலவேறு முறைகளைக் கையாளுவர்.

---

1. Morpheme is the 'smallest meaningful' unit in the structure of language.
   — Gleason, 1955: 53.
   Morpheme are the smallest individually meaningful elements in the utterances of a language.
   — Hockett, 1958 : 123.
   Morphemes are the smallest individually meaningful elements in the utterances of a language.
   — Elson & Pickett 1962 : 7.

1) உருபன்கள் பொருளைக் காட்டுவன. ஒரே பொருளைத் தந்து, ஒரே மாதிரியான ஒலியன்களைக் கொண்டவற்றை ஒரே உருபனாகக் கருதலாம். கண்கள், கால்கள், மரங்கள் போன்ற சொற்களில் -கள் விகுதி பன்மையைக் காட்டும் உருபு என்பதை நாம் அறிவோம். இம்மூன்று பன்மைச் சொற்களிலும் இவ்விகுதி ஒரே மாதிரியான உருவத்தையும், ஒரே பொருளையும் (பன்மைப் பொருள்) கொண்டிருப்பதால், இவ்விகுதி பன்மையைக் காட்டும் விகுதி என உணர்ந்து கொள்ள முடியும்.

எனவே, ஒரே உருவத்தையும் ஒரே பொருளையும் கொண்டு நிற்கின்ற சொற்கூறுகளை ஒரு உருபனாகக் கருதலாம். வந்தான், இருந்தான், கிடந்தான் போன்ற சொற்களில் -ஆன் விகுதி ஆண்பால் காட்டும் உருபனாகக் கருதப்படும். cups, cats, ducks போன்ற சொற்களில் காணப்படும் -s ஒரு உருபனாகும்.

2) இன்னும் சில சொற்களில் சில பகுதிகள் ஒரே பொருளைத் தந்து நிற்பினும், வெவ்வேறு ஒலியன்களால் ஆக்கப்பட்டிருக்கும். எனினும் அவை தரும் பொருளின் அடிப்படையில் அவற்றையும் உருபனாகக் கருதலாம். கண்டேன், செய்தேன், தின்றேன் போன்ற சொற்களின் த், ட், ற் ஆகியவை இறந்த காலம் காட்டுவன. எனவே, இவற்றை இறந்தகாலம் காட்டும் உருபுகளாகக் கருதலாம். த், ட், ற் என மூன்று வெவ்வேறு ஒலியனைக் கொண்டிருந்த போதிலும், தகர ஒற்றை அடிப்படையாகக் கொண்டு பிறவற்றைச் சந்தி விதியால் விளக்கி விடலாம். இதைப் போன்றே ஆங்கில மொழியில் காணப்படும் intolerable, impossible ஆகியவற்றில் காணப்படும் in-, im-, என்பவை எதிர்மறைப்பொருளைத் தரும். in-, im- என வேறு வேறு ஒலியன்களைக் கொண்டிருந்த போதிலும், இவை ஒரேபொருளைத் தருவதோடு, 'p'க்கு முன் 'm' ஒலியனாகவும், 't' க்கு முன் 'n' ஒலியனாகவும் மாறும் என விளக்கலாம். எனவே, இவை இரண்டையும் ஒரு உருபனாகக் கருதலாம்.

3) இன்னும் சில சொற்களில் சில பகுதிகள் ஒரே பொருளைக் காட்டி, முன்னர்க் கூறியபடி எளிதாக மாற்றமுடியாத வெவ்வேறு ஒலியன்களைக் கொண்டிருக்கும். எனினும் ஒரு பொருள் தந்து நிற்பதால், இவற்றையும் ஒரே உருபனாகக் கருதலாம்.

செய்தான், இருந்தான், ஆடினான் போன்ற சொற்களில் காணப்படும் இறந்தகால இடைநிலைகள் (-nt, -t-, -in-) ஒரே பொருளைக் காட்டுவன என்பதை நாம் அறிவோம். எனினும், இவற்றைச் சில சந்தி விதிகளைக் கொண்டு விளக்கி விடமுடியாது. அடிச்சொற்களை வைத்துத்தான் இவற்றை விளக்கமுடியும். இந் நிலையிலும் இவற்றை எல்லாம் ஒரு உருபனாகக் கருதலாம். ஆங்கில மொழியில் காணப்படும் roses, boys, lips, oxen, sheep ஆகிய சொற்கள் பன்மையைக் காட்டுவன. இவற்றில் oxen, sheep ஆகியவற்றில் சகர விகுதி (–s) இல்லை எனினும், –en, –∅ ஆகியவற்றைச் சகர விகுதியோடு இணைத்து, இவற்றையெல்லாம் ஒரே உருபனாகக் கருதுவது இங்கு நினைவுகூரத்தக்கது. இன்னும் சில சொற்கள் வெவ்வேறு ஒலியன்களைக் கொண்டு பொருள் மாற்றத்தினைக் கொண்டிருக்கும். அதேபோன்று சில சொற்கள் ஒரே ஒலியனைக் கொண்டு பொருள் மாற்றத்தினைக் கொண்டிருக்கும். இப்பொருள் மாற்றத்திற்கு அடிப்படையானவற்றை ஒரு உருபனாகக் கருதலாம். ஆங்கில மொழியில் காணப்படும் foot, feet போன்ற சொற்கள், முறையே ஒருமையும் பன்மையும் காட்டுவன. இந்நிலையில் feet என்ற சொல்லில் காணப்படும் உள் மாற்றத்தையும் sheep, sheep–∅ என்ற சொற்களிடையே காணப்படும் -∅ வையும் ஒரு உருபன் கீழ்க் கொண்டு வரலாம்.

4) மொழிகளில் பல பொருள் குறித்த ஒரு சொல்லையும், ஒரு பொருள் குறித்த பல சொல்லையும் காணலாம். இவற்றுள் பல பொருள் குறித்த ஒரு சொல்லை ஒரு உருபனாகக் கருதலாம். மா என்ற சொல் குதிரையையும், மாமரத்தினையும் குறிக்கும். இந்நிலையில் மா என்பதை ஒரு உருபனாகக் கொள்ள வேண்டும். ஆனால் ஒரே வடிவினைக் கொண்ட சொற்கள் தம்முள் தொடர்புடைய பொருள்களைக் குறிக்குமானால், அவற்றை ஒரே உருபனாகக் கொள்ளலாம். இடி, உதை போன்ற சொற்கள் ஒரு இடி, ஒரு உதை எனப் பெயராகவும் இடித்தல், இடித்தான், உதைத்தல், உதைத்தான் போன்றவற்றில் வினையாகவும் வந்து, அவை இருவேறு நிலையில் இருப்பினும், அவற்றை ஒரே உருபனாகக் கொள்ளலாம்.

5) உலக மொழிகளில் உருபன்கள் பல நிலையில் காணப் படுகின்றன. சில உருபன்கள் தனித்து நிற்கும். ஆனால் சில உருபன்கள் தனித்து நிற்க வல்லன அல்ல. எனினும் சில இடங் களில் அவற்றையும் உருபனாகக் கொள்வதில் தவறில்லை. ஆங்கில மொழியில் காணப்படும் conceive, contain, consume, condense போன்ற சொற்களில் காணப்படும் con- ஒருபோதும் தனித்து வருவதில்லை. ஆனால் அதே போன்று -ceive, -sume, -tain போன்றவையும் தனித்து வருவதில்லை. ஆனால் dense மட்டும் தனியாக வருவதைக் காண்கிறோம். இந்நிலையில் con- என்பதைத் தனியொரு உருபனாகக் கருதுவதில் தவறேதுமில்லை என்பர். perceive, resume, detain போன்ற சொற்கள் இந் நிலைக்கு அரண் செய்வதைக் காணலாம்.

நைடா தன்னுடைய நூலில் கூறிய விதிமுறைகளும் உலக மொழிகளனைத்தையும் ஆராய்வதற்குத் துணை செய்வன வாக அமைகின்றன. இவற்றுள் ஒரு சில முறைகளே உருபன் களைக் கண்டறிவதற்கு அதிகமாகப் பயன்படுமாயினும், எல்லா முறைகளும் பொதுவாகப் பயன்படும் என்பது இங்குக் குறிப்பிடத் தக்கதொன்றாகும். உருபன்களைக் கண்டறிவதற்கு எதிர்நிலை வழக்கு (contrast)[1], துணைநிலை வழக்கு (complementation), பதில்நிலை வழக்கு (free variation) ஆகிய மூன்று நிலைகளை வைத்து ஆராய்வர் மொழியியலறிஞர்கள்.

ஒரு மொழியைப் பேசுவோர் பழக்கத்தின் காரணமாக வாக்கியங்களின் பொருளையும், அவற்றில் காணப்படும் சொற் களின், உருபன்களின் பொருளையும் அறிய முடியும். ஆனால் பிற மொழிகளை ஆராய்வதற்கும், அவற்றின் இலக்கணங்களை எழுதுவதற்கும் மேற்கூறிய விதிமுறைகள் நன்கு பயன்படும்.

எடுத்துக்காட்டாக

| | | |
|---|---|---|
| *a ka:ma* | — | என் வயல் |
| *a ko:ya* | — | என் முயல் |

1. By a contrast we mean that one thing is different from another thing within a functional system.
—Pike, 1956 : 3.

| | | |
|---|---|---|
| *a way* | — | என் முடி |
| *a ka:pay* | — | என் மைத்துனி |
| *i ka:ma* | — | உன் வயல் |
| *i ko:ya* | — | உன் முயல் |
| *i way* | — | உன் முடி |
| *i ka:pay* | — | உன் மைத்துனி |

என்ற சொற்களிலிருந்து *a* என்பது 'என்' என்ற பொருளையும் *i* என்பது 'உன்' என்ற பொருளையும் தரும் உருபன்களென நிச்சயமாகப் புரிந்துகொள்ள முடியும். நைடாவின் முதல் விதி முறையே இந்நிலையை நன்கு காட்டும்.

## 1.8 உருபன்களின் வகைகள்

மொழிகளில் காணப்படும் இத்தகைய உருபன்களைப் பல் வேறு அடிப்படைகளில் வகைப்படுத்த முடியும். உருபன்கள் பொருளைக் காட்டுவன ஆயினும் சொற்களில் காணப்படும் தனித் தனி உருபன்கள் மட்டுமன்றிச் சொற்களில் அல்லது வாக்கியங்க ளில் காணப்படும் அழுத்தம் (accent) போன்றவையும் பொருள் தருவன. இவற்றை மேல் பகுப்பொலியனைக் (suprasegmental phonemes) கொண்ட உருபன்களென்பர். சாதாரணமாகச் சொற் களில் காணப்படும் உருபன்களைப் பகுப்பொலியன்களைக (segmental phonemes) கொண்ட உருபன்களென்று குறிப்பிடுவர்.[1] இவை தனித்தனியே வருவதோடு இரண்டும் கலந்த உருபன்களும் உண்டெனக் கருதுவர் மொழியியலறிஞர்கள். ஆங்கில மொழியில்

what can I eat, mother ↓

எனக் கூறும்போது 'நான் எதைச் சாப்பிட?' எனத் தாயிடம் கேட்பதைக் குறிக்கும். ஆனால்,

---

1. All morphemes can be classed according to their status relative to words. A morpheme which occurs only as part or all of some word is a *segmental* morpheme: *John*, *treat*, *-s*. A morpheme which is not part of a word is *suprasegmental*: all intonations, and some other morphemes, such as the secondary stress /ˋ/ on the segmental constituent of /mǽeç+bàks/, which is not the part of the word *box*.
—Hockett, 1958:168.

what can I eat, mother ↑

எனக் கூறும்போது 'நான் அம்மாவையா சாப்பிடுவது?' எனப் பொருள்படும். இந்நிலையில் மேல்பகுப்பு ஒலியன்களும் பொருளைக் காட்டவல்லன என்பதும், அதனால் அவற்றையும் உருபன்களாகக் கருதவேண்டும் என்பதும் இங்கு நினைவுகூரத் தக்கனவாகும். இத்தன்மையை உலகமொழிகள் பலவற்றிலும் காணலாம். நச்சினார்க்கினியர் தபு என்ற சொல்லை இருபொருள் படும்படிக் கூறியிருப்பது இங்குக் கவனிக்கத்தக்கதாகும்.

உலகமொழிகளை ஆராயின் உருபன்களை இன்னும் பல நிலையில் வகைப்படுத்தலாம். உருபன்களின் உருவம், அவை சொற்களில் வரும் இடம், இணைக்கப்படும் விதம் போன்ற இன்னோரன்ன அடிப்படைகளிலும் அவற்றை வகைப்படுத்தலாம்.

உருபன்களின் உருவங்களை அடிப்படையாகவைத்து ஓரசை உருபன், ஈரசை உருபன், பலஅசை உருபன் எனவும், உயிர் உருபன், மெய்யுருபன் என்றும் இன்னோரன்ன வகைகளிலும் பிரிக்க முடியும். இவ்வாறு பிரிப்பது சில நேரங்களில் உருபன்களின் வருமுறையை (distribution) அறிந்துகொள்ளவும் சந்தி விதிகளை உருவாக்கவும், இவை போன்ற பிறவேறு நிலைகளைக் கணிக்கவும் பயன்படும்.

உருபன்கள் வரும் இடங்களை அடிப்படையாக வைத்தும் அவற்றை வகைப்படுத்தலாம். இந்நிலையில் இவற்றை முன்னொட்டு (prefix), பின்னொட்டு (suffix), உள்ளொட்டு (infix) என்றும், தொடர் உருபன் (continuous morpheme), தொடரல் உருபன் (discoutinuous morpheme) என்றும் பிரிக்கலாம்.

### 1.8.1 தனிநிலை உருபன் (Free morpheme)

உருபன்கள் சொல்லாகவும் சொல்லின் பகுதிகளாகவும் இருக்குமென்றும், ஒரு சொல் ஒரு உருபனைக் கொண்டோ அல்லது ஒன்றுக்குமேற்பட்ட உருபன்களைக் கொண்டோ இருக்கு மென்றும் முன்னர்க் கூறினோம். ஒரு சொல் ஒரு உருபனைக் கொண்டிருக்குமானால், அது சொல்லாகவும் பயன்படும். இந் நிலையில் அது தனித்தியங்கவல்லது. தமிழில் காணப்படும் கண்,

காது போன்ற உருபன்கள் தனித்துநிற்கும் தகுதியுடையன. எனவே இவற்றைத் தனிநிலை உருபன்கள் எனக் குறிப் பிடலாம்[1] இவற்றைப் போன்று ஆங்கில மொழியில் காணப்படும் John. tell போன்றவையும் தனிநிலை உருபன்கள். இவற்றைச் சாதாரணமாகத் தனியாகப் பேசவும் எழுதவும் முடியும். இவை எப்போதும் ஒரு வேர்ச் சொல்லாகவும் இருக்கும்.

### 1.8.2 கட்டுநிலை உருபன் (Bound morpheme)

மொழிகளில் தனிநிலை உருபன்களை மட்டுமன்றிக் கட்டுநிலை உருபன்களையும் காணுகின்றோம். சில உருபன்கள் தனித்து இயங்க வல்லவை அல்ல. அவற்றைத் தனியாக எழுதுவதோ அல்லது தனியாக உச்சரிப்பதோ இல்லை. அவை எப்போதும் இன்னொரு உருபனை அடுத்து முன்னோ பின்னோ அல்லது இடையிலோ வரும் தன்மையன. இந்நிலையில் அவற்றைக் கட்டுநிலை உருபன் என அழைப்பர்.[2]

தமிழில் காணப்படும் -ஐ. -ஆல், போன்ற வேற்றுமை உருபுகள், -அன், -ஆன் போன்ற விகுதிகள், -த்-, -இன்- போன்ற கால இடை நிலைகள் அனைத்தும் கட்டு நிலை உருபன்களாகும். இவற்றைப் போன்று ஆங்கில மொழியில் காணப்படும் -th,-s போன்றவையும் கட்டு நிலை உருபன்களாகும்.

பொதுவாகக் கட்டுநிலை உருபன்கள் இலக்கணப்பொருளையே தருவனவாக அமைகின்றன. தமிழில் காணப்படும் பெரும்பாலான கட்டுருபன்கள் இந்நிலையைச் சார்ந்தனவாகும்.

---

1. Free morphemes are those which may be uttered in isolation, e.g *boy, girl, men.* They always consist of a root.
—Nida; 1946:81.

2. Bound morphemes never occur in isolation, that is, are not regularly uttered alone in normal discourse.
—Nida, 1946 : 81.

Morphemes which may occur alone are called *free forms*; morphemes which do not occur alone are called *bound forms.*
—Elson & Pickett, 1962 : 11.

-ஐ,-ஆல் போன்றவை வேற்றுமைப்பொருளையும், -த்-, -இன்- போன்றவை காலத்தையும், -ஆன், -அன் போன்றவை எழுவாய் எது என்பதையும் காட்டி இலக்கணப்பொருளைத் தந்து நிற்கின்றனவேயன்றிச் சொற்பொருளைத் (lexical meaning) தருவதில்லை. இதே நிலையைத்தான் ஆங்கிலம் போன்ற பிற மொழிகளிலும் பெரும்பான்மையாகக் காணுகிறோம்.

ஒட்டுக்கள், பலவேறு மேல் பகுப்பொலியன் உருபன்கள் போன்றவை அனைத்தும் கட்டுநிலை உருபன்களே. ஒட்டுநிலை மொழிகளில் இவை அதிகமாகக் காணப்படினும் தனிநிலை உருபன்களே மொழிகளில் ஆயிரக் கணக்கில் காணப்படும்.

## 1.9 வேர்ச்சொற்களும் ஒட்டுக்களும் (Roots and affixes)

பொதுவாகக் கட்டுருபன்கள் ஒட்டுக்களாக அமைகின்றன. இவ்வொட்டுக்களைச் சில வேர்ச்சொற்களுடன் இணைக்கும் போது அவை சொற்களாக அமைகின்றன. பொதுவாக வேர்ச்சொற்கள் ஒரே ஒரு உருபனை மட்டும்தான் கொண்டிருக்கும். இவை ஒரு சொல்லின் அடிப்படைப் பொருளை (basic meaning) அல்லது சொற்பொருளைத் தரும்.[1] பொதுவாக மொழிகளில் பெரும்பான்மையான உருபன்களும் வேர்ச்சொல்லாகவே காணப்படும். கண், காது, தலை போன்றவற்றையும் நட, வா போன்றவற்றையும் வேர்ச்சொற்களாகக் கருதலாம். ஒவ்வொரு மொழியிலும் இத்தகையச் சொற்கள் ஆயிரக்கணக்கில் இருக்கும். இவ்வேர்ச்சொற்களே சொற்களின் உருவாக்கத்தின் கருவாக அமை

1. In general, roots are single morphemes which carry the 'basic meaning, of the words; a root is the core of a word
—Elson & Pickett, 1962:11.
When all inflectional affixes are stripped from a word, what is left is a *stem*.
—Hockett, 1958:209.
Affixes may be added directly to roots, or to constructions consisting of a root plus one or more other morphemes. All these may be called *stems*. A stem is any morpheme or combination of morphemes to which an affix can be added.
—Gleason, 1955:59.

கின்றன. சில சொற்கள் ஒன்றிற்கு மேற்பட்ட வேர்களைக் கொண்டிருக்கும். blackbird, cranberry போன்ற சொற்கள் இந்நிலையைக் காட்டும் cranberry என்ற சொல்லில் காணப் படும் cran– என்பது கட்டுநிலை உருபனாக உள்ளது.

## 1.10 வேர்ச்சொற்களும் அடிச்சொற்களும் (Roots and stems)

வேர்ச்சொற்களுடன் ஒன்றோ அல்லது ஒன்றிற்கு மேற் பட்ட ஒட்டுக்களையோ இணைக்கலாம். இவ்வொட்டுக்கள் இணைந்து சொல்லாகப் பரிமளிக்கின்றன. ஒட்டுக்கள் எவற்றோடு இணைக்கப்படுகின்றனவோ அவற்றைததான் அடிச்சொற்கள் எனக் குறிப்பிடுவர். ஒட்டுக்களை வேர்ச்சொற்களோடு இணைப்பது மட்டுமன்றி, வேர்ச்சொல்லோடு இணைத்த ஒட்டுக்களோடும் இணைக்கிறோம். இந்நிலையில் வேர்ச்சொல்லையும் அதனோடு இணைந்த ஒட்டு கலந்த உருவத்தையும் அடி (stem) எனக் கருதலாம்.

கண் வேர்ச்சொல். கண்ணை என்ற சொல்லில் –ஐ இணையும் நிலையில் கண்– அடிச்சொல்லாகவும் பயன்படுகிறது. கண்ணை என்ற சொல்லோடு –ஆ என்ற வினாப் பகுதியை இணைக்கும் போது கண்ணையா என்று ஆகின்றது. இந்நிலையில் கண்ணை– என்பது அடிச்சொல்; ஆனால் அது வேர்ச்சொல் அன்று. எனவே, எல்லாக் கட்டுநிலை வேர்ச்சொற்களையும் அடிச்சொற்கள் எனச் சொல்லலாம். ஆனால் எல்லா அடிச்சொற்களும் வேர்ச் சொற்கள் அல்ல.[1]

## 1.11 ஒட்டுக்கள் (Affixes)

அடிச்சொற்களுடன் இணையும் கட்டுநிலை உருபன்களை ஒட்டுக்கள் என்று அழைப்பர். இவ்வொட்டுக்கள் பொதுவாகப் பலவேறு இலக்கணப்பொருள்களைத் தந்து நிற்கும். இவற்றை ஆங்கிலத்தில் Affixes என அழைப்பர். ஒட்டுநிலை மொழிகள் (agglutinative languages) அதிகமான ஒட்டுக்களைக் கொண்டிருக்கும்

1. All bound roots are stems, but not all stems (they are all bound) are roots.
—Nida, 1946:83.

தனிநிலை மொழிகளில் (isolating languages) ஒட்டுக்கள் அதிகமாக இரா. தமிழ் ஒரு ஒட்டுநிலை மொழி என்பதும், எனவே இதன்கண் ஏராளமான ஒட்டுக்கள் காணப்படும் என்பதும் இங்குக் குறிப்பிடத்தக்கன.

இவ்வொட்டுக்களை அவை அடிச்சொற்களோடு இணையும் இடத்தைப் பொறுத்து முன்னொட்டு, பின்னொட்டு, உள்ளொட்டு என மூன்று வகையாகப் பிரிப்பர்.

## 1.11.1 முன்னொட்டு (Prefix)

அடிச்சொற்களுக்கு முன்னால் சேர்க்கப்படும் ஒட்டுக்களை முன்னொட்டு என அழைப்பர்.[1] தமிழ்மொழியில் முன்னொட்டுக்கள் வருவதில்லை. சில சமயங்களில் சில சொற்கள் வேறு சில சொற்களுக்கு முன்னால் நின்று முன்னொட்டுக்கள் போலப் பயன்படும். இவை முன்னொட்டுக்கள் அல்ல, சொற்களே ஆகும். முன்னேற்பாடு, பின்தங்குதல், இடைவெளி போன்ற சொற்களில் இந்நிலையைக் காணலாம். ஆனால் தமிழில் வழங்கும் பல்வேறு வடமொழிச்சொற்களில் முன்னொட்டுக்களைக் காணமுடியும். அநீதி, அசுத்தம், அபாக்கியவதி போன்ற சொற்களில் காணப்படும் அகரம் முன்னொட்டாகும். ஆங்கில மொழியில் முன்னொட்டுக்கள் அதிகமாகக் காணப்படுகின்றன. unfaithful, ungrammatical போன்ற சொற்களில் காணப்படும் un-என்ற ஒட்டும், impossible, imperfect போன்ற சொற்களில் காணப்படும், im- என்ற ஒட்டும், prefix என்ற சொல்லில் காணப்படும் pre- என்ற ஒட்டும் இதற்கு எடுத்துக்காட்டுக்களாகும்.

## 1.11.2 பின்னொட்டு (Suffix)

அடிச்சொற்களின் பின்னால் இணைக்கப்படும் ஒட்டுக்களைப்

---

1. Perfixes are affixes which precede the root with which they are most closely associated.
—Gleason, 1955 : 59.

Prefixes are bound elements (i. e. they never occur in isolation) which precede the root.
—Nida, 1946 : 69.

பின்னொட்டு என அழைப்பார்[1] தமிழ்மொழியில் ஒட்டுக்கள் அனைத்தும் பின்னொட்டுக்களாகவே உள்ளன. பொதுவாக இலக்கணப் பொருள் அனைத்தும் பின்னொட்டுக்களாலேயே உணர்த்தப்படுகின்றன. ஒரு சில இடங்களில் வேறு சில நிலை காணப்படினும், ஒட்டுக்களின் ஆட்சியே இம்மொழியில் அதிகம். கால இடைநிலைகள், எதிர்மறை இடைநிலைகள், விகுதிகள் போன்றவை பின்னொட்டுக்களாகும். வந்தான் என்ற சொல்லில் காணப்படும் -ந்த்-, -ஆன் போன்றவை பின்னொட்டுக்களாகும். boyish, girlish போன்ற ஆங்கிலச் சொற்களில் காணப்படும் -ish போன்ற ஒட்டுக்கள் பின்னொட்டுக்களாகும்.

### 1.11.3 உள்ளொட்டு (Infix)

உலகில் காணப்படும் சில மொழிகளில் உள்ளொட்டுக்களும் உள்ளன. சில அடிச்சொற்களின் உள்ளே உருபன்களை இணைத்துச் சில இலக்கணக் கூறுகளைக் கூறமுடியும். இவ்வாறு அடிச்சொற்களின் உள்ளே புகுத்தும் உருபன்களையே உள்ளொட்டு என அழைப்பர்[2] எடுத்துக்காட்டாக ஒடு என்ற பொருளில் வழங்கும் koon என்ற சொல்லின் உள்ளே -m- என்ற உருபனை இணைத்து ஓட்டக்காரர் என்ற பொருளை komon என்ற சொல்லால் கூறும் பொழுது -m- உள்ளொட்டாகக் கருதப்படும். இவற்றை இரண்டு பக்கங்களிலும் சிறு கோடுகளையிட்டுக் காட்டுவர். தமிழ் போன்ற மொழிகளில் இத்தகைய ஒட்டுக்கள் காணப்படுவதில்லை. ஆனால், கிரேக்கம் போன்ற மொழிகளில் இவ்வொட்டுக்கள் காணப்படுகின்றன. கால இடைநிலைகள் தமிழ் மொழியில் ஒரு சொல்லின் உள்ளே வந்தாலும், இவற்றை உள்ளொட்டு எனக் கருத

---

1. Suffixes are affixes which follow the root with which they are most closely associated.
—Gleason, 1955: 59.
Suffixes are bound elements which follow the root.
—Nida, 1946 : 69.

2. An infix is a morpheme which is inserted into the stem with which it is associated.
—Gleason, 1955 : 73.
Infixes occur within the root.
—Nida, 1946 : 69.
Infixes are affixes which occur inside a root itself.
—Elson & Pickett, 1962 : 17.

முடியாது. ஏனெனில் இவை போன்றவை வேறு சொல்லின் உள்ளே புகுத்தப்படுவதில்லை. கிரேக்க மொழியில lab 'எடு' என்ற சொல் வேர்ச்சொல் என்பதும், அதனுள்ளே m உருபனைப் புகுத்தும் நிலையில்தான் lambanu, 'எடுக்கிறேன்' என்ற சொல் உருவாகிறது என்பதும் இங்குக் குறிப்பிடத்தக்கன.

### 1.11.4 மேலொட்டு (Suprafix)

சில மொழிகளில் சில பொருள் வேறுபாடுகள் tones, stress போன்ற மேல் பகுப்பொலியன்களால் பிரித்தறியப்படும். இந்நிலையில் இதனை மேலொட்டு என அழைப்பர். முன்னொட்டுக்களும் பின்னொட்டுக்களும் அடிச்சொற்களின் முன்னோ பின்னோ ஒலிக்கப்பட, மேலொட்டுக்கள் அடிச்சொற்களோடு இணைந்தே ஒலிக்கப்படுகின்றன.

கண்ணன் என்று எவ்வித அழுத்தமுமின்றி கூறும்போது ஒரு பொருளையும், கண்ணன் ↑ எனக் கூறும்போது கண்ணனா? என்ற பொருளையும் தரும் நிலையில் இது ஒரு மேலொட்டாகக் கருதப் படும். பொதுவாக இம்மேலொட்டுக்கள் சொற்களோடு இணைந்து செயல்படுவதால் இவற்றை Simulfix என்றும் அழைப்பர் (Elson & Pickett, 1962 : 13).

### 1.12 தொடர் உருபனும் தொடரல் உருபனும்

உருபன்களை இன்னொரு வகையில் பிரிக்கலாம். இவற்றின் தொடர்ச்சி நிலையினை வைத்துத் தொடர் உருபன், தொடரல் உருபன் எனவும் பிரிப்பர்.

### 1.12.1 தொடர் உருபன் (Continuous morpheme)

பொதுவாக உலக மொழிகளில் காணப்படும் உருபன்கள் அனைத்துமே தொடர் உருபன்களாக இருக்கும். பல்வேறு கால இடைநிலைகள், விகுதிகள் அனைத்தும் இந்நிலையைச் சார்ந் தனவே.

### 1.12.2 தொடரல் உருபன் (Discountinuous morpheme)

முழுமைப் பொருளைத் தரும் எல்லாம் என்ற சொல்லில் காணப்படும் 'உம்'

எல்லாப் பையன்களும் — யாரும்

எல்லாப் பையன்களையும் — யாரையும்

என்ற தொடர்களில் எல்லா (யாரையும் என்பதில் யார்) என்ற சொல்லிலிருந்து பிரிந்து நிற்பதைக் காணலாம். இந்நிலையில் 'எல்லா உம்' என்பதனைத் தொடரல் உருபனாகக் கருதலாம். உள்ளொட்டுக்கள் வேர்ச்சொற்களின் உள்ளே புகுத்தப்படுகின்றன எனவே இவை வேர்ச்சொற்களைப் பிரித்து விடுகின்ற நிலைமையைக் காணுகிறோம். இதனால் இவ்வுருபன்களையும் தொடரல் உருபனாகக் கருதுவர் (Nida, 1946:68). *kita:b* என்ற சொல் *ktb* என்ற சொல்லிலிருந்து உருவானது. இதனிடையே இரண்டு உயிர்களைப் புகுத்திய நிலையில்தான் *kita:b* உருவானது. எனவே, இதனையும் தொடரல் உருபனாகக் கருதுவர் (Gleason, 1955.72; Matthews, 1974: 132, 133, 158, 173). foot, feet என்ற சொற்களில் உள்ள f ...t என்பதையும் தொடரல் உருபனாகக் கருதுவர் சிலர் (Nida, 1946 : 68).

## 1.13 கூட்டுருபன்களும் குறைப்புருபன்களும்

உருபன்களை வேறு முறையிலும் பிரிப்பர். அடிச்சொற்களோடு இணைக்கப்படுதல், ஒரு உருபனைக் குறைத்துவிடுதல், ஒரு உருபனை நீக்கிவிட்டு இன்னொரு உருபனைப் போடுதல் ஆகிய நிலைகளிலும் பொருள்களை உணர்த்த முடியும். இந்நிலையில் முன்னதைக் கூட்டு உருபன் (additive morpheme), இரண்டாவதை குறைப்பு உருபன் (subtractive morpheme), மூன்றாவதை மாற்றீட்டு உருபன் (replacive morpheme) என்று அழைப்பர்.

### 1.13.1 கூட்டுருபன் (Additive morpheme)

தமிழில் காணப்படும் ஒட்டுக்கள் அனைத்தும் இவ்வகையைச் சார்ந்தவை.

வ-ந்த்-ஆன் செய்-த்-ஆன்

log-s pig-s

போன்ற உதாரணங்களில் -த்-, -ந்த்-, -ஆன், -s போன்ற வற்றைக் கூட்டுருபன் எனலாம். ஒரு உருபனுடன் இணைக்கப் படும் உருபனையே கூட்டுருபன் என்கிறோம்[1].

## 1.13.2 குறைப்புருபன் (Subtractive morpheme)

ஒரு சொல்லின் பொருளை, அதில் காணப்படும் சில ஒலியன் களை நீக்கி விடுவதாலும் அல்லது குறைத்து விடுவதாலும், மாற்றிவிடலாம். உலக மொழிகள் அனைத்தையும் ஆராயும்போது இப்பண்பு குறைவாகவே உள்ளது எனத் தெரியவருகிறது. பிரஞ்சு மொழியில் காணப்படும் ஆண்பால் காட்டும் சில பெயரடைகள் பெண்பால் பெயரடைகளிலிருந்து சில ஒலியன்களைக் குறைப்ப தால் உருவாகின்றன எனக் கருதலாம்.[2]

| | | |
|---|---|---|
| /ptit/ | : /pti/ | சிறிய |
| /tos/ | : /to/ | பொய்யான |

போன்ற உதாரணங்களை எடுத்துக்காட்டுக்களாகக் கூறுவர். புளும்பீல்டு போன்றோர் இதனைக் குறைப்பாக்கம் (minus formation) என்பர்.

---

1. Additive morphemes include roots, prefixes, suffixes, infixes, suprafixes and reduplicatives. Roots constitute the basic core of most words. Prefixes are bound elements (i.e. they never occur in isolation) which precede the root.
—Nida, 1946:69.

2. In some languages a separate grammatical category may be represented by taking away a phoneme or phonemes from stem.
—Elson & Pickett 1962:48.

Phonemes may be subtracted from stems as well as added to them to signify some difference in meaning. Such subtractions are, however much rarer than additions. They usually result from a historical process of sound change which becomes morphologically meaningful.
—Nida, 1946:75.

### 1.13.3 மாற்றீட்டு உருபன் (Replacive morpheme)

வேர்ச்சொற்களிலுள்ள ஒரு பகுதியை மாற்றுவதன் மூலம் வேறு பொருளைச் சில மொழிகளில் உணர்த்த முடிகிறது. இவ்வாறு வேர்ச்சொல்லின் ஒரு பகுதியை மாற்றி நிற்கும் உருபனை மாற்றீட்டு உருபன் என்பர். ஆங்கில மொழியில் காணப்படும்

| | | |
|---|---|---|
| foot | – | feet |
| tooth | – | teeth |

என்ற சொற்களில் இந்நிலையைக் காணுகிறோம்.

/iy/ என்ற பகுதி /u/ என்ற பகுதியை மாற்றி நிற்கும் நிலையில்தான் பன்மைப் பொருள் காட்டப்படுகிறது. இந்நிலையினை மொழியியலாளர்கள் /iy/←/u/ என எழுதுவர்.

| | | |
|---|---|---|
| find | – | found |
| sing | – | sang |
| take | – | took |
| man | – | men |

ஆகிய சொற்களிலெல்லாம் மாற்றீட்டு உருபனைக் காணலாம்.[1]

### 1.14 சூனிய உருபு (Zero morph)

மொழிகளில் பல இலக்கணக் கூறுகள் பலவேறு உருபுகளால் காட்டப்படுகின்றன என்பதை நாம் அறிவோம். ஒரு பொருளையே காட்டுகின்ற பல மாற்று உருபுகள் உள்ளன. அந்நிலையில் சில சொற்களில் எவ்வித மாற்றுருபுகளும் இன்றி ஒரே சொல் இரண்டு பொருளைக் காட்டுகின்ற நிலையைக் காணலாம்.

1. Certain morphemes replace parts of stems. These are structurally different from the additive morphemes, which are added to the stems.

Replacive morphemes may consist of any phonemic form. That is to say, they may be vowels, consonants, tones, nasalization or combinations of such segmental and suprasegmental features.
—Nida, 1946.71–72.

ஆங்கில மொழியிற் காணப்படும் பன்மை உருபனை இதற்கு எடுத்துக்காட்டாகக் காட்டலாம்.

logs cocks
pigs cakes

போன்றவற்றில் சகர ஒற்று (-s, -z) பன்மையைக்காட்ட sheep போன்ற சொற்கள் எவ்வித ஒட்டுமின்றி பன்மையைக் காட்டுவதை நாம் அறிவோம். இந்நிலையில் sheep என்ற ஒருமைச் சொல லோடு -∅ உருபை இணைப்பதால்தான் பன்மையைக் காட்டு கிறது என விளக்கலாம்.

தமிழிலும் இந்நிலை காணப்படுகிறது. காணாய் என்ற சொல் காணமாட்டாய் என்ற பொருளில் வரும்போது எதிர்மறையைக் காட்டும் உருபாக ∅ உள்ளது எனக் கருதலாம்.

காண் – ∅ -ஆய்
வார் – ∅ - ஆய்

-∅- உருபு எத்தனையோ வேறுபல உருபன்களின் மாற்றுருபாக வும் இருக்கக் காணலாம்.

### 1.15 பதிலீடு (Suppletion)

சில இலக்கணக் கூறுகளை வேறு வழியிலும் தெரிவிக்கமுடியும். எடுத்துக்காட்டாக ஆங்கில மொழியில் காணப்படும் go என்ற சொல்லும், went என்ற சொல்லும் 'போ' என்ற பொருளைத் தருவன என்பதையும், ஒன்று இறந்த காலத்தையும், மற்றொன்று நிகழ்காலத்தையும் உணர்த்துவன என்பதையும் நாமறிவோம். எனினும், இச்சொற்களின் உருவங்களிடையே எவ்விதத் தொடர்பும் காணப்படுவதில்லை. இத்தகைய முழுமையான மாற்றத்தைப் பதிலீடு (suppletion) என அழைப்பர்.[1] இம்மாற்றத்தை

1. Suppletion may be regarded as an extreme kind of internal change in which the entire base – not merely a part, of it is replaced by another form.
—Bloch, 1972:58.

good, better, best என்ற சொற்களிலும் காணலாம் எனக் (Gleason 1955:104) குறிப்பிடுவர். இத்தகைய சொற்கள் ஒரு அடிப் படைப் பொருளைத் தந்தபோதிலும், அவற்றிடையே சொல் வடிவத்தில் kick : kicked போன்ற சொற்களிடையே காணப் படும் ஒற்றுமையைக் காண முடிவதில்லை. ஒரு சொல்லும் மற்றொரு சொல்லும் வடிவத்தால் மாறுபட்டிருக்கின்றன.

## 1.16 இரட்டிப்பு (Reduplication)

ஒரே உருபை மீண்டும் மீண்டும் கூறுவதால் சில இலக்கணக் கூறுகளை உணர்த்த முடியும்.[1] பல மொழிகளில் பன்மையினைக் காட்டுவதற்குச் சில ஒட்டுக்களைப் பயன்படுத்துகின்றனர். ஆனால் மலாய் போன்ற மொழிகளிலோ ஒருமைச் சொல்லை இரண்டு தடவை கூறிப் பன்மையைக் காட்டுவர்.

*boku* புத்தகம் *boku boku* புத்தகங்கள்

தமிழிலும் இந்நிலையைச்

சுடச் சுடச் சாப்பிட்டான், அடி அடியென்று அடித்தான்

போன்ற வாக்கியங்களில் காணலாம். இத்தகைய இரட்டைக் கிளவிகள் பல நிலையில் காணப்படலாம். முழுமையாக ஒரு சொல்லினை இரட்டித்தல், ஒரு அசையினை இரட்டித்தல் போன்ற பல நிலைகளில் காணமுடியும். ஆங்கில மொழியில் காணப்படும் *papa, choochoo, wigwag, criscrass, razzle-dozzle* போன்றவை சில எடுத்துக்காட்டுக்களாகும்.

---

1. Fairly common to languages is a type of allomorphic alternation in which an affix of exactly the same form as part or all of the stem or is the same plus an addition of phoneme or phonemes.
—Elson & Pickett, 1962:45

Reduplication consists in the repetition of all or of part of a root of stem.
—Nida, 1946:69.

வட அமெரிக்க மொழியான இஸ்தமஸ் அஸ்டெக் (Isthmus Astec) மொழியில் காணப்படும்.

| | |
|---|---|
| *kalaki* | உள்ளே போதல் |
| *kakalaki* | பல்தடவை போதல் |
| *isa* | விழித்தல் |
| *ilsa* | பல தடவை விழித்தல் |

என்பனவும் இரட்டிப்பைக் காட்டும்.

### 1.17 உருபு, மாற்றுருபு, உருபன் (Morph, Allomorph, Morpheme)[1]

மொழிகளில் காணப்படும் சொற்கள் பொருள் தருவன. பொருளையும் சொற்பொருள் என்றும், இலக்கணப்பொருள் என்றும் இருவகையாகப் பிரிக்கலாம் என்பதை முன்னரே கண்டோம். மரம், கண், காது, வா போன்ற சொற்கள் சொற்பொருளைத் தருவன. கால இடைநிலைகள், விகுதிகள் போன்றவை காலம், விகுதிப் பொருள் ஆகியவற்றைக் குறிப்பன.

---

1. When a morpheme is represented sometimes by one phonemic shape and sometimes by another or others, we say that the shapes stand in *alternation* with each other, or, more briefly, that the morpheme *manifests* alternation. Each representation is a *morph*; all the morphs which represent some given morpheme are called *allomorphs* of that morpheme.
—Hockett. 1958:272.

An allomorph is a varient of a morpheme which occurs in certain definable environments. A morpheme is a group of one or more allomorphs which confirm to certain, usually rather clearly, definable criteria of distribution and meaning.
—Gleason, 1955:61.

In order to account for the various phonemic shapes of given morpheme, linguists have posited a kind of pseudomorpheme called a *morph*. .... Morphs are said to represent morphemes, morphemes may be represented by one or more than one morph.
—Elson & Pickett. 1962:26.

ஒரு பொருளையே குறிக்கும் பல வடிவங்களை நாம் மொழிகளில் காணமுடியும். -அன், -ஆன் போன்றவை படர்க்கை ஆண் பாலைக் காட்டும். -அய், -ஆய், -இ போன்றவை முன்னிலை ஒருமையைக் காட்டும். இவை பல வடிவங்களில் அமைந்திருந்த போதிலும்கூட ஒரே பொருளைத் தருவன என்பதை நாம் அறிவோம். எனவே, இவற்றை முறையே ஆண்பால் உருப னாகவும், முன்னிலை ஒருமை உருபனாகவும் கருதலாம். இவ்வாறு கூறுவது இவை தரும் பொருளின் அடிப்படையிலேயே ஆகும். தமிழில் காணப்படும் -த்-, -ட்-, -ற்-, -இன்- ஆகியவை இறந்த காலம் காட்டும் உருபுகள். இவை பலவேறு வடிவங்களில் அமைந்திருந்த போதிலும் இவையனைத்தும் ஒரு இலக்கணக் கூற்றினைக் காட்டுவதால் இவையனைத்தையும் இணைத்து ஒன்றாகக் கருதுவதுடன் இவற்றை இறந்தகாலம் காட்டும் இடை நிலைகள் என்போம். இறந்த காலம் காட்டும் நிலையில் இவற்றை ஒரு குழுவாகக் கருதி இறந்தகால உருபன்(morpheme) ஒன்று தமிழில் உண்டு என்றும், அதனைக் காட்டும் உருபுகளாக (morph) த், ட், ற், இன் ஆகியன பயன்படுகின்றன என்றும் கூறலாம். ஒரு பொருளைக் குறிக்கும் நிலையில் உருபன் என்றும் அப்பொருளைக்காட்டும் பல்வேறு உருபுகளை மாற்றுருபு என்றும் கருதலாம். தமிழில் இறந்தகாலம் காட்டும் நிலையில் 'இறந்த கால உருபன்' எனக் கூறுவதோடு அதனைக் குறிக்க.

$\{$ இறந்தகாலம் $\}$ என்றோ

அல்லது ஏதாவது ஒரு மாற்றுருபை இதன் பிரதிநிதியாகக் கொண்டு

$\{$ -t- $\}$

என்றோ குறியிட்டுக் காட்டுவர். மாற்றுருபுகளை

*-t-, -ṭ-, -ṟ-, -iṉ-, -nt-*

1. All the morphs which represent some given morpheme are called allomorphs of that morpheme.
—Hockett, 1958: 272.

எனக் குறிப்பிடுவர். ஒரு உருபனைக் காட்டும் பல்வேறு உருபுகளே மாற்றுருபுகள் எனப்படும்.[1]

மொழிகளில் உருபன்கள் ஒரே வடிவத்தைக் (phonemic shape) கொண்டோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வடிவங்களைக் கொண்டோ பொருள் காட்டலாம். ஆங்கிலமொழியில் காணப்படும் பன்மை உருபன் –s (cats, cups), –z (logs, dogs) போன்ற மாற்றுருபுகளைக் கொண்டுள்ளன. பழந்தமிழில் ஆண்பால் உருபன் –அன், –ஆன், –என் ஆகிய மாற்றுருபுகளைக் கொண்டுள்ளன.

ஒரு உருபன் ஒரு சில மாற்றுருபுகளைக் கொண்டிருக்கலாம். இம்மாற்றுருபுகள் அனைத்தும் ஒரே பொருளைக் காட்டுகின்ற நிலையில்தான் ஒரே உருபனின் மாற்றுருபுகளாகக் கருதப் படுகின்றன. இம்மாற்றுருபுகள் தம்முள் வரும் இடத்தை அடிப் படையாகக் கொண்டு சில உண்மைகளைக் கண்டுபிடிக்க முடியும். ஆங்கில மொழியில் காணப்படும் பன்மை உருபன் –z, –z, –s, –ən போன்ற மாற்றுருபுகளைக் கொண்டுள்ளன. இம்மாற்றுருபுகள் வரும் இடத்தை ஆராயின் –s இசையல் (voiceless) மெய்களின் பின்னரும் (cocks, cups), –z இசை ஒலிகளின் (voiced sound) பின்னரும், –əz சகர ஒற்றுக்களுக்குப் பின்னரும் (buses), –ən ox போன்ற ஒரு சில சொற்களுக்குப் பின்னரும் வருதலைக் காணலாம். ஒரு மாற்றுருபு வந்த இடத்தில் இன்னொரு மாற்றுருபு வருவதில்லை. இந்நிலையைத்தான் துணை நிலை வழக்கு (complementary distribution) எனக் கூறுவர்.[2] தமிழ் மொழியிலும் இதற்குரிய பல எடுத்துக்காட்டுக்களைக் காணமுடியும். காரணவினையைக் காட்டும் உருபுகளாகிய –வி, –பி ஆகியவை துணைநிலை வழக்கு களிலேயே உள்ளன. –வி செய், பாடு, ஆடு போன்ற மெல் வினைகளை (weak verbs) அடுத்தும், –பி அடி, கொடு போன்ற

1. The various morphs which represent one morpheme are called allomorphs.
—Elson & pickett, 1962:26.

2. Two elements are said to be in complementary distribution if each occurs in certain environments in which the other never occurs — that is, if there are no environments in which both occur.
—Gleason, 1955:80.

வல்வினைகளை (strong verbs) அடுத்தும் வருவதைக் காணலாம். செய்வித்தான், ஆட்டுவித்தான் போன்ற மெல்வினைச் சொற்களிலும் அடிப்பித்தான், கொடுப்பித்தான் போன்ற வல்வினைச் சொற்களிலும் வருகின்றன.

சில மாற்றுருபுகள் ஒன்று வந்த இடத்தில் இன்னொன்று வருகின்ற நிலையையும் காணமுடியும். பழந் தமிழில் –என், –ஏன், –அன், –அல் போன்ற தன்மை ஒருமை விகுதிகளைக் காணலாம். இவை அனைத்தும் தன்மை ஒருமையைக் காட்டும் நிலையில், தன்மை ஒருமை உருபனின் மாற்றுருபுகள் எனப்படும். இவற்றுள் –என் பிற உருபுகளாகிய –ஏன், –அன், –அல் வரும் சில இடங்களிலும் வருவதால், –என் அவற்றோடு பதில்நிலை வழக்கில் ( free variation ) உள்ளது. எதிர்கால இடைநிலைக்குப் பின்னர் இவை அனைத்தும் வருதல் உண்டு.

வருவேன், வருவன், வருவென், வருவல்

ஆகிய சொற்களில் இந்நிலையைக் காணுகிறோம். இவ்வாறு ஒன்று வந்த இடத்தில் மற்றொன்று வரும் நிலையைப் பதில்நிலை வழக்கு எனக் கூறுவர்.

ஆனால், இரு உருபுகள் ஒரே சூழலில் வந்து பொருள் மாறுபாட்டினைத் தருமானால் அவை எதிர்நிலை வழக்கில் (contrastive distribution) உள்ளது என்றும், எனவே அவை இருவேறு உருபன்களின் மாற்றுருபுகள் எனவும் கருதலாம். ஆடுகிறான், ஆடுவான் போன்ற சொற்களில் –கிறு– இடைநிலையும் –வ்– இடைநிலையும் ஒரே சூழலில் வந்து ஒன்று நிகழ் காலத்தையும், மற்றொன்று எதிர் காலத்தையும் காட்டுவதால் இவை எதிர்நிலை வழக்கில் உள்ளன என்றும், ஒன்று நிகழ்காலத்தைக் காட்டும் உருபு என்றும், மற்றது எதிர்காலத்தைக் காட்டும் உருபு என்றும் முடிவு கட்டலாம்.

ஒரு உருபனின் மாற்றுருபுகளை நிர்ணயிக்கும்போது பலவேறு ஒலி மாற்றங்களையும் பயன்படுத்தலாம்.

### 1.18 பலவேறு வகை ஒலிமாற்றங்கள்

பலவேறு மொழிகளில் பலவேறு வகையான ஒலி மாற்றங்களைக் காணலாம். எல்லா மொழிகளிலும் ஒரே வகையான ஒலி மாற்றங்கள்தான் இருக்கவேண்டும் என்ற நியதியில்லை. சூழ்நிலை அல்லது சுற்றுச்சூழல் ஒரே மாதிரியாக அமைந்தால் ஒரே வகையான மாற்றம் ஏற்படும் என நம்பலாம். அயினும் இம் மாற்றங்கள் ஒரே மாதிரியாகத்தான இருக்கும் எனக் கூறுவதற்கில்லை. ஒரு கிளை மொழியில் ஒரு மாதிரியான மாற்றமிருக்க அம்மொழியின் மற்றொரு கிளை மொழியில் வேறு மாதிரியான மாற்றமும் நிகழலாம். இலக்கியத் தமிழில் உள்ள மலை போன்ற சொற்கள் பேச்சுமொழியில் எகரமாக (மலெ) மாற, மலையாள மொழியிலோ 'மல' என அகரமாக மாறியிருக்கக் காணுகிறோம். இரண்டு உயிர்களுக்கிடையே வருகின்ற வல்லொலி அல்லது வெடிப்பொலி சில மொழிகளில் உரசொலியாக மாறக் காணுகிறோம். எனினும் இவ்வொலிகள் நாமடி ஒலியாக மாற முடியாது. இந்நிலையில் ஒலிமாற்றங்களிடையே ஒரு ஒழுங்கும் வரையறையும் உள்ளன எனக் கூறலாம்.

இத்தகைய மாற்றங்கள் அனைத்தும் மனித முயற்சியில் ஒரு எளிமையைக் காணுவதாகவே அமைந்திருக்கலாம்.[1] எளிமை என்று குறிப்பிடும் போது எல்லா மொழியினரும் ஒரே நிலையில் இருக்க வேண்டுமென்பதில்லை. வேகமாகப் பேசும்போது சில ஒலியன்களை விட்டுவிடுகிற நிலையைக் காணுகிறோம். பார்த்தான் என்ற சொல்லைப் பாத்தான் என உச்சரிக்கிறோம். பாய்ச்சு என்ற சொல்லைப் பாச்சு என்று உச்சரிக்கிறோம். இவற்றைப் போன்று தொடர்ச்சியாகப் பல மெய்யொலிகள்

---

1. The general direction of a great deal of sound-change is toward a simplification of the movements which make up the utterance of any given linguistic form. Thus, consonant groups are often simplified. The Old English initial clusters, (*hr, hl, hn, kn, gn, wr*) have lost their initial consonants, as in Old English *hring* > *ring*, *hlēapen* > *leap*, *hnecca* > *neck*, *cnēow* > *knee*, *gnagan* > *gnaw*, *wringan* > *wring*.
—Bloomfield, 1961 : 370.

வரும்போது அவற்றிடையே சில நேரங்களில் சில உயிர் ஒலிகளை இட்டு உச்சரிக்கின்ற நிலையையும் காணுகிறோம். ஸ்டேஷன் என்ற சொல்லைச் சடேஷன் என்று உச்சரிக்கின்றனர் சில மொழியினர். இதைப்போன்றே மொழிக்கு இறுதியில் வரும் சொற்களிலும்கூடப் பலவேறு மெய்யொலிகளை விட்டுவிடக் காணு கிறோம். வந்தாள் என்பதைப் பேச்சு மொழியில் வந்தா என்றும், வந்தால் என்பதை மீண்டும் வந்தா என்றும், அவன் என்பதை அவ என்றும் உச்சரிக்கக் காணுகிறோம். இந்நிலையில் பல சொற்கள் ஒரே உருவத்தினை அடைய பல மொழிகளில் பல வேறு மாற்றங்கள் உண்டாகக் காணலாம்.

மொழிக்கு முதலிலும் இத்தகைய மாற்றங்கள் நிகழ்கின்றன. யாறு என்ற தமிழ்ச்சொல் ஆறு எனவும், யானை என்ற சொல் ஆனை எனவும் திரிகின்றன. இத்தகைய பல சொற்களைத் தமிழ்மொழியில் காணமுடியும். சுப்பு என்ற திராவிடச் சொல் தமிழ்மொழியில் உப்பு என ஆயிற்று. சாறு என்ற சொல் ஆறு என ஆயிற்று. ஆங்கில மொழியிலும் இத்தகைய மாற்றங்களைக் காணலாம். உலக மொழிகள் அனைத்துமே இம்மாற்றங்களைக் கொண்டவைதாம். முன்னர்க் குறிப்பிட்டதுபோல hnecca என்ற சொல் neck என்றும், hring என்ற சொல் ring என்றும் ஆங்கில மொழியில் மாறியுள்ளன. climb என்ற சொல் claim என்றே உச்சரிக்கப்படுகிறது. இறுதி bயை அது இழந்துவிடுகின்றது. neck என்ற சொல்லில் h கெட்டுவிடுகிறது. இத்தகைய சொற்கள் ஆங்கில மொழியில் ஏராளமாக உள்ளன.

மெய்யொலிகள் மட்டுமின்றி உயிர் ஒலிகளும் கெடுவதைக் காணலாம். மாதரி என்பதை மாதிரி என உச்சரிக்கிறோம். அவனை என்பதை அவன என்று உச்சரிக்கிறோம். இந்நிலையி லெல்லாம் உயிரும் கெடுதல் காணலாம்.[1]

---

1. Perhaps the most obvious type of sound change involves the simple loss of phonemes. Again this may be conditioned or unconditioned.
—Arlotto, 1972 ; 78.

கெடுதல் மட்டுமின்றி சில ஒலிகள் தோன்றுகின்ற நிலையும் உண்டு[1]. எலும்பு என்பதை யெலும்பு என்று உச்சரிக்கிறோம். எனக்கு என்பதை யெனக்கு எனக் கூறுகிறோம். இங்கெல்லாம் யகரம் மொழிக்கு முதலில் தோன்றிவிடக் காணலாம். பசு என்பதைப் பசுவு என்றும், கொலு என்பதைக் கொலுவு என்றும், புறா என்பதைப் புறவு என்றும் நிலா என்பதை நிலவு என்றும் குறிப்பிடுதல் இங்கு நினைவுகூரத்தக்கது.

இவற்றைப் போன்றே ஒலியன்களிடையே விகாரங்களையும் காணுகிறோம். படைத்தான் என்பதைப் படச்சான் என உச்சரிக்கிறோம். நடித்தான் என்பது நடிச்சான் என்றாகிறது. பாய்த்து என்பது பாய்ச்சு என ஆகிறது. மறம் என்பது மரம் என்றாகிறது. இதனால் நன்னூலாரும

தோன்றல் திரிதல் கெடுதல் விகாரம்
மூன்றும் மொழிமூ விடத்து மாகும் (154)

என்றும்

வலித்தல் மெலித்தல் நீட்டல் குறுக்கல்
விரித்தல் தொகுத்தலும் வருஞ்செய்யுள் வேண்டுழி (155)

என்றும் கூறிப்போந்தார். இத்தகைய மாற்றங்களையெல்லாம் மனித மொழிகள் எல்லாவற்றிலும் காணமுடிகிறது. இம் மாற்றங்கள் பலவற்றையும் ஆராய்ந்த மொழியியல் அறிஞர்கள், ஓரினமாக்கம் (assimilation), அண்ணமாக்கம் (palatalization) வேற்றினமாக்கம் (dissimilation) போன்ற பலவேறு வகைகளாகப் பிரித்து மாற்றுருபுகளை நிர்ணயிக்கின்றனர்.

### 1.18.1 ஓரினமாக்கம் (Assimilation)

இம்மாற்றம் மொழிகளில் மிக அதிகமாகக் காணக்கிடக்கும் ஒரு மாற்றமாகும். ஒரு ஒலியனுக்கு முன்னரோ அல்லது பின்னரோ

---

1. Much less common is the addition of a phoneme to a word. In New English we have the isolated examples of *nope* as an emphatic form of *no* and *yep* as an emphatic form of, perhaps, *yeah* (from *yes*).
—Arlotto, 1972 : 79.

வருகின்ற மற்றொரு ஒலியன் முந்திய அல்லது பிந்திய ஒலியனின் உச்சரிப்பிற்கு ஏற்ப மாறி வருகின்ற மாற்றத்தை ஒரின மாக்கம் என்பர்.[1] இம்மாற்றம் ஒலியன் உண்டாக்கும் இடத்திற்கு ஏற்பவும் (place of articulation) உச்சரிக்கப்படுகின்ற நிலைக்கு ஏற்பவும் (manner) அமைவதைக் காணலாம்.

செண்பகம் என்ற சொல் செம்பகம் என்று உச்சரிக்கப்படுவதும் தன்பின் என்றது தம்பி என ஆனதும் முதல் வகைக்கு எடுத்துக் காட்டுக்களாகும்.

பெரிம் > பெரும்

விழு > வுழு > வுளு

என்பன இரண்டாவது வகைக்கு எடுத்துக்காட்டுக்கள்.

இம் மாற்றத்தை முன்வழி ஒரினமாக்கம் (progressive assimilation), பின்வழி ஒரினமாக்கம் (regressive assimilation) என இரு வகையாகப் பிரிக்கலாம்.

1.18.1.1 முன்வழி ஒரினமாக்கம் (Progressive assimilation)

ஒரு சொல்லில் முன்னால் வருகின்ற ஒலியன்களுக்கேற்ப பின்னால் வரும் வேறொரு ஒலியன் வேறுபடுமாயின் அதனை முன்வழி ஒரினமாக்கம் எனக் குறிப்பிடலாம்.[2]

1. Perhaps the most common type of conditioned sound change is *assimilation*, whereby one sound becomes more like a neighboring one. Obviously, this can be considered a simplification of the muscular movements needed to pronounce a given word. Assimilation is a very frequent phenomenon in just about all the languages of the world. In terms of articulatory phonetics, assimilation of consonants usually involves one consonant becoming more like another in one or more of the following three ways.
   1. point of articulation
   2. manner of articulation
   3. voicing

   —Arlotto 1972 : 81.

2. *Progressive assimilation* takes place when the first phoneme is dominant and in some way makes the second more like itself.

   —Arlotto, 1972 : 81.

| | | |
|---|---|---|
| வேள்விக்கு | > | வேள்விக்கி |
| கத்திக்கு | > | கத்திக்கி |
| இரு | > | இரி (மலையாளம்) |
| எழுந்திரு | > | எழுந்திரி |
| கண் + த் + ஆன் | > | கண்டான் |
| பெற் + த் + ஆன் | > | பெற்றான் |

### 1.18 1.2 பின்வழி ஒரினமாக்கம் (Regressive assimilation)

ஒரு சொல்லில் பின்னால் வருகின்ற ஒலியனுக்கேற்ப முன்னால் வரும் ஒலியனின் உச்சரிப்பு மாறுபடுமாயின் அம்மாற்றம் பின்வழி ஒரினமாக்கம் எனப்படும்[1]. முன்வழி ஒரினமாக்கத்தை விட பின்வழி ஒரினமாக்கமே உலக மொழிகளில் அதிகமாகக் காணப்படுகிறது என்பர்.

| | | |
|---|---|---|
| செண்பகம் | > | செம்பகம் |
| வன்சினம் | > | வஞ்சினம் |
| எண்பது | > | எம்பது |
| நன்செய் | > | நஞ்செய் |
| புன்செய் | > | புஞ்செய் |
| வேள் + ப் + ஆன் | > | வேட்பான் |

### 1.18.1.3 பரஸ்பர ஒரினமாக்கம் (Reciprocal assimilation)

சில சொற்களில் முன்னால் வருகின்ற ஒலியனின் தாக்கத்தால் பின்னால் வரும் ஒலியனும், பின்னால் வரும் ஒலியனின் தாக்கத்தால் முன்னால் வரும் ஒலியனும் மாற்றங்களை அடைதல்

1. *Regressive assimilatoin* means that a consonant becomes more like one that follows; in other words, the force of the change preceeds backwards, from a phoneme to the one which preceeds it. Presumably, this shift is explained as an anticipation of the muscular movements which go to make up the second phoneme.
—Arlotto, 1972 : 81.

காணலாம். இத்தகைய மாற்றத்தை பரஸ்பர ஓரினமாக்கம் எனக் குறிப்பிடலாம்.

கற்றாழை, கற்றூண்

போன்றவை இம்மாற்றத்திற்கு எடுத்துக்காட்டுக்களாகும்.

இத்தகைய மாற்றங்களை தொடர்வழி ஓரினமாக்கம் (continuous assimilation) என்றும், சேய்மைவழி ஓரினமாக்கம் (distant assimilation) என்றும் பிரிக்கலாம்.

### 1.18.1.3.1 தொடர்வழி ஓரினமாக்கம் (Continuous assimilation)

சொற்களில் அடுத்தடுத்துக் காணப்படுகின்ற ஒலியன்களில் ஓரினமாக்க மாற்றம் ஏற்படுமாயின் அதனைத் தொடர்வழி ஓரினமாக்கம் எனக் குறிப்பிடலாம்.

நன்செய் > நஞ்செய்
புன்செய் > புஞ்செய்

### 1.18.1.3 2 சேய்மைவழி ஓரினமாக்கம் (Distant assimilation)

சில சொற்களில் சேய்மையில் வரும் ஒலியனின் தாக்கத்தால் ஓரினமாக்கம் நடைபெறும். இத்தகைய மாற்றத்தைச் சேய்மை வழி ஓரினமாக்கம் எனலாம்.[1] ஒன்பது, தொண்ணூறு, தொள்ளாயிரம் என்ற சொற்களில் உள்ள -பது, -நூறு, -ஆயிரம் என்பன அடுத்துத் தொடர்ந்து வரும் எண்ணுப் பெயர்களின் செல்வாக்கால் ஏற்பட்டன. இவற்றைச் சேய்மை வழி ஓரினமாக்கத்திற்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

1.18.1.4. ஓரினமாக்கம் சில சொற்களில் முழுமையாகவும், இன்னும் வேறுசில சொற்களில் பகுதி நிலையிலும் செயல்படக்

1. In *distant assimilation* a phoneme is replaced by another of related acoustic type which occurs elsewhere in the same word.
—Bloomfield, 1961 : 390.

காணுகிறோம். முழுநிலையில் வருகிற ஓரினமாக்கத்தை முழுநிலை ஓரினமாக்கம் (total or complete assimilation) என்றும், பகுதி நிலையில் வருகின்ற ஓரினமாக்கத்தைப் பகுதிநிலை ஓரினமாக்கம் (partial assimslation) என்றும் குறிப்பிடலாம்.

**முழுநிலை ஓரினமாக்கம்**

mn > nn Somnus (இலத்தீன்) Souno (இத்தாலியன்)

ட்த் > ட்ட்: விட் + த் + ஆன் > விட்டான்

கெட் + த் + ஆன் > கெட்டான்

ந்த் > ந்ந்: வந்து > வந்நு (மலையாளம்)

ங்க் > ங்ங்: தேங்காய் > தேங்ஙா (மலையாளம்)

ண்ந் > ண்ண்: கண் + நீர் > கண்ணீர்

**பகுதிநிலை ஓரினமாக்கம்**

ன் > ஞ்: நன் + செய் > நஞ்செய்

புன் + செய் > புஞ்செய்

த் > ட்: கண் + த் + ஆன் > கண்டான்

1.18.1.5 உலக மொழிகளில் காணப்படும் மாற்றங்களை ஆராயின், பலவேறு மாற்றங்கள் ஓரினமாக்கத்தின் கீழ் வருதல் காணலாம். உயிர் இயைபு (vowel harmony). ஒரு உயிர் இன்னொரு உயிராதல்[1], வெடிப்பொலி உரசொலியாதல், இசையொலியாதல் போன்ற மாற்றங்களனைத்தும் ஓரினமாக்கமே. ஒரு ஒலியனில் காணப்படும் ஒரு பண்பினை வேறொரு ஒலியன் மேற்கொள்ளும்போது அடைகின்ற மாற்றமே ஓரினமாக்கம் என்பதை நாம் அறிவோம். இந்நிலையில்

---

1. Somewhat less frequent than consonant assimilations, but still widespread, are vowel assimilations, which are generally known by the name of *umlaut* or *vowel harmony*.
—Arlotto, 1972 : 85.

| பழைய ஆங்கிலம் | தற்கால ஆங்கிலம் |
|---|---|
| modor | mother |
| faeder | father |
| weder | weather |
| hider | hither |

போன்ற சொற்களில் காணப்படும் உரசொலிமாற்றமும் ஒருவகை ஓரினமாக்கமே. உயிர் ஒலிகளனைத்தும் தொடர் ஒலிகளாகும் (continuants). இந்நிலையில் வெடிப்பொலிகள் தொடர் ஒலிகளாக மாறுவதில் வியப்பில்லை. இம் மாற்றத்தைப்போன்றே சில இசையல் ஒலிகள் இசையொலிகளாகிய உயிர் ஒலிகளுக்கு நடுவே வரும்போது இசையொலிகளாக மாறுகின்றன. இது உலக மொழிகள் பலவற்றிலும் உண்டு. இலத்தீன் மொழியில் சில சொற்கள் இசையல் ஒலிகளாக இருக்க, ஸ்பானிஷ் மொழியில் இசை ஒலிகளாக மாறியிருக்கக் காணலாம்.

| இலத்தீன் | ஸ்பானிஷ் | |
|---|---|---|
| *ripa* | *riba* | 'shore' |
| *mutare* | *mudar* | 'to change' |
| *fata* | *fada* | 'fate' |
| *amica* | *amiga* | 'female friend' |

இவற்றைப் போன்றே சொற்களில் ஒலியனின் தாக்கத்தால் முன் உயிர் பின்னுயிர் ஆதலும், பின் உயிர் முன்னுயிர் ஆதலும், மேல் உயிர் கீழ் உயிர் ஆதலும், கீழ் உயிர் மேலுயிர் ஆதலும், குவி உயிர் (rounded vowel) குவியல் உயிர் (unrounded vowel) ஆதலும், குவியல் உயிர் குவி உயிர் ஆதலும் போன்ற இன்னோரன்ன மாற்றங்களெல்லாம் ஓரினமாக்கத்தின்பாற்படும்.

முன்னுயிர் பின்னுயிராதல்

வீடு > ஊடு (பே. தமிழ்)

பிடு > புடு (பே. தமிழ்)

விடு > வுடு (பே. தமிழ்)

பின்னுயிர் முன்னுயிராதல்

கத்திக்கு > கத்திக்கி

இரு (தமிழ்) > இரி (மலையாளம்)

| Old High German | Middle High German | |
|---|---|---|
| *sconi* | *schōne* | 'beautiful' |
| *dunni* | *dünne* | 'thin' |
| *mahti* | *mähte* | 'might' |

மேல் உயிர் கீழ் உயிராதல்

| | | | |
|---|---|---|---|
| இலை | > | எலெ | (பே. தமிழ்) |
| இடம் | > | எடம் | (பே. தமிழ்) |
| விஷம் | > | வெஷம் | (பே. தமிழ்) |
| உரல் | > | ஒரல் | (பே. தமிழ்) |
| உதை | > | ஒதை | (பே. தமிழ்) |

கீழ் உயிர் மேல் உயிராதல்

கொடு > குடு (பே. தமிழ்)

### 1.18.2 அண்ணமாக்கம் (Palatalization)

உலக மொழிகள் பலவற்றில் அண்ணமாக்கத்தைக் காணலாம். அண்ணத்தை யொட்டிப் பிறக்கின்ற ஒலி சகர ஒலியாகும். எனவே, சகர ஆக்கத்தையே அண்ணமாக்கம் எனக் குறிப்பிடுவர்[1]. சில

1. Consonants are often assimilated to the tongue-position of preceding of following vowels. The commonest case is the assimilation especially of dentals and velars to a following front vowel; this is known as *palatalization*.
—Bloomfield, 1961 : 376.

Besides assimilation, one of the most common types of sound change is the process of *palatalization* which is

ஒலிகள் அதற்கு முன்னாலோ அல்லது பின்னாலோ, வருகின்ற ஒலிகளின் காரணமாகச் சகரமாக மாறி உச்சரிக்கப்படுமாயின், இதனைச் சகரமாக்கம் எனக் குறிப்பிடலாம். பொதுவாக முன் உயிர்களாலும் யகர மெய்யினாலும் இம்மாற்றம் நடைபெறக் காணலாம்.

| | | |
|---|---|---|
| கெவி (திரா.) | > | செவி (தமிழ்) |
| கெய் (திரா.) | > | செய் (தமிழ்) |
| அடித்தான் | > | அடிச்சான் (பே. தமிழ்) |
| பாய்த்து | > | பாய்ச்சு (பே. தமிழ்) |
| ceaf (O. E) | > | chaff (N. E) |
| ceap (O. E) | > | cheap (N. E) |
| cild (O. E) | > | child (N. E) |

சிலாவிக் மொழிகளில் இம்மாற்றம் அதிகமாகக் காணப்படுகிறது என்பர்.[1]

### 1.18.3 வேற்றினமாக்கம் (Dissimilation)

ஒரினமாக்கத்தைப் போன்றே வேற்றினமாக்கமும் ஒரு ஒலி மாற்றமாகும். அடுத்தடுத்தோ அல்லது சேய்மையிலோ வருகின்ற ஒரே மாதிரியான ஒலியன்களில் ஒன்று வேறாக உச்சரிக்கப் படுகின்ற நிலையில் இதனை வேற்றினமாக்கம் எனக் குறிப்பிட

found in many different languages of the world. Articulatorily, it involves the shift of a consonant to a palatal point of articulation.
—Arlotto, 1972 : 87.

1. Palatalization has played a great part in the history of the Slavic languages: it has occurred at different times with different results, and has affected every type of consonant, including even labials.
— Bloomfield 1961 : 378.

லாம்[1]. இம்மாற்றம் ஓரினமாக்கத்தைவிடக் குறைவாகவே உலக மொழிகளில் காணப்படுகிறது.

போட்டா > போட்ரா

பொள்ளாப்பிள்ளையார் > பொல்லாப்பிள்ளையார்

*Peregrinus* (லத்தீன்) > *pellegrin* (பிரெஞ்சு) 'pilgrim'

ரப்பர் > லப்பர்

ராந்தர் > லாந்தர்

*divinum* (லத்தீன்) > *devin* (பிரெஞ்சு) 'devine'

*succussan* (லத்தீன்) > *secousse* (பிரெஞ்சு) 'shake'

### 1.18.4 ஈடுசெய் நீட்டம் (Compensatory lengthening)

சில சொற்களில் சில ஒலிகள் கெட அவற்றிற்குப் பதிலாகப் பக்கத்து ஒலிகள் நீளக் காணலாம். இது சாதாரணமாக உயிர் ஒலிகளில்தான் காணப்படும். இத்தகைய நீட்டத்தையே ஈடுசெய் நீட்டம் என்பர்[2].

---

1. Much less common than assimilation, though frequent enough to be worthy of mention is the opposite process of *dissimilation*, whereby one of two similar sounds will change so as to become even more differentiated from the other.
—Arlotto, 1972 : 87.
Some changes consist in a redistribution of phonemes. The commenest of these seems to be *dissimilation:* when a phoneme or type of phoneme recurs within a form, one of the occurrences is sometimes replaced by a different sound.
—Bloomfield, 1961 : 390.

2. The weakening or loss of consonants is sometimes accompanied by *compensatory lengthening* of a preceding vowel.
— Bloomfield, 1961 : 379.
A particular type of change related to both vowels and consonants is the process known as *compensatory lengthening*. This situation involves a vowel which is followed by two consonants; when one of the consonants

| | | | | |
|---|---|---|---|---|
| பொழுது | > | போழ்து | > | போது |
| செய்யோன் | > | செயோன் | | |
| கரிப்பு | > | கார்ப்பு | | |
| உவர்ப்பு | > | ஓர்ப்பு (பே. தமிழ்) | | |
| சிவப்பு | > | சேப்பு (பே. தமிழ்) | | |

1.18 5· இடம் பெயரல் (Metathesis)

ஒரு சொல்லில் காணப்படும் சில ஒலிகள் அவை நிற்க வேண்டிய இடத்தில் நில்லாது அடுத்து இடம் பெயர்ந்து நிற்கக் காணலாம். இம்மாற்றத்தையே இடம் பெயரல் என்பர்.[1]

| | | |
|---|---|---|
| எனக்கு | > | னேக்கு (பே. தமிழ்) |
| உனக்கு | > | னோக்கு (பே. தமிழ்) |
| விசிறி | > | சிவிறி |
| சதை | > | தசை |
| வைசாகி | > | வைகாசி |
| அவன் | > | வாடு (தெலுங்கு) |
| உரல் | > | ரோலு ,, |
| வரை | > | ராயி ,, |

| பழைய ஆங்கிலம் | | இடை ஆங்கிலம் | |
|---|---|---|---|
| brid | > | bird | 'bird' |
| hros | > | hors | 'horse' |
| oridda | > | ride | 'third' |

---

is dropped, the vowel is lengthened in compensation for the lost phoneme. In formal terms, compensatory lengthening is usually expressed as follows :

$$VC_1 C_2 \rightarrow \bar{V}C_2$$

— Arlotto, 1972 : 88.

1. *Metathesis* is the interchange of two phonemes within a word.
— Bloomfield, 1961 : 391.

1.18.6 தமிழில் காணப்படும் இறந்த கால இடைநிலைகளுள் -த்-, -ட்-, -ற்- ஆகியவற்றைத் தனித்தனி மாற்றுருபுகளாகக் கொள்ளலாம். இல்லையெனில் ஒரினமாக்கத்தைப் பயன்படுத்தித் தகர ஒற்று ஒன்றையே அடிப்படை மாற்றுருபு (basic allomorph) எனக் கொண்டு விளக்கி விடவும் முடியும். இந்நிலையில் தகர ஒற்றினை அடிப்படை உருவம் (basic form) எனலாம். பின்னர்

*ṉ* + *t* ▷ *ṉṟ*

*ṇ* + *t* ▷ *ṇṭ*

என்ற ஒரினமாக்க விதியைப் பயன்படுத்தி விளக்கலாம். இந்நிலையில்

செய்தான், பொருதான், கண்டான், தின்றான்

போன்ற சொற்களில் வரும் -ட்-, -ற்- ஆகிய இறந்தகால இடைநிலைகளையும் நன்னூலார் போன்று தனித்தனியாகக் கொள்வதோடு, தகரத்திலிருந்து வருவித்துக் கொள்ளவும் முடியும். இதே நிலையினை ஆங்கில மொழியில் காணப்படும் பன்மை மாற்றுருபுகளிலும் செய்ய முடியும்.

இம்முறையில் எம்முறையினைப் பின்பற்றுவது என்று முடிவு கட்ட வேண்டியது மொழியியலாளன் கடமையாகும். எந்த ஒரு மொழியினைப் பற்றியும் ஆராய்ந்து விவரிக்கும்போது எளிமை (simplicity), ஒரு மனப்போக்கு (consistency), முழுமை (completeness), அமைப்பினைப்பற்றி முன்னமே உணரும் நிலைமை (prediction) முதலியவற்றை அடிப்படையாகக் கொண்டுதான் மாற்றுருபுகளை நிர்ணயித்தல் வேண்டும். மேலே கூறிய புணர்ச்சி விதி இந்த ஒரு நிலையை விளக்குவதற்கு மட்டுமன்றி வேறு பல மாற்றங்களையும் விளக்குவதற்குப் பயன்படுமானால், இம்முறையைப் பின்பற்றுவதே நல்லது.

## 1.19 உருபன்களையும் உருபுகளையும் கண்டறிதல்

உருபன்களையும் உருபுகளையும் கண்டறியும் நிலையை நைடா (Nida, 1946) ஒருசில விதிமுறைகளால் காட்டிச் சென்றமையை முன்னமேயே கூறினோம். பொதுவாக ஒரு மொழியில் காணப்

படும் உருபன்களையும் உருபுகளையும் கண்டறிவதற்கு அம் மொழி நன்றாகத் தெரிந்திருக்க வேண்டும் என்று அவசியமில்லை. மொழியியல் கற்ற மாணவர்கள், எந்த ஒரு மொழியையும் அம் மொழியைப் பேசத் தெரியாமலேயே, அதற்குரிய இலக்கணத்தை எழுதிவிட முடியும் என்பதை நாம் அறிவோம். ஒரு சில நடை முறைகளைக் கொண்டு உருபன்களையும் உருபுகளையும் கண்டு பிடிக்க முடியும். எடுத்துக்காட்டாக ஒன்றிரண்டு காண்போம்.

| | |
|---|---|
| வந்தான | வந்தேன் |
| வந்தாள் | வந்தது |
| வந்தார் | வந்தாய் |
| கடந்தான் | வந்தோம் |
| கடந்தாள் | வந்தீர் |

ஆகிய சொற்களை ஒப்புமைப் படுத்திக் காணும்போது எல்லா வற்றிலும் –ந்த்– காணப்படும் நிலையில் அதுதான் கடந்தகாலம் காட்டும் என்பதையும் வ–, கட– முறையே வருதல் தொழிலையும் கடத்தல் தொழிலையும் காட்டும் என்பதையும் –ஆன், -ஆள், –ஆர் என்பவை முறையே ஆண்பால் ஒருமையையும் பெண்பால் ஒருமையையும் பலர்பாலையும் காட்டும் என்பதையும் எளிதில் கூறமுடியும். இவற்றுள் வந்தான். வந்தாள், வந்தார் என்பன முழு எதிர்நிலை வழக்கில்(minimal pair) உள்ளன. இதைப் போன்றே

| | |
|---|---|
| pen | மனிதன் |
| pen ta?m | மனிதர்கள் |
| nanah | தாய் |
| nanahta?m | தாய்கள் |
| yomo | பெண் |
| yomo ta?m | பெண்கள் |

ஆகிய சொற்களை ஒப்பவைத்து ஆராய்வர். முதற்சொல்லையும் இரண்டாவது சொல்லையும் எடுத்துக்கொண்டால் இரண்டாவது சொல் பன்மையைக் காட்டக் காணலாம். முதற் சொல்லில் இல்லாத *–ta?m* என்ற ஒட்டு பன்மையைக் காட்டுவதாக நினைக்

கலாம். இதை உறுதிப்படுத்துவதாக அமைந்துள்ளவை பிற சொற்கள். எனவே *-ta?m* என்ற ஒட்டே சோக் (Zoque) மொழியில் பன்மை காட்டும் ஒட்டு என்பதை நம்மால் அறிய முடியும்.

மொழியியலில் கைவந்த தேர்ச்சியும் பழக்கமும் ஏற்படின் எம்மொழியினையும் ஆராய்வதற்குரிய திறம் ஏற்பட்டுவிடும். ஒலியியல், ஒலியன் இயல், சொல்லியல், தொடரியல் ஆகியவை கைவரப்பெறின் மொழிகளின் அமைப்பை நன்கு ஆராய முடியும். சொற்களின் அமைப்பை ஆராய்ந்த அறிஞர்கள் கண்ட உண்மைகள் நமக்கு வழிகாட்டுவனவாக அமைந்துள்ளன. முன்னர்க் குறிப்பிட்டபடி உருபன்களைக் கண்டறிதல், உருபுகளை பிரித்தறிதல், மாற்றுருபு வரும் இடங்களை அறிதல், அவை துணை நிலை வழக்கில் (complementary distribution) உள்ளனவா? இல்லை எதிர் நிலை வழக்கில் உள்ளனவா? என்று காணுதல், ஒரு உருபும் மற்றொரு உருபும் இணையும்போது ஏற்படும் அகச்சந்தி மாற்றங்களைக் கண்டறிதல் போன்ற இன்னோரன்னவற்றைச் சொல்லியல் ஆராய்ச்சியில் பயன்படுத்தவேண்டும். மேலும், மாற்றுருபுகளின் பகிர்வுகளைக் (distribution) கூறுவதிலும் சில நெறிமுறைகளைக் கடைப்பிடித்தல் வேண்டும். அம்மாற்றுருபுகள் வருகின்ற இடத்தைப் பலவேறு கண்ணோட்டங்களில் நோக்குகின்ற போது தான் உண்மை தெரியவரும். உயிர்களை அடுத்து அல்லது மெய்களை அடுத்து, அவற்றிலும் எந்த எந்த உயிர்களை அடுத்து, என்றெல்லாம் நோக்கினால்தான் உண்மை தெரியவரும்.

1 20 மாற்றுருபுகளை விவரிக்கும் முறையிலும் வேறுபட்ட முறைகளைக் கையாளலாம். விதிமுறை, சேர்க்கைமுறை, சொல்லடுக்கு முறை போன்ற முறைகளைக் கையாளலாம். ஹாக்கட் தன்னுடைய 'Two Models of Grammatical Description' (*Word* vol. 10, 210-34) என்ற கட்டுரையில் இம்மூன்று முறைகளைப் பற்றிக் கூறி உள்ளார்.

### 1.20.1 விதி முறை (Item and Process)

மொழியின்கண் காணப்படும் உருபன்களை ஆராயும் முறையில் விதிமுறை பழமையானது. அமெரிக்க மொழியியல் வரலாற்றில்

சேர்க்கை முறைக்கு முந்தியது இது. அமெரிக்க மொழியியல் அறிஞர்களான போயஸ் (Boas), சபீர் (Sapir) போன்ற அறிஞர்கள் இம் முறையில்தான் தங்கள் மொழியியல் கொள்கைகளை உருவாக்கினர்.

சொல்லின்கண் காணப்படும் பலவேறு உருபன்களை விளக்குவதில் விதி முறையை அவர்கள் கையாண்டனர். ஒரு உருபனுக்குப் பலவேறு மாற்று உருபுகள் இருக்கலாம். இவ்வுருபுகளைப் பலவேறு உருபுகள் எனக் கொள்ளாமல், ஒரே உருபாகக் கொண்டு பிற உருபுகளை அடிப்படையான ஒன்றிலிருந்து பலவேறு விதிகளால் கொண்டு வருவதுதான் இம்முறையின் அடிப்படைத் தத்துவம்.

எடுத்துக்காட்டாகத் தமிழில் பலவேறு கடந்தகால இடைநிலைகளைக் காணுகிறோம் இவற்றுள், -த்-, -ட்-, -ற்- ஆகியவை குறிப்பிடத்தக்கன. இவற்றைத் தனித்தனி உருபுகளாகக் கருதாமல் ஒன்றை அடிப்படையாகக் கொண்டு, பிறவற்றைப் புணர்ச்சி விதிகளால் கொண்டு வருவது இம்முறையைச் சாரும். -த்- அடிப்படை என்றும், -ட்-, -ற்- ஆகியவை அதிலிருந்து உருவாவன என்றும் கருதலாம்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ண் | + த் | > | ண் | + ட் | (கண்டான்) |
| ள் | + த் | > | ட் | + ட் | (கேட்டான்) |
| ன் | + த் | > | ன் | + ற் | (தின்றான்) |
| ற் | + த் | > | ற் | + ற் | (பெற்றான்) |

போன்ற புணர்ச்சி விதிகளைக் கொண்டு விளக்குகின்ற நிலையில் தான் இம்முறை விதிமுறை என அழைக்கப்படுகிறது. சில செயல் மாற்றங்களால் (process) இவற்றை விளக்குகிற நிலையில்தான் 'Item and process' என அழைக்கின்றனர்.

உருபுகளை விவரிக்கும்போதும் இம்முறையைப் பின்பற்றும் போதும் பலவேறு செயல் முறைகளைக் காட்டும் தோன்றல், திரிதல், கெடுதல் போன்ற விதிகளைக் காட்டி விளக்குவர்.

| | |
|---|---|
| பெரும் போர் | பெரு வணிகன் |
| பேராசிரியர் | பெருங்கண் |
| பெருஞ்சேரல் | |

போன்ற சொற்றொடர்களில் காணப்படும், பெரும்-, பெரு-, பேர்-, பெருங்-, பெருஞ்- போன்ற உருபுகளை விவரிக்கும்போது ஏதாவது ஒன்றை அடிநிலையாகக் கொண்டு பிறவற்றைப் பலவேறு விதிகளால் காட்டி விளக்க முற்படுவர். பெரு- என்பது மகர ஒற்று கெட்ட நிலையில் உருவாயிற்று என்றும், பேர்- என்பது நீட்டல் விகாரத்தால் உருவாயிற்று என்றும், பெருங்-, பெருஞ்- என்பன திரிதல் மூலம் உருவாயின எனவும் விளக்க முற்படுவர். சேர்க்கை முறையினரோ இவற்றைத் தனித்தனி உருபுகளாகக் கொண்டு, அவை வரும் இடங்களை வரிசைப்படுத்திப் பகிர்வுகளைக் காட்டுவர். எனவே சேர்க்கை முறையில் மாற்றுருபுகளின் எண்ணிக்கை கூடுதலாக இருக்க விதிமுறையில் சந்தி விதிகள் அதிகமாக இருக்கும்.

பெரும், பெரு, பேர், பெருங், பெருஞ்

போன்று,

| | |
|---|---|
| அரும் (அரும்போர்) | அரு (அரு வணிகன்) |
| ஆர் (ஆர் அணங்கு) | அருங் (அருங்குணம்) |
| அருஞ் (அருஞ்செல்வம்) | |

ஆகிய மாற்றுருபுகளையும் சேர்க்கை முறையில் கொள்ள நேரிடும். பெரும்- என்பது பகர ஒற்றுக்கு முன்னரும், பெருஞ்- என்பது சகர ஒற்றுக்கு முன்னரும், பெரு- என்பது வகரம் போன்ற ஒற்றுக்கு முன்னரும், பேர்- என்பது உயிர்களுக்கு முன்னரும், பெருங்- என்பது ககர ஒற்றுக்கு முன்னரும் வரும் என்பதால் இவற்றையெல்லாம் மாற்றுருபுகளாகவே கொள்ளவேண்டும். இவற்றைப் போலவே அரும்-, அருஞ்-, அருங்-, அரு-, ஆர்- போன்றவற்றையும் கொள்ளவேண்டும். ஆனால் விதி முறையைப் பின்பற்றினால் பெரும்-, அரும்- ஆகிய இரு அடி நிலைகளை வைத்துக் கொண்டு பொதுவான புணர்ச்சி விதிகளைப் பயன்படுத்தி விளக்கி விடலாம்.

நெற்பதர், நென்மணி, நெல்லரிசி, நெல்விலை போன்றவற்றில் காணப்படும் நெற்-, நென்-, நெல்- ஆகியவற்றைத் தனித்தனியாகக் கொண்டு விளக்கம் கூறவேண்டும். ஆனால் விதிமுறைப்படி (பொன். கோதண்டராமன், 1979) இவற்றையெல்லாம் நெல் என்ற அடிநிலைக் கிளவியிலிருந்து கொண்டுவந்துவிட முடியும்.

ஒரே பொருளைத் தரும் ஒற்றுமை உடைய பல வடிவங்களை ஒரே அடிநிலையிலிருந்து பலவேறு விதிகளைப் பயன்படுத்திக் கூறுவதுதான் விதிமுறை எனப்படுவது. இந்நிலையில் பலவேறு ஒட்டுக்களை இணைத்தல், உயிர்களையும் மெய்யொலியன்களையும் மாற்றல் போன்ற செயல்முறைகளைக் கையாளுவர்.

விதிமுறையில் பலவேறு செயல்முறைகளைப் (process) பயன்படுத்துவர். ஒட்டுக்களை இணைத்தல் (suffixation), இரட்டிப்பு (reduplication), மாற்றம் (modification), மாற்றீடு (replacive), பதிலீடு (suppletion) போன்ற செயல் முறைகளைப் பயன்படுத்துவர். தமிழ் இலக்கண அறிஞர்களும் தோன்றல், திரிதல், கெடுதல் போன்று கூறுவது இங்குக் கவனிக்கத்தக்கது.

அடிச் சொற்களில் மாற்று இருப்பின் அவற்றை மாற்றடி (stem alternants) என்றும், ஒட்டுக்களில் மாற்று இருப்பின் மாற்றுருபு எனவும் அழைக்கலாம்.

வ-, வர்-, வா; காண், கண்- போன்ற எடுத்துக்காட்டுக்கள் பலவற்றை மாற்றடியில் காணலாம்.

இம்முறையில் அடிநிலைக் கிளவியாக ஒன்றை வைத்துக் கொள்வர் மொழியியலாளர் எனக் கூறினோம். பொதுவாக இப்படி அடிநிலைக் கிளவியாக எதைக் கொள்வது? என்ற சிக்கல் எழுவது இயற்கை. பெரும்பான்மையாக வரும் உருபுகளை அடிநிலைக் கிளவியாகக் கொள்ளுதல் பொருந்தும்.

மேலே காட்டிய த், ட், ற் ஆகிய கடந்த கால உருபுகளில் தகரம் ஒன்றே பெரும்பான்மையாக வருதல் கவனிக்கத்தக்கது.

மேலும் ஒன்றிலிருந்து மற்றவற்றைச் சில விதிகளால் வரு விக்கும்போது எளிமையாக வருவிக்கும் நிலையில் இருத்தல் வேண்டும். தமிழ் மொழியைப் பொறுத்த மட்டில்

ண் + த் > ண் + ட்

ன் + த் > ன் + ற்

ள் + த் > ட் + ட்

எனக் கொள்வது எளிமையானது. அன்றி றகர ஒற்றையோ அல்லது டகர ஒற்றையோ அடிநிலையாகக் கொண்டு, தகர ஒற்றைப் புணர்ச்சிவிதியால் வருவிப்பது கடினமாகும். மேலும் பொதுவாக உள்ள விதிகளைக் கொள்ளுதல் நலம்.

இவ்விதிகள் இங்கு மட்டுமல்லாமல் வேறு பல இடங்களிலும் பயன்படும். காண்டல், நிற்றல் போன்ற சொற்களிலும் பயன் படுதல் காணலாம்.

இவ்வடிநிலைக் கிளவி வரலாற்று அடிப்படையில் பழைமை யானதாக இருக்க வேண்டும் என்ற நியதி இல்லை.

அடிநிலைக் கிளவி மொழியில் காணப்படும் ஒன்றாகத்தான் இருக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. பெரும்பாலும் காணக் கூடிய ஒன்றாக இருப்பினும் சில நேரங்களில் வழக்கில் இல்லாத ஒன்றாக இருத்தலும் உண்டு.

## 1.20.2 சேர்க்கை முறை (Item and arrangement)

சொற்களின் அமைப்பை ஆராயும்போது அவற்றில் காணப் படும் உருபன்கள் எவை என்றும், அவை எவ்வாறு வரிசைப் படுத்தப்பட்டிருக்கின்றன என்றும் கூறும் முறையே சேர்க்கை முறை எனப்படும்[1]. அமெரிக்க மொழியியல் வரலாற்றில் விதி முறைக்குப் பின்னர் உருவான முறை இது. முன்னர்க் குறிப்பிட்ட படி போயஸ், சபீர் ஆகியோர் விதிமுறையைப் பின்பற்றினர்

---

1. The essence of I A is to talk simply of things and the arrangements in which those things occur.
—Hockett, 1954.212.

எனக் கொள்ளலாம். அமைப்பியல் மொழியியல் அறிஞர்களின் முயற்சியில் இம்முறை ஒழுங்கு படுத்தப்பட்டுப் பின்பற்றப்பட்டது.

ஒரு சொல்லின் அமைப்பினைக் காணும் போது அதன்கண் காணப்படும் உருபன்கள், அவை காணப்படும் வரிசை முறை இவற்றை இம்முறை விளக்கமாகக் காட்டும். எடுத்துக்காட்டாகத் தமிழ் வினை முற்றைக் குறிப்பிடும்போது

$$\text{Verb Root} + \text{Transitive} + \left\{ \begin{array}{c} \text{Tense} \\ \text{Neg} \end{array} \right\} + \text{PN}$$

எனக்காட்டி ஒவ்வொரு உருபனிலும் என்னென்ன மாற்றுருபுகள் உள்ளன எனத் தந்து, அம்மாற்றுருபுகள் எவ்வாறு, எவ்விடங்களில், வருகின்றன? என்றெல்லாம் கூறிச் செல்லுவதே இம்முறையின் சாரம்.

உருபன், மாற்றுருபு போன்ற கோட்பாடுகள் இம்முறையில் உருவானவையாகும்.

உருபன் பல்வேறு மாற்றுருபுகளைக் கொண்டிருக்கலாம். அவற்றை வரிசைப்படுத்தித் தந்து, அவை வரும் இடங்களையும் பகிர்வுகளையும் விளக்குவது இம்முறையின் தத்துவம். எடுத்துக் காட்டாக –த்–, –ட்–, –ற்– ஆகியவற்றைத் தனித்தனி உருபுகளாகக் கொண்டு.

–ட்– ளகர, ணகர ஒற்றுக்களுக்குப் பின்னால் வரும் என்றும்

–ற்– றகர, னகர லகர ஒற்றுக்களுக்குப் பின்னால் வரும் என்றும்

–த்– பிற இடங்களில் வரும் என்றும்

கூறிச்செல்லுவது இம்முறை. இதைப் போன்றே ஆங்கில மொழியில் காணப்படும் பன்மை உருபன் -z, –s, -əz, –ən ஆகிய மாற்றுருபுகளைக் கொண்டு உள்ளன என்றும், இவை இன்னின்ன சூழலில் வரும் என்றும் காட்டுவர்.

இவற்றுள் –z, -s, –əz போன்றவை ஒலியன் அடிப்படையில் வர, -ən போன்றவை உருபு அடிப்படையில் வரும் நிலையில்

ஒலியன் அடிப்படை மாற்றம் (phonologically conditioned alternation), உருபன் அடிப்படை மாற்றம் (morphologically conditioned alternation) என்றும் வகுத்தனர். இவ்வாறெல்லாம் சேர்க்கை முறையினர் நிர்ணயம் செய்தனர்.

மேலும் oxen போன்ற சொற்களில் காணப்படும் -en போன்ற உருபுகள் உருபன் அடிப்படையில் வரும் உருபுகள் (morphologically conditioned allomorph) என்றும், இவை சில உருபுகளுக்குப் பின்னர் வரும் என்றெல்லாம் கூறுவர். உருபன் அடிப்படையில் வருபவை, ஒலியன் அடிப்படையில் (phonologically conditioned allomorph) வருபவை என்றெல்லாம் கூறிச்செல்லுவது இம்முறை. அமைப்பியல் வரலாற்றில் இம்முறை நன்கு பயன்படுத்தப்பட்டது. பலவேறு அறிஞர்கள் இதன்கண் ஆராய்ந்த நிலையில் இம்முறை நன்கு ஒழுங்கு படுத்தப்பட்டது (formalized) என்றும், விதிமுறை அவ்வாறு ஒழுங்கு படுத்தப்படவில்லை என்றும ஹாக்கட் தம் கட்டுரையில் (1954:215) கூறுவார்.

இம்முறையில் மாற்றுருபுகளின் எண்ணிக்கை அதிகரிக்கச் சந்தி விதிகளின் எண்ணிக்கை குறையும்.

மேலும் இம் முறையில் ஒவ்வொரு பொருட் கூறும் தனித்தனியான உருபன்களைக் கொண்டிருக்க வேண்டும் என்ற கருத்து நிலவியது. இதனால்தான் ஆங்கில மொழியில் காணப்படும் sheep போன்ற பன்மை காட்டும் சொற்களில் -∅ மாற்றுருபனைக் கொண்டு நின்றனர்.

| | |
|---|---|
| cow | cows |
| cock | cocks |
| sheep | sheep-∅ |

போன்று ஆராயும் நிலை ஏற்பட்டது.

புளும்பீல்டு காலத்தை ஒட்டியும் அதன் பின்னரும் சேர்க்கை முறை அமெரிக்க நாட்டில் மிகப் பெரும்பான்மையான மொழியியல் அறிஞர்களால் பின்பற்றப்பட்டது. அமைப்பு மொழியில் அறிஞர்கள் பெரும்பான்மையினர் இம்முறையையே பின்பற்றினர்.

பல்வேறு குறைகள் இருந்தபோதிலும் இதனையே சிறந்த முறை யாகவும், ஒழுங்கு படுத்தப்பட்ட முறையாகவும் கருதினர். சம்ஸ்கி யின் (Chomsky) மாற்று இலக்கணத்திற்குப் பின்னர் மீண்டும் விதிமுறை பலரால் பயன்படுத்தப்பட்டதுடன் அதுவே, சிறந்த முறை என்ற கருத்தும் பரவலாக ஏற்பட்டது

விதிமுறையில் செயல் முறைகளைப் பயன்படுத்துவதால் பல நன்மைகள் உள்ளன.

பறவை வந்தது, பறவை வந்தன

விதிமுறையில் பறவை என்பது ஒருமையாகவும் பன்மையாகவும் வரும் எனக்கூறிவிடலாம். ஆனால் சேர்க்கை முறையில் பறவை +∅ எனக் கூறுதல் வேண்டும். இம்முறையைக் கடினமாக மேற்கொண்டால் செய்யும் என்னும் வினைமுற்றில் எத்தனையோ பூஜ்யங்களை வைக்க நேரிடும்.

விதிமுறையில் அதிகமான புணர்ச்சி விதிகளைக் காணலாம். ஆனால் சேர்க்கை முறையிலோ ஏராளமான மாற்றுருபுகளைக் காணலாம். புணர்ச்சி விதிகள் வேறு நிலையிலும் வேண்டுகின்ற நிலையில் விதி முறையே சேர்க்கை முறையைவிடச் சிறந்தது எனக் கருத இடம் உண்டு.

### 1.20 3 சொல்லடுக்கு முறை (Word and paradigm)

பழைய இலக்கணங்கள் பெரும்பாலும் இம் முறையிலேயே அமைந்துள்ளன என்பர். கிரேக்க லத்தீன் இலக்கணங்கள் சொல் லடுக்கு முறையிலேயே எழுதப்பட்டுள்ளன என்பது இங்குக் குறிப்பிடத்தக்க செய்தியாகும். இம் முறையில் சொற்களே அடிப்படை அலகுகளாகக் கருதப்படுகின்றன. ஏதாவது ஒரு இலக்கணக் கூற்றினைப் பற்றிக் கூற வேண்டியிருப்பின், அக் கூற்றினைக் கொண்ட பலவேறு சொற்களைத் தந்து, அது எவ்வாறு செயல் படுகிறது? எனக் காட்டுவது இம் முறையாகும். எடுத்துக்காட்டாகத் தமிழில் தன்மை ஒருமையை விளக்க வேண்டின்

| | | |
|---|---|---|
| வந்தேன் | வருவேன் | வருகிறேன் |
| செய்தேன் | செய்வேன் | செய்கிறேன் |
| படித்தேன் | படிப்பேன் | படிக்கிறேன் |

போன்ற சொல்லடுக்கங்களைத் தந்து, இவற்றில் எல்லாம் -ஏன் என்பது தன்மை ஒருமையைக் காட்டி நிற்கிறது என உணரச் செய்வது இம்முறையாகும். கால இடைநிலைகளுக்குப் பின்னர் இத்தகைய விதிகள் வரும் என்பதை உய்த்துணர வைக்குமேயன்றி வெளிப்படையாக இவ்வாறு வரும் எனப்பொதுவாகக் கூறுதல் இல்லை. தற்கால மொழியியல் வளர்ந்த நிலையில்தான் ஒவ்வொரு இலக்கணக் கூறுகளும் எந்தெந்த இடங்களில் வரும் எனக் குறிப்பிட்டுக் கூறுகின்ற நிலை ஏற்பட்டது எனக் கருதலாம்.

சொற்களில் காணப்படும் பலவேறு இலக்கணக் கூறுகளைச் சொல்லியல்-தொடரியல் அடிப்படையில் பகுத்து, அவற்றை இம் முறையில் விளக்கிச் சொல்லுவது லத்தீன், கிரீக் இலக்கண அறிஞர்களிடையே தொன்றுதொட்டு இருந்து வந்துள்ளது. இம் முறையில் ஒரு இலக்கணக் கூற்றினை மட்டுமன்றிப் பல கூறு களையும் காட்டுதல் வழக்கம். எடுத்துக்காட்டாக லத்தீன் மொழியில்,

| | தன்மை | முன்னிலை | படர்க்கை |
|---|---|---|---|
| love | *amo* | *amas* | *amat* |
| think | *puto* | — ? | — ? |
| cut | *seco* | — ? | — ? |

எனத் தந்து, வாசிப்போர் உள்ளத்தில், *putas*, *putat*, *secas*, *secat* போன்ற சொற்களை உருவாக்கி நிற்றல் வழக்கம்.

இம்முறையை அடிப்படையாக வைத்துத்தான் அமைப்பு மொழியியல் வளருவதற்கு முன்னால் எழுந்த மேனாட்டு இலக் கணங்கள் அனைத்தும் எழுதப்பட்டன. இத்தகைய முறையினைத் தமிழ் மொழிக்கு இலக்கணம் எழுதிய ஆர்டன் (Arden) போன்ற இலக்கண அறிஞர்களிடமும் (ஒரு சில மாற்றத்துடன்) காண முடியும் எடுத்துக்காட்டாகத் தமிழில் காணப்படும் வேற்றுமை களைக் விளக்க வந்த அவர்,

| | |
|---|---|
| வண்ணான் | வண்ணானின் |
| வண்ணானை | வண்ணானுடைய |
| வண்ணானால் | வண்ணானினுடைய |
| வண்ணானோடு | வண்ணானது |
| வண்ணானுக்கு | வண்ணானிடம் |
| வண்ணானுக்காக | வண்ணானிடத்தில் |
| வண்ணானில் | வண்ணானே |
| வண்ணானிலிருந்து | வண்ணா |
| வண்ணானின்று | |

போன்ற சொல்லடுக்குகளைத் தந்து விளங்க வைப்பது குறிப்பிடத் தக்கது.

சொற்களிடையே வேறுபாடுகள் இருக்குமாயின் வகைக்கு ஒன்று அல்லது இரண்டு சொல்லடுக்குகளைத் தந்து விளக்குவது மரபு. எடுத்துக் காட்டாக -அம் கொண்டு முடியும் பெயர்கள் அத்துச் சாரியை எடுத்து வரும் நிலையில் பிற பெயர்களிலிருந்து மாறுபட்டு நிற்கும். இதனைக் காட்ட மரம் என்ற சொல்லை எடுத்து அதன் அடுக்கங்களைத் தந்து நிற்பார் அவர்.

மரம், மரத்தை, மரத்தால், மரத்தோடு

போன்றவற்றைத் தருதல் நினைவு கூரத்தக்கது.

இதைப் போன்றே வினைச்சொற்களில் காணப்படும் கால இடைநிலைகள் போன்றவற்றையும் குறித்துச் சொல்லுவார். இவர் வல்வினை, மெல்வினை, இடைவினை எனப்பிரித்து, இவை முறையே -ப்பேன், –பேன், –வேன் ஆகியவற்றை எதிர் காலத்தில் எடுத்துவரும் எனக்கூறிச் சொல்லடுக்குகளைத் தருவார்.

ஆனால் தொல்காப்பியம் போன்ற தமிழ் இலக்கணங்கள் இம் முறையில் தோன்றியவை அல்ல. ஒரு சில இலக்கணக் கூறுகள் இம்முறையில் கூறப்பட்டிருந்தாலும், வேறுபல இலக்கணக் கூறுகள் வேறுவேறு முறைகளிலும் சொல்லப்பட்டிருக்கின்றன எனக் கருதலாம் (சண்முகம் 1978:94).

விளி வேற்றுமையைப்பற்றிக் கூறும்போது விதிமுறையிலும். பலவேறு எச்சங்களைப்பற்றிக் கூறும்போது சொல்லடுக்கு முறை யிலும், விகுதிகளைப்பற்றிப் பேசும்போது சேர்க்கை முறையிலும் கூறுதல் கவனிக்கத்தக்கது. இதே நிலையினை நன்னூல் போன்ற இலக்கண நூல்களிலும் காணலாம்.

'செய்த, செய்கின்ற, செய்யுமென் பாட்டில்' எனப் பெய ரெச்சம் பற்றிக் கூறுவது ஓரளவுக்குச் சொல்லடுக்குமுறையே எனக் கருதலாம். இதிலிருந்து.

| | | |
|---|---|---|
| வந்த | வருகின்ற | வரும் |
| படித்த | படிக்கின்ற | படிக்கும் |

போன்ற சொற்களை நாம் உய்த்துணர்ந்து கொள்ளுதல் வேண்டும்.

சொல்லடுக்கு முறையினர் வேறுபாடுகள் இருப்பின் வேறு பாடுகளுக்கேற்ப பலவேறு எடுத்துக்காட்டுக்களை வகைக்கு ஒன்றாக வசதிபோல் கொடுப்பது வழக்கம்.

எடுத்துக்காட்டாக இறந்தகாலம் பற்றிப் பேசும்போது தமிழ் வினைகளை முதல் வினைத்திரிபு (first conjugation), இரண்டாவது வினைத்திரிபு (second conjugation) என்றெல்லாம் பிரித்து வகைக்கு ஒரு உதாரணம் தருவார். ஆர்டன் வினைகள் அனைத்தையும் வகைப்படுத்திப் பட்டியலிட்டுக் காட்டுவது இங்கு நினைவுகூரத்தக்கது.

சொற்களை அடிப்படை அலகுகளாகக் கொண்டு சொல் லடுக்குகளைத் தந்து நிற்கின்ற நிலையில்தான் இம்முறையினைச் சொல்லடுக்கு முறை (word and paradigm) எனக் கூறுகின்றனர்.

ஆனால் சேர்க்கை முறையிலோ உருபன்களே அடிப்படை அலகுகள். விதிமுறையில் சொற்களே அடிப்படையானாலும் சந்தி மாற்றங்களுக்கு மிக முக்கியத்துவம் உண்டு.

இம்மூன்று முறைகளில் ஏதாவது ஒன்றையோ அல்லது இரண்டையோ அல்லது மூன்றையுமோ பயன்படுத்தலாம். அமைப்பு மொழியியலாளர்கள் பெரும்பாலும் சேர்க்கை முறையைப்

பயன்படுத்தினாலும் விதிமுறையையும் சில இடங்களில் பயன் படுத்தியுள்ளனர். போயஸ், சபீர் போன்றவர்கள் விதிமுறையினைத் தான் பயன்படுத்தினர்.

தொல்காப்பியம் இரண்டு முறையினையும் பயன்படுத்தியுள்ளது எனக் கருதலாம். எனினும் விதிமுறையினைத்தான் அதிகமாகக் கையாண்டுள்ளது. பொலம், பொலன், பொன், மரம், மரத்து, தொண்ணூறு போன்ற சொற்களை நோக்கின் இப் பண்பு நன்கு விளங்கும். ஒரு சொல்லை அடிப்படையாகக் கொண்டு பிறவற்றை விதிகளின் மூலம் உணர்த்தலாம் (அகத்தியலிங்கம் 1977: 75; பொன். கோதண்டராமன் 1979: 103 — 110). தொல்காப்பியர் மூன்று முறைகளையும் கையாண்டுள்ளார் (சண்முகம் 1978:94) எனவும் கருதலாம். ஒரு முறையையே பின்பற்ற வேண்டும் எனக் கருதினும், எல்லா முறைகளையுமே பின்பற்றுவதில் தவறு எதுவும் இல்லை. –அன், –ஆன் போன்ற விகுதிகளைச் சேர்க்கை முறையிலும், விளிவேற்றுமை போன்றவற்றை விதிமுறையிலும் விளக்கியுள்ளமை இங்குக் குறிப்பிடத் தக்கது.

## 1.21 மாற்றும் மாற்றமும்

ஒரு உருபனின் மாற்றுருபுகளை நிர்ணயிக்கும்போது சந்தி விதிகளைப் பயன்படுத்தலாம் என்று முன்னர்க் கண்டோம். இச் சந்தி விதிகள் மொழியின் ஒலி அமைப்பினைப் பொறுத்ததாகும் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கதாகும். ஒரு உருபன் வெவ்வேறு உருபுகளைக் கொண்டிருக்கும்போது அவற்றை மாற்று (alternant) என்று குறிப்பிடுவர். இவ்வாறு ஏற்படுவதை மாற்றம் (alternation) என்பர் (Matthews, 1974:85). தமிழில் காணப்படும் மூன்றாம் வேற்றுமை உருபுகளாகிய ஆல், ஆன் என்பவை இரண்டும் மாற்றுக்கள் ஆகும். இதைப்போன்றே வந்தான் என்ற சொல்லிலும் வருவான், வருகிறான் என்ற சொற்களிலும் காணப்படும் வ–, வர்– என்ற அடிச்சொற்களும் மாற்றுககள் ஆகும். இத்தகைய மாற்றங்களை இரண்டு பெரும் பிரிவுகளாகப் பிரிப்பர்.

### 1.21.1 ஒலியன் அடிப்படை மாற்றம் (Phonologically conditioned alternation)

ஆங்கில மொழியில் காணப்படும் பன்மை மாற்றுருபுகளாகிய –s, –z ஆகியவை அவற்றிற்கு முன்னால் வருகின்ற ஒலியன்களைப் பொறுத்து அமைகின்றன என்பதை முன்னர்க் கண்டோம். இந் நிலையில் இவற்றை ஒலியன் அடிப்படையில் வரும் மாற்றம் என்று கருதலாம். இதைப் போன்றே ஆங்கிலப் பொதுச் சுட்டுக் களாகிய a, an இரண்டு மாற்றுருபுகளும் அடுத்து வருகின்ற சொல்லின் முதல் ஒலியனைப் பொறுத்து அமைகின்றன. இந் நிலையிலும் இவற்றை ஒலியன் அடிப்படையில் அமைந்த மாற்றம் எனக் குறிப்பிடலாம்.

### 1.21.2 உருபு அடிப்படை மாற்றம் (Morphologically conditioned alternation)

ஆனால் வேறு சில மாற்றுருபுகள், அடுத்து வரும் உருபனை அடிப்படையாகக் கொண்டு வருதல் காணலாம். வ– என்ற உருபன் இறந்தகால இடைநிலையை அடுத்து வர, வர்– என்பதோ எதிர்காலம், நிகழ்காலம் போன்ற உருபன்களை ஒட்டி வருவது இந்நிலையைக் காட்டும்.

வந்தான், வருகிறான், வருவான், வராதே போன்ற சொற்க ளில் இந்த நிலையைக் காணலாம். ஆங்கில மொழியில் காணப் படும் –en என்ற இறந்தகால வினை உருபு சில வினைச்சொற் களை அடிப்படையாகக் கொண்டுள்ளது. driven, begotten, taken போன்ற சொற்களில் இவற்றைக் காணுகிறோம்.

1.21.3 மேலும் இம்மாற்றங்களைத் தன்முனைப்பு மாற்றம் (automatic alternation), பிறமுனைப்பு மாற்றம் (nonautomatic alternation), ஒழுங்கான மாற்றம் (regular alternation), ஒழுங்கில் மாற்றம் (irregular alternation) என்றெல்லாம் பிரிப்பர். சில மாற்றங்கள் ஒலி அமைப்பை அடிப்படையாகக் கொண்டு ஏற்படும். இம்மாற்றம் ஏற்படவில்லையென்றால் ஒலி அமைப்பு முரண்படும். எனவே எதேச்சையாகவே சில மாற்றங்கள் நிகழ்ந்து விடக் காணுகின்றோம். கண்டான் என்ற சொல்லில் காணப்படும்

டகர ஒற்று இந்நிலையில் ஏற்பட்டதாகும் ணகர ஒற்றிற்குப் பின்னால் தகர ஒற்று ஒரு சொல்லில் வரமுடியாததால் தகர இடைநிலை டகரமாக மாறிற்று. இதனைத் தன்முனைப்பு மாற்றம் என்று குறிப்பிடுவர்.

ஆனால் வேறு சில மாற்றங்கள் இவ்வாறு அமைவதில்லை. வெடித்து என்பது பேச்சு மொழியில் வெடிச்சு என்று விளங்கக் காணுகிறோம். இந்நிலையில் -த்த்- என்ற கடந்த கால இடைநிலை -ச்ச்- என்று மாறுவதைக் காணுகிறோம். இந்த மாற்றம் ஒழுங்காக இருந்தபோதிலும் கூட, நிகழ்ந்துதான் ஆக வேண்டும் என்ற நியதி இல்லை. இந்த நிலையில் இதனைப் பிறமுனைப்பு எனக் கூறுவர். இம்மாற்றம் தமிழ் மொழியைப் பொறுத்தவரை மிக ஒழுங்காக உள்ளது. ஆனால் எல்லா பிறமுனைப்பு மாற்றங்களும் ஒழுங்காக வரவேண்டும் என்றில்லை. ஆங்கில மொழியில் காணப்படும் oxen, men போன்றவற்றிலுள்ள பன்மை உருபு பிறமுனைப்பு மாற்றம் காரணமாக உருவானவையாகும். ஆனால் இம்மாற்றம் ஒழுங்காக இல்லை. பொதுவாக பிறமுனைப்பு மாற்றங்கள் ஒழுங்காக இராது. ஆனால் சில ஒழுங்காக உள்ளன. எனவே இதுகாறும் கூறியவற்றால் தன்முனைப்பு மாற்றம் ஒழுங்காக உள்ளது என்றும், பிறமுனைப்பு மாற்றம் ஒழுங்காகவும் ஒழுங்கற்றதாகவும் இருக்கும் என்றும் கருதலாம். ஒலியன் அடிப்படையில் வரும் மாற்றங்கள் அனைத்தும் ஒழுங்காக உள்ளன என்றும், தன்முனைப்பாகவும் பிறமுனைப்பாகவும் இருக்கும் என்றும் அறியலாம்.

### 1.22 சொல்வகைப்பாடு (Parts of speech)

மொழிகளில் காணப்படும் முழுச் சொற்களைத் தொடரியல் அடிப்படையிலும் சொல்லியல் அடிப்படையிலும் பல்வேறு வகைகளாகப் பிரிப்பர். ஒரு சொல் தன்னுடைய அகவமைப்பிலும் வாக்கியங்களில் காணப்படும் பிற சொற்களோடு இணைந்து செயல்படுகின்ற நிலையிலும் தம்முள் எவ்வாறு ஒத்து இயங்குகின்றன? என்பன போன்றவற்றின் அடிப்படையிலும் சொற்பாகுபாடு செய்வர் இலக்கண அறிஞர்கள். 'சொல்' என்று இங்குக் குறிப்பிடப்படுவது தனித்து இயங்கவல்ல சொற்களே ஆகும்.

உலக இலக்கண வரலாற்றைக் கூர்ந்து நோக்கின் இத்தகைய பாகுபாடு காலப்போக்கில் வரன்முறையாக வளர்ந்து வந்த ஒரு நிலையில் இருப்பதைக் காணுகிறோம். இன்று மேல்நாட்டு இலக்கண அறிஞர்கள் ஆங்கில மொழிச் சொற்களைப் பெயர், பெயரடை, வினை, வினையடை, முன்னுருபு (preposition), இணைப்புச் சொற்கள் (conjunctions), வியப்புச் சொற்கள் (interjections), பதிலிடு பெயர்கள் (pronouns) என எட்டு வகையாகப் பிரிப்பர். இப்பிரிப்பு எத்தனையோ நூற்றாண்டுகளாக வளர்ந்த ஒரு வரலாற்றைக் கொண்டது.

ஆங்கில மொழியில் காணப்படும் 'Parts of speech' என்ற சொல் இலத்தீன் மொழியிலுள்ள 'Pars orationis' என்ற சொல்லிலிருந்து உருவானதாகும். இதுவும் கிரேக்கத் தொடரிலிருந்து உருவானதே. இது 'Part of the utterance' அல்லது 'Element of the sentence' என்று பொருள்படும்.

முதன் முதலாகப் பிளேட்டோ (429-347 B.C) கிரேக்க மொழிச் சொற்களைப் பெயர், வினை என இரண்டு பிரிவாகப் பிரித்தார். இவரை அடுத்து அரிஸ்டாட்டில் (384-322) ஒரு வாக்கியத்தில் இரு வகையான சொற்கள் முக்கியமாக உள்ளன என்றும், ஒன்று பொருளின் தன்மையைக் குறிப்பது, மற்றொன்று அதனை முடிப்பது (predication) என்றும், முன்னது பெயரென்றும் பின்னது வினையென்றும் கூறினார்[1]. இவற்றுடன் இவற்றை இணைத்து வைப்பது இணைப்புச் சொல் (connectives) என்றும் கூறினார். அரிஸ்டாட்டிலுக்குப் பின்னர் வந்த டயோனிசியஸ் திரேக்ஸ் (Dionysius Thrax) பலவேறு சொல்வகைகளை விளக்கி நின்றார். இவர்தான் முதன் முதலில்பெயர், வினை, எச்சங்கள் (participles), சுட்டுக்கள் (articles), பதிலிடு பெயர்கள் (pronouns), முன்னுருபுகள் (prepositions), வினைஅடைகள் (adverbs), இணைப்புச் சொற்கள் (conjunctions) என எட்டு வகையாகப் பாகுபாடு

1. Aristotle defined the linguistic structure which we call a sentence in logician's terms, as 'the expression of a preposition'. The sentence must name something, be stated and then 'predicate' something about it.
—Hughes, 1962:40.

செய்தார். மேலும் இவர் இவற்றிற்கு விளக்கமும் தந்து நின்றார்.[1] இன்று ஆங்கில மொழியில் காணப்படும் சொற் பாகுபாடு இடைக்காலத்தில் ஏற்பட்டதேயாகும். பெயர், பதிலிடுபெயர், வினை, பெயரடை, வினையடை, இணைப்புச்சொல், முன்னுருபு, வியப்புச்சொல் என எட்டு வகையாகக் காண்பர். இவை பற்றி எல்லா ஆங்கில இலக்கண நூல்களிலும் காணலாம்.

உலக மொழிகள் அனைத்தையும் ஆராயின் எல்லா மொழிகளிலும் ஒரே வகையான சொல் வகைப்பாடு செய்தல் முடியாது என்பதை நன்கு அறியலாம். எனினும் ஓரளவுக்கு இவைகளிடையே ஒற்றுமையைக் காணமுடியும். சீன மொழிப் பெயர்ச் சொற்கள், எந்தவிதமான ஒட்டுக்களையும் எடுப்பதில்லை. எனினும் இவற்றைப் பெயர், மூவிடப்பெயர், சுட்டுப்பெயர்கள், எண்ணுப்பெயர்கள், அளவைப்பெயர்கள் என ஐந்து வகையாகப் பிரித்தல் காணலாம். அமெரிக்க மொழிகளில் ஒன்றான நூட்கா (Nootka) மொழிச் சொற்கள் ஒட்டுக்களை எடுத்தும் எடுக்காமலும் வரும். எனவே இம்மொழிச் சொற்களைப் பெயர், வினை என்று பிரிக்காமல் திரிவொட்டுச் சொற்கள் (inflectional words), அல்லாச் சொற்கள் என இரண்டு வகையாகப் பிரிப்பர். எனினும் இவ்வை பெயர் போலவும், வினை போலவும் பயன்படுதல் காணலாம்.

---

1. **noun:** a part of speech inflected for case, signifying person or a thing,

   **verb:** a part of speech without case inflection, but inflected for tense, person and number, signifying an activity or process performed or undergone,

   **participle:** a part of speech sharing the features of the verb and the noun,

   **article:** a part of speech inflected for case and preposed or postposed to nouns,

   **pronoun:** a part of speech substitutable for a noun and marked for person,

   **preposition:** a part of speech placed before other words in composition and in syntax,

   **adverb:** a part of speech without inflection, in modification of or in addition to a verb,

   **conjunction:** a part of speech binding together the discourse and filling gaps in its interpretation,

   —Robins, 1967:33-34.

பொதுவாகச் சொல்வகைப்பாடு செய்பவர்கள் பெயரென்றால் என்னவென்றும், வினையென்றால என்னவென்றும் விளக்கங்கள் கொடுத்து நிற்பர். விளக்கங்கள் பொதுவாக அமைப்பு அடிப்படையிலும் பொருள் (notional) அடிப்படையிலும் இருக்கும். பெயர்கள் 'மக்கள் அல்லது இடங்கள் அல்லது பொருள்கள் இவற்றைக் குறிப்பது ' (Lvons, 1971:319) என்று குறிப்பிடுவர் சில இலக்கண அறிஞர்கள். இன்னும் சிலர் அமைப்பு அடிப்படையிலும் (form) விளக்குவர். 'வேற்றுமை, பன்மை உருபுகள் ஆகியவற்றை எடுத்து வருவது பெயர்' என்று குறிப்பிடுவர். இன்னும் சிலர் இரண்டையும் இணைத்துக் கூறுவர். கிரேக்க ஆசிரியரான திரேக்ஸ் பெயரை,

'The *noun* is a part of speech having case-inflection, signifying the person or a thing' (Lyons, 1971:319)

என்றும், வினையினை

'The *verb* is a part of speech without case-inflections, admitting inflections of tense, person and number, signifying an activity or a being acted upon' (Lyons, 1971:319)

என்றும் விளக்கி இரண்டையும் இணைத்துக் கூறுதல் காணலாம்.

பொதுவாகத் தொடரியல் அடிப்படையில் ஒவ்வொரு சொல்லையும் அவை வரும் இடங்களை அடிப்படையாக வைத்து வகைப்பாடு செய்வதே பொருத்தம் எனக் கூறுவர்.

### 1.23 தமிழில் சொல்வகை

தமிழ்ச் சொற்களை மரபு இலக்கண அறிஞர்கள் பெயர், வினை, இடை, உரி என நான்கு வகையாகப் பிரிப்பர். இவற்றுள் பெயர்ச்சொல்லும் வினைச்சொல்லும் பெரும்பான்மையாகக் காணப்படுகின்றன என்பதும், எனவேதான் தொல்காப்பியர் பெயரையும், வினையையும் முதலில் தந்து (தொல்.643) அடுத்த சூத்திரத்தில் (தொல் 644) இடையையும் உரியையும் கூறிச் செல்வார். மேலும் பெயர்ச்சொற்களும் வினைச்சொற்களுமே மிக முக்கியமான இடத்தைத் தமிழ் மொழியில் கொண்டுள்ளன. இடைச்சொற்கள்

பெரும்பாலும் ஒட்டாக இருப்பதும் இங்குக் கவனித்தற்பாலது. இடைச் சொற்கள் பொதுவாகப் பெயரையோ வினையையோ போன்று சொற்பொருளில் வருவதில்லை. காலத்திற்கேற்ப உரு வாகும் புதிய சொற்கள் மிகப்பெரும்பாலும் பெயராகவும் ஒரு சில (கூட்டு) வினையாகவும் இருப்பது இவ்விரு சொற்களின் முக்கியத் துவத்தைக் காட்டும்.

தமிழ் இலக்கண அறிஞர்களின் இப்பாகுபாடு எத்துணை அளவுக்குப் பொருந்தும் என்பதும் ஆராய்வதற்குரிய ஒன்றாகும். பிற மொழிகளில் காணப்படும் சொல் வகையுடன் தமிழ்ச் சொல் பாகுபாட்டை ஒப்பவைத்து உணரின், ஒரு சில உண்மைகள் தெரிய வரும். ஆங்கில மொழியில் காணப்படும் இணைப்புச் சொற்கள் என்ற ஒருவகை தமிழிலும் வேண்டுமா? என்பன போன்ற வினாக் கள் நம் உள்ளத்தில் எழாமல் இல்லை. எனின், ஆனால், அதனால், உம் போன்றவை இணைப்புக்களாகவே பயன்படு கின்றன. ஆனால், எனின், ஆயின் போன்றவை வினையிலிருந்து உருவானவை. இதனால்தான் தமிழ் இலக்கண அறிஞர்கள் இவற்றைத் தனி ஒரு வகையாகக் கருதவில்லை போலும். ஐயோ! போன்ற சொற்கள் வியப்புச் சொற்களாகப் பயன்படுகிற போதிலும், இவற்றை இடைச் சொற்களாகவே தமிழ் இலக்கண அறிஞர்கள் கருதினார்கள்.

பண்டைய இலக்கண ஆசிரியர்கள் பெயரடை, வினையடை ஆகியவற்றையும் தனித்தனி வகையாகக் கருதவில்லை. இதற்கு ஒரு சில காரணங்களை அடிப்படையாகக் கொள்ளலாம். பழந் தமிழில் காணப்படும் பெரும்பான்மையான பெயரடைகளைக் குறிப்பு வினை அடைகளிலிருந்து உருவாக்கிவிடலாம். பெரிய, சிறிய, இளைய போன்ற பெயரடைகள் பெரியன், சிறியன், இளை யன் போன்ற குறிப்பு வினைச் சொற்களுடன் தொடர்புடையவை எனக் கருதலாம். இவற்றைத் தமிழ் இலக்கண அறிஞர்கள் குறிப்புப் பெயரெச்சம் என்று கருதுவது குறிப்பிடத்தக்கது. பழுத்த, கறுத்த போன்ற பெயரடைகள் வினைகளிலிருந்து உரு வானவை. முன், பின் போன்றவை இடைச் சொற்களாகும். மேல்நாட்டு இலக்கணங்களும் இடைக் காலத்திற்குப் பின்னரே பெயரடைகளைத் தனி வகையாகக் கருதின. பிளேட்டோவும்

அரிஸ்டாட்டிலும் பெயரடைகளை வினையின் ஒரு பகுதியாகவே கருதினர். ஆனால் பின்னால் வந்த இலக்கண அறிஞர்கள் பெயரடைகள் வினையின் பண்புகள் சிலவற்றை (tense, mood, aspect etc.) எடுக்காத நிலையில் தான் (Lyons : 324) இதனைத் தனி ஒரு சொல்வகையாகக் கருதினர். எனினும் இன்றைய அறிஞர்களில் ஒரு சிலர் (Lakoff, 1970) வினையின் ஒரு பகுதியாகவே கருதுகின்றனர்.

வினை அடைகளையும் தனி ஒரு சொல்வகையாகத் தமிழ் இலக்கண அறிஞர்கள் கருதியதில்லை. பழந்தமிழை நோக்கினால் பெரிது, இனிது, சிறிது, நன்கு போன்ற வினை அடைகளைக் குறிப்பு வினையெச்சமாகக் கருதலாம் என்ற நிலையில்தான் தனி ஒரு வகையாகப் பிரிக்கவில்லை போலும். மேலும் பெயரடைகளுக்கும் வினையடைகளுக்கும் இடையே உள்ள தொடர்பும் இங்குக் கவனிக்கத்தக்கது.

### 1.24 இலக்கணக் கூறுகள் (Grammatical categories)

மொழிகளில் காணப்படும் பெயர்ச்சொற்கள் போன்றவை மனிதன் அல்லது இடம் அல்லது பொருள்களின் பண்பைச் சுட்டிக் காட்டுவதோடு, வேறு சிலவற்றையும் குறித்துக் காட்டுதல் உண்டு. பெயர்ச்சொற்கள் பொதுவாக ஒருமை – பன்மை – வேற்றுமையைக் காட்டுவதை நாம் உணர்வோம். இதைப் போன்றே வினைச் சொற்களும் குறிப்பிட்ட ஒரு செயலைக் காட்டுவதோடு பலவேறு ஒட்டுக்களைக் கொண்டு காலம், இடம், ஒருமை, பன்மை, ஆண்மை, பெண்மை போன்றவற்றையும் காட்டும். இந்நிலையைச் சில மொழிகளில் பெயரடைகளிலும் காணலாம். இந்தி, ஸ்பானிஷ் ஆகிய மொழிகளில் காணப்படும் பெயரடைகள் ஆண்பால் பெண்பால் காட்டும் ஒட்டுக்களைக் கொண்டு இவ்வேற்றுமையைக் காட்டி நிற்கக் காணுகின்றோம். இவ்வாறு மொழிகளின் சொற்களில் காணப்படும் கூறுபாடுகளையே இலக்கணக் கூறுகள் என்பர். இதனை ஆங்கில மொழியில் 'Grammatical categories' என் அழைப்பர். 'Category' என்ற சொல் கிரேக்க மொழியில் காணப்படும் 'Predication' என்ற பொருளில் பயன்படும் சொல்லிலிருந்து உருவானதாகும்.

இத்தகைய இலக்கணக் கூறுகளை அடிக் கூறுகள் (selective categories) என்றும் திரிபொட்டுக் கூறுகள் (inflected categories) என்றும் இரண்டு பிரிவாகப் பிரிக்கலாம். தமிழில் காணப்படும் அஃறிணைப் பெயர்ச்சொற்கள் (கண், நிலா) அஃறிணையைக் குறிக்கும் ஒட்டுக்கள் எதையும் கொண்டிருக்கவில்லை. எனினும் இவற்றை அஃறிணையாகவே கருதுகின்றோம். இதற்குப் பல் வேறு காரணங்கள் உள்ளன. இதைப்போன்றே பலவேறு உயர் திணைச் சொற்களில் உயர்திணை ஒட்டுக்கள் இல்லை. எனினும் இவற்றையும் உயர்திணைச் சொற்களாகவே கருதுகின்றோம். ஆங்கிலம், ஸ்பானிஷ் போன்ற மொழிகளில் காணப்படும் பெயர்ச் சொற்களிலும் பால் காட்டும் ஒட்டுக்கள் கிடையாது. ஆயினும் இவை பால் காட்டும் என்றே கருதுகின்றோம். இந்நிலையில் தான் இவற்றை அடிக்கூறுகள் எனக் கருதுகின்றனர் மொழியிய லாளர்கள்.

ஆனால் தமிழ்ப் பெயர்ச் சொற்களில் காணப்படும் ஒருமை, பன்மை, வேற்றுமை ஆகியன ஒட்டுக்களால் காட்டப்படுகின்றன. புத்தகம், புத்தகங்கள் போன்ற சொற்களில் -கள் விகுதி பன்மையைக் காட்டும். வருகிறான், வருகிறாள் போன்ற சொற்க ளில் காணப்படும், -ஆன், -ஆள் விகுதிகள் முறையே ஆண்பால் பெண்பால் காட்டும். எனவே குறிப்பிட்ட ஒரு இலக்கணக் கூற்றைக் காட்டுவதற்கென ஒரு சில குறிப்பிட்ட ஒட்டுக்கள் உள்ளன. இந்நிலையில் இவற்றைத் திரியொட்டுக் கூறுகள் (inflected categories) எனக் கூறுவர். ஆக்க (derivative) ஒட்டுக்களாக வருவனவற்றையும் இவற்றில் அடக்கலாம்.

பொதுவாகச் சொல் வகையைப் பெருவகை (major) என்றும், சிறுவகை (minor) என்றும் பிரிப்பர். பெயர், வினை, பெயரடை, வினையடை போன்றவை முதல் வகையைச் சேர்ந்தவையாகும். ஆனால் முன்னுருபு, இணைப்புச் சொற்கள் (conjunctions) போன்றவை சிறுவகை. இவற்றில் இலக்கணப் பொருளையே (grammatical meaning) பெரும்பாலும் காணமுடியும். ஆனால் பெயர்ச்சொல், வினைச்சொல், பெயரடை, வினையடை ஆகிய வற்றில் தனித்தனிச் சொற் பொருளைக் (lexical meaning) காண முடியும். இலக்கணக் கூறுகளும் இலக்கணப் பொருளையே

கொண்டிருப்பினும், இவை பொதுவாகத் தமிழில் ஒட்டுக்களாலேயே காட்டப்படுகின்றன.

இதை அடிப்படையாக வைத்துச் சொற்பாகுபாட்டை (part of speech) அடி நிலை இலக்கணக் கூறுகள் (primary grammatical categories) என்றும் திணை, பால், எண், இடம், வேற்றுமை போன்றவற்றைத் துணைநிலை இலக்கணக் கூறுகள் (secondary grammatical categories) என்றும் கொள்வாரும் உளர் (Lyons, 264). இவை வாக்கியத்தில் வருவதை அடிப்படையாக வைத்து, நாம் காணும் எழுவாய், பயனிலை போன்றவற்றைச் செயல் நிலை இலக்கணக் கூறுகள் (functional categories) என்றும் பிரிப்பர்.

இலக்கணக்கூறுகள் சொல் வகைப்பாட்டுக்கு உதவுவனவாகவும் உள்ளன. பொருள் அடிப்படையில் பெயர், வினை என்றெல்லாம் பிரித்தாலும் காலம் காட்டுவது வினை; வேற்றுமை ஏற்பது பெயர் என்றும் கூறுதல் உண்டு. இந்நிலையில் இலக்கணக் கூறுகள் பெயர் வகைப்பாட்டுக்கும் உதவி நிற்பதைக் காணுகிறோம். டயோனியஸ் திரேக்ஸ், பெயர்களில் எண், பால், வேற்றுமை ஆகியவை காணப்படும் என்றும், வினைகளில் எண், பால், காலம் ஆகியவை காணப்படும் என்றும் கூறுவார் (Louis Gray, 1958:179).

உலக மொழிகள் அனைத்தையும் ஆராயின் பலவேறு இலக்கணக் கூறுகளைக் காணலாம். தமிழ் மொழியில் பெயர்ச் சொல், வினைச்சொல் போன்றவற்றில் எத்தனையோ இலக்கணக் கூறுகளைக் காணுகிறோம். எண், பால், இடம், வேற்றுமை, காலம் போன்ற பலவேறு இலக்கணக் கூறுகள் காணக் கிடக்கின்றன. இவற்றையெல்லாம் பின்னர் விரிவாகக் காணலாம். எனினும் இவைபற்றிச் சிறிது இங்குக் கூறுவது பொருத்தமே.

### 1.24.1 எண் (Number)

இது எண்ணப்படு பெயர்ச் சொற்களில் காணப்படும் இலக்கணக் கூறாகும். வினைச் சொற்களில் இது காணப்பட்டாலும் பெயர்களில் காணப்படும் பிரதிபலிப்பே என்பது தெளிவாகும்.

பெயரில் காணப்படுவது புதைநிலை என்பதும், வினையில் காணப் படுவது புறநிலை என்பதும் கவனிக்கத்தக்கன.

பொதுவாக உலக மொழிகளில் ஒருமை-பன்மை வேறுபாடே அதிகமாக உள்ளது. சில மொழிகளில் இருமையும் காணப்படும். சமஸ்கிருதம், கிரீக், பழைய ஐரிஷ் போன்ற ஒரு சில மொழிகளில் இருமை காணப்படுகிறது.

ஒருமை, இருமை, பன்மை பகுப்பும் பல வழிகளில் காட்டப் படும். பலவேறு ஒட்டுக்கள், இரட்டிப்பு (reduplication) போன்ற பல வழிகளில் எண் பாகுபாடு காட்டப்படும். சில நேரங்களில் ஒரு சொல்லே ஒருமை-பன்மை காட்டும். பலவேறு அமெரிக்க இந்திய மொழிகளில் இத்தன்மையைக் காணலாம். தமிழிலும் அஃறிணைப் பெயர்களில் இப்பண்பைக் காணலாம். பதிலிடு பெயர்களிலும் சில மொழிகளில் இப்பண்பு உண்டு. you என்ற சொல் ஒருமையையும் பன்மையையும் காட்டும். இக் கூறு பற்றிப் பின்னர் விரிவாகக் காண்போம்.

### 1.24.2 பால் (Gender)

பால் பகுப்பும் பலவேறு மொழிகளிலும் காணப்படும் ஒரு பகுப்பாகும். பெயர்ச் சொற்களில் காணப்படும் இலக்கணக் கூறு களில் இதுவும் மிக முக்கியமான ஒரு கூறாகும். பால் பகுப்பை யும் இலக்கணப் பால்பகுப்பு (grammatical gender) என்றும், இயற்கைப் பால்பகுப்பு (natural gender) என்றும் இரண்டாகப் பிரிப்பர். இலக்கணப் பால்பகுப்பே மொழிகளைப் பொறுத்த மட்டில் முக்கியமானது. இப்பகுப்பு பல்வேறு அடிப்படையில் அமைந்துள்ளது. மொழிக்கு மொழி மாறும் தன்மையது. ஒரு மொழியில் உயிர்த்திணை (animate) என்றும், உயிரல் திணை (inanimate) என்றும் பிரிக்க வேண்டியிருக்கும். இன்னொரு மொழியிலோ மனித இனம் (human), பிற இனம் (non human) என்று பகுக்க வேண்டியிருக்கும். இன்னும் சில மொழிகளிலோ ஆண்பால்-பெண்பால் என்ற பிரிப்பு இருக்கும். ஒரு சில மொழி களில் இரண்டு பால்கள் இருக்கலாம். வேறு சில மொழிகளில் மூன்று பால்கள் இருக்கலாம். பிரஞ்சு, இத்தாலியன் போன்ற

மொழிகளில் இரண்டு பால்களே உள்ளன. ரஷ்யன், ஜெர்மன் போன்ற மொழிகளில் மூன்று பால்கள் உள்ளன. அப்பிரிக்க சுவாகிளியில் ஆறு பால்கள் உள்ளன என்பர். சில மொழிகளில் பால் பகுப்பு இலக்கணத்தைப் பொறுத்த மட்டில் மிக முக்கியமான பங்கை வகிக்கும். இன்னும் சில மொழிகளிலோ அத்துணை அளவுக்கு முக்கிய இடத்தைப் பெறுவதில்லை. தமிழ் மொழியில் பால் பகுப்பு மிக முக்கியமானதாகும். இதுபற்றிப் பின்னர் விரிவாகக் காண்போம்.

### 1.24.3 உயர்வுச்சிறப்பு (Honorific)

சில மொழிகளில் உயர்வுச் சிறப்பு காட்டும் தன்மையைக் காணுகிறோம். மக்களிடையே காணப்படும் சமுதாய உயர்வு தாழ்வுகளைக் காட்டும் நிலையை மொழிகளில் காணமுடியும். அதோடு நெருக்கம், நெருக்கமின்மை போன்றவற்றையும் காட்டும். ஒரு மனிதரையே ஒருவர் கண்ணன் என்றும் மற்றொருவர் கண்ணன் அவர்கள் என்றும் குறிப்பிடக் காணுகிறோம். நீ, நீர், நீங்கள், தாங்கள் ஆகிய சொற்களும் அவன், அவர், அவர்கள் போன்ற சொற்களும் இப்பண்பைக் காட்டும். இறைவனை 'நீ' என அழைத்தல் மற்றொரு எடுத்துக்காட்டு. நெருக்கத்தின் காரணமாக ஒருவனை நீ என்று கூறும் அதே நேரத்தில், அவன் மனைவியை நெருக்கமின்மை காரணமாக நீங்கள் என்று கூறுவதைக் காணுகிறோம். உயர்வைக் குறிக்க முன்னிலையில் நாம் என்றும், தாங்கள் என்றும் கூறுவது இங்கு நினைவுகூரத் தக்கது. அதாவது தன்மைப் பன்மையையும் படர்க்கைப் பன்மையையும் முன்னிலையில் பயன்படுத்தி உயர்வைக் காட்டுகிறோம். இந்நிலையை வேறு பலமொழிகளிலும் காணலாம்.

சில மொழிகளில் வேறுபல நிலைகளில் உயர்வுச் சிறப்பு காட்டப்படுகின்றது.

### 1.24.4 வேற்றுமை (Case)

மொழிகளில் காணப்படும் வேற்றுமையும் இலக்கணக் கூறுகளில் ஒன்றாகும். உலக மொழிகளில் பலவேறு மொழிகளில் இக்கூறு காணப்படுகிறது. வாக்கியத்தில் காணப்படும் பெயர்ச்

சொற்களுக்கும் வினைச்சொற்களுக்கும் இடையே காணப்படும் தொடர்புகள் பெயர்ச் சொல்லோடு காணப்படும் சில ஒட்டுக்களால் காட்டப்படுமாயின், அவற்றை வேற்றுமை என அழைத்தனர் பண்டை இலக்கண அறிஞர்கள். சில மொழிகளில் இந்நிலையில் மாற்றமும் உண்டு. எழுவாய் வேற்றுமையில் எவ்வித ஒட்டையும் காண முடிவதில்லை.

சில ஒட்டுக்களைப் பெயர்ச் சொற்களுடன் இணைக்கும் போது அவை சில தொடர்புகளைக் காட்டுவது குறிப்பிடத் தக்கது.

| | |
|---|---|
| கண்ணன் | கண்ணனுக்கு |
| கண்ணனை | கண்ணனுடைய |
| கண்ணனால் | கண்ணனிடம் |
| கண்ணனோடு | கண்ணனிடமிருந்து |

ஆகிய சொற்கள் இப்பண்பைக் காட்டும். ஆனால் இந்நிலை -உம், -ஏ போன்ற ஒட்டுக்களுக்கு இல்லை. இந்நிலையில் இவற்றை வேற்றுமை எனக் கூறுவதில்லை.

பெயர்ச் சொற்களைப் பொறுத்த மட்டில் வேற்றுமை மிக முக்கியமான இலக்கணக் கூறாகும். இதை வைத்தே அமைப்பு அடிப்படையில் பெயர்ச் சொல்லுக்கு இலக்கணம் கூறுவர் இலக்கண அறிஞர்கள். மேலும் தொல்காப்பியம் போன்ற இலக்கண நூல்கள் பலவேறு இயல்களில் இதுபற்றிக் கூறுவது கவனிக்கத் தக்கது. மேனாட்டு இலக்கணங்களும் இதற்கு மிக முக்கியத்துவம் கொடுத்துள்ளமையும் 'case grammar' எனத் தனி ஒரு கோட்பாட்டு இலக்கணவகை இன்று உருவாகியிருப்பதும் இதன் முக்கியத்துவத்தைக் காட்டும். பண்டை கிரேக்க இலக்கணங்கள் இதனை inflexion, declension, case என்றெல்லாம் அழைத்துள்ளன. எனினும், 'case' என்ற சொல்லே நிலை பெறுவதாயிற்று. இக்கூறுபற்றிப் பின்னர் விளக்கமாகக் காண்போம்.

பெயர்ச் சொற்களில் மேலே குறிப்பிட்ட பலவேறு இலக்கணக் கூறுகள் காணப்படுவது போன்றே வினைச் சொல்லிலும் பலவேறு இலக்கணக் கூறுகள் காணப்படுகின்றன. காலம் (tense), செய வென் எச்சம் (infinitive), கால எச்சம் (verbal participle) பலவேறு

வினைப்பாங்குகள் (moods) போன்ற இன்னோரன்ன பலவேறு இலக்கணக்கூறுகளைக் காணலாம்.

### 1.24.5 காலம் (Tense)

வினைச் சொற்களில் காணப்படும் இலக்கணக் கூறுகளில் இதுவே மிக முக்கியமான கூறு. இதனால்தான் வினைச் சொல்லுக்கு இலக்கணம் கூறவரும் இலக்கணிகள் (grammarians) இதனைக் கையாளுகின்றனர். இது வாக்கியத்தில் காணப்படும் நேரக் கிளவிகளையொட்டி அவற்றின் அடிப்படையில் அமைவதாயினும், அது ஒரு முக்கியமான கூறாகும். ஆங்கிலத்தில் காணப்படும் 'tense' என்ற சொல்லும், 'time' எனப் பொருள்படும் கிரேக்க (*khrònos*), லத்தீன் (*tempus*) சொற்களிலிருந்து பிரஞ்சு மொழி மூலம் உருவானது என்பது இங்குக் குறிப்பிடத் தக்கது. எனவே நேரக்கிளவிகளுக்கும், காலக்கிளவிகளுக்கு மிடையே மிகுந்த தொடர்பு உண்டு என்பது நன்கு விளங்கும். உலக மொழிகளிலெல்லாம் இறந்த காலம், நிகழ் காலம், எதிர் காலம் என மூன்று காலங்களே உண்டு என எண்ணுவது தவறாகும். பண்டைத் தமிழில் இரு காலங்களே உண்டு என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால் இன்றையத் தமிழிலோ இறப்பு, நிகழ்வு, எதிர்வு என முக்காலம் உண்டு என்பர். ஆங்கில மொழியிலும் 'காலம்' பிரச்சனைக்கிடமான ஒரு இலக்கணக் கூறாகும். இறப்பு, இறப்பல்லாக் காலம் என இரண்டே உண்டு என்பாரும் உளர் (Lyons : 304). எதிர்காலம் துணைவினையால் (will) காட்டப் படுவது கருதத்தக்கது. இன்னும், சில மொழிகளில் இறப்பிலேயே பல காலங்கள் (remote past, proximate past என்றெல்லாம்) உள்ளன. சில அமெரிக்க இந்திய மொழிகளில் இப்பண்புகளைக் காணலாம். சிக்கல் நிறைந்த இக்கூறு பற்றிப் பின்னர் வினையியலில் பரக்கக் காண்போம்.

மேலே குறிப்பிட்டவாறு வினைச் சொல்லில் பலவேறு இலக்கணக் கூறுகள் காணக்கிடக்கின்றன. இவைபற்றி வினையியலில் காணலாம்.

---

# 2

# பெயரியல்

## 2.1 பெயர்ச்சொல்

தமிழ் மரபிலக்கண அறிஞர்கள் சொற்களைப் பெயர், வினை, இடை, உரி என நான்காகப் பகுத்தனர் என்பதை முன்னரே கண்டோம். இவற்றுள் பெயர்ச்சொல்லும் வினைச்சொல்லுமே மிக முக்கியமானவை என்பதும் (தொல். 643) இடைச்சொற்களில் ஒட்டுக்களும் உள்ளன என்பதும் இங்கு உணரத்தக்கன.

உலக மொழிகள் அனைத்திலும் பெயர்ச்சொற்களைக் காண லாம். ஒரு பொருளின் அல்லது மனிதனின் பெயரைக் குறிப்பதே பெயர்ச்சொல் என்றும், அது வேற்றுமை உருபு போன்றவற்றை ஏற்று வருமென்றும் இதற்கு இலக்கணம் கூறுவர். கிரேக்க இலக்கண அறிஞரான டயோனியஸ் திரேக்ஸ்,

> 'A noun is a part of speech with cases, denoting a thing or an act — a thing, such as 'stone'; an act, such as 'education'; (Louis Gray, 1958:167).

எனக் கூறிச் செல்வார்.

பொருட்களின் பெயரைக் குறிக்கும் என விளக்குவது பொருள் (notional) அடிப்படையிலான விளக்கமாகும். இத்தகைய விளக்கம் எல்லா மொழிகளுக்கும் பொருந்துவதாயினும், ஒரு சில குறை பாடுகளையும் காணலாம்.

அங்கு என்பது அந்த இடம் என்ற பொருளைத் தருவது. இடம் என்பதைப் பெயர்ச் சொல்லாகக் கொண்டால் அங்கு என்பதையும் பெயர்ச் சொல்லாகவே கொள்ள வேண்டும். ஆனால்

பெயர்ச்சொற்களைப் போல் இது வேற்றுமை உருபுகளை ஏற்ப தில்லை. மேலும் வாக்கியங்களில் பெயர்ச்சொற்கள் பயன்படுவது போல் அங்கு பயன்படுவதும் இல்லை[1]. அதனால் இதனைப் பெயர்ச்சொல்லாகக் கொள்வதில்லை. இந் நிலையில்தான், அமைப்பு அடிப்படையில் 'வேற்றுமை ஏற்கும்' எனவும், இன்னும் சில மொழிகளில் 'வேற்றுமை ஏற்பதோடு எண்காட்டும்' எனவும் கூறிச் செல்லுதல் காணலாம். எனவேதான் சில இலக்கணக் கூறுகளை வரையறை செய்பவர்கள் பொருள் அடிப்படையிலும், அமைப்பு அடிப்படையிலும் வரையறை செய்கின்றனர். தமிழ் இலக்கண அறிஞர்கள், 'ஒரு பொருளையோ பெயரையோ குறிப்பது பெயர்ச்சொல்' என வரையறை செய்யாதது இங்கு நினைவுகூரத்தக்கது. சேனாவரையர் போன்றவர்கள் பயனிலை கோடலைப் பெயரின் இலக்கணமாகக் கொள்வர். 'பயனிலை கோடல் பெயர்க் கிலக்கணமென்பதூஉம் பெற்றாம்' என்பது சேனாவரையம் (சூத். 66). ஆனால் அது எழுவாய் வேற்றுமை என்பதும், வேறு சில மொழிகளில் எழுவாய்க்கு வேற்றுமை உருபு உண்டு என்பதும் இங்குக் குறிப்பிடத்தக்க செய்திகளாகும். எனினும் பெயர் எழுவாயாக வரும் என்பதும், ஒரு அமைப்பு (structure) அடிப்படையிலான விளக்கம் என்பதும் நினைவுகூரத்தக்கன. பெயருக்கு இலக்கணம் கூறவந்த தொல் காப்பியர்,

> பெயர்நிலைக் கிளவி காலந் தோன்றா
> தொழில்நிலை ஒட்டும் ஒன்றலங் கடையே (தொல். 554)

எனப் பெயர்கள் காலத்தை ஏற்காது என்றும் அவை வேற்றுமை ஏற்கும் என்பதைக்

> கூறிய முறையின் உருபுநிலை திரியாது
> ஈறுபெயர்க் காகும் இயற்கைய என்ப (தொல். 553)

---

1. Nouns are usually said to be words that refer to persons places and things, and they usually do, but of course that is not how we know that they are nouns. It is rather the other way about. We recognize certain words as nouns from the way in which they are used in sentences, and thus know that they refer to persons, places, or things.
—Roberts, 1968:29.

என்றும் கூறுகிறார். எனவே பெயர், வேற்றுமை ஏற்றுவரும் என்றும், காலம் காட்டாது என்றும் அமைப்பு அடிப்படையில் இலக்கணம் கூறிச் செல்வது காணத்தக்கது.

## 2.2 பெயர் வகைப்பாடு (Classification of nouns)

பெயர்ச்சொற்களைப் பலவேறு நிலைகளில் வகைப்படுத்தலாம். அவற்றின் ஆக்கத்தை அடிப்படையாகக் கொண்டு இயற்கைப் பெயர்கள் (inherent nouns) எனவும் ஆக்கப்பெயர்கள் (derived nouns) எனவும் பிரிக்கலாம். கண்ணன் என்பது இயற்கைப் பெயர்; வருகை என்பது ஆக்கப்பெயர். இன்னும் இடுகுறி, காரணம் எனவும் பிரிப்பர். மரம் என்பது இடுகுறிப் பெயர். நாற்காலி என்பது காரணப்பெயர். மேலும், ஒவ்வொரு மொழியிலும் பெயர்கள் எவ்வாறு செயல்படுகின்றன என்பதை அடிப்படையாக வைத்தும் பாகுபாடு செய்யலாம். சிறப்புப் பெயர் (personal nouns), பதிலிடு பெயர்கள் (pronouns), இடப்பெயர் (place nouns) பருப்பொருட்பெயர், நுண்பொருட்பெயர், எண்ணுப்பெயர் (numerals), திரட்பெயர் (mass nouns), எண்ணப்படு பெயர் (count nouns), மரப்பெயர், உறவுப்பெயர் (kins nouns), தொழிற் பெயர் (verbal nouns), காலப்பெயர் (time nouns) போன்றெல்லாம் பாகுபாடு செய்யலாம். சில பாகுபாடுகள் முக்கியமானவை; இன்னும் சில ஒரிரு காரணத்திற்காக ஏற்பட்டவை. இப்பிரிவுகளை எல்லா மொழிச் சொற்களிலும் காணலாம். பொருளை அடிப்படையாகக் கொண்டு இப்பிரிவுகள் ஏற்பட்ட நிலையிலும் எல்லா மொழிகளிலும் ஒரே மாதிரியாக இவை செயல் படுமென்று கூறுவதற்கில்லை.

இன்னும் சில வகைப்பாடுகள், ஒரு மொழியின் அமைப்பினை அடிப்படையாகக் கொண்டு ஏற்படுவன. தமிழ்ச் சொற்களை உயர்திணை, அஃறிணைப் பெயர்கள் எனப் பாகுபாடு செய்வது (தொல். 484) இம்மொழியின் அமைப்பினை அடிப்படையாகக் கொண்டது. ஆண்பால் பெயர், பெண்பால் பெயர், அஃறிணைப் பெயர் எனப் பிரிப்பர். இன்னும் சில மொழிகளில் உயிருள்ளவை (animate), உயிரில்லாதவை (inanimate) எனப் பாகுபாடு செய்ய வேண்டியிருக்கும். இன்னும் சில மொழிகளிலோ ஆண்பால்

(masculine), பெண்பால் (feminine) எனப் பிரிப்பர். எடுத்துக் காட்டாக ஸ்பானிஷ் மொழியில் ஆண் இனத்தைக் குறிக்கும் சொற்கள் மட்டுமின்றி, புத்தகம், கம்பு போன்ற பொருட்களை குறிப்பன ஆண்பாலாகவும், பெண்களைக் குறிக்கும் சொல்லோடு வீடு, மேசை போன்ற பொருட்களைக் குறிப்பன பெண்பாலாகவும் உள்ளன. அஃறிணை என ஒரு பகுப்பு இருக்காது அஃறிணைச் சொற்கள் ஆண்பால் அல்லது பெண்பாலில் அடங்கும். இம் மொழியில் வரும் சிறப்புச் சுட்டுக்களும் (definite articles) பெய ரடைகளும்தான் இதற்குக் காரணம். இதைப்போன்றே ஆப்பிரிக்காவில் பேசப்படும் ஹாஸா (Hasa) மொழியில் மூங்கில், அரண்மனை, ஞாயிறு போன்ற அஃறிணைப் பெயர்கள் பெண் பாலாகவும், சுத்தி, சைக்கிள், இயந்திரம் போன்ற பெயர்கள் ஆண்பாலாகவும் கருதப்படுகின்றன (அகத்தியலிங்கம் 1974:220).

### 2.3 தமிழ் மொழியில் பெயர்ப் பாகுபாடு

### 2.3.1 சிறப்புப் பெயர் (Personal nouns)

குறிப்பிட்ட ஒரு மனிதனின் அல்லது இடத்தின் அல்லது ஒரு பொருளின் பெயரைக் குறிப்பதுவே சிறப்புப் பெயர் எனப்படும். கண்ணன், முருகன் போன்றவை சிறப்புப் பெயர்களாகும். காவேரி, வைகை போன்ற குறிப்பிட்ட ஒன்றைக் குறிக்கும் பெயர்களும் இதனுள் அடங்கும். எனவே சிறப்புப் பெயர்கள் அனைத்தும் குறிப்பிட்ட ஒரு பொருளையோ மனிதனையோ அல்லது இடத்தையோ குறிப்பனவாகும்.

நான் காவேரிக்குச் சென்றேன்
நான் கண்ணனைப் பார்த்தேன்

எனக் கூறலாம். ஆனால்,

நான் பையனைப் பார்த்தேன்

எனக் கூற முடியாது. இவ்வாறு கூறும்போது

நான் குறிப்பிட்ட ஒரு பையனைப் பார்த்தேன்

என்பதே பொருள். 'குறிப்பிட்ட' அல்லது 'ஒரு' என்பன தொக்கி நிற்கின்றன. இந்நிலையில் சிறப்புப் பெயர்களும் பொதுப் பெயர் களும் வேறுபாடு உடையன.

சிறப்புப் பெயர்கள் பன்மை உருபுகளை ஏற்று வருவதில்லை. சிறப்பாக ஒன்றுக்கே உரிய நிலையில் பன்மை உருபை ஏற்க முடியாது.

கண்ணன்கள், காவேரிகள் என்று கூறுவதில்லை. இதைப் போன்றே ஒரு காவேரி எனவும் கூற முடியாது.

சிறப்புப் பெயர்கள், இனத்தைச் சுட்டும் அடைகளையும் எடுத்து வருவதில்லை. இதற்குக் காரணமும் அவை ஒன்றுக்கே உரிய பெயர்கள். அவற்றுடன் வரும் அடைகள் இனச்சுட்டா அடைகளே. இதனையே தொல்காப்பியரும்,

இனச்சுட் டில்லாப் பண்புகொள் பெயர்க்கொடை
(தொல். 501)

என்றார். ஆசிரியர் அகத்தியர் என்று குறிப்பிடும்போது இவ் வடைமொழி இரண்டு அகத்தியர்களை உணர்த்தி ஒருவரை மற்றொருவரிலிருந்து பிரிப்பதில்லை.

### 2.3.2 பொதுப்பெயர் (Common nouns)

பொருட்களை அல்லது மக்களைப் பொதுவாகச் சுட்டும் பெயர்கள் பொதுப்பெயர் எனப்படும். சிறப்புப் பெயர் அல்லாதன எல்லாம் பொதுப்பெயராகும். பையன், வீடு, நாடு, ஆறு போன்ற பெயர்ச்சொற்கள் இதனுள் அடங்கும். இவைகளுள் பல (வீடுகள், மாடுகள்) பன்மையை ஏற்று வரும்; சில பன்மையை ஏற்பதில்லை. எனவே, இவ்வடிப்படையில் இவற்றை எண்ணப்படு பெயர் (count nouns) என்றும், திரட்பெயர் (mass nouns) என்றும் பிரிக்கலாம். நாடுகள் எனக் கூற முடியும். ஆனால் தண்ணீர்கள் எனக் கூற முடியாது. நான்கு நாடுகள் எனக் கூறலாம். நான்கு தண்ணீர்கள் என்று கூற முடியாது. ஆனால் கொஞ்சம் தண்ணீர், நிறைய தண்ணீர் எனக் கூறலாம். கொஞ்சம், நிறைய போன்ற சொற்கள் எண்ணப்படு பெயர்களுக்கு முன்னாலும் வரும். கொஞ்சம் வீடுகள், நிறைய வீடுகள் என வருதல் காண்க. எண்ணப்படு பெயர் எண்ணடைகளை (numerical adjectives) ஏற்று வரும் ஆனால் திரட்பெயர்கள் ஏற்று வரா. இரண்டு

காப்பி போன்ற சொற்றொடர்கள் வழக்கில் காணப்பட்டாலும், அவை இரண்டு கப்பு காப்பி போன்றவற்றின் திரிந்த வடிவங்களாகும் (அகத்தியலிங்கம், 1964).

### 2.3.3 இடப்பெயர் (Place names)

இடங்களைச் சுட்டும் பெயர் இடப்பெயர் என அழைக்கப்படும். சென்னை, மதுரை, சிதம்பரம் போன்ற சிறப்புப் பெயர்களும், வீடு, பல்கலைக்கழகம் போன்ற பொதுப்பெயர்களும் இதனுள் அடங்கும்.

அவன் சென்னையில் இருக்கிறான்
அவன் மதுரைக்குப் போனான்

போன்ற வாக்கியங்களில் இச்சொற்கள் வரும்போது 'அங்கு' என்ற சொல்லை இவற்றிற்குப் பதிலாக இட்டுப் பேசலாம். பொதுவாக இடப்பெயர்கள் அங்கு, இங்கு, எங்கு ஆகிய இடைச் சொற்களை இட்டுக் கூறும்படியாக அமைந்திருக்கும்.

இப்பெயர்கள் நாடு, நகரம், மாநிலம், மாவட்டம், ஊர், குளம், மலை போன்றவற்றின் பெயர்களைக் கொண்டிருக்கும். இந்நிலையில் இப்பெயர்கள் சிறப்புப் பெயர்களை அடுத்து வரும்.

அமெரிக்க நாடு
சென்னை நகரம்
சென்னை மாநிலம்
திருச்சி மாவட்டம்
சிதம்பரம் ஊர்

போன்ற தொடர்கள் இப்பண்பினைக் காட்டும்.

### 2.3.4 நேரப்பெயர்கள்

நேரம் அல்லது காலத்தைக் காட்டும் பெயர்கள் நேரப் பெயர்கள் எனப்படும். ஆவணி, புரட்டாசி போன்ற மாதப் பெயர்களும் பிற சிறப்புப் பெயர்களும், நாள், மணி போன்ற பொதுப் பெயர்களும் இதனுள் அடங்கும்.

அவன் புரட்டாசி மாதம் வந்தான்

போன்ற வாக்கியங்களில் இச்சொற்கள் வரும்போது 'எப்பொழுது வந்தான்?' எனக் கேட்க முடியும். எப்போது, இப்போது, அப்போது போன்ற சொற்களை இட்டுக் கூறுதல் முடியும். இச்சொற்களிலும் சிறப்புச் சொற்களுடன் பொதுச் சொற்கள் வருதல் காணலாம்.

சித்திரை மாதம்
வியாழக்கிழமை
காலை நேரம்
வியாழக்கிழமை அன்று

போன்ற தொடர்களில் இப்பண்பைக் காணமுடியும்.

இவற்றைப் போலவே பெயர்ச்சொற்களை உறவுப் பெயர்கள் மரப் பெயர்கள், பட்டப் பெயர்கள் போன்றெல்லாம் பிரிக்கலாம். எனினும், இப்பிரிப்புக்கள் அனைத்தும் இங்குக் கூறப்படவில்லை.

## 2.3.5 பதிலிடு பெயர்கள் (Pronouns)

ஆங்கில மொழியில் 'Pronouns' எனக் கூறப்படும் சொல் வகையே தமிழில் பதிலிடு பெயர்கள் எனப்படும். இப்பெயர்களைப் பற்றிக் கூறவந்த சில ஆங்கில அறிஞர்கள்,

'a word used for or instead of a noun' (Louis Gray, 1958:172.)

என்று குறிப்பிடுவர். ஒரு பெயர்ச் சொல்லுக்குப் பதிலாக இட்டு வழங்கும் இன்னொரு பெயரையே பதிலிடு பெயர் என்கிறோம். பெயர்ச்சொல் வந்த இடத்தில் மட்டுமன்றி ஒரு பெயர்த்தொடர்–வினைத்தொடர் வந்த இடத்திலும் ஒரு வாக்கியம் வந்த இடத்திலும் இப்பெயர்கள் வந்து நிற்கக் காணலாம் (அகத்தியலிங்கம், 1978:153).

கண்ணன் வந்தான்; அவனுக்குச் சோறிடுக

என்பதில் ஒரு பெயருக்குப் பதில் வருவதும்,

அங்கு வந்த பையன் நல்லவன்; அவனுக்குச் சோறிடுக

என்பதில் 'அங்கு வந்த பையன்' என்ற பெயர்த் தொடருக்குப் பதிலாக வருவதும்,

கண்ணன் வந்தான்; அது நல்லதன்று

என்பதில் ஒரு வாக்கியத்திற்குப் பதிலாக வருவதும் (கண்ணன் வந்தது)

அவன் சென்னையில் வெற்றி பெற்றான்; ஆனால் அது இங்கு நடக்காது

என்ற வாக்கியத்தில் ஒரு பகுதிக்குப் (வெற்றி பெறுதல்) பதிலாக வருவதும் காண்க. மேலும் இவை முன்னால் சொல்லப்பட்ட பெயர் பற்றிய செய்திகள் அனைத்தையும் கொண்டு தரும்.

குழலி என் மாமன்மகள்; அவள் நல்லவள்

என்பதில் அவள் என்பது குழலி, மாமன் மகள் போன்ற எல்லாச் செய்திகளையும் தந்து நிற்றல் காண்க.

எனினும் அமைப்பில் பதிலிடு பெயர்கள் எல்லாப் பண்புகளையும் தருவதில்லை. முன்னால் அவை குறித்து நிற்கும் பெயர்கள் வந்தாலன்றி எதுவும் தெரிவதில்லை. அசோகன் என்ற பெயர் தரும் செய்திகள் அனைத்தையும் அவன் என்ற பதிலிடு பெயர் தருவதில்லை. ஆண் என்ற பண்பையும் ஒருமையையும் காட்டு கிறதே அன்றி அசோகன் என்ற பெயரைக் கேட்ட மாத்திரத்தில் நம் எண்ணத்தில் வரும் செய்திகள் எல்லாம் வருவதில்லை. எனவே பதிலிடு பெயர்கள் பெயர்ச்சொற்களுக்குப் பதிலாக இட்டு வழங்குகின்ற பெயராயினும் குறையுடைய சொற்களே.

தமிழ் மொழியில் காணப்படும் அவன், அவள் போன்ற சொற்கள் ஆண், பெண் பகுப்பைக் காட்டும். ஆனால், வேறு சில மொழிகளிலோ ஆண், பெண் பகுப்புகூடத் தெரியவில்லை. தெலுங்கு மொழியில் ad என்ற சொல் பெண்–அஃறிணை, வேற்றுமையைக் கூடக் காட்டாது. இரண்டிற்கும் பொதுவாக உள்ளது.

இன்னுஞ் சில மொழிகளிலோ ஆண், பெண், அஃறிணை எல்லாவற்றிற்கும் பொதுவாக ஒரே ஒரு பதிலிடு பெயர் இருக்கும். தோடா மொழியில் காணப்படும் aϴ என்ற சொல் அவன், அவள், அது என்ற மூன்றையும் சுட்டும்.

தமிழில் அவர் என்ற சொல் ஆணுக்கும் பெண்ணுக்கும் பொது. அவர்கள் என்ற சொல்லும் இத்தகையதே. யார் என்ற சொல் ஆண், பெண், பலர் பால்களைக் குறிக்கும், அவன் யார், அவள் யார், அவர் யார், அவர்கள் யார் போன்றவை இப்பண்பைக் காட்டும். பதிலிடு பெயர்கள் மொழிக்கு மொழி வேற்றுமை உடையன.

பதிலிடு பெயர்கள் மொழிகளின் அடிப்படைச் சொற்களாகக் (basic vocabulary) கருதப்படும். ஒரு மொழியின் வரலாற்றில் இவை மிக முக்கியமான இடத்தைப் பெறும். இவை பொதுவாகச் சீக்கிரமாக மாறும் தன்மையன அல்ல. மொழிகளில் காணப்படும் எண், பால் போன்றவற்றின் மூல காரணமாகவும் இருக்கும். பதிலிடுபெயர்கள் எப்போதும் விளிப்பெயர்களாக வருவதும் இல்லை.

பதிலிடு பெயர்கள் பொதுவாகச் சிறப்புப் பெயர்களைப் போலவே உள்ளன. சிறப்புப் பெயர்கள் குறிப்பிட்ட ஒருவரை அல்லது ஒன்றைக்குறிப்பது. பதிலிடு பெயர்களும் அத்தகையதே.

'நான்' எனக் கூறும்போது குறிப்பிட்ட ஒருவரையே அது குறிக்கும். அதனால் சிறப்புப் பெயர்களைப் போலவே இவையும் சில பண்புகளைப் பெற்றிருக்கின்றன.

பதிலிடு பெயர்கள் பெயரடைகளை ஏற்று வருவதில்லை.

பெரிய நான், பெரிய நீ, பெரிய அவன்

போன்று கூற முடியாது. இதைப்போன்றே,

என்னுடைய அவன், என்னுடைய நீ

என்றும் கூறுதல் முடியாது.

ஐந்து அவன், ஐந்து நீ

போன்றவையும் இத்தகையனவே.

### 2.3.6 பதிலிடு பெயர்களின் வகைப்பாடு

பதிலிடு பெயர்களை மூவிடப் பெயர்கள் (personal pronouns), பிற பதிலிடு பெயர்கள் என இரண்டாகப் பிரிப்பர். பின்னைய பிரிவில் வினாப் பெயர்கள், தற்சுட்டுப் பெயர்கள் போன்ற பிற பதிலிடு பெயர்கள் அடங்கும்.

2.3 6.1 மூவிடப் பெயர்கள் (Personal pronouns)

தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகியவற்றைக் காட்டும் பதிலிடு பெயர்களையே மூவிடப் பெயர்கள் என்கிறோம்.

உலக மொழிகள் பலவற்றில் மூன்று மூவிடப் பெயர்களைக் காணலாம். இவற்றின் தாக்கத்தைச் சில மொழிகளின் வினைச் சொற்களிலும் காணலாம். தமிழில் இந்நிலையைக் காணுகிறோம். சில மொழிகளில் வினையில் இருந்து அழிந்துவிட்ட நிலையையும் காண முடிகிறது (Jesperson 1955:213). மலையாள மொழியில் விகுதிகள் அழிந்துவிட்ட நிலையைப் பார்க்கலாம்.

2.3.6.1.1 தன்மை மூவிடப் பெயர் (First person pronoun)

தன்மையை, அதாவது பேசுபவனை அல்லது பேசுபவர் களைக் குறிப்பதே தன்மை மூவிடப் பெயர்.

அ. தன்மை ஒருமை (First person singular)

பேசுகிறவன் தன்னைப்பற்றிக் குறிக்கும் இடப் பெயரே தன்மைப் பெயர் (தன்+மை)[1]. பேசுகிறவன் தன் பெயரையே குறிக்கினும் அதனையும் தன்மையாகக் கருதலாம்.

அகத்தியலிங்கம் பேசுகிறேன், அகத்தியலிங்கம் பாடுகிறேன் என்பதில் அகத்தியலிங்கம் தன்மையாகும். எனவே எல்லாப் பெயர்களும் தன்மையில் வர முடியும்.

தமிழில் நான் என்ற சொல் தன்மை ஒருமை இடப் பெயராகும். இதன் கண் காணப்படும் னகர ஒற்று ஒருமையைக் குறிக்கும். இதைப் போன்றே என் என்ற சொல்லில் காணப்படும் னகர ஒற்றும் ஒருமையைக் குறிப்பதே.

தமிழ் மொழியில் காணப்படும் பலவேறு பதிலிடு பெயர்களும் ஒரு சில பெயர்களும் வேற்றுமை ஏற்கும் போது ஒருசில மாற்றங் களை அடைகின்றன. எவ்வித மாற்றமும் அடையாத நிலையில்

1. The first person pronouns are those that refer to the person or persons speaking:
—Roberts, 1968 : 18.

உள்ளதை முதலடி (absolute form) என்றும், வேற்றுமை ஏற்கும் போது அடையும் மாற்ற நிலையில் உள்ளதை வேற்றுமையடி (oblique form) என்றும் கூறுவர்.

தன்மை ஒருமைப் பதிலிடு பெயரிலும் இந்நிலையைக் காணு கிறோம்.

நான் (நா+ன்) என்பது முதலடி

என் (எ+ன்) என்பது வேற்றுமையடி

நான்: நான் வந்தேன், நானாக வந்தேன்

என்: என்னை, எனக்கு, என்னால், என்னிடமிருந்து

பிற பதிலிடு பெயர்களைப் போன்றே இதுவும் பேசுபவனின் பண்புகள் அனைத்தையும் காட்டுவதில்லை. நான் பேசுகிறேன் எனக் கூறும்போது யாரோ பேசுகிறார்கள் எனத் தெரியுமேயன்றி வேறு எதுவும் தெரிவதில்லை. ஆணா, பெண்ணா என்ற குறிப்புக் கூடத் தெரிவதில்லை. சில மொழிகளில் தன்மைப் பதிலிடு பெயர்கள் ஆண், பெண் வேற்றுமை காட்டும், ஹாட்டன் டோட் மொழியில் ( திரெ = நான் (ஆண்), த = நான் (பெண்) ) ஆண், பெண் வேற்றுமை உண்டு. ஆனால் தமிழ் போன்ற மொழிகளில் எண் வேற்றுமையே உள்ளது.

ஆ. தன்மைப் பன்மை (First person plural)

தன்மை ஒருமையைப் போலவே தன்மைப் பன்மைப் பதிலிடு பெயர்களையும உலக மொழிகளில் காணலாம். சில மொழிகளில் இருமை, பன்மை பகுப்புக்களையும் காணலாம். முண்டா மொழி யைச் சார்ந்த சந்தாளி, திபேத்திய பர்மிய குழுவைச்சார்ந்த லிம்பூ, சில மலேனேசியன் மொழிகள் ஆகியவற்றில் இப்பண்பினைக் காணலாம்.

இருமை இரண்டு பேர்களையும், பன்மை இரண்டுக்கு மேற் பட்டவர்களையும் குறிக்கும். லிம்பூ (திபேத்திய பர்மிய மொழி) மொழியில்

*anga*: = நான்
*a:nchi*: = நானும் நீயும் (நாம் : இருமை)
*a:ni*: = நானும் நீங்களும் (நாம் : பன்மை)

போன்று ஒருமை, இருமை. பன்மை வேற்றுமையைக் காணலாம். இவற்றுள் *-chi* என்பது இருமையையும் *-ni* என்பது பன்மையையும் காட்டும் என்பர்.

ஆனால் தமிழ்போன்ற திராவிடமொழிகளில் பன்மை மட்டுமே உள்ளது. ஆனால் இவற்றில் உளப்பாட்டுத் தன்மைப் பன்மை, விலக்கீட்டுத் தன்மைப் பன்மை வேறுபாடு உள்ளது. இந்நிலையை வேறுபல மொழிகளிலும் காணலாம்.

### ஆ.1 உளப்பாட்டுத் தன்மைப் பன்மை (Inclusive first person plural)

பேசுபவனையும் யாரோடு பேசுகிறோமோ அவரையும் அல்லது அவர்களையும் இணைத்துக் கூறும் தன்மைப் பன்மைப் பதிலிடு பெயரையே உளப்பாட்டுத் தன்மைப் பன்மை என்கிறோம். தமிழில் நாம் என்ற சொல் பேசுபவனையும் யாரோடு பேசுகிறானோ அவனையும் (அவர்களையும்) உளப்படுத்துகிற நிலையில் தான் இதனை உளப்பாட்டுத் தன்மைப் பன்மை என்கின்றனர்.

நாம் வந்தோம்
நாம் வந்தோம், அவர்கள் வரவில்லை

எனக் கூறலாம்.

*நாம் வந்தோம், நீ வரவில்லை

எனக் கூறமுடியாது. இதன்கண்ணும் முதலடி வேற்றுமையடி வடிவங்களைக் காணுகிறோம்.

நாம் = (நா + ம்)
நம் = (ந + ம்)

இவற்றுள் மகரம் பன்மையையும் நா-, ந- ஆகியவை தன்மையையும் காட்டுவதாகக் கொள்ளலாம்.

நாம் வந்தோம், நாமாக வந்தோம்
நம்மை, நம்மால், நம்மோடு, நமக்கு

தமிழ் மொழியில் மட்டுமன்றி வேறுபல உலகமொழிகளிலும் இத்தகைய உளப்பாட்டுத் தன்மைப் பன்மைப் பதிலிடு பெயர்களைக் காணுகிறோம். ஆனால் ஆங்கிலம் போன்ற மொழிகளில் இந்நிலை

இல்லை. 'we' என்ற சொல் எவ்வித வேற்றுமையுமின்றி பொதுவாக உள்ளது. இதற்கு நாம், நாங்கள் என்ற இரு பொருளும் உண்டு.

ஆ.2 விலக்கீட்டுத் தன்மைப் பன்மை (Exclusive first person plural)

யாரோடு பேசுகிறோமோ அவர்களை விலக்கி விட்டுக் குறிப்பிடுகிற தன்மைப் பன்மைப் பதிலிடு பெயர்களையே விலக்கீட்டுத் தன்மைப் பன்மை என்கிறோம்.

நாங்கள் எனக் கூறும்போது யாரோடு பேசுகிறோமோ அவர்களை நீக்கியே குறிப்பிடுகிறோம்.

நாங்கள் தான்; நீங்கள் இல்லை

நாங்கள் வந்தோம்; நீங்கள் வரவில்லை

போன்றவற்றில் காணப்படும் நாங்கள் என்ற சொல் இப்பண்பைக் காட்டும். வேற்றுமையடியாக எங்கள் என்ற சொல் உள்ளது.

நா – ங்கள்

எ – ங்கள்

இவற்றுள் நா–, எ– என்பவை தன்மையையும் -ங்கள் என்ற ஒட்டு பன்மையையும் குறிக்கும்.

நாங்கள் வந்தோம், நாங்களாக வந்தோம்?

எங்களை, எங்களால், எங்களோடு, எங்களுக்கு

உளப்பாட்டுத் தன்மைப் பதிலிடு பெயரும் விலக்கீட்டுத் தன்மைப் பதிலிடு பெயரும் வெவ்வேறாக இருப்பினும் அவை ஒரே விகுதியை எடுத்தே வருகின்றன.

நாங்கள் }
நாம் } வந்தோம்

பண்டைத் தமிழில் இவ்விரு பதிலிடு பெயர்களும் வெவ்வேறு விகுதிகளைப் பெற்று வரும் எனப் பலர் கருதினும் இது உண்மையன்று. (இஸ்ரேல் 1974, அகத்தியலிங்கம் 1976).

## 2 3 6.1.2 முன்னிலை (Second person pronoun)

யாரிடம் பேசுகிறோமோ அவரையே முன்னிலையாகக் கருது கிறோம். (முன் + நிலை = முன்னிலை). இதன் கண்ணும் ஒருமை, பன்மை வேற்றுமையைக் காணுகிறோம்.

### அ முன்னிலை ஒருமைப் பெயர் (Second person singular)

தமிழில் முன்னிலை ஒருமை, பன்மை பகுப்பைக் காணுகிறோம். நீ என்ற சொல் யாரிடம் பேசுகிறோமோ அவனைக் குறிக்கும் சொல்லாகப் பயன்படுகிறது.[1] இது எந்தப் பால் வேற்றுமையையும் காட்டுவதில்லை சில மொழிகளில் எண் வேற்றுமை கூட இல்லை. ஆங்கில மொழியில் 'you' என்ற சொல் ஆண், பெண், ஒருமை, பன்மை ஆகியவற்றிற்குப் பொதுவாக உள்ளது. ஆனால் இன்னும் சில மொழிகளில் ஆண், பெண் வேற்றுமை காட்டும். துனிக்கா போன்ற அமெரிக்க இந்திய மொழிகளிலும் எகிப்தியன், ஹாஸா, அங்காஸ் போன்ற மொழிகளிலும் ஆண், பெண் வேற்றுமை உண்டு.

| | | | |
|---|---|---|---|
| ம | = | நீ (ஆண்) | துனிக்கா |
| ஹெம | = | நீ (பெண்) | |
| கை | = | நீ (ஆண்) | எகிப்தியன் |
| கே | = | நீ (பெண்) | |

ஆனால் தமிழில் காணப்படும்

நீ = (நீ + ∅)

உன் = (உ + ன்)

என்ற சொற்கள் எண் மட்டுமே காட்டும்; பால் காட்டுவதில்லை. இவற்றுள் நீ-, உ- என்பது முன்னிலையையும் -∅-, -ன் ஆகியவை ஒருமையையும் காட்டும். என்- வேற்றுமையடி.

நீ வந்தாய், நீயாக வந்தாய்

என்னை, என்னால், என்னோடு, எனக்கு

1. The second person '*you*' refers to the person or persons spoken to.
—Roberts, 1968:18.

ஆ. முன்னிலைப் பன்மைப் பெயர் (Second person plural)

ஒன்றுக்கு மேற்பட்டவர்களிடம் பேசும்போது அவர்களைக் குறிக்கும் பதிலிடு பெயர்களையே முன்னிலைப் பன்மைப் பதிலிடு பெயர்கள் என்கிறோம். எடுத்துக்காட்டாகக் கண்ணன், இராமன் ஆகிய இருவர்களிடமும் பேசும்போது அவர்களைக் குறிக்க நீங்கள் என்ற சொல்லைப் பயன்படுத்துகிறோம். நீங்கள் வந்தீர்கள் என்கிறோம். இதனைத் தமிழில் முன்னிலைப் பன்மைப் பதிலிடு பெயராகக் கருதுகிறோம். மேலும் முன்னிலையில் ஒருவரையும் படர்க்கையில் ஒருவரையும் இணைத்துக் கூறும் போதும் முன்னிலைப் பன்மையைப் பயன்படுத்துகிறோம்.

நீங்கள் (நீயும் அவனும்) வந்தீர்கள்

போன்றவற்றில் இப்பண்பைக் காணுகிறோம். தமிழில் காணப் படும் நீங்கள், உங்கள் ஆகிய சொற்கள் முன்னிலைப் பன்மைப் பதிலிடு பெயர்களாகுப.

நீ - ங்கள்

உ - ங்கள்

நீ-, உ- என்பவை முன்னிலையையும் -ங்கள் பன்மையையும் உணர்த்தும். இவற்றுள் உங்கள் என்பது வேற்றுமையடியாகும். வேற்றுமையைக் காட்டும்போது இதனைப் பயன்படுத்துகிறோம்.

நீங்கள் வந்தீர்கள், நீங்களாக வந்தீர்கள்

உங்களை, உங்களால், உங்களோடு, உங்களுக்கு

தமிழில் முன்னிலைப்பன்மையும் எண் வேற்றுமை காட்டுமேயன்றிப் பால் வேற்றுமை காட்டுவதில்லை. ஆங்கிலம் போன்ற மொழிகளில் '*you*' என்ற சொல்லே ஒருமைக்கும் பன்மைக்கும் பொதுவாக உள்ளது.

ஆனால் உலகில் காணப்படும் வேறு சில மொழிகள் ஆண், பெண் பால் காட்டும். எடுத்துக்காட்டாக, ஹாஸா மொழியில்

குனி = நீங்கள் (ஆண்)

குனிந்த = நீங்கள் (பெண்)

ஆகிய சொற்கள் ஆண், பெண் வேற்றுமை காட்டும்.

2.3.6.1.3 படர்க்கைப் பெயர்கள் (Third person pronouns)

தன்மை, முன்னிலை அல்லாத இடத்தினைப் படர்க்கை என்பர். இருவர் பேசும்போது அவர்களைக் குறிப்பிடாமல் வேறொருவரைக் குறிப்பிடும் பதிலிடு பெயர்களையே படர்க்கைப் பதிலிடு பெயர்கள் என்கிறோம்.[1]

தமிழில் தான், தாம் ஆகிய பதிலிடு பெயர்கள் பண்டைக்காலத்தில் படர்க்கைப் பதிலிடு பெயர்களாக வழங்கி வந்தன எனக் கருதுவர் சிலர். எனினும் தொல் திராவிட மொழியிலேயே இந்நிலை இருந்தது என்றும் அப்பொழுதே சுட்டுப் பெயர்களே படர்க்கைப் பெயர்களாகப் பயன்பட்டன எனவும் கருதுவர் (P.S. Subrahmanyam, 1968) பலர்.

தான், தாம் ஆகியவை எவ்வித பால் வேற்றுமையையும் காட்டுவதில்லை; எண் வேற்றுமை மட்டுமே காட்டும். இந்நிலையில் இவை தன்மை, முன்னிலை பெயர்களைப் போன்றே உள்ளன. எனவே மிகப் பண்டைக் காலத்தில் பதிலிடு பெயர்கள் அனைத்தும் எண் வேற்றுமை மட்டுமே காட்டி நின்றன எனக் கருத இடம் உள்ளது. தான், தாம் ஆகியவை உயர்திணையில் மட்டுமின்றி அஃறிணையிலும் வரும்.

தமிழ் மொழியில் காணப்படும் படர்க்கை விகுதிகள் சுட்டுப் பெயர்களின் அடிப்படையில் அமைந்தனவே என்பதும் தான், தாம்

1. The third person pronouns -*he*, *she*, *it*, *they* - refer to some person or thing other than the speaker or the person spoken to.
—Roberts, 1968 : 18.

....[c] the person[s], concept[s] or thing[s] spoken of........
—Louis Gray, 1958 : 73.

what is neither speaker nor spoken to the third person
—Jesperson. 1955 vii, 125.

என்ற பெயர்களின் அடிப்படையில் அல்ல என்பதும் இங்குக் கவனிக்கத்தக்கது. தான், தாம் ஆகியவற்றில் தன்மை, முன்னிலையைப் போன்று ஒருமை, பன்மை, எண் வேறுபாடு மட்டுமே உள்ளது. ஆனால் சுட்டுப் பெயர்களில்தான் எண், பால் பாகுபாடு உள்ளது. எனவே சுட்டுப் பெயர்கள் மிகப் பெரும் பழங்காலத்தில் (விகுதிகள் வினையில் வருவதற்கு முன்பே) படர்க்கையிடத்தில் வந்திருக்கலாம் என எண்ண இடம் உண்டு.

## 2.3.7 சுட்டுப் பெயர்கள் (Demonstrative proneuns)

ஒரு பொருளைச் சுட்டிக் காட்டும் பெயர்களையே சுட்டுப் பெயர்கள் என்பர். சுட்டுப் பெயர்கள் நேர்ச்சுட்டு (dietic) என்றும், பதிலிடு சுட்டு (anaphoric) என்றும் இரண்டு வகைப்படும். ஒரு பொருளை அல்லது ஒரு மனிதனைச் சுட்டிக் காட்டிக் குறிப்பிடுவதையே நேர்ச்சுட்டு என்பர்.

அவன் கண்ணன், இவன் இராமன்

எனக் கூறும் சுட்டுக்களையே நேர்ச்சுட்டு என்கிறோம்.

முன்னால் சொன்னதைப் பின்னர்க் குறிப்பிட்டுக் கூறும் போது பயன்படுத்தும் சுட்டுக்களைப் பதிலிடு சுட்டு என்பர்.

கண்ணன் வந்தான், அவனுக்குச் சோறிடுக

என்பன போன்றவற்றில் காணப்படும் சுட்டு பதிலிடு சுட்டாகும்.

பதிலிடு சுட்டாகத் தமிழில் தான், தன், தாம், தம், தாங்கள், தங்கள் போன்றவையும் வரும். எழுவாயாக வரும் பெயரைக் குறித்து வரும்போது இவை வருதல் காணலாம்.

கண்ணன் தான் நல்லவன் என்று கூறினான்
கண்ணன் தன் வீட்டிற்குச் சென்றான்
கண்ணன் தன்னோடு வந்த பையனுடன் பேசினான்
இராமனும் கண்ணனும் தாங்கள் நல்லவர்கள் என்று சொன்னார்கள்
இராமனும் கண்ணனும் தங்கள் வீட்டிற்குச் சென்றார்கள்

போன்ற இடங்களில் வரும் தான், தன், தாங்கள், தங்கள் போன்றவை பதிலிடு சுட்டுக்களாகும். சில கிளை மொழிகளில் (கன்னியாகுமரித் தமிழ்) இவை வரும் இடங்களில் அவன், அவள், அவர்கள் போன்ற சுட்டுக்களே வருதல் கவனிக்கத்தக்கது.

கண்ணன் அவன் நல்லவன் என்று கூறினான்

கண்ணன் அவன் வீட்டிற்குச் சென்றான்

போன்றவற்றில் இப்பண்பைக் காணலாம். ஆனால் நேர்ச்சுட்டில் தான் போன்றவை வருவதில்லை. இது நேர்ச்சுட்டுக்கும் பதிலிடு சுட்டுக்குமிடையே உள்ள வேற்றுமையைக் காட்டும். பதிலிடு சுட்டாகத் தமிழில் அவன், அவள, அவர், அவர்கள் போன்றவை மட்டுமின்றித் தான், தாம் போன்றவையும் வரும். தான், தாம் போன்றவை இந்நிலையில் தற்சுட்டாகக் கருதப்படமாட்டா (குமாரசுவாமி ராஜா, 1975).

பதிலிடு சுட்டாகச் சேய்மைச் சுட்டே (remote demonstrative) பெரும்பாலும் வரும். எனினும் சில இடங்களில் அண்மைச் சுட்டும் (proximate demonstrative) வரும்.

நீ இப்படிப் பேசுகிறாயே, இது உனக்கு நல்லதா?


சுட்டுப் பெயர்களும் பல நிலைகளில் பலவேறு மொழிகளில் உள்ளன. சினூக மொழியில் மூன்று சுட்டுக்கள்: அவற்றில் கண்களுக்குத் தெரிவன, தெரியாதன என்ற பகுப்பு, மீண்டும் ஒருமை – பன்மைப் பகுப்பு.

குய்லெயுத் என்ற மொழியில் காணப்படும் படர்க்கைப் பெயர்கள் பெண்பால், பிற பால் எனப் பிரித்து, பின்னர் புலப் படுவன, புலப்படாதன எனப் பிரிந்து, பின்னர் ஒருமை, பன்மை எனப் பிரிகின்றன.

உலக மொழிகள் பலவற்றில் சுட்டுப் பெயர்களே படர்க்கை மூவிடப் பெயர்களாகப் பயன்படுகின்றன. இந்தோ-ஐரோப்பிய

மொழிகள்[1], திராவிட மொழிகள் போன்றவற்றில் இந்நிலையை நன்கு காணலாம்.

தமிழில் முன்னர்க் குறிப்பிட்டது போல இன்று சுட்டுப் பெயர்களே படர்க்கை மூவிடப் பெயர்களாகப் பயன்படுகின்றன. மேலும், இப்பெயர்களே திணை, பால், எண், இடம் காட்டும் என்பதும், இதன் அடிப்படையிலேயே தமிழ் இலக்கண அறிஞர்கள் பெயர்ச்சொற்களை ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன் பால், பலவின்பால் எனப் பிரித்துள்ளனர் என்பதும் இங்குக் குறிப்பிடத்தக்க செய்திகளாகும்.




திணை, பால் பகுப்பிற்கும் சுட்டுப் பெயர்களுக்கும் இடையே யுள்ள ஒற்றுமையை இவ்வரைபடம் நன்கு காட்டும். இதே நிலை யினைப் படர்க்கை விகுதிகளிலும் காணலாம். அவன் வந்தான், அவள் வந்தாள், அவர்கள் வந்தார்கள், அது வந்தது, அவை வந் தன போன்றவை இப்பண்பைக் காட்டும்.

---

1. In Indo-European, as in a number of other linguistic families, only the first and second persons possess true personal pronouns; the pronoun for the third person is, in reality, a demonstrative which unlike the true personal pronouns, is inflected for gender.
—Louis Gray, 1958 : 173.

இச்சுட்டுப் பெயர்களைச் சேய்மைச் சுட்டு, அண்மைச் சுட்டு என இரண்டாகப் பிரிக்கலாம். பண்டைத் தமிழில் இடைச் சுட்டும் வழக்கில் இருந்தது.

### 2.3.7.1 சேய்மைச் சுட்டுப் பெயர் (Remote demonstrative)

சேய்மையைக் குறித்துவரும் சுட்டுப் பெயர்கள் சேய்மைச் சுட்டுப் பெயர்கள் எனப்படும். அவன், அவள், அது, அவர், அவை போன்ற சுட்டுப் பெயர்கள் இதற்கு எடுத்துக் காட்டுக்களாகும். ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால் ஆகிய சுட்டுப் பெயர்கள் தமிழில் உள்ளன இச் சொற்களில் காணப்படும் அ-, சேய்மையைக் காட்டும் ஒட்டாகும். -வன், -வள் போன்றவை எண், பால் காட்டும்.

அ+வன், அ+வள், அ+வர், அ+து, அ+வை

### 2.3.7.2 அண்மைச் சுட்டுப் பெயர் (Proximate demonstrative)

அண்மைப் பொருட்களைச் சுட்டும் சுட்டுப் பெயர்களையே அண்மைச் சுட்டுப் பெயர்கள் என்பர். இவன், இவள், இவர், இது, இவை போன்ற சுட்டுப் பெயர்கள் இதற்கு எடுத்துக்காட்டுக்களாகும்.

இச்சொற்களில் இகரம் அண்மைச் சுட்டையும் பிற ஒட்டுக்கள் எண், பால் பகுப்பினையும் காட்டும்.

மூவிடப் பெயர்களில் மட்டுமின்றி வேறுபல சொற்களிலும் சுட்டினைக் காணலாம். அங்கு, இங்கு, ஆங்கு, ஈங்கு. அப்படி, இப்படி போன்ற சொற்களிலெல்லாம் இவை காணக்கிடக்கின்றன.

### 2.3.7.3 இடைச் சுட்டுப் பெயர் (Intermediate demonstrative)

இன்றையத் தமிழில் இடைச் சுட்டு காணப்படுவதில்லை. ஆனால் யாழ்ப்பாணத் தமிழிலும் பண்டை இலக்கியத் தமிழிலும் இடைச் சுட்டைக் காணமுடியும்.

உவன், உவள், உது, உவர்

போன்றவை உதாரணங்களாகும்.

## 2.3.8 உயர்வுப் பதிலிடு பெயர்கள் (Honorific singular)

சில பதிலிடு பெயர்கள் மரியாதையைக் குறிக்கும் நிலையில் உள்ளன.

கண்ணன் வந்தார்; அவர்க்குச் சோறிடுக.

இந்திரா அம்மையார் வந்தார்; அவர்களைப் பார்த்தேன்.

போன்ற வாக்கியங்களில் காணப்படும் அவர், அவர்கள் ஆகிய பதிலிடு பெயர்கள் ஒருமையைக் குறிப்பன என்பதையும் ஆனால், அதே நேரத்தில் மரியாதையைக் குறித்து நிற்கின்றன என்பதையும் நாம் அறிவோம். மரியாதையைக் குறித்து வரும் பதிலிடு பெயர் களையே உயர்வுப் பதிலிடு பெயர் என்கிறோம். இத்தகையப் பதிலிடு பெயர்களைத் தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய மூன்று இடங்களிலும் காணலாம். அரசர்கள் உயர்வு தோன்ற,

நாம் வந்தோம்

எனக் குறிப்பிடுதல் உண்டு. இதனை உயர்வுப் பதிலிடு பெயராகக் கருதலாம். தமிழில் தன்மையில் உயர்வுப் பதிலிடு பெயர் மிக மிக அருகியே காணப்படுகின்றது.

ஆனால் முன்னிலை, படர்க்கை ஆகிய இடங்களில் இத்தகைய உயர்வுப் பதிலிடு பெயர்கள் பெரு வழக்கில் உள்ளமை கண்கூடு.

பன்மைப் பதிலிடு பெயர்களே உயர்வுப் பதிலிடு பெயர்களாக வழங்குகின்றன

### 2.3.8.1 முன்னிலை உயர்வுப் பதிலிடு பெயர்கள்

நீர், நீங்கள், தாங்கள் என்ற மூன்று பதிலிடு பெயர்களும் முன்னிலை உயர்வுப் பதிலிடு பெயர்களாக உள்ளன. இவற்றுள் நீர் என்பது வயதில் மிகுந்தோரை, ஆனால் பிற நிலையில் தாழ்ந்தவர்களைக் குறிப்பதாகக் கருதலாம். ஆனால் நீங்கள் என்பது உண்மையில் மரியாதைக்குரியவர்களிடமும் சம அந்தஸ்து உடையவர்களிடமும் பேசும்போது பயன்படுவது.

*நீங்கள் வந்தீர்கள்; கண்ணன் ! நீங்கள் எப்போது வந்தீர்கள்*

சம அந்தஸ்து உடையவர்களிடம் பேசும்போது உயர்வுப் பெயர்களையும் பயன்படுத்துதல் காண்க. இதைப்போன்றே தாங்கள் என்ற சொல்லும் மரியாதையைக் குறிக்கும் சொல்லாகப் பயன்படும். நீங்கள் என்ற சொல்லைவிடவும் கூடுதல் மரியாதையைக் காட்டுவது இது. எனவே இதனை உயர்வுச் சிறப்பு பதிலிடு பெயர் எனலாம்.

*தாங்கள் வந்தீர்கள்*

நீங்கள், தாங்கள் என்பவை (நீம்+கள், தாம்+கள்) இரட்டைப் பன்மைச் (double plural) சொற்கள் இவ்விரண்டு சொற்களுமே ஒரே வினைமுற்றைக் கொண்டிருப்பது கவனித்தற்பாலது.

### 2.3.8.2 படர்க்கை உயர்வுப் பதிலிடு பெயர்கள்

அவர், அவர்கள், ஆகிய இரண்டு சொற்களும் படர்க்கை உயர்வுப் பதிலிடு பெயர்களாகப் பயன்படுகின்றன.

*கண்ணன் வந்தார்; அவரைக் கண்டேன்*

*கண்ணன் வந்தார்கள்; அவர்களைக் கண்டேன்*

உயர்வுச் சொற்களிலிருந்து பன்மையைப் பிரித்துக் காட்டுவதற்கே -கள் விகுதி இணைக்கப்பட்டது என்பார் மு. வ. (1974 : 147). ஆனால் மீண்டும் -கள் விகுதி இணைந்த சொற்களும் உயர்வு காட்டி நிற்கின்றன எனக் கருதலாம். இந்நிலையில் மீண்டும் உயர்வுப் பதிலிடு பெயர்களும் பன்மைப் பதிலிடு பெயர்களும் ஒரே மாதிரியாக உள்ளமை காணத்தக்கது. அவர் என்பதைவிட அவர்கள் என்பது கூடுதல் மரியதையைக் காட்டுவதாகக் கருதலாம்.

ஒருவரே ஒருவருக்குச் சாதாரணமாகவும், மற்றொருவருக்கு மரியாதைக்குரியவராகவும் இருக்கலாம். இந்நிலையில் ஒருவர்,

கண்ணன் வந்தான், அவனுடன் பேசினேன்

என்றும், மற்றொருவர்

கண்ணன் வந்தார், அவருடன் பேசினேன்

என்றும், இன்னொருவர்

கண்ணன் அவர்கள் வந்தார்கள் அவர்களுடன் பேசினேன்

என்றும் கூறலாம். இதைப்போன்றே,

நீ வந்தாய், நீர் வந்தீர்

நீங்கள் வந்தீர்கள், தாங்கள் வந்தீர்கள்

என்றும் கூறலாம். ஒருவர் மற்றொருவருக்குக் காட்டும் மரியாதை யின் அளவைப் பொறுத்து இச்சொற்களைப் பயன்படுத்துவர்.

## 2.3 9 வினாப் பதிலிடுபெயர்கள் (Interogative pronouns)

சுட்டுப் பெயர்களைப் போலவே வினாப் பெயர்களும் மொழி யில் மிக முக்கியமான இடத்தைப் பெறுவன. மொழிகளில் காணப்படும் வாக்கியங்கள் அனைத்தையும் வினா வாக்கியங்கள் என்றும், செய்தி வாக்கியங்கள் என்றும் இரண்டாகப் பிரிப்பர் பலர். இந்நிலையில் வினா வாக்கியங்களின் முக்கியத்துவம் நன்கு விளங்கும்.

வினாப்பெயர்களும் பலவேறு பெயர்களுக்குப் பதிலாக வரும் பெயர்களே. இதனால் இவற்றையும் வினாப் பதிலிடு பெயர்கள் எனக் கூறுகின்றனர்.

பொதுவாக மொழிகளில் இரண்டு வகை வினாக்களைக் காணலாம். ஒன்று வினா அடிகளைக் கொண்டவை. யார், என்ன, எது, எவை, எங்கு, எப்படி போன்ற வினாச் சொற்கள் வினா அடிகளைக் கொண்டவை. எனவே இவற்றை அடி வினா எனக் கருதலாம். ஆங்கில மொழியியலாளர்கள் 'WH' வினா என்பர். இவற்றுள்ளும் யார், என்ன போன்றவை வினாப் பதிலிடு பெயர்கள். எப்படி, எங்கு போன்றவை வினாப் பெயர்க ளல்ல

யார் வந்தார்கள்;
எவை வந்தன? எது வந்தது?
எங்கு வந்தான்? எப்படி வந்தான்?

போன்றவற்றில் அடி வினாக்களைக் காணுகிறோம்.

இன்னொரு வகை வினா, ஒட்டுக்களைக் கொண்டிருப்ப தோடு மட்டுமன்றிப் பொருளிலும் அடி வினாக்களிலிருந்து மாறு பட்டிருக்கும். இத்தகைய வினாக்களை ஒட்டு வினா எனக் கூறலாம். ஆங்கில மொழியியலாளர்கள் 'Do' வினா எனக் கூறுவர். தமிழ் மொழியில் இவ்வொட்டுக்கள் வினை எச்சங் களுக்குப் பின்னாலும் வேறுபல இடங்களிலும் வருதல் காணலாம்.

| | |
|---|---|
| கண்ணனா வந்தான்? | கண்ணனையா பார்த்தான்? |
| அங்கா வந்தான்? | வந்தா இருந்தான்? |
| வரவா செய்தான்? | பின்பா செய்தான்? |
| அழகாகவா செய்தான்? | எனக்கா தந்தான்? |

போன்ற வாக்கியங்களில் ஒட்டு வினா வருதல் காணத்தக்கது. வாக்கியங்களில் பலவேறு சொற்களுக்குப் பின்னால் இவை வரும். ஆனால் பெயரடைகளாக வரும் சொற்களுக்குப் பின்னர் இவை வருவதில்லை.

அந்தப் பெரிய வீடு

போன்றவற்றில்

*அந்தவா பெரிய வீடு? *அந்தப் பெரியவா வீடு?

எனக் கூறமுடியாது. வினாப் பதிலிடு பெயர்களும் பெயர்களின் பலவேறு பண்புகளைக் கொண்டிருக்கும். சுட்டுப் பெயர்களைப் போலவே இவையும் தமிழில் எண்-பால் காட்டும் தன்மையன.

வினா அடிகளாகத் தமிழில் யா-, ஆ-, எ-, ஏ- ஆகியவை காணக்கிடக்கின்றன. இவை வினாப் பதிலிடு பெயர்களில் வருவ துடன் வேறுபல வினாக்களிலும் (யாங்கு) வரும். இவை பற்றிப் பின்னர்க் காண்போம்.

### 2.3.9.1 யார்

ஆண்பால், பெண்பால், பலர்பால் ஆகிய மூன்று பாலுக்கும் பொதுவானது இது.

அவன் யார்?, அவள் யார்?, அவர்கள் யார்?

யா- என்ற வினா அடி ரகர ஒற்றுடன் இணைந்த நிலையில்தான் (யா+ர்) யார் என்ற சொல் உருவாகிறது. ரகர ஒற்று ஆண்பால், பெண்பால், பலர்பால் எல்லாவற்றிற்கும் பொதுவானது.

அஃறிணையில் எது, என்ன என்று இரண்டு பெயர்களைக் காணுகிறோம். முன்னது குறிப்பிட்டவற்றில் (selective) ஒன்றைக் குறிக்கும். மற்றது பொதுவான நிலையில் வரும்.

இவற்றில் எது வேண்டும்?
உனக்கு என்ன வேண்டும்?

ஆனால் இந்நிலை உயர்திணையில் இல்லை. யார் என்ற சொல்லே இரண்டு நிலையிலும் பயன்படுகிறது.

நீ யார்?
உனக்கு யார் வேண்டும்?
யார் வந்தார்கள்?
இவர்களில் யார் நல்லவன்?

யார் என்ற வினா சில நேரங்களில் அஃறிணைச் சொல்லாகிய அது, இது ஆகிய சொற்களுடனும் வரும். இந்நிலையில் அது, இது ஆகியவை உயர்திணையைக் காட்டும்.

அது யார்? இது யார்?

இதைப் போன்றே,

இங்கு வந்தவன் யார்?. அங்கு வந்தவன் யார்?

எனக் கூறுதல் போன்று

இங்கு வந்தது யார்?. அங்கு வந்தது யார்?

எனவும் கூறுதல் முடியும். இந்நிலையை,

அது இராமன், இது இராமன். அது கோதை

போன்ற வாக்கியங்களிலும் காணலாம்.

மேலும் யார் என்ற வினா தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய மூன்று இடங்களிலும் வரும்.

| | |
|---|---|
| நான் யார்? | நாங்கள் யார்? |
| நீ யார்? | நீங்கள் யார்? |
| அவன் யார்? | அவள் யார்? |
| அவர்கள் யார்? | இவர்கள் யார்? |

பன்மையைக் குறிக்க

யார் யார் வந்தார்கள்?

போன்று இரட்டித்த நிலையைப் பயன்படுத்துவதுடன்

யார் எல்லாம் வந்தீர்கள்?
யார் எல்லாம் போனீர்கள்?

என எல்லாம் என்ற பெயரை இணைத்தும் குறிப்பிடலாம்.

2.3.9.2 ஆர்

யார் என்பதன் மறு உருவமே இது. யகரம் கெட்ட நிலையில் ஆர் உருவமாயிற்று எனக் கருதலாம். பேச்சுத் தமிழில் பெரும்பாலும் இதுவே பயன்படுகிறது.

2.3.9.3 எவன்

ஆண்பால் காட்டும் வினாப்பெயர். தாழ்ந்தவர்களைக் குறிப்பிடும் போது அதிலும் பிடிக்காத நிலையில்தான் இப்பெயர் பயன்படுகிறது.

எவன் இதைச் செய்தான்?
எவன் இங்கு வந்தான்?
எவன் இவன்? எவன்டா இவன்?

போன்றவற்றில் இப்பண்பைக் காணலாம். இதுவும் அது, இது ஆகிய சொற்களுடன் வரும்.

இது எவன்? அது எவன்?

பன்மையில் பேச்சுத் தமிழில் எவனுகள், எவனெல்லாம் ஆகிய இரு சொற்களும் பயன்படும்.

எவனுகள் வந்தானுகள்?
எவனெல்லாம் வந்தானுகள்?

போன்ற வாக்கியங்களில் இவற்றைக் காணலாம்.

வேற்றுமை ஏற்கும்போது

எவன் (கள்) +வேற்றுமை உருபு, என்ற நிலையில் வரும்.

எவனை, எவனுக்கு, எவனோடு போன்றவை வேற்றுமை உருபு ஏற்ற சொற்கள்.

எ- என்ற வினா அடியுடன் -வன் உருபு இணைந்து (எ—வன்) என்னும் இச்சொல் உருவாகிறது.

2.3.9.4 எவள்

பெண்பால் காட்டும் வினாப் பெயர். எவன் என்ற வினாவைப் போன்றது இது.

பேச்சு வழக்கில் இதுவும் எவளுகள், எவளுகளெல்லாம் என வரும். இவை பன்மை காட்டும் நிலையில் -கள் விகுதி பன்மை காட்டுவதாக உள்ளது. எவளை, எவளால், எவளுக்கு போன்றவை வேற்றுமை உருபு ஏற்ற சொற்கள்.

2.3.9.5 எவர்

இது பலர்பால் காட்டுவதுடன் உயர்வு ஒருமையையும் காட்டுவதாகக் கொள்ளலாம். யார் என்ற சொல்லே பெரும்பான்மையாக வரும்.

எவர் வந்தார்? வந்தது எவர்?

2.3 9.6 என்ன

முன்னர்க் குறிப்பிட்டது போன்று அஃறிணையில் பயன்படும் வினாப் பெயர் இது. ஒருமைக்கும் பன்மைக்கும் பொதுவாக வரும்.

உன் பெயர் என்ன?
உனக்கு என்ன வேண்டும்?
அது என்ன?
அவை என்ன?

எ- என்ற வினாவடியையும் -ன்ன என்ற ஒட்டையும் இணைப்பதால் (எ+ன்ன) உருவானது இது. பொருட்களைப் பொதுவாகச் சுட்டி வருவது.

என்ன வேண்டும்?
எது வேண்டும்?

உன் பெயர் என்ன?
உன் பெயர் எது?

போன்றவற்றில் இதன் பண்பைக் காணலாம்.

என்ன என்பது வேற்றுமை உருபை ஏற்கும்போது, அத்துச் சாரியை பெறுதல் கண்கூடு.

என்னத்தை, என்னத்தினால்

போன்ற சொற்களில் இதனைக் காணலாம். இதனால் என்னம் என்ற சொல் என்ன என்பதன் மாற்றடியாக இருக்கலாம் எனக் கருதலாம்.

என்னத்தினால் என்பது எதனால் என்ற காரணப் பொருளை யும் காட்டும்.

{ எதனால் / என்னத்தினால் } அங்கு போனாய்?

என்ன, எது என்ற இரண்டு பெயர்களும் அஃறிணையாயினும் இவற்றிடையே வேற்றுமை உண்டு. என்ன என்பது பொதுவாகப் பரந்த நிலையில் வருவது.

அது என்ன?

எனக் கூறும்போது அது என்ன பொருளாக வேண்டுமானாலும் இருக்கலாம். உலகப் பொருள் அனைத்தையும் அடக்கலாம். ஆனால்,

அது எது?

எனக் கூறும் போது நாம் தெரிந்தவற்றுள் எது என்று காட்டுமே யன்றிப் பொது நிலையைக் காட்டாது.

உன் பெயர் என்ன?
உன் பெயர் எது?

### 2.3 9.7 எது

அஃறிணையில் வரும் வினாப் பெயர். ஒருமையைக் காட்டும் துகர ஒட்டினைக் கொண்டுள்ளது. குறிப்பிட்டவற்றுள் ஒன்றைச் சுட்டி வருவது.

உனக்கு (இவற்றுள்) எது வேண்டும்?
எது (அவற்றுள்) நல்லது?

போன்ற எடுத்துக்காட்டுக்கள் இப் பண்பினைக் காட்டும். ஆங்கிலம் போன்ற மொழிகளிலும் 'which' போன்ற வினாக்கள் இப்பண்பினைக் கொண்டிருக்கும். வேற்றுமை உருபுகள் ஏற்கும் போது சில இடங்களில் –அன் சாரியை ஏற்கும்.

எது + ஐ > எது (அன்) + ஐ > எதை, எதனை
எது + க்கு > எது (அன்) + க்கு > எதுக்கு, எதற்கு
எது + இல் + இருந்து > எதிலிருந்து

## 2.3.9.8 எவை

அஃறிணையில் வரும் பன்மை வினாப் பெயர். –வை பன்மை காட்டும்.

எவை நல்லவை? எவை வந்தன?

இது வேற்றுமை உருபுகளை ஏற்கும்போது –அற்றுச் சாரியை பெறும். எவற்றை, எவற்றால், எவற்றோடு போன்ற சொற்களில் இதனைக் காணலாம். இந்நிலையில் எவ்- என்பதை மாற்றடியாகக் கொள்ளலாம். எவ்– சாரியைக்கு முன்னர் வரும். எவை பிற இடங்களில் வரும்.

## 2.3.9.9 எத்தனை

எண் வினாப் பதிலிடு பெயராகப் பயன்படுவது இது. எண்ணைக் குறித்து வருவதால் எண்ணுப் பெயர்களின் பண்பையும் இதில் காணலாம். எண்ணப்படு பெயர்களைக் (count noun) குறித்து வரும்.

ஒன்றும் இரண்டும் எத்தனை?
எத்தனையிலிருந்து எத்தனையைக் கழிக்க வேண்டும்?

போன்ற இடங்களில் பதிலிடு பெயராகப் பயன்படுகிறது. ஆனால்

எத்தனை மரங்கள்? எத்தனை மக்கள்?

போன்றவற்றில் எண்ணுப் பெயரடையாகப் (numeral adjective) பயன்படும்.

### 2 3.9.10 எவ்வளவு

இது திரட் பெயரின் அளவைக் காட்டுவதற்காக உள்ள வினாப் பதிலிடு பெயராகும். எ-என்ற வினாவடியும் அளவு என்ற சொல்லும் இணைந்த நிலையில் உருவானது.

எவ்வளவு தண்ணீர் வேண்டும்?, மண் எவ்வளவுவேண்டும்?

போன்ற வாக்கியங்கள் இப்பண்பைக் காட்டும். மேலும் இப் பெயர் எண்ணப்படுபொருள் குறித்தும் வரும்.

எவ்வளவு மரங்கள் நிற்கின்றன?. எவ்வளவு மக்கள் வந்தனர்?

### 2.3.9.11 எத்துணை

அளவு வினாப் பதிலிடு பெயர். இது திரட் பெயர் அளவைக் குறித்து வருவது. பெரும்பாலும் பெயரடையாகவே வரும்.

எத்துணை துன்பம்? எத்துணை நட்பு?
எத்துணை கோபம்? எத்துணை மாவு?

எத்துணைக்குப் பின்னர் அளவு போன்ற பெயர்கள் வருவது குறிப் பிடத்தக்கது.

எத்துணை அளவு?
எத்துணை நேரம்?

### 2 3.10 வரையறையில்லாப் பதிலிடு பெயர்கள் (Indefinite pronouns)

ஒருவரை அல்லது ஒன்றை யார் என்றோ அல்லது எது என்றோ வரையறை செய்து குறிப்பிட முடியாத நிலையில் பயன் படுத்தப்படும் பதிலிடு பெயர்களே வரையறையில்லாப் பதிலிடு பெயர்கள் எனப்படும். ஆங்கிலத்தில் இவற்றை 'indefinite pronouns' என்பர்[1].

---

1. "Indefinite pronouns are those which are used to indicate the fact the speaker does not know or does not willing or unprepared or considers it immaterial to give the specific of what he talks about"
—Jesperson, 1955.

தமிழில் இப்பதிலிடு பெயர்கள் வினாப்பதிலிடு பெயர்களி லிருந்து உருவாகின்றன. எனவே எத்தனை வினாப் பதிலிடு பெயர்கள் உள்ளனவோ அத்தனை வரையறையில்லாப் பதிலிடு பெயர்களும் உள்ளன எனக் கருதலாம். பலவேறு வினாப் பெயர்களுடன் -ஓ, -ஆவது ஆகிய ஒட்டுக்களை இணைக்க இவை உண்டாகின்றன. இவ்வொட்டுக்களை வினாப் பெயர்களுடனும் அவற்றை அடுத்து வரும் வேற்றுமை உருபுகளுடனும் இணைக்க லாம்.

யாரோ, யாரையோ, யாருக்கோ
யாருடனோ, யாரிடமோ, யாரிடமிருந்தோ
யாராவது, யாரையாவது, யாருக்காவது
எதையோ, எதையாவது, எதனோடாவது
என்னவோ, என்னவாவது
எத்தனையோ, எத்தனையாவது

போன்றவை எடுத்துக்காட்டுகளாகும்.

-ஓ, -ஆவது ஆகிய இரண்டு ஒட்டுக்களும் வினாப் பெயர்க ளுடன் இணைந்து வெவ்வேறு பொருள் நிலையில் வரும்.

யாரோ என்பது குறிப்பிட்ட ஒருவரை. ஆனால் யார்? என்ன செய்கிறார்? போன்ற பல்வேறு உண்மைகள் தெரியாத நிலையில் பயன்படும்.

யாராவது என்பது யாராவது ஒருவரைக் (ஆனால் குறிப் பிட்ட ஒருவரையல்ல) குறிப்பிடுவது.

உங்களில் யாரையோ ஒருவரை அவன் பார்க்கவேண்டுமாம்;
ஆனால் யாரை என்று எனக்குத் தெரியாது.

உங்களில் யாராவது ஒருவரை அவன் பார்க்க வேண்டுமாம்;
யார் வேண்டுமானாலும் போகலாம்.

முதல் வாக்கியத்தில் யாரையோ என்பது குறிப்பிட்ட ஒருவரைக் குறிப்பிடுவது. ஆனால் அவர் யார் என்று சொல்லுபவனுக்குத் தெரியாது. ஆனால் இரண்டாவது வாக்கியத்தில் காணப்படும்

யாராவது என்பது குறிப்பிட்ட ஒருவரைக் குறிப்பிடாது, யாராவது ஒருவரை (அது யாராக இருந்தாலும்) குறிப்பிடுவது. முன்னது குறிப்பிட்ட ஒருவரைத்தான் குறிக்கும்; ஆனால் அவரைப் பற்றிய செய்திகள் (எனவே யார் என்று) தெரியாது. பின்னதோ பலரில் யாரை வேண்டுமாயினும் குறிக்கும், ஆனால் அவர் யார் எனத் தெரியாது.

யாரோ போன்ற பெயர்கள் ஒருவர் என நிச்சயமாகத் தெரிந்து ஆனால் குறிப்பிட்டு யார் என்று கூறமுடியாத நிலையில் பயன் படும். செயல் நடக்கிற நிலையில் அல்லது நிச்சயமான நிலையில் பயன்படுவதால்தான் இவை பொதுவாகக் கடந்த காலத்திலும் நிகழ் காலத்திலும் உள்ள வினைகளுடன் வருகின்றன.

யாரோ வந்தார்கள், யாரோ வருகிறார்கள்
யாரோ நாளை பேசுகிறார்கள்
*யாரோ பேசுவார்கள்

ஆனால் யாராவது, குறிப்பிட்டவர்களில் யாரையாவது ஒருவரை யோ அல்லது சிலரையோ குறித்து யார் என்று தெரியாத நிலை யில் வரும்.

யாராவது நின்றிருப்பார்கள்
அவர்களில் யாராவது வருவார்கள்
யாராவது அங்கு நிற்பார்கள்

யாரோ போன்ற பெயர்கள் வினாக்களைக் கொண்டு வருவதில்லை.

*யாரோ வருவார்களா?
*யாரோ வந்தார்களா?

ஆனால் யாராவது போன்றவை வினாக்களைக் கொண்டு வரும். இந்நிலையில் இவை எல்லாக் கால வினைகளுடனும் வரும்.

யாராவது வந்தார்களா? யாராவது வந்திருப்பார்களா?
யாராவது வருகிறார்களா? யாராவது வருவார்களா?

இவ்விரு வகைப் பெயர்களும் பொதுவாக எதிர்மறையில் வருவ தில்லை.

*யாரோ வரவில்லை, *யாராவது வரவில்லை

யாரோ போன்றவை பொதுவாகக் கடந்த கால வினைகளுடனும் நிகழ்கால வினைகளுடனும்தான் வரும்.

யாரோ வந்தார்கள் யாரோ வருகிறார்கள்
*யாரோ வருவார்கள்

யாராவது போன்றவை எதிர்கால வினைகளுடன் வரும்.

யாராவது வருவார்கள்
யாராவது வந்திருப்பார்கள்

இப்பெயர்கள் வேற்றுமை உருபை ஏற்கும்போது -ஓ, -ஆவது ஆகிய ஒட்டுக்கள் வேற்றுமை உருபிற்கு பின்னர் வரும். இதே நிலையினை யாரும், எல்லாரும் ஒருவரும், போன்ற பெயர்களிலும் காணலாம்.

{ யார் / எவன் / எவள் / எது / எவை / என்ன } + (வேற்றுமை உருபு) + { -ஓ / -ஆவது }

இப்பெயர்கள் பிற பெயர்களைப் போலவே பால் எண் காட்டும்.

| உயர்திணை | அஃறிணை |
|---|---|
| { யார் / எவன் / எவள் } + (வேற்றுமை உருபு) + { -ஓ / -ஆவது } | { என்ன / எது / எவை } + (வேற்றுமை உருபு) + { ஓ / ஆவது } |

## 2.3.10.1 யாரோ, யாரையோ....

யார் என்ற வினாவுடனும் அதையடுத்து வரும் வேற்றுமை உருபுகளுடனும் -ஓ ஒட்டு இணையும் போது இவை உண்டாகின்றன. ஆண், பெண், பலர் பால்களுக்குரியது இது.

யாரோ, யாரையோ, யாருக்கோ, யாருடனோ போன்றவை இதற்கு உதாரணங்கள்.

யாரோ வந்தார்கள்
நான் யாரையோ பார்த்தேன்
நான் யாருக்கோ கொடுத்தேன்
யாரோ ஒரு பையன் வந்தான்
கண்ணன் என்று யாரோ ஒரு பையன் பேசினான்
யாரோ கண்ணன் என்று ஒருவர் வந்தார்

போன்ற வாக்கியங்களில் வரையறுக்க முடியாத இப்பெயரின் பண்பை உணரலாம். கண்ணன் என்று தெரிந்த, ஆனால் அவன், யார், என்ன செய்கிறான் போன்ற பல செய்திகள் தெரியாத நிலையில்தான் யாரோ என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது. இதுபோன்றே ஒரு பையன் என்று தெரிந்தும் ஆனால் அவனைப் பற்றிய செய்திகள் தெரியாத நிலையில்தான் யாரோ பயன் படுகிறது. கண்ணன் என்று பெயர் மட்டும் தெரியுமேயன்றி வேறு செய்திகள் தெரியாத நிலையில்தான் யாரோ போன்ற சொற்கள் பயன்படுகின்றன.

மேலும் இப்பெயர்கள் பலவேறு எண் பதிலிடு பெயர்களுடனும் வரும்.

யாரோ ஒருவர் வந்தார்
யாரோ நாலைந்து பேர் வந்தார்கள்
யாரோ சிலர் வந்தனர்
யாரோ கொஞ்சம் பேர் வந்தனர்

இவை சிறப்புப் பெயர்களுடனும் (proper nouns) வரும். இந் நிலையிலும் இவை குறிப்பிட்டுக் கூற முடியாத நிலையிலேயே வரும்.

யாரோ கண்ணன் என்ற ஒருவனைப் பார்த்தேன்

யாரையோ போன்றவைகள் எண் பதிலிடு பெயர்களுடன் வரும் போது அவை வேற்றுமை ஏற்றும் ஏற்காமலும் வருதல் உண்டு. இப்பண்பு இதுபோன்ற எல்லாப் பதிலிடு பெயர்களிலும் (எவனை யோ போன்ற) காணப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| { யாரையோ / யாரோ } | { ஒருவனைப் / ஒருத்தியைப் } | பார்த்தேன் |
| { யாரோ / யாரையோ } | சிலரைப் | பார்த்தேன் |

இத்தகைய பண்புகள் யாரோ போன்ற எல்லா வரையறையில்லாப் பதிலிடு பெயர்களுக்கும் பொருந்தும்.

2.3.10.2 எவனோ. எவனையோ ...

எவனோ என்பது ஆண்பால் வரையறையில்லாப் பதிலிடு பெயர். ஆண்பாலைக் குறிக்கினும் தன்னைவிடத் தாழ்ந்த நிலையில் உள்ளவர்களையே இது குறிக்கும்.

எவனோ வந்தான்    எவனோ வருகிறான்
எவனோ வருவான்

தன்னைவிடத் தாழ்ந்தவர்களைப் பற்றிக் குறிப்பிடும்போது, அதிலும் பிடிக்காத நிலையில்தான் எவனோ, எவளோ போன்ற சொற்கள் பயன்படுகின்றன. 'யாரோ'வைப் போன்றே இதுவும் பலவேறு நிலைகளில் பயன்படுகின்றது.

எவனோ ஒருவன் வந்தான்
எவனோ ஒருவனைப் பார்த்தேன்
எவனோ ஒரு மடையன் வந்தான்

எவனோ வரும் இவ்விடங்களில் ஏதோ, எதோ என்ற சொற்களையும் பயன்படுத்தலாம்.

ஏதோ ஒருவன் வந்தான்
எதோ ஒருவனைப் பார்த்தேன்

வேற்றுமையுருபுகளை ஏற்கும்போது - ஒகாரம் அவற்றை அடுத்து நிற்கும்.

எவனையோ, எவனுக்கோ, எவனுடனோ போன்றவை எடுத்துக்காட்டுகள்.

| | |
|---|---|
| ஏதோ<br>எவனோ<br>எவனையோ | ஒருவனைப் பார்த்தேன் |

| | |
|---|---|
| எவனோ<br>எவனுக்கோ<br>ஏதோ | ஒருவனுக்குக் கொடுத்தேன் |

2.3.10.3 எவளோ, எவளையோ .......

எவளோ என்பது வரையறையில்லாப் பெண்பால் பதிலிடு பெயர். தாழ்ந்தோரை, பிடிக்காத நிலையில்தான் இப்பெயர் பயன் படும். இல்லையெனின் யாரோ என்ற பெயரே பொதுவாகப் பயன்படும்.

எவளோ வந்தாள்
எவளோ வருகிறாள்
எவளோ வருவாள்

இதுவும் எண் பதிலிடு பெயர்களுடன் வரும்.

எவளோ ஒருத்தி வந்தாள்

பொதுப் பெயர்களுடனும் (common nouns) வரும்.

எவளோ ஒரு வேலைக்காரி வந்தாள்
எவளோ ஒரு மடைச்சி வந்தாள்

எதோ, ஏதோ என்ற சொல்லையும் பயன்படுத்துதல் உண்டு.

எதோ/ஏதோ ஒரு வேலைக்காரி வந்தாள்

வேற்றுமை உருபுகளை ஏற்று வரும்.

எவளையோ, எவளுடனோ, எவளுக்கோ

போன்றவை உதாரணங்கள்.

எவளையோ நான் பார்த்தேன்

| | |
|---|---|
| எதோ<br>ஏதோ<br>எவளோ<br>எவளையோ | ஒரு வேலைக்காரியைப் பார்த்தேன் |

இவற்றைப் போலவே ஏதோ, எவையோ போன்ற பதிலிடு பெயர் களும் உள்ளன.

ஏதோ கிடக்கிறது
ஏதோ ஒன்று உள்ளது
எதையோ ஒன்றைப் பார்த்தேன்

இத்தகைய பதிலிடு பெயர்கள் குறிப்பிட்ட ஒன்றை ஆனால் வரையறை செய்ய முடியாத நிலையில் உள்ள பொருட்களை அல்லது மக்களைக் குறிப்பனவாகும்.

2 3.10.4 யாராவது, யாரையாவது...

முன்னர்க் குறிப்பிட்டதுபோன்று குறிப்பிட்ட ஒருவரைக் குறிப்பிடாது பலரில் யாராவது ஒருவரைக் (அவர் இன்னார் என்றில்லாமல் யாராகவும் இருக்கலாம்) குறிப்பிடும் பதிலிடு பெயராக யாராவது போன்ற பெயர்கள் வரும். இவை பல வேறு வினாப் பெயர்களுடன் -ஆவது என்ற ஒட்டை இணைக்கும் போது உருவானவை.

நாளை யாராவது வருவார்கள்

எனக் கூறும்போது நமக்கு வருவது யார் எனத் தெரியாது.

அவர்களில் யாராவது ஒருவர் செய்வார்.

எனக் கூறும்போது அவர்களையும் இன்னார், இன்னார் என நன்கு தெரிந்த போதிலும் அவர்களுள் யார் செய்வார் எனத் தெரியாத நிலையைக் காட்டும். இந்நிலையில் இவை யாரோ போன்றவற்றிலிருந்து வேறுபடும்.

இவைகளும் வேற்றுமை உருபுகளை ஏற்கும்போது உருபுகளுக்குப் பின்னரே -ஆவது வரும்.

யாரையாவது, யாருக்காவது
யாருடனாவது, யாரிடமிருந்தாவது

போன்றவை உதாரணங்கள்.

நாளை யாராவது வருவார்கள்
யாராவது ஒரு பையன் வருவான்
யாராவது சிலர் வருவார்கள்

போன்றவை இதன் பண்பைக் காட்டும். யாரோ போன்ற பெயர் களைப் போல

*யாராவது கண்ணன் என்ற ஒருவர் வருவார்

எனக் கூறமுடியாது.

(யாரோ போன்றவற்றைப் போலன்றி) இப்பெயர்கள் வினா வில் வருவது குறிப்பிடத்தக்கது.

யாராவது வந்தார்களா?
யாராவது வருவார்களா?
யாரையாவது பார்த்தீர்களா?

இவை எண்பதிலிடு பெயர்களுடனும் வரும்.

யாராவது ஒருவர் வருவார்.
யாராவது நான்கைந்துபேர் வருவர்
யாராவது சிலர் வருவர்
யாராவது சிலரைப் பார்ப்பேன்

2.3.10.5 எதாவது, எதையாவது ...

யாராவது போன்றதே இதுவும். ஆனால் அஃறிணை ஒருமை காட்டும்.

என்ன, எது ஆகிய வினாக்களிடையே காணப்படும் வேறுபாடு என்னவாவது, எதாவது ஆகியவற்றிடையேயும் உண்டு.

நீ என்னவாவது சாப்பிடு
நீ எதையாவது சாப்பிடு
இரண்டில் ஏதாவது ஒன்று வரும்
*இரண்டில் என்னவாவது ஒன்று வரும்.

போன்ற வாக்கியங்களில் இவற்றிடையே உள்ள வேறுபாடு விளங்கும்.

ஏதாவது வரும்
ஏதாவது ஒன்று வரும்
ஏதாவது வந்ததா?

போன்ற வாக்கியங்கள் இதன் பண்பைக் காட்டும், வினாக்களில் எல்லாக் காலங்களிலும் உடன்பாட்டில் எதிர் காலத்திலும் வரும்.

2.3.10.6 என்னவாவது, என்னத்தையாவது....

யாராவது போன்ற பதிலிடு பெயரே இதுவும். ஆனால் அஃறிணையில் வருவது. என்ன என்ற சொல்லிலிருந்து உருவாகிற நிலையில் அதன் பண்புகளை இதன் கண்ணும் காண முடியும். என்ன என்பது பொதுவான நிலையில் வரும் என்பதை யும் எது என்பது தெரிவு (selection) நிலையில் வரும் என்பதையும் முன்னர்க் கண்டோம். அதே பண்பும் என்னவாவது, என்னத்தை யாவது போன்றவற்றிலும் உண்டு.

நீ என்னவாவது செய்

என்பதற்கும்

நீ எதையாவது செய்

என்பதற்கும் வேற்றுமை உண்டு. என்னவாவது என்பது பொருள் களில் எதையும் காட்டும்.

2.3.10.7 எவனாவது, எவனையாவது....

எவனாவது என்பது ஆண்பால் காட்டும் வரையறையில்லாப் பதிலிடு பெயர். ஆண்பால் காட்டினும் தன்னில் தாழ்ந்தோரையே அதிலும் பிடிக்காத நிலையில்தான் குறிக்கப் பயன்படும்.

எவனாவது நாளை வருவான்
எவனாவது வந்திருப்பான்

போன்ற வாக்கியங்களில் காணப்படும் இச்சொல் பலரில் யாராவது ஒருவனைக் காட்டும். யாராவது போன்று பயன்படும்.

எவனாவது ஒருவன் வருவான்
எவனாவது ஒருவன் வந்திருப்பான்

என எண்பதிலிடு பெயருடன் (ஒருமை) வரும்.

{ கண்ணனாவது இராமனாவது / கண்ணனோ இராமனோ } யாராவது ஒருவன்

வருவான் எனக் கூற முடியும்.

அதாவது கண்ணனையும் தெரியும். இராமனையும் தெரியும். ஆனால் அவர்கள் யார் வருவார் எனத் தெரியாத நிலையில் இது பயன்படும். இந்நிலையில் இது யாரோ என்பதிலிருந்து வேறுபட்டது.

எவனாவது வந்தானா?
எவனாவது வருவானா?
எவனாவது வருகிறானா?

என வினாவுடன் வரும்.

இதே நிலையில் எவளாவது, எவளையாவது போன்ற சொற்களும் பயன்படும். ஆனால் எதையாவது என்பதில் குறுகிய தெரிவுதான் உண்டு.

அவற்றுள் எதையாவது செய்

எனக் கூறலாம்.

அவற்றுள் என்னவாவது செய்

எனக் கூறுதல் முடியாது. இதே நிலையை

அது என்ன? அது எது?

போன்றவற்றிலும் காணலாம். பிற பதிலீடு பெயர்களைப் போல இதுவும்

என்னவாவது நடக்கும்
என்னவாவது நடந்ததா?
*என்னவாவது நடந்தது
*என்னவாவது நடக்காது

போன்ற வாக்கியங்களில் வரும்.

இதுவும் பிற பெயர்களைப் போலவே வேற்றுமை உருபு ஏற்று வரும்.

என்ன + உருபு + ஆவது

என்ற நிலையில் வரும்.

என்னத்தையாவது
என்னத்திற்காவது, என்னத்திலிருந்தாவது

போன்றவை உருபேற்றவை.

நீ { என்னவாவது / என்னத்தையாவது } செய்

என்பதில் -ஐ உருபு மறைந்து நிற்றலும் உண்டு

பேச்சுத் தமிழில் சில நேரங்களில் எதாவது, என்னவாவது ஆகிய இரண்டும் ஒன்று வந்த இடத்தில் இன்னொன்று பொருள் மாறாது வருதலும் உண்டு.

என்ன என்பதின் பின்னால் பிற பெயர்கள் இட்டுக் கூறுதலும் உண்டு.

என்ன புத்தகமாவது
என்ன புத்தகத்தையாவது
என்ன காரியத்திற்காவது

போன்றவை உதாரணங்களாகும்.

2.3.10 8 எவையாவது, எவற்றையாவது ...

அஃறிணைப் பன்மையைக் காட்டுவது. இலக்கியத் தமிழிலேயே அருகி வருவது

எவையாவது வரும்

போன்ற வாக்கியங்களில் காணலாம். வேற்றுமை ஏற்கும்போது -அற்றுச் சாரியை பெறும்.

எவற்றையாவது
எவற்றிற்காவது

போன்றவை உதாரணங்களாகும்.

## 2.3.11 உள்ளடக்குப் பதிலிடு பெயர்கள் (Universal pronouns)

எல்லோரையும் அல்லது எல்லாவற்றையும் உள்ளடக்கிக் கூறும் பதிலிடு பெயர்களையே உள்ளடக்குப் பதிலிடு பெயர்கள் எனக் கூறுகிறோம். அனைத்தையும் அல்லது அனைவரையும் குறிக்கும் நிலையில் இதனை *'Universal pronouns'* என ஆங்கிலத்தில் அழைப்பர். எல்லோரும், எல்லாம் போன்றவை ஒரு சேர நோக்க யாரும், எவரும் போன்றவை தனித்தனியே குறிப்பிட்டு நிற்கும்.

தமிழில் இப்பெயர்கள் வினாப் பெயர்களுடன் -உம் என்ற ஒட்டை இணைக்கின்ற நிலையில் உருவாகின்றன. எனவே எத்தனை வினாப் பெயர்கள் உள்ளனவோ அத்தனை உள்ளடக்குப் பதிலிடு பெயர்களும் உள்ளன.

வினாப் பெயர் + உம்
யார் + உம்
எவன் + உம்
எவள் + உம்

பொதுவாக இப்பெயர்கள் எதிர்மறையில்தான் அதிகமாக வரும்.

யாரும் வரவில்லை, யாரும் வரமாட்டார்கள்
எதையும் செய்யவில்லை, என்னவும் செய்யவில்லை
ஒருவரும் வரவில்லை, ஒருவரும் வரமாட்டார்கள்

போன்று ஒருவரும் என்ற சொல்லை இட்டுக் கூறவும் முடியும். காரியம் நடைபெறும் என்ற பொருளில்

யாரும் எங்கள் வீட்டுக்கு வருவார்கள்

போன்ற வாக்கியங்களில் உடன்பாட்டில் வரும். இந்நிலையில் யாரும் என்பதற்குப் பதிலாக எல்லோரும் என்ற பெயரையிட்டு எல்லோரும் எங்கள் வீட்டிற்கு வருவார்கள் என்று கூறலாம்.

### 2.3.11.1 யாரும், யாரையும்—

உயர்திணையில் ஆண், பெண் என்ற இருபாலுக்கும் பொதுவானது இப்பெயர். எழுவாயாக வரும் இப்பெயர் முன்னர்க் குறிப்

விட்டது போன்று எதிர்மறையில்தான் பெரும்பாலும் வரும். எதிர் மறையில் எல்லாக் காலத்திலும் வரும் இது.

யாரும் வரவில்லை
யாரும் வருகிறது இல்லை / கிடையாது
யாரும் வந்தது இல்லை / கிடையாது
யாரும் வரமாட்டார்கள்
யாரும் வருவதில்லை, யாரும் வருவது கிடையாது

போன்ற வாக்கியங்கள் இப்பண்பைக் காட்டும். பொது நிலையில் உடன்பாட்டில் இது எதிர்காலத்தில் மட்டுமே வரும்.

யாரும் வருவார்கள்

எதிர்மறையில் யாரும் என்பதற்குப் பதிலாக ஒருத்தரும், ஒருவரும் என்ற சொல்லை இட்டுக் கூறினும் பொருள் மாறுவதில்லை.

ஒருத்தரும் வரவில்லை, ஒருவரும் வரவில்லை.
ஒருத்தரும் வருகிறது இல்லை / கிடையாது
ஒருத்தரும் வந்தது இல்லை / கிடையாது
ஒருத்தரும் வரமாட்டார்கள்
ஒருத்தரும் வருவது இல்லை.

யாரும் போன்ற பெயர்கள் பலவேறு பொதுப் பெயர்களுடன் இணைந்து நின்று வருதலும் உண்டு.

பையன்கள் யாரும் வரவில்லை
பெண்கள் யாரும் வரவில்லை
பெண்கள் யாரும் வருவார்கள்

யாரோ போன்ற பெயர்களைப் போன்று எண்பதிவிடு பெயர்களுடன் வருவதில்லை.

யாரோ ஒருவர் வந்தார்கள்
*யாரும் ஒருவர் வரவில்லை

யாரும் போன்ற பெயர்களுக்குப் பதிலாகச் சில இடங்களில் யார் ஆனாலும், யார் என்றாலும் ஆகிய சொற்கள் இட்டுக் கூறலாம்.

யாரும் வருவார்கள்
யார் ஆனாலும் / என்றாலும் வருவார்கள்

யாரும் வரமாட்டார்கள்
யார் ஆனாலும் / என்றாலும் வரமாட்டார்கள்
யாரும் வரவில்லை
*யார் ஆனாலும் வரவில்லை

இப்பெயர் வேற்றுமை உருபுகளை ஏற்கும்போது யாரோ, யாராவது போன்ற பெயர்களைப் போலவே இயங்குகின்றன. வேற்றுமை உருபுகள் நேரடியாக யார் என்ற சொல்லையடுத்து நிற்க, அதன் பின்னர் -உம் வருதல் கவனிக்கத் தக்கது.

யாரையும், யாருக்கும், யாருடனும், யாரிடமிருந்தும், யாராலும் போன்ற எடுத்துக்காட்டுக்களால் அறியலாம். இவ்வேற்றுமை ஏற்ற பெயர்கள் யாரும் என்ற பெயரைப் போலவே இயங்கி நிற்கும்.

யாரையும் காணவில்லை
யாருக்கும் கொடுக்கவில்லை
யாருடனும் போகவில்லை
யாரிடமிருந்தும் வாங்கவில்லை
யாராலும் செய்ய முடியவில்லை
யாரையும் பார்ப்பேன்

போன்ற வாக்கியங்கள் இப்பண்பைக் காட்டும். இவற்றிற்குப் பதிலாக எதிர்மறையில் ஒருத்தர் என்ற சொல்லுடன் வேற்றுமை உருபுகளை இட்டுக் கூறுதல் இயலும்.

ஒருத்தரையும் காணவில்லை
ஒருத்தராலும் செய்ய முடியவில்லை.

2.3.11.2 எவனும், எவனையும்........

ஆண்பால் பதிலிடு பெயர் இது. யாரும் போன்று இயங்குவது. தரத்தில் தாழ்ந்த ஆண்களைக் குறித்தே இப்பெயர் வரும்.

எவனும் வரவில்லை
எவனும் வருகிறது இல்லை / கிடையாது
எவனும் வந்தது இல்லை / கிடையாது
எவனும் வரமாட்டான்

எவனும் வருவதில்லை / கிடையாது
எவனும் எங்கள் வீட்டுக்கு வருவான்

எதிர்மறையில் ஒருத்தனும் என்ற சொல்லையிட்டுக் கூறுதல் முடியும்.

ஒருத்தனும் வரவில்லை
ஒருத்தனும் வருகிறது இல்லை
ஒருத்தனும் வரமாட்டான்

பொதுப் பெயர்களுடன் வரும்போது,

வேலைக்காரன் எவனும் வரவில்லை
குடிகாரன் எவனும் பேச வில்லை

என வரும். வேற்றுமை உருபுகளை ஏற்கும் போது, எவனையும் எவனுடனும், எவனுக்கும், எவனாலும், எவனிடமிருந்தும் போன்று வரும்.

நான் எவனையும் பார்ப்பேன்
நான் எவனையும் பார்க்க வில்லை
நான் எவனுக்கும் கொடுக்க வில்லை

போன்று வருதல் குறிப்பிடத்தக்கது.

2.3 11.3 எவளும், எவளையும்.......

பெண்பால் குறிக்கும் பெயர் இது. எவள் + உம் என்ற நிலையில் உருவானது.

எவளும் வருவாள்
எவளும் வரவில்லை
எவளும் வரமாட்டாள்
எவளும் வருகிறது இல்லை

போன்று வரும். எதிர்மறையில்

ஒருத்தியும் வரவில்லை
ஒருத்தியும் வரமாட்டாள்
ஒருத்தியும் வருகிறது இல்லை

என ஒருத்தி என்ற சொல்லையிட்டுக் கூற முடியும். யாரும், எவனும் போலவே

வேலைக்காரி எவளும் வரவில்லை
சூனியக்காரி எவளும் வரவில்லை

போன்று பெண்பால் பொதுப்பெயர்களை எடுத்து வரும்.

2.3.11.4 எதுவும், எதையும்...

இது அஃறிணை ஒருமை உள்ளடக்குப் பதிலிடு பெயராகும். எது + உம் என்ற நிலையில் உருவாகிற பெயரிது. இது எழுவாயாக வந்து பயன்படும். பிற உள்ளடக்குப் பதிலிடு பெயர்களைப் போலவே இதுவும் பெரும்பாலும் எதிர்மறையில் வரும்.

எதுவும் நடக்கவில்லை
எதுவும் நடக்கிறதில்லை / கிடையாது
எதுவும் நடந்ததில்லை / கிடையாது
எதுவும் நடப்பதில்லை

போன்ற வாக்கியங்கள் இப்பண்பினைக் காட்டும். மேலும் உடன் பாட்டில் எதிர்காலத்தில் வருவதையும் காணலாம்.

எதுவும் நடக்கும்

எதிர்மறையில் எதுவும் என்பதற்குப் பதிலாக ஒன்றும் என்ற சொல்லையிட்டுக் கூறினும் பொருள் மாறுவதில்லை.

ஒன்றும் நடக்கவில்லை
ஒன்றும் நடக்கிறதில்லை / கிடையாது
ஒன்றும் நடந்ததில்லை / கிடையாது
ஒன்றும் நடப்பதில்லை

யாரும் போன்ற பிற பதிலிடு பெயர்களைப் போலவே இதுவும் பலவேறு பொதுப்பெயர்களுடன் இணைந்து நின்று வருதலு முண்டு.

காரியங்கள் எதுவும் நடக்கவில்லை
மேசைகள் எதுவும் அங்கில்லை.
பெட்டிகள் எதுவும் வரவில்லை

இந்நிலையில் இது ஒருமைப் பெயர்களுடனும் வருதலுண்டு.

காரியம் எதுவும் நடக்கவில்லை
பெட்டி எதுவும் வரவில்லை

இப்பெயர்கள் எண்பதிலிடு பெயர்களுடன் வரவில்லை.

*எதுவும் ஒன்று வரவில்லை.

இப்பெயர் வேற்றுமை உருபுகளை ஏற்கும்போது வேற்றுமை உருபுகள் எது என்ற சொல்லை அடுத்து நிற்க அதன் பின்னரே -உம் ஒட்டு நிற்கும்.

எதையும்
எதுக்கும்
எதனுடனும்
எதனிடமிருந்தும்
எதாலும்

போன்றவை இதற்கு உதாரணங்களாகும். இவ்வேற்றுமை ஏற்ற இப்பெயர்களும் பிற பதிலிடுபெயர்களைப் போலவே வரும்.

எதையும் காணவில்லை
எதற்கும் கொடுக்கவில்லை
எதனுடனும் போகவில்லை
எதனிடமிருந்தும் பிரிக்கவில்லை
எதாலும் நடக்கமுடியவில்லை
எதையும் பார்ப்பேன்

போன்ற எடுத்துக்காட்டுக்கள் இப்பெயர் வேற்றுமை ஏற்கும் போது அடையும் பண்பைக்காட்டும். வேற்றுமை ஏற்ற பெயர் களும் 'எதுவும்' போன்ற பெயரைப்போலவே வரும். 'எதையும்' என்பதற்குப் பதிலாக 'ஒன்றையும்' போன்றவற்றை இட்டுக் கூற முடியும்.

ஒன்றையும் காணவில்லை
ஒன்றுக்கும் கொடுக்கவில்லை
ஒன்றுடனும் போகவில்லை

போன்றவை எடுத்துக்காட்டுக்களாகும். மேலும் இவையும் பொதுப்பெயர்களுடன் வரும்.

மேஜைகள் எதையும் காணவில்லை
மேஜை எதற்கும் சாயமடிக்கவில்லை
மேஜை ஒன்றையும் காணவில்லை.

2.3.11.5 என்னவும், என்னத்தையும் ...

இதுவும் அஃறிணையில் வரும் உள்ளடக்குப் பதிலிடு பெயராகும். 'என்ன' என்ற வினாப்பதிலிடு பெயருடன் 'உம்' ஒட்டினை இணைக்கும்போது உருவாவது இது. என்ன என்ற பெயருக்கும் எது என்ற பெயருக்கும் இடையே உள்ள வேற்றுமை அனைத்தையும் என்னவும், எதுவும் என்பவற்றிடையே காணலாம். எழுவாயாக வரும்போது 'என்னவும்' (என்னமும்) எனவரும். இன்றைய தமிழில் அதிகமாக இது பயன்படுவதில்லை. 'என்னவோ' 'என்னவாவது' என்பவற்றைப்போல இது வருவதில்லை.

என்னவும் நடக்கும்
என்னவும் செய்வான்
என்னவும் பேசுவான்

போன்ற ஒருசில எடுத்துக்காட்டுக்களைத் தவிர அதிகமாக இது பயன்படுவதில்லை. பிற பதிலிடு பெயர்களைப்போலவே இதுவும் பொதுப் பெயர்களுடனும் வரும்.

சாமான்கள் என்னவும் வாங்கவில்லை

போன்ற ஒருசில உதாரணங்களை மட்டுமே காணமுடிகிறது.

2.3.11.6 எவையும், எவற்றையும்....

அஃறிணைப் பன்மையைக் குறித்துவரும் பெயரிது. பொதுவாக ஓரளவே பயன்படுகிறது.

எவையும் வரவில்லை
எவையும் வருவதில்லை
எவையும் வருகிறதில்லை

போன்ற நிலையில் பயன்படும். பொதுவாக இப்பெயர்கள் ஒன்றைக் குறிப்பிட்டு வரும் நிலையில்தான் பன்மைப்பெயர்கள் அதிகமாகப் பயன்படவில்லையோ என எண்ணலாம்.

காரியங்கள் எவையும் நடப்பதில்லை
செய்திகள் எவையும் தெரியவில்லை

உருபை ஏற்கும்போது வற்றுச்சாரியை பெற்றுவரும் இது.

எவற்றையும் பார்ப்பான்
அவன் எவற்றையும் பார்க்கவில்லை
அவன் எவற்றுடனும் போகவில்லை
எவற்றாலும் பார்க்க முடியவில்லை

போன்ற வாக்கியங்கள் இதன் பண்பைக் காட்டும்.

### 2.3.12 பகிர்வுப் பதிலிடு பெயர்கள் (Distributive pronouns)

தனித்தனியாக ஒருவரை அல்லது ஒன்றனைக் குறித்து வரும் பதிலிடு பெயரே பகிர்வுப் பதிலிடு பெயர் எனப்படும். ஒரு கூட்டத்தில் ஒவ்வொருவரையும் அல்லது ஒவ்வொன்றையும் தனித் தனியாகக் கருதும்போதுதான் இப்பெயர்களைப் பயன் படுத்துகிறோம். இதனை ஆங்கிலத்தில் 'distributive pronouns' என்பர்.

தமிழில் இப்பெயர்கள் குறிப்பிட்ட ஒரு அமைப்பைக் கொண் டிருக்கக் காண்கிறோம். ஒவ்வொருவரும், ஒவ்வொருத்தனும், ஒவ்வொருத்தியும், ஒவ்வொன்றும் ஆகியவை இப்பெயர்களாகப் பயன்படுகின்றன.

{ ஒவ்வொருவர், ஒவ்வொருத்தன், ஒவ்வொருத்தி, ஒவ்வொன்று } + உம்

என்ற அமைப்பில் உள்ளது. இவை ஆண், பெண், ஒன்றன் பால்களைக் காட்டும் தன்மையன. இவை வேற்றுமை உருபை ஏற்கும்போது -உம்மிற்கு முன்னால் வருதல் காணலாம்.

{ ஒவ்வொருவர், ஒவ்வொருத்தன், ஒவ்வொருத்தி, ஒவ்வொன்று } + வேற்றுமை உருபு + உம்

தனித்தனியாகக் குறிப்பிடும்போது இப்பெயர்கள் பயன்பட, முழுமையாகக் கூறும்போது எல்லோரும் போன்ற சொற்களைப் பயன்படுத்துகிறோம்.

அங்கு வந்த ஒவ்வொருவரும் செய்தார்கள்
அங்கு வந்த எல்லோரும் செய்தார்கள்

செய்தார்கள் எனப் பன்மையில் வருவது காண்க. இது எதிர் மறையில் அதிகமாக வருவதில்லை.

2.3.12.1 ஒவ்வொருவரும்

ஒவ்வொருவர் + உம்

பகிர்வுப் பதிலிடு பெயர்கள் திணை, பால் காட்டும். ஒவ்வொருவரும் என்பது உயர்திணையில் ஆண்பாலுக்கும் பெண் பாலுக்கும் பொதுவாக வருவது.

2.3.12.2 ஒவ்வொருவனும்

ஒவ்வொருவன் + உம்

இதுவும் பகிர்வுப் பதிலிடு பெயராகப் பயன்படுகிறது. ஆண்பால் காட்டும் இப்பெயர் தம்மில் தாழ்ந்தோர்களைக் குறிக்கும் நிலையில் வரும்.

ஒவ்வொருவனும் செய்தான்(கள்)
ஒவ்வொருவனும் நன்கு செய்ய வேண்டும்

எல்லோரையும் ஒன்று சேரக் குறிக்கும் நிலையில் இதற்குப் பதிலாக

எல்லாவனும் நன்கு செய்ய வேண்டும்

எனக் குறிப்பிடுதல் உண்டு.

இப்பெயர் பொது பெயர்களுடன் இணைந்தும் வரும்.

பையன்கள் ஒவ்வொருவனும் நன்கு செய்ய வேண்டும்
பையன்கள் ஒவ்வொருவனும் செய்தானுகள்

மேலே காட்டியவாறு இது இவ்வாறு வரும்போது பன்மை விகுதியை எடுத்து வருதல் கவனிக்கத் தக்கது.

வேற்றுமை ஏற்றுவரும்போது -உம் வேற்றுமை உருபிற்குப் பின்னால் வரும்.

ஒவ்வொருவன் + வேற்றுமை உருபு + -உம்
ஒவ்வொருவனேயும்
ஒவ்வொருவனுக்கும்
ஒவ்வொருவனுடனும்

போன்றவை இதற்கு உதாரணங்களாகும்.

நான் ஒவ்வொருவனையும் பார்த்தேன்

வேற்றுமை ஏற்கும் போதும் இவை பொதுப் பெயர்களுடன் வரும்.

பையன்கள் ஒவ்வொருவனையும் பார்த்தேன்
பையன்கள் ஒவ்வொருவனுக்கும் கொடுத்தேன்

இங்கும் எல்லாவனையும் போன்றவற்றை இட்டுக் கூற முடியும்.

பையன்கள் எல்லாவனையும் பார்த்தேன்
பையன்கள் எல்லாவனுக்கும் கொடுத்தேன்

## 2.3.12.3 ஒவ்வொருத்தியும்

ஒவ்வொருத்தி + உம்

பகிர்வுப் பதிலிடு பெயர்களில் பெண்பால் காட்டும் பெயர் இது. ஆண்பால் பெயரைப் போலவே இதுவும் தம்மில் தாழ்ந்தவர்களைக் குறிக்க, அதுவும் பிடிக்காத நிலையில் பயன்படும்.

ஒவ்வொருத்தியும் பேசவேண்டும்

எல்லோரையும் இணைத்துக் கூறும்போது எல்லாவளும் என்ற சொல்லைப் பயன்படுத்தலாம். எல்லாவளும் என்ற சொல் அதிகமாகப் பழக்கத்தில் இல்லை.

எல்லாவளும் பேசவேண்டும்

இதுவும் பலவேறு பெண்பால் குறிக்கும் பொதுப்பெயர்களுடன் இணைந்து வரும்.

{ வேலைக்காரிகள் / தூரப்புக்காரிகள் } ஒவ்வொருத்தியும் { வந்தாளுகள் / வந்தார்கள் }

-ஆக ஒட்டினை எடுத்து பகிர்வுப் பொருளைக் காட்டும்.

அவர்கள் ஒவ்வொருத்தியாக வந்தார்கள்
அவர்களை ஒவ்வொருத்தியாகப் பார்த்தேன்

வேற்றுமை உருபை ஏற்கும்போது பிற பகிர்வுப் பெயர்களைப் போலவே இதுவும் வரும்.

ஒவ்வொருத்தி + வேற்றுமை + உம்
ஒவ்வொருத்தியையும், ஒவ்வொருத்திக்கும்
ஒவ்வொருத்தியிடமும்

போன்றவை உதாரணங்கள்.

நான் ஒவ்வொருத்தியையும் பார்த்தேன்
நான் ஒவ்வொருத்திக்கும் கொடுத்தேன்

பொதுப்பெயர்களுடனும் அவர்கள் போன்ற பதிலிடு பெயர்களுடனும் வரும்.

நான் வேலைக்காரிகள் ஒவ்வொருத்தியையும் பார்த்தேன்
நான் வேலைக்காரிகள் ஒவ்வொருத்திக்கும் கொடுத்தேன்

2.3.12.4 ஒவ்வொன்றும்

ஒவ்வொன்று + உம்

அஃறிணையைக் குறிக்கும் பகிர்வுப் பதிலிடு பெயர் இது.

ஒவ்வொன்றும் நன்றாக { இருந்தது / இருந்தன }

அவை ஒவ்வொன்றும் நன்றாக இருந்தன / இருந்தது
புத்தகம் ஒவ்வொன்றும் நன்றாக இருந்தன / இருந்தது

வேற்றுமை உருபு ஏற்கும் போது

ஒவ்வொன்று+வேற்றுமை உருபு + -உம்

என்ற நிலையில் உருவாகிறது.

ஒவ்வொன்றையும்
ஒவ்வொன்றிற்கும்
ஒவ்வொன்றுடனும்

போன்று வரும்.

பொதுப் பெயர்களுடனும் பதிலிடு பெயர்களுடனும் இவை வரும்.

{ அவை / புத்தகம் / கட்டில்கள் } ஒவ்வொன்றையும் நன்றாகப் பார்த்தேன்

-ஆக ஏற்று வினையடையாக வரும்.

அவை ஒவ்வொன்றாக வந்தன
புத்தகங்களை ஒவ்வொன்றாகப் பார்த்தேன்

### 2.3.13 தற்சுட்டுப் பதிலிடு பெயர்கள் (Reflexive pronouns)

ஒரு வாக்கியத்தில் ஒரு காரியத்தைச் செய்பவனும் செய்யப் படுபவனும் ஒருவராக இருக்கும் போது செய்யப்படுபவனைக் குறிப்பதற்குச் சில மொழிகளில் குறிப்பிட்ட பதிலிடு பெயர்கள் பயன்படும்போது அப்பதிலிடு பெயர்களைத் தற்சுட்டுப் பதிலிடு பெயர்கள் என்னலாம்.[1] பொதுவாகச் செய்பவன் எழுவாயாக வரும் போதுதான் தற்சுட்டுப் பெயர்கள் செயப்படுபொருளுக்குப் பதிலாகப் பயன்படுகின்றன. தற்சுட்டுப் பெயர்கள் இரண்டாவதாக வரும்.

கண்ணன் தன்னை அடித்துக் கொண்டான்
இராமன் தன்னைப் பார்த்துக் கொண்டான்

1. As the name implies these pronouns "reflect" another nominal element of the sentence, usually the subject, with which it is in coreferential relation.
—Quirk et al 1976 211.

When the subject and object are identical, we use for the latter a so called reflexive pronoun..............
—Jesperson 1933: 111

போன்ற வாக்கியங்களில் வரும் 'தன்' தற்சுட்டுப் பதிலிடு பெயராகும்.

தமிழில் தான், தாம் ஆகிய சொற்கள் தற்சுட்டுப் பதிலிடு பெயர்களாக வருகின்றன. வேறு பல மொழிகளைப் போன்று தமிழ் மொழியிலும் எழுவாயாக வரும் பெயர்ச் சொற்களையே இப்பதிலிடு பெயர்கள் பொதுவாகக் குறிப்பிட்டு நிற்றல் காணலாம்

தான் (தன்), தாம் (தம்) ஆகியவற்றில் காணப்படும் னகர, மகர வொற்றுக்கள் முறையே ஒருமை, பன்மை காட்டும்.

கண்ணன் தன்னையே அடித்துக் கொண்டான்

என்ற வாக்கியத்தில் தன் என்பது கண்ணனைக் குறிக்கும்.

அவர்கள் தங்களைப் பாதுகாத்துக் கொண்டார்கள்

என்பதில் தங்கள் என்பது அவர்களைக் குறிக்கும். மேலும்

கண்ணனுக்குத் தன்னைப் பற்றித் தெரியாது
கண்ணனால் தன்னை நம்ப முடியவில்லை

போன்ற வாக்கியங்களில் வரும் பதிலிடு பெயர்கள் கண்ணனையே குறிக்கும். இதனால்தான் கண்ணனால், கண்ணனுக்குப் போன்றவற்றை எழுவாயாகக் கருதவேண்டும் என்ற சிக்கல் எழுகிறது. தமிழ் மொழியில் படர்க்கையிலேயே இது வரும். உலக மொழிகள் சிலவற்றில் இப்பண்பைக் காணலாம். லத்தீன், ரொமான்ஸ் மொழிகளில் இப்பண்பு உள்ளது. இன்னும் சில மொழிகளிலோ ஒருமையில் மட்டுமே தற்சுட்டுப் பதிலிடு பெயர்கள் வரும். பன்மையில் வருவதில்லை.

அவன் தன்னை அடித்துக் கொண்டான்

என்பது இலக்கண வாக்கியம், ஆனால்,

நான் தன்னை அடித்துக் கொண்டேன்
நீ தன்னை அடித்துக் கொண்டாய்

என்பன இலக்கணப் பிழை கொண்டவை. காரணம், தன் தன்மையிலும் முன்னிலையிலும் வராது.

அவன் தன்னை அடித்துக் கொண்டான்.

போன்ற வாக்கியங்களில் காணப்படும் கொள் என்னும் துணை வினை புதை நிலையில் வருவதாகும்.

தன்மை முன்னிலை மூவிடப் பெயர்களைப் போலவே இதன் கண்ணும் ஒருமை, பன்மை உயர்வுச் சிறப்புப் பெயர்களைக் காண முடியும்.

தான் என்பது பண்டைக் காலத்தில் படர்க்கை மூவிடப் பெயராக இருந்தது என்பது இங்குக் கவனித்தற்பாலது. இந்நிலையில் இது படர்க்கையில் மட்டும்தான் வருவது பொருத்தமாகும். ஆங்கில மொழியிலும் myself, yourself போன்றவற்றில் my, you எனத் தன்மை, முன்னிலைப் பெயர்கள் வருவது உணரத்தக்கது. எனவே

நான் என்னையே அடித்துக் கொண்டேன்
நீ உன்னையே அடித்துக் கொண்டாய்

என்பனவற்றையும் தற்சுட்டாகக் கொள்ளலாம். இந்நிலையில் தற்சுட்டுப் பதிலிடு பெயர்கள் என்ற பிரிவு வேண்டுமா என்பதும் சிந்திக்கத் தக்கது.

### 2.3 14 பரஸ்பரப் பதிலிடு பெயர் (Reciprocal pronoun)

இருவர் அல்லது மேற்பட்டவர்கள் தம்முள் பரஸ்பரம் செய்து கொண்ட செயல்களைக் குறிப்பிடப் பயன்படுத்தப்படும் பெயர்களையே பரஸ்பரப் பதிலிடு பெயர் என்கிறோம். இது எப்போதும் பன்மையிலேயே வரும்.

அவர்கள் தங்களுக்குள் அடித்துக் கொண்டார்கள்

போன்ற வாக்கியங்களில் தங்களுக்குள் என்பது பரஸ்பரப் பெயராகும். பரஸ்பரப் பதிலிடு பெயராக ஒருவரை ஒருவர் போன்ற பெயர்கள் வரும்.

அவர்கள் ஒருவரை ஒருவர் அடித்துக் கொண்டார்கள்
அவர்கள் ஒருவரோடு ஒருவர் பேசிக் கொண்டார்கள்
அவர்கள் ஒருவருக்கொருவர் கொடுத்துக் கொண்டார்கள்

அவர்கள் தங்களுக்குள் ஒருவரை ஒருவர் அடித்துக் கொண்டார்கள்

அவர்கள் தங்களுக்குள் ஒருவரோடு ஒருவர் பேசிக்கொண்டார்கள்

எனத் தங்களுக்குள் என்ற சொல்லையும் இவற்றுடன் இட்டுக் கூற முடியும். இதைப்போன்றே

தாங்கள் எங்களுக்குள் ஒருவரை ஒருவர் அடித்துக் கொண்டோம்

நீங்கள் உங்களுக்குள் ஒருவரை ஒருவர் அடித்துக் கொண்டீர்கள்

என எங்களுக்குள், உங்களுக்குள் ஆகிய சொற்களையும் நாம் இணைக்க முடியும்.

ஒருவர் – ஒருவர் என்பதே பரஸ்பர நிலையைத் தெளிவாக காட்ட வல்லது.

{ தாங்கள் / நீங்கள் / அவர்கள் / கண்ணனும் இராமனும் } ஒருவரை ஒருவர்

{ அடித்துக் கொண்டோம் / அடித்துக் கொண்டீர்கள் / அடித்துக் கொண்டார்கள் / அடித்துக் கொள்வார்கள் }

போன்ற வாக்கியங்களில் இப்பண்பைக் காணலாம். கொள் என்பது புறநிலையில் வருவது என்பது உணரத்தக்கது.

ஒருவர் + வேற்றுமை உருபு + ஒருவர்

போன்று

ஒருவன் — ஒருவன்
ஒருத்தி — ஒருத்தி
ஒன்று — ஒன்று

ஆகியவையும் பரஸ்பரம் காட்டி நிற்கும்.

கண்ணனும் இராமனும் ஒருவனை ஒருவன் அடித்துக் கொண்டான்கள்

மெல்லியும் நல்லியும் ஒருத்தியை ஒருத்தி பிடித்துக் கொண்டான்கள்

போன்ற வாக்கியங்கள் எடுத்துக்காட்டுக்களாகும்.

இதுவும் ஒருவகை தற்சுட்டு நிலைதான். பலரை ஒன்றாகக் கருதுகிற நிலைதான் இவற்றிடையே காணும் வேறுபாடு. இதனால்தான் கொள் என்ற துணை வினை இரண்டு இடங்களிலும் வருகின்றது எனக் கருதலாம்.

இரண்டு பேர் மட்டும் உள்ள நிலையில்

ஒருவன்—ஒருவன், ஒருத்தி—ஒருத்தி, ஒன்று—ஒன்று

போன்ற பெயர்களையும் பயன்படுத்தலாம்.

### 2.3.15 முழுமைப் பதிலீடு பெயர்கள் (Pronouns of Totality)

முழுமையைக் குறித்து வரும் பதிலீடு பெயரே முழுமைப் பதிலீடு பெயர் எனப்படும். எல்லாரும், எல்லாம், அனைவரும், அனைத்தும் ஆகிய சொற்கள் தமிழில் முழுமைப் பதிலீடு பெயர் களாகப் பயன்படுகின்றன. இப்பெயர்களில் திணைப் பகுப்பைக் காணலாம். எல்லாரும், அனைவரும் ஆகிய பெயர்கள் உயர் திணையிலும் எல்லாம், அனைத்தும் ஆகிய பெயர்கள் அஃறிணை யிலும் வரும். இப்பெயர்கள் எப்பொழுதும் -உம் ஒட்டினைப் பெற்றே நிற்கும். வேற்றுமை உருபுகளை ஏற்கும்போது அவற்றிற்குப் பின்னரே -உம் வரும்.

எல்லார் + (வேற்றுமை உருபு) + உம்
எல்லா + (வேற்றுமை உருபு) + உம்
அனைவர் + (வேற்றுமை உருபு) + உம்
அனைத்து + (வேற்றுமை உருபு) + உம்

எல்லார் என்பதில் உள்ள ரகரஒற்று உயர்திணைப்பன்மைகாட்டும். -உம் முழுமைப் பண்பைக் காட்டும். இன்றைய தமிழில் எல்லாம் என்பதும் உயர்திணைப் பெயர்களுடன் வந்து நிற்றலும் உண்டு.

எல்லாரும் வந்தார்கள், எல்லாம் வந்தன,
மக்கள் எல்லாரும் வந்தார்கள்,
மக்கள் எல்லாம் வந்தார்கள்.

எல்லா என்பது பெயரடையாக வருதல் காணத்தக்கது. -உம் பெயருடன் வரும்.

எல்லா பையன்களும் வந்தார்கள்
எல்லா புத்தகங்களும் வந்தன

எண்ணுப் பெயர்களைப் போல இவையும் பெயர்களுக்குப் பின்னரும் வரும்.

எல்லா மக்களும் > மக்கள் எல்லாரும்
எல்லா மாடுகளும் > மாடுகள் எல்லாம்
அனைத்து மக்களும் > மக்கள் அனைவரும்
அனைத்து மாடுகளும் > மாடுகள் அனைத்தும்

எல்லாம் என்பது வேற்றுமை ஏற்கும்போது அற்றுச் சாரியை பெறும்.

| | |
|---|---|
| எல்லாவற்றையும் | எல்லாவற்றுடனும் |
| எல்லாவற்றாலும் | எல்லாவற்றுக்கும் |
| எல்லாவற்றிலும் | எல்லாவற்றிலிருந்தும் |

### 2.3.16 உடைமைப் பதிலீடு பெயர்கள் (Possessive pronouns)

உடைமையைக் காட்டும் பதிலிடு பெயர்களே உடைமைப் பதிலிடு பெயர்கள். பல்வேறு பதிலீடு பெயர்களுடன் உடைய, இணைய அதனுடன் அது, அவை, அவன் போனற பெயர்களை இணைக்கும்போது உடைமைப் பதிலிடு பெயர்கள் உருவாகின்றன.

என் + உடையவன் > என்னுடையவன்
உன் + உடையவன் > உன்னுடையவன்
அவன் + உடையவன் > அவனுடையவன்

போன்ற சொற்கள் உடைமைப் பதிலிடு பெயர்களாகப் பயன்படுகின்றன. யார், எவன். போன்ற பலவேறு வினாப் பதிலிடு பெயர்களுடனும் இவை இணைந்து நிற்றல் காணலாம்.

யாருடையது, யாருடையவன், யாருடையவள்

போன்றவை உதாரணங்களாகும்.

உனது, எனது, நினது போன்றவையும் உடைமைப் பதிலீடு பெயர்களாகும்.

என் + அது > எனது
உன் + அது > உனது
அவன் + அது > அவனது
இது எனது; இது உனது; இது அவனது
இவன் என்னுடையவன், இவன் உன்னுடையவன்
இவை என்னுடையவை, அவை அவனுடையவை
இவர் என்னுடையவர், அவர் உன்னுடையவர்

போன்றவை உதாரணங்கள்.

## 2 4 எண்ணுப் பெயர்கள் (Numerals)

எண்ணுப் பெயர்கள் மொழிகளின் அடிப்படைச் சொற்களில் ஒன்றாகக் கருதப்படுகின்றன. உலக மொழிகள் அனைத்திலும் எண்ணுப் பெயர்கள் காணப்படும். சில மொழிகளில் அடிப்படை எண்ணுப்பெயர்கள் குறைவாக இருக்கலாம். வேறுசில மொழிகளில் கூடுதலாக இருக்கலாம். ஆனால் எல்லா மொழிகளிலும் எண்ணுப் பெயர்கள் காணப்படும்.

எண்ணப்படு பொருள்களின் (count nouns) எண்ணிக்கையைக் குறிக்கும் பெயர்களையே எண்ணுப் பெயர்கள் என அழைக்கிறோம். இப்பெயர்கள் பொருள் அடிப்படையிலும் அமைப்பு அடிப்படையிலும் பிற பெயர்களிலிருந்து வேறுபட்டு நிற்கும். எண்ணிக்கையை அல்லது அளவைக் குறிக்கும் நிலையில் இவை வேறுபல பெயர்களிலிருந்து மாறுபட்டிருக்கக் காணலாம்.

ஐந்து வீடு, ஒரு மனிதன், இரண்டு உள்ளங்கள்

போன்ற தொடர்கள் இப்பண்பினைக் காட்டும். பொருள்களின் எண்ணிக்கையைக் காட்ட இத்தகைய பெயர்களையே பயன் படுத்துகிறோம். மேலும் எண்ணுப் பெயர்கள்

இரண்டாவது வீடு, இரண்டாவதாக வந்தான்

போன்ற தொடர்களில் பொருள்களின் ஸ்தானத்தை அல்லது வரிசையைக் காட்டும் நிலையிலும் வரக் காண்கிறோம். இப் பெயர்கள் -ஆம் அல்லது -ஆவது என்ற ஒட்டுக்களை ஏற்று வருகின்றன இந்நிலையில்தான் எண்ணுப்பெயர்களைத் தனி யொருவகையாகக் கருதுகின்றனர்.

மேலும் இவ்வகைப் பெயர்கள் எத்தனை, எத்தனாவது, எவ்வளவு போன்ற வினாக்களுக்கு விடையளிப்பதாக உள்ளது.

{ எத்தனை / எவ்வளவு } வீடுகள் உள்ளன?

இரண்டு வீடுகள் உள்ளன.
எத்தனாவது வீடு? இரண்டாவது வீடு.

எண்ணுப் பெயர்கள் எண்ணிக்கையைக் காட்டுவது போல பல, சில போன்ற பெயர்களும் பொருட்களின் எண்ணிக்கையைக் காட்டும். எனினும் இவை இத்தனை அல்லது இவ்வளவு என்று குறிப்பிட்டுக் காட்டுவதில்லை. எனவேதான் இவற்றை வரையறை யில்லா எண்ணுப் பெயர்கள் என அழைக்கலாம். இவையனைத்தும் பேர் என்ற சொல்லை எடுத்து நிற்கும்.

{ பத்துப் / கொஞ்சப் / பல / சில } பேர்

ஆயினும் இத்தகைய பெயர்களும், எண்ணுப் பெயர்களும் பொது வான சில பண்புகளைக் கொண்டிருக்கக் காணலாம்.

இரண்டு பேர், பல பேர், சில பேர்

| | | |
|---|---|---|
| நான்கு மரங்கள் | > | மரங்கள் நான்கு |
| ஒரு பையன் | > | பையன் ஒருவன் |
| பல பையன்கள் | > | பையன்கள் பலர் |
| சில பையன்கள் | > | பையன்கள் சிலர் |

போன்றவை இவற்றின் பொதுமையைக் காட்டும். இப்பெயர்கள் தான் எத்தனை அல்லது எவ்வளவு போன்ற வினாக்களுக்கு விடை தரும் நிலையில் அமைந்துள்ளன.

எவ்வளவு / எத்தனை மரங்கள் நிற்கின்றன?

{ பத்து மரங்கள் / பல மரங்கள் / ஒரு சில மரங்கள் } நிற்கின்றன.

போன்றவை எடுத்துக்காட்டுக்கள்.

வகைப்பாடு

முன்னர்க் குறிப்பிட்டபடி எண்ணுப் பெயர்கள் இரண்டு நிலைகளைக் காட்டும். இவற்றை வைத்து இப்பெயர்களை எண் (cardinals) என்றும், எண்ணடை (ordinals) என்றும் இரண்டாகப் பிரிக்கலாம்.

## 2.4.1 எண்ணடை (ordinals)

இவை பொருட்களின் ஸ்தானத்தை அல்லது வரிசையைக் காட்டும். இப்பெயர்கள் -ஆவது அல்லது -ஆம் என்ற ஒட்டுக்களைப் பலவேறு எண்களுடன் இணைப்பதன் மூலம் உருவாவன.

{ இரண்டு / மூன்று / நான்கு } + ஆவது > { இரண்டாவது / மூன்றாவது / நான்காவது }

{ இரண்டு / மூன்று / நான்கு } + ஆம் > { இரண்டாம் / மூன்றாம் / நான்காம் }

தமிழ் மொழியில் ஒன்று என்ற எண்ணுப் பெயர் -ஆவது -ஆம் என்ற இரண்டு ஒட்டினையும் எடுப்பதில்லை. இந்நிலையில் முதல் என்ற சொல்லே இவ்வொட்டுக்களை எடுக்கிறது.

முதலாவது வீடு; முதலாவது வந்தான்,
முதலாம் குலோத்துங்கன்

-ஆம் என்ற ஒட்டு இன்றியே முதல் என நிற்கும்.

முதல் வீடு; முதல் குலோத்துங்கன்

ஆம் ஒட்டை ஏற்று வரும் எண்ணுப் பெயர்களோ பெயரடைகளாக மட்டுமே வரும். ஆனால், -ஆவது இணைந்த எண்ணுப்

பெயர்களோ பெயரடைகளாகவும், வினையடைகளாகவும் வருதல் காணத்தக்கது.

இரண்டாவது வீடு; மூன்றாவது வீடு
இரண்டாவது வந்தான்; மூன்றாவது வந்தான்

மேலும் -ஆவது என்ற ஒட்டுடன் வினையடையாக வரும்போது -ஆக என்ற ஒட்டினையும் இணைக்கலாம்.

இரண்டாவதாக வந்தான்; மூன்றாவதாக வந்தான்

என்பவை இந்நிலைக்கு உதாரணங்களாகும்.

## 2.4.2 எண் (Cardinals)

இப்பெயர்கள் எண்ணிக்கையைக் காட்டும். பொருட்களை எண்ணுவதற்காகப் பயன்படும் பெயர்கள் இவை. ஒன்று, இரண்டு, மூன்று என எண்ண இப்பெயர்கள் பயன்படும்.

பொதுவாக இவை பெயர்களாகவும், பெயரடைகளாகவும் வரும். பெயர்களாக வரும்போது எண்ணைக் காட்டுவதுடன் எண்ணப்படும் பொருள்களையும் காட்டி நிற்கும்.

ஒன்றை இரண்டால் பெருக்குக

எனக் கூறும்போது வெறும் எண்ணைக் காட்டி நிற்கக் காணலாம். ஆனால், எனக்கு நான்கு பழங்கள் தா; அவனுக்கு இரண்டு கொடு எனக்கூறும் போது இரண்டு என்பது பழங்கள் என்ற பொருளில் வரும். இந்நிலையில் பழங்கள் என்ற சொல் கெட்டுவிட்டது எனக் கருதலாம்.

கொஞ்சம் கொடு, பலகொடு, சிலகொடு

என்பவற்றிலும் இந்நிலை உண்டு.

பெயரடைகளாக வரும்போது இவற்றை எண்ணுப் பெயரடை (numeral adjective) எனக் கூறுவர். பிற பெயரடைகளைப் போலவே இவையும் ஒட்டுக்கள் எதையும் ஏற்பதில்லை. ஆனால் இவ்வடைகளைப் பெயருக்குப் பின்னால் கொண்டு வந்து பெயர்களாக மாற்றிவிடலாம். இந்நிலையில் இவை ஒட்டுக்களை ஏற்கும்.

| | | |
|---|---|---|
| ஐந்து வீடுகள் | > | வீடுகள் ஐந்து |
| ஐந்து நண்பர்கள் | > | நண்பர்கள் ஐவர்<br>நண்பர்கள் ஐந்துபேர் |
| ஒரு நண்பன் | > | நண்பன் ஒருவன் |
| ஒரு நண்பர் | > | நண்பர் ஒருவர் |
| ஐந்து வீடுகளை | > | வீடுகள் ஐந்தை |

போன்ற எடுத்துக்காட்டுக்கள் எண்ணுப் பெயரடைகளின் இப் பண்பைக் காட்டும்.

எண்ணுப் பெயர்களிலிருந்து ஒருவன், ஒருத்தி, மூவர், ஐவர் போன்ற பெயர்கள் உருவாவதால் எண்ணுப் பெயர்களையும் சிலர் பதிலிடு பெயர்களாகக் கருதுவர். இவற்றை எண்ணுப் பதிலிடு பெயர்கள் (Numeral pronouns) என்பர்.

எண்ணடைகளில் பிற அடைகளில் காணமுடியாத இன்னொரு பண்பையும் காணமுடியும். இவற்றோடு வரும் பெயர்களோடு —உம் என்ற ஒட்டினை இணைக்கும்போது இவை முழுமையைக் காட்டி நிற்கும்.

நான்கு பையன்களும் வந்தார்கள் —
பையன்கள் நால்வரும் வந்தார்கள்

ஐந்து பையன்களும் வந்தார்கள் —
பையன்கள் ஐவரும் வந்தார்கள்

போன்றவற்றில் இப்பண்பினைக் காணலாம்.

### 2.4.3 தமிழ் எண்ணுப் பெயர்களின் அமைப்பு

திராவிட மொழிகளின் எண்ணுப் பெயர்களின் ஆக்கம் அல்லது அமைப்பை நோக்கின் இவை மூன்று முறைகளில் உருவாகி இருத்தல் காணலாம். சில (இருபது, முப்பது, நாற்பது போன்றவை) பெருக்கல் விகிதத்திலும் வேறு சில (பன்னிரண்டு, பதின்மூன்று) கூட்டல் நிலையிலும் உள்ளன. ஒன்பது, தொண்ணூறு போன்றவை கழித்தல் நிலையில் உள்ளன. ஒன்று முதல் பத்துவரை உள்ளவை (ஒன்பது தவிர) அனைத்தும் அடிப்படை எண்ணுப் பெயர்கள். இவற்றிலிருந்தே பெருவாரியான எண்ணுப் பெயர்கள் முன்னால்

குறிப்பிட்ட நிலையில் உருவாகின்றன. நூறு, ஆயிரம், கோடி, இலட்சம் போன்றவையும் அடிப்படைச் சொற்கள். இவற்றுள் ஆயிரம் ( <சாயிரம் < சகஸ்ரா), இலட்சம், கோடி ஆகியவை பிறமொழிச் சொற்களாகும். இவை இன்று தமிழ்ச் சொற்கள் போலவே பயன்படுகின்றன.

2.4 3.1 ஒன்று

ஒன்று, ஓர், ஒரு, ஒவ், முதல் ஆகியவை இதன் மாற்றுருபு களாக உள்ளன.

ஒவ்–

இவற்றுள் ஒவ், ஒவ்வொரு, ஒவ்வொருவரும் போன்ற சொற்களில் ஒரு, ஒருவர், ஒருத்தி, ஒன்று போன்றவற்றின் முன்னால் வரும்.

| | |
|---|---|
| ஒவ்வொரு பொருளும் | ஒவ்வொருவனும் |
| ஒவ்வொருவரும் | ஒவ்வொருவனையும் |
| ஒவ்வொருவராக | ஒவ்வொன்றாக |
| ஒவ்வொருவரையும் | ஒவ்வொன்றும் |
| ஒவ்வொருத்தியையும் | |

ஓர், ஒரு

ஓர், ஒரு ஆகியவை பெயரடைகளாக மாத்திரமே வரும். ஓர் பொதுவாக உயிர் எழுத்துக்களுக்கு முன்னர் வரும். பிற சொற்களுடன் இணைந்து நிற்பதுடன் தனியாகப்பிரிந்தும் நிற்கும்.

ஓராயிரம், ஓரிருவர், ஓர் ஆண், ஓர் எண்ணம்

ஒரு பொதுவாக மெய்யெழுத்துக்களுக்கு முன்னர் வரும். பிற ஒட்டுக்களுடன் இணைந்து நிற்பதுடன் தனியாகப் பிரிந்தும் நிற்கும்.

ஒருவன், ஒருத்தி, ஒருத்தன், ஒரு பை, ஒரு மனிதன் ஒரு கண்

இன்றைய தமிழில் ஒரு என்பதே அதிகமாகப் பயன்படுகிறது. ஒரு அடி, ஒரு அன்பர் போன்ற தொடர்களைக் காண முடியும். இவை இலக்கணப் பிழை கொண்டன எனக் கூறுவர் பலர்.

எனினும் இவ் வழக்கு அதிகமாக உள்ளமை கவனிக்கத்தக்கது. பண்டைத் தமிழிலும் ஒரு, ஓர் மயக்கம் உண்டு (S. V. Shanmugam 1971:144).

ஒரு, ஒன்று போன்றவை வரும் தொடர்களில் அல்லது சொற்களில் -உம் இணைந்து எதிர்மறையுடன் வருதல் காணலாம்

ஒருவரும் வரவில்லை, ஒன்றும் நடக்கவில்லை
ஒரு மனிதனும் வரவில்லை

மேலும் ஒரே என்ற சொல் மிகுதி என்ற பொருளைத் தரும். ஒற்றை, ஒண்டி என்ற சொற்கள் தனி என்ற பொருளையும் தரும். மேலும் ஒற்றை என்பது ஒருமை என்ற பொருளிலும் வரும்.

ஒரே வலி, ஒரே கூட்டம், ஒரே சத்தம், ஒற்றை வீடு போன்றவற்றில் இப் பொருள்களைக் காணலாம்.

முதல்

-ஆம், -ஆவது, -Θ-, -இல் ஆகிய ஒட்டுக்களுடன் வரும்.

முதலாம் வீடு முதல் வீடு
முதலாவது வீடு முதலில் இதைச் செய்
முதலாவது வந்தான்

ஒன்று

தனிச்சொல்லாக, பெயராக வரும்

எனக்கு ஒன்று தா
பதினொன்று, இருபத்தொன்று

ஒன்று, இரண்டு, மூன்று, பத்து, இருபது போன்ற எண்ணுப் பெயர்களே வேற்றுமை ஏற்கும் தகுதியுடையன. மேலும் இப் பெயர்களே -ஆம், -ஆவது போன்ற ஒட்டுக்களையும் ஏற்கும். பிற மாற்றுருபுகள் ஓர், ஒரு, ஈர், இரு, மூ, மு போன்றவை பெயர்ச் சொற்களாக இல்லாமல் அடைகளாகவே நிற்கவல்லன. ஆனால் ஒன்று போன்றவையோ அடைகளாகவும் பெயர்களாகவும் வரும்.

ஒருவர், இருவர், மூவர் ......
ஒன்றாம், இரண்டாம்
ஒன்றாவது, இரண்டாவது

### 2.4.3.2 இரண்டு

இரண்டு, ஈர், இரு, இரட்டு ஆகிய மாற்று உருபுகளைக் கொண்டது.

ஈர்

இவற்றுள் ஈர் உயிர்களுக்கு முன்னர் வரும். பிற சொற்களுடன் இணைந்து நிற்கும்.

ஈருயிர், ஈராயிரம், ஈராறு

இரு

இது மெய்களுக்கு முன்னர் வரும். ஒட்டுடன் இணைந்து நிற்பதுடன், தனித்து நிற்கும் தன்மையதும் கூட.

இருவர், இருமை, இரு கண், பன்னிரு கண்கள்

பிற சொற்களுடன் வரும்போது இரண்டு என்பதுடன் துணைநிலை வழக்கில் வரும்.

இரண்டு கண்கள்

இரட்டு

ஐயுடன் இணைந்து இரட்டை என்ற பொருளிலும் -இ எடுத்து வினையாகவும் வரும்.

இரட்டை வேடம், இரட்டையர், இரட்டித்தல், இரட்டிப்பு

இரண்டு

தனிச் சொல்லாகவும், பிற எண்ணுப் பெயர்களுடனும், பிற பெயர்களுடன் எண் குறிக்கும் அடையாகவும் வரும். எண்ணுப் பெயராகவும் தனியாகவும் நிற்கும்.

பன்னிரண்டு, ஒரிரண்டு, இரண்டு நாட்கள்,
நாட்கள் இரண்டு
இரண்டை இரண்டால் பெருக்குக

### 2.4.3.3 மூன்று

மூன்று, மூ, மு ஆகிய மூன்று மாற்றுருபுகள் உள்ளன. மூ, மு ஆகியவை தனிச் சொல்லாக வருவதில்லை. இவை ஒட்டுக்களுடனும் பிற சொற்களுடனும் இணைந்தே வரும்.

மூ-

உயிர்களுக்கும் முன்னரும் வகாரத்திற்கு முன்னரும் வரும்.

மூவர், மூவாயிரம், மூவேந்தர்கள்

மு-

பிற ஒலியன்களுக்கு முன்னர் வரும்.

முப்பெரும், முப்பது, முக்காலம், முச்சங்கம், முத்தமிழ்

மூன்று

தனிச் சொல்லாக வரும்.

மூன்று நாள், மூன்று ஆட்கள், பதின் மூன்று,
நாற்பத்து மூன்று

2.4.3.4 நான்கு

நான்கு. நால், நல் ஆகிய மூன்று மாற்றுருபுகள் கொண்டது இது. நான்கு, நால் ஆகியவை தனிச் சொற்களாக வரும். நல் பிறவற்றுடன் இணைந்தும் வரும்.

நல்-

நால், நான்கு ஆகியவற்றுடன் முன்னால் இணைந்து வரும்.

நன்னாலு ( < நல் + நால் ), நன்னான்கு

நால்

தனிச் சொல்லாகவும், பிற எண்ணுப் பெயர்களுடனும், -வர் போன்ற ஒட்டுக்களுடனும் வரும்.

நால்வர், நாலு, பதினாலு, நாலுபேர், நானூறு,
நாலாயிரம், நாலு வீடுகள்.

நான்கு

தனிச் சொல்லாகவும் பிற எண்ணுப் பெயர்களுடனும் இணைந்து வரும். இந்நிலையில் இதுவும் நால் என்பதும் துணைநிலை வழக்கில் வரும்.

நான்கு, பதினான்கு, நான்கு வீடுகள்

3.4.3.5 ஐந்து

ஐந்து, ஐ, ஐம் ஆகிய மாற்றுருபுகளைக் காணலாம். இவற்றுள் ஐ, ஐம் என்பன ஒட்டுக்களுடனும் பொதுவாக பிற சொற்களுடனும் இணைந்து வரும். ஐந்து தனிச் சொல்லாக வரும்.

ஐ-

ஆயிரம் போன்ற உயிர் எழுத்துக்களைக் கொண்ட சொற்களுடனும் -வர் போன்ற ஒட்டுக்களுடனும் வரும்.

ஐயாயிரம், ஐயாறு, ஐயேழு. ஐவர்

ஐம்-

பிற சொற்களுடன் வரும்.

ஐம்பது, ஐங்கலம், ஐம்பால், ஐம்பத்து நான்கு

ஐந்து

தனிச் சொல்லாகவும், பிற எண்ணுப் பெயர்களுக்குப் பின்னர் இணைந்தும் வரும்.

ஐந்து, பதினைந்து, இருபத்தைந்து, ஐந்து பேர்,
ஐந்து நாள்

2 4 3 6 ஆறு

ஆறு, அறு என்ற இரண்டு மாற்றுருபுகள் உள்ளன.

அறு

அறு மெய்க்கு முன்னர் ஒட்டுக்களுடனும், சொற்களுடனும் இணைந்தே வரும்.

அறுவர், அறுநூறு, அறுபது, அறுபத்து நான்கு

ஆறு

தனிச் சொல்லாகவும் பிற எண்ணுப் பெயர்களுடன் இணைந்தும் வரும். இணைந்து வரும்போது உயிர்களுடன் வரும்.

ஆருயிரம், ஆறு பெண்கள், பதினாறு, ஆறு ஆடுகள்

2.4.3.7 ஏழு

ஏழு, எழு ஆகிய இரு மாற்றுருபுகளைக் கொண்டது.

எழு

மெய்யெழுத்துச் சொற்களுடனும் நூறு போன்ற எண்ணுப் பெயர்களுடனும் வரும். மெய்யெழுத்து ஒட்டுக்களுடனும் மெய் யெழுத்து முதல் சொற்களுடன் இணைந்து வருதலும் உண்டு. தனித்து வராது.

எழுவர், எழுபது, எழுநூறு. எழு கடல், எழுபத்து நான்கு

ஏழு

பிற இடங்களில் வரும். தனித்து நிற்கும். உயிர்களுடன் வரும்போது இணைந்து வரும்.

ஏழு மக்கள், ஏழாயிரம், ஏழு கோடி, ஏழு பேர்

2.4.3.8 எட்டு

எட்டு, எண் ஆகிய மாற்றுருபுகளைக் கொண்டது.

எண்

-மர் என்ற ஒட்டுடனும் சொற்களுடனும் இணைந்தே வரும். தனித்து நிற்காது.

எண்மர், எண்ணாயிரம், எண்ணூறு
எண்பத்து நான்கு

எட்டு

தனிச் சொல்லாக நிற்கும்.

எட்டாயிரம், எட்டுப் பேர்
பதினெட்டு

2.4.3.9 ஒன்பது

ஒன்பது என்பதன் வரலாறு பற்றிய விளக்கங்கள் பலவற்றைக் காணலாம். இதன்கண் காணப்படும் பது என்பது பத்து என்பதன் மாற்றுருபாகும். இருபது, முப்பது போன்றவற்றிலும் இதனைக் காணலாம். தொண்+பது என்பதுவே தகரம் கெட்டுப் பின்னர் ணகரம் னகரமாக மாறி (S. V. Shanmugam, 1971:165) ஒன்பது என ஆயிற்று எனக் கருதலாம். இத்தகைய விளக்கங்கள் வரலாற்று அடிப்படையானவையாகும். எனவே விளக்க முறையில் இதுபற்றி இந்நூலில் விரிவாகச் சொல்ல விரும்பவில்லை.

இதன் மாற்றுருபுகளாக ஒன்பது, தொள் ஆகியவை உள்ளன.

தொள்

இது நூறு, ஆயிரம் ஆகியவற்றிற்கு முன்னர் வரும்.

தொள்+நூறு > தொண்ணூறு
தொள்+ஆயிரம் > தொள்ளாயிரம்

ஒன்பது

பிற இடங்களில் வரும்.

ஒன்பதாயிரம், ஒன்பது பேர், பத்தொன்பது

## 2.4.3.10 பத்து

பத்து, பதின், பன், பது ஆகிய மாற்றுருபுகளைக் கொண்டது இது.

பதின்

இரண்டு ஒழிந்த ஒன்று முதல் எட்டுவரையுள்ள எண்களின் முன்னாலும் ஆயிரத்தின் முன்னாலும் வரும். இலக்கியத் தமிழில் ஒரு சில பெயர்ச் சொற்களின் முன்னாலும்– மர் என்ற ஒட்டின் முன்பும் வரும்.

| | | |
|---|---|---|
| பதின் + | ஒன்று | > பதினொன்று |
| | மூன்று | பதின்மூன்று |
| | நான்கு | பதினான்கு |
| | ஐந்து | பதினைந்து |
| | ஆறு | பதினாறு |
| | ஏழு | பதினேழு |
| | எட்டு | பதினெட்டு |
| | ஆயிரம் | பதினாயிரம் |

பதின்கலம், பதின்மர்

பன்

இரண்டு என்ற எண்ணுக்கு முன்னரும் இரு, இருவர் என்ற சொற்களுக்கு முன்னரும் வரும்.

பன்னிரண்டு, பன்னிருவர், பன்னிரு

பத்து

தனிச் சொல்லாக வரும். மேலும் பத்துக்குக் குறைந்த எண்களின் பின்னர் வரும்போது இரு, மு போன்றவற்றுடன் வரும் நிலையிலும் வரும்.

பத்து, பத்துப்பேர், பத்து ஆட்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| இரு<br>முப்<br>நாற்<br>ஐம்<br>அறு<br>எழு<br>எண் | + | பத்து | + | ஒன்று<br>இரண்டு<br>மூன்று<br>நான்கு<br>ஐந்து<br>ஆறு<br>ஏழு<br>எட்டு<br>ஒன்பது |

பது

பிற எண்களுடன் பெருக்கல் நிலையில் வரும்போது வரும். ஆனால் தனியாகவும் வேறு பெயர்களுடனும் ஆயிரம், லட்சம் போன்ற பெரிய எண்களுடன் வரும்.

இருபது, முப்பது
இருபது நண்பர்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| இரு<br>முப<br>நாற்<br>ஐம<br>அறு<br>ஏழு<br>எண் | + | பது | + | ஆயிரம்<br>லட்சம்<br>கோடி |

2.4.3.11 நூறு

நூறு, நூற்று ஆகிய இரு மாற்றுருபுகளைக் கொண்டது.

நூற்று

நூறிலிருந்து குறைந்த எண்கள் பின்னால் வரும்போது வரும்.

நூற்றொன்று, நூற்றிரண்டு, நூற்றொன்பது,
நூற்றுக் கணக்கான, நூற்றுக்கு நூறு,
நூற்றுத் தொண்ணூற்றொன்பது, நூற்றிருவர்

நூறு

பிற இடங்களில் வரும்.

நூறு மாணவர்கள்
ஐந்நூறு, அறுநூறு
நூறிலிருந்து நூறைக் கழி

## 2.4.3.12 ஆயிரம்

இது வடமொழியிலிருந்து திரிந்து ( < சாயிரம் < சகஸ்ரா ) வந்தது. ஆயிரம் என்ற ஒரே மாற்றுருபைக் கொண்டது. ஆயிரத்து என்பதைச் சந்திவழியால் கொண்டு வந்து விடலாம். இந்நிலையில் நூற்று என்பதற்கும் இதற்கும் வேறுபாடு உண்டு. நூறு, ஆறு ஆகிய வேற்றுமை உருபை ஏற்கும்போது றகர ஒற்று இரட்டிப்பதில்லை.

நூறிலிருந்து நூறைக் கழி
நூறோடு இரண்டைக் கூட்டு
ஆறிலிருந்து ஒன்றைக் கழி
ஆயிரத்திலிருந்து நூறைக் கழி
ஆயிரத்துமூன்று
ஆயிரம் பெண்கள்
ஆயிரம் கோடி
எட்டாயிரம்

## 2.4.3.13 இலட்சம்

சமஸ்கிருதச் சொல் இது, தமிழில் இது அதிகமாகப் பயின்று வருகிற சொல், லட்சம் என்ற ஒரே மாற்றுருபினைக் கொண்டது இது. தமிழ்ச் சொற்களைப் போலவே அத்துச் சாரியை ஏற்று வரும்.

பத்து லட்சம் மாணவர்கள்
லட்சத்தில் ஆயிரத்தைக் கழி.

## 2.4.3.14 கோடி

இதுவும் சமஸ்கிருதத்திலிருந்து வந்த சொல் என்பர். பண்டைத் தமிழில் இது அதிகமாக வருவதில்லை. இலட்சம்,

ஆயிரம் போன்று இதுவும் இன்றைய தமிழில் அதிகமாகப் பயின்று வருவது. கோடி என்று ஒரு மாற்றுருபைக் கொண்டது.

ஆறு கோடி, கோடி மாணவர்கள்

### 2.5.0 பின்னங்கள் (Fractions)

ஒன்றுக்குக் கீழ்ப்பட்ட எண்ணைக் குறிக்கும் எண்ணுப் பெயர்களையும் தமிழில் காணலாம்.

### 2.5.1 அரை

தனியாக வருவதுடன் பலவேறு எண்ணுப் பெயர்களுடனும் வரும்.

அரை, ஒன்றரை, இரண்டரை, மூன்றரை, ...... பத்தரை, இருபதரை

### 2.5.2 கால்

தனியாக வருவதுடன் முக்கால் அரைக்கால் என்ற சொற்களிலும் வரும். பிற எண்ணுப் பெயர்களுடனும் வந்து நிற்கும்.

அரைக்கால், கால், முக்கால், ஒன்றே கால்,
இரண்டே கால்........பத்தே கால், இருபதே கால்

பிற எண்ணுப்பெயர்களுடன் வரும்போது எண்ணுப் பெயர்களுடன் ஏகாரம் வருதல் குறிப்பிடத்தக்கது.

$$\left\{\begin{matrix} \text{ஒன்று} \\ \text{இரண்டு} \\ \vdots \end{matrix}\right\} + \text{கால்} > \left\{\begin{matrix} \text{ஒன்று} \\ \text{இரண்டு} \\ \vdots \end{matrix}\right\} + \text{ஏ} + \text{கால்}$$

இதே நிலையினை முக்கால் என்ற சொல்லிலும் காணலாம்.

### 2.5.3 முக்கால்

இது கால் என்ற சொல்லிலிருந்து உருவானதாயினும் தனியாகக் கருதுதல் நல்லது. தனியாக வருவதுடன் பிற எண்ணுப் பெயர்களுடன் இணைந்தும் நிற்கும். பிற எண்ணுப்பெயர்களுடன் வரும்போது எண்ணுப்பெயர்கள் ஏகாரம் எடுத்து நிற்கும்.

முக்கால், ஒன்றே முக்கால், இரண்டே முக்கால்.......
பத்தே முக்கால், இருபதே முக்கால்

2 5 4 அரைக்கால்

அரை என்ற சொல்லும் கால் என்ற சொல்லும் இணைந்து உருவானது. தனியாக வருவதுடன் பிற எண்ணுப் பெயர்களுடன் இணைந்தும் வரும்.

அரைக்கால், அரையே அரைக்கால், முக்காலே
அரைக்கால், ஒன்றேயரைக்கால், இரண்டேயரைக்கால்

பிற எண்ணுப்பெயர்களுடன் வரும்போது எண்ணுப்பெயர்கள் ஏகாரம் பெற்று நிற்றல் காண்க.

2.5.5 மாகாணி

தனித்து நிற்பதுடன் பிற எண்ணுப் பெயர்களுடன் வரும். பிற எண்ணுப் பெயர்களுடன் வரும்போது எண்ணுப் பெயர்கள் ஏகாரம் பெற்று வரும்.

மாகாணி, காலே மாகாணி, அரையே மாகாணி,
முக்காலே மாகாணி, ஒன்றே மாகாணி. இரண்டரையே
மாகாணி....... இருபதே யரைக்காலே மாகாணி

2.6.0 வரையறையில்லா எண்ணுப்பெயர்கள் (Indefinite numerals)

எண்ணுப்பெயர்கள் பொருள் அடிப்படையிலும் அமைப்பு அடிப் படையிலும் பிற பெயர்களிலிருந்து மாறுபட்டிருக்கின்றன என்றும் அவற்றைப் போலவே பலர், சிலர், பல, சில போன்ற பெயர்களும் எண்ணிக்கையை அல்லது அளவைக் காட்டி நிற்கின்றன என்றும் குறிப்பிடப்பட்டது. அளவைக் காட்டினும் இவை இத்தனை அல்லது இவ்வளவு எனக் குறிப்பிட்டுக் காட்டாத நிலையில்தான் இவை வரையறையில்லா எண்ணுப் பெயர்கள் என அழைக்கப் படுகின்றன. இவை எண்ணுப் பெயர்கள் போலவே வரையறை யில்லாத எண்ணிக்கையை அல்லது அளவைக் காட்டும். நான்கு பேர் எனக் கூறும் போது நான்கு என்ற எண்ணிக்கை துல்லிய மாகக் காட்டப்பட பலபேர் எனக் கூறும்போது வரையறுத்துக் காட்டாத நிலையைக் காணுகிறோம். எனினும் இவை எண்ணுப் பெயர்கள் போலவே உள்ளன. பல, சில என்ற சொற்கள் ஒப்புமை அடிப்படையிலானவை.

நான்கு பேர்—பல பேர், சில பேர்
நால்வர்—பலர், சிலர்
நான்கு பொருட்கள்—சில பொருட்கள்
மக்கள் நால்வர்/நான்கு பேர்
மக்கள் பலர்/பல பேர்

2.6.1 பலர்

பல் + அர் > பலர்

பல் என்ற சொல்லுடன்—அர் என்ற ஒட்டினை இணைக்கும் போது உண்டாகும் சொல் இது. மக்களைக் குறித்து வரும் நிலையில் உயர்திணை எனக்கருதலாம். பல்—என்பது பன்மையைக் குறிக்கும். -அர் இணைந்த நிலையில் உயர்திணைப் பன்மை அல்லது பலர் பாலாக உள்ளது.

பலர் வந்தனர்

தனியாக வருவதுடன் பொதுப்பெயர்களுடனும் வரும்.

மக்கள் பலர் வந்தனர்
ஆசிரியர்கள் பலர் வந்தனர்
ஆசிரியர்கள் பலரைச் சந்தித்தேன்

சில எண்ணுப் பதிலிடு பெயர்களைப் போலவே இதுவும் சில பதிலிடு பெயர்களுடன் வரும்.

யாரோ பலர் அங்கு இருந்தனர்
நாங்கள் பலர் அங்கு இருந்தோம்
அவர்கள் பலர் இருந்தனர்

அவர்களுள் போன்ற சொற்களையும் இவை எடுத்து வரும்.

அவர்களுள் பலர் நல்லவர்கள்

பிற பெயர்களைப் போன்றே இதுவும் வேற்றுமையில் வரும்.

பலர் வந்தனர்
பலரைப் பார்த்தேன்
பலருடன் வந்தேன்
பலரால்தான் இக்காரியம் நடக்கும்
பலருக்கும் கொடுத்தேன்

பலரிடமிருந்தும் வாங்கினேன்
பலரின் வெறுப்பைச் சம்பாதித்தேன்
பலரிடம் பேசினேன்

2.6.2 சிலர்

சில் + அர் > சிலர்

சில் என்ற சொல்லுடன்—அர் என்ற ஒட்டு இணைந்த நிலையில் உருவாகிற சொல் இது. கொஞ்சப் பேர்களைக் குறிக்கப் பயன்படும் சொல். சில் என்பது கொஞ்சத்தையும் -அர் உயர்திணைப் பன்மையையும் குறிக்கும். பலர் என்ற சொல்லைப் போலவே இதுவும் பயன்படும்.

சிலர் வந்தனர்

தனியாக வருவதுடன் பொதுப் பெயர்களுடன் இணைந்தும் வரும்.

மக்கள் சிலர் வந்தனர்
ஆசிரியர்கள் சிலர் வந்தனர்
ஆசிரியர்கள் சிலரைப் பார்த்தேன்

எண்ணுப் பதிலிடு பெயர்களைப் போலவே இதுவும் சில பதிலிடு பெயர்களுடன் வரும்.

யாரோ சிலர் அங்கிருந்தனர்
நாங்கள் சிலர் அங்கு இருந்தோம்
அவர்கள் சிலர் இருந்தனர்

அவர்களுள் போன்ற சொற்களுடன் வரும்.

அவர்களுள் சிலர் நல்லவர்கள்

பிற பெயர்களைப் போலவே இதுவும் வேற்றுமையில் வரும்.

சிலர் வந்தனர்
சிலரைப் பார்த்தேன்
சிலருடன் வந்தேன்
சிலரால்தான் இது நடந்தது
சிலருக்குக் கொடுத்தேன்
சிலரிடமிருந்து வாங்கினேன்

*சிலரின் வெறுப்பைச் சம்பாதித்தேன்*
*சிலரிடம் பேசினேன்*

பலர் போலல்லாது இது ஒரு என்ற அடை எடுத்தும் வரும்.

ஒரு சிலர்

## 2.6.3 பல

பல் + அ

பல் என்ற சொல்லுடன் அகர ஒட்டு இணைந்து உருவாகிறது இச் சொல். அகரம் அஃறிணைப் பன்மையைக் காட்டும். எனவே வரையறையில்லா அஃறிணைப் பன்மை எண்ணுப் பெயராக இதனைக் கருதலாம். பலர் என்ற சொல்லைப் போலவே இதுவும் பயன்படும்.

பல வந்தன ; பல நின்றன

தனியாக வருவதுடன் பொதுப் பெயர்களுடனும் வரும். அவ்வாறு வரும்போது பல என்ன என்பதைக் காட்டும்.

*செய்திகள் பல வந்தன*
*மரங்கள் பல நின்றன*
*அவற்றுள் பல நல்லவை*
*அவற்றில் பல நல்லவை*

வேற்றுமை உருபை ஏற்கும் போது அற்றுச் சாரியை ஏற்று வரும்.

பலவற்றை பலவற்றால் பலவற்றில்
பலவற்றோடு பலவற்றிற்கு
பலவற்றிலிருந்து பலவற்றின்
நான் பலவற்றைப் பார்த்தேன்
நான் செய்திகள் பலவற்றைப் படித்தேன்

## 2.6.4 *சில*

*சில் + அ*

*சில் என்ற சொல்லுடன் அகர ஒட்டு இணைந்து உருவாகிறது இச் சொல். அகரம் அஃறிணைப் பன்மையைக் காட்டும். சில*

குறைந்த எண்ணிக்கையைக் காட்டும். எனவே சில என்பது குறைந்த எண்ணிக்கையைக்காட்டும் வரையறையில்லா அஃறிணை எண்ணுப் பெயர் ஆகும். இதுவும் பல என்ற பெயரைப் போன்று பயன்படும்.

சில வந்தன ; சில நின்றன

தனியாக வருவதுடன் பொதுப் பெயர்களுடனும் வரும்.

செய்திகள் சில வந்தன
மரங்கள் சில நின்றன
அவற்றுள் சில நீண்டவை
அவற்றில் சில பெரியவை

வேற்றுமை உருபை ஏற்கும் போது அற்றுச்சாரியை பெறும்.

| | |
|---|---|
| சிலவற்றை | சிலவற்றால் |
| சிலவற்றோடு | சிலவற்றிற்கு |
| சிலவற்றிலிருந்து | சிலவற்றின் |
| சிலவற்றில் | |

2.6.5 பல், சில் ஆகியவற்றுடன் பெயரடை விகுதியாகிய -அ இணைந்து பெயரடைகளாக வருதல் இங்குக் குறிப்பிடத்தக்கது.

பல மக்கள்
பல செய்திகள்
(ஒரு) சில மக்கள்
(ஒரு) சில செய்திகள்

இவை

மக்கள் பலர்
செய்திகள் பல
மக்கள் (ஒரு) சிலர்
செய்திகள் (ஒரு) சில

எனவும் வரும். இந்நிலையில் எண், அளவு காட்டும் பெயரடைகளோடு ஒப்ப வைத்து எண்ணத் தக்கது. பல, சில, என் போன்றவை ஒப்பு அடிப்படையிலானவை. பத்துப் பேரையே ஒரு நேரத்தில் பலர் என்றும், சிலர் என்றும் குறிப்பிடலாம்.

# 3

# எண், பால் பகுப்பு

## 3.0 எண், பால் பகுப்பு

உலக மொழிகள் அனைத்திலும் எண், பால் பகுப்பினைக் காணலாம். தமிழ் மொழியும் இதற்கு விதி விலக்காக இல்லை. தமிழ் மொழியும் எண் பகுப்பையும் பால் பகுப்பையும் கொண்டுள்ளது. தன்மையிலும் முன்னிலையிலும் எண் பகுப்பே உள்ளது. நான் எனக் கூறும் போது ஆண், பெண் வேற்றுமை காட்டுவதில்லை. இதைப் போன்றே நாம், நாங்கள் என்று கூறும் போதும் நீ, நீர், நீங்கள், தாங்கள் எனக் கூறும் போதும் பால் வேற்றுமை தெரிவதில்லை. இதைப் போன்றே தான், தாம், தாங்கள் என்ற சொற்களும் பால் பகுப்பைக் காட்டுவதில்லை. தான், தாம் ஆகிய சொற்களே பண்டைக் காலத்தில் படர்க்கைப் பதிலிடு பெயர்களாக இருந்தன என்றும் பின்னர்தான் படிப்படியாக அவன், அவள், இவன், இவள் போன்ற சுட்டுப் பெயர்கள் படர்க்கைப் பதிலிடு பெயராகப் பயன்பட்டன என்றும் கூறுவர். இந்நிலையில் பண்டைக் காலத்தில் தன்மை, முன்னிலை, படர்க்கைப் பதிலிடு பெயர்கள் எண் மட்டுமே காட்டி நின்றன என்றும் பால் காட்ட வில்லை என்றும் கருதுவதில் தவறு எதுவும் இல்லை.

சுட்டுப் பெயர்கள் படர்க்கைப் பதிலிடு பெயராகப் பயன்பட்ட நிலையில் பாலும் எண்ணும் ஒரே ஒட்டினால் காட்டப்பட்டன எனக் கருதலாம். அவன் என்பதில் காணப்படும் -வன் ஆண் ஒருமையைக் காட்டுவது நாம் அறிந்த செய்தியாகும். இதைப் போன்றே அவள் என்பதில் காணப்படும் —வள் என்ற ஒட்டும். இந்நிலையில்தான் தமிழில் எண்ணையும் பாலையும் ஒன்று சேர்த்து ஆண்பால், பெண்பால், ஒன்றன்பால், பலர்பால், பலவின் பால் என இலக்கண அறிஞர்கள் பகுத்தனர்.

எனினும் தமிழில் எண் பகுப்பு எனத் தனியாகக் காண வேண்டுவதில்லை எனக் கூறுவது தவறாகும். தன்மை, முன்னிலை யிலும் தான், தாம் போன்றவற்றிலும் இப்பகுப்பினைக் காணலாம்.

இப்பகுப்புகளுக்கு அடிப்படையே பெயர்ச் சொற்கள்தாம். பெயர்ச் சொற்களில் காணப்படும் எண், பால் பகுப்பே அடிப்படை யானது. எனவேதான் பெயர்ச் சொற்களை உயர்திணை, அஃறிணை என்றும் ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன் பால், பலவின்பால் சொற்கள் என்றும் பகுப்பர் இலக்கண அறிஞர்கள். வினைச் சொல்லில் காணப்படும் எண், பால் பகுப்பு இவற்றின் சாயலே அன்றித் தனியான ஒரு கூறன்று. புறநிலையே (surface phenomenon) யன்றிப் புதைநிலை (deep) யன்று.

### 3.1.0 எண் பகுப்பு

மொழிகளில் காணப்படும் எண் பகுப்பு ஒரு இலக்கணக் கூறு என்பதை முன்னரே குறிப்பிட்டோம். எண்ணப்படுபொருள்களைக் குறிக்கும் பெயர்ச் சொற்களை அடிப்படையாக வைத்து எழுந்ததே எண்பகுப்பு. இப்பொருள்களை ஒன்று, இரண்டு, மூன்று என எண்ணுவதுடன்,

ஒரு வீடு, இரண்டு வீடுகள், மூன்று வீடுகள்
நூறு வீடுகள் .......

எனவும்

ஒரு பையன், இரண்டு பையன்கள்.......

எனவும் எண்ணிச் செல்லலாம் இந்நிலையில் எத்தனை எண்ணுப் பெயர்கள் ஒரு மொழியில் உள்ளனவோ அத்தனை எண் பகுப்பும் இருக்கக் காணலாம். ஆனால் உலக மொழிகளின் இலக்கண நூல்கள் பலவேறு மொழிகளில் காணப்படும் எண் பகுப்பினைக் பற்றிக் கூறும்போது ஒருமை-பன்மை என்றும், ஒருமை-இருமை-பன்மை என்றும் குறிப்பிட்டுச் செல்லுதல் காணத்தக்கது. ஒரு சில மொழிகளில் மட்டும் ஒருமை - இருமை - மும்மை-பன்மைப் பகுப்பு உள்ளது எனக் கூறுவர் இலக்கண அறிஞர்கள். இதற்குக் காரணம் பிற இலக்கணக் கூறுகளைப் போன்று எண் பகுப்பும் மொழிகளின் அமைப்பை அடிப்படையாக வைத்து எழுந்ததே.

## 31.1 ஒருமை-பன்மைப் பகுப்பு

முன்னர்க் குறிப்பிட்டது போன்று ஒரு வீடு, ஒரு பையன், ஒரு நாள் எனக் கூறும்போது வீடு, பையன், நாள் என்ற சொற்களுக்குப் பின்னர் அவற்றின் எண்ணிக்கையைக் குறிக்க எந்த விதமான ஒட்டும் இல்லை. ஆனால்,

இரண்டு வீடுகள், மூன்று வீடுகள்

எனக் கூறும்போதும் அல்லது

நூறு நாட்கள், நூறு வீடுகள்

எனக் கூறும்போதும் அனைத்திலும் -கள் என்ற ஒரே ஒட்டினைத் தான் காணுகிறோம். இதே நிலையைத்தான் ஆங்கிலம் போன்ற பலவேறு மொழிகளிலும் பார்க்கிறோம். அதாவது ஒன்றைக் குறிப்பன ஒரு வகையாகவும் ஒன்றுக்கு மேற்பட்டனவற்றைக் குறிப்பன மற்றொரு வகையாகவும் உள்ளன. எனவேதான் ஒன்றைக் குறிப்பன ஒருமை (singular) என்றும், ஒன்றுக்கு மேற்பட்டவற்றைக் குறிப்பன பன்மை (plural) என்றும் கருதப்படுகின்றன.

இது சொல்லியல் அடிப்படையில் ஒருமை-பன்மைப் பகுப்பின் காரணத்தை விளக்குவதாக அமையும். தமிழில் ஒருமை-பன்மை என இரு எண்கள் உள்ளன எனக் கூறுவதற்கு இதுவே காரணம். இரண்டு, மூன்று, நான்கு மாடுகள் எனக் கூறினும் எல்லாம் -கள் என்ற ஒட்டினை எடுத்து வருகின்ற காரணத்தால்தான் அவையனைத்தையும் பன்மை என்ற ஒரே தலைப்பில் கொண்டு வருகிறோம். இந்நிலையை

அவன் (ஒருவன்) — அவர்கள் (ஒன்றுக்கு மேற்பட்டவர்கள்)
அவள் (ஒருத்தி) — அவர்கள் (ஒன்றுக்கு மேற்பட்டவர்கள்)
அது (ஒன்று) — அவை (ஒன்றுக்கு மேற்பட்டவை)

போன்ற பதிலிடுசொற்களிலும் காணமுடியும். இவையும் ஒன்றைக் குறிப்பன, ஒன்றுக்கு மேற்பட்டவற்றைக் குறிப்பன என இரு

நிலையில் உள்ளன. தமிழில் எண்ணும் பாலும் ஒரு சேர சில ஒட்டுக்களால் காட்டப்படினும் ஒருமை பன்மைப் பகுப்பு இதில் அடங்கியுள்ளமை காணத் தக்கது.

ஒருமை பன்மைப் பகுப்பினை வேறு பல பதிலிடு பெயர்களி லும் காண முடியும்.

நான் — நாம், நாங்கள்
நீ — நீங்கள்
தான் — தாம், தாங்கள்

ஆகிய பெயர்களும் இப்பண்பினைக் காட்டுகின்றன. இவை எவ்வித பால் பகுப்பையும் காட்டுவதில்லை. நான் என்பது ஆண், பெண் பால்களுக்குப் பொதுவானவை. எண்ணை மட்டுமே காட்டும். இதே நிலையினைத்தான் பிற சொற்களிலும் காண் கிறோம். நான், நீ, தான் ஆகியவை ஒருமை. நாம், நாங்கள், நீங்கள், தாங்கள் ஆகியவை பன்மைப் பெயர்கள். இத்தகைய பதிலிடு பெயர்களும் ஒருமை — பன்மைப் பகுப்புக்குக் காரணமாக அமைகின்றன.

தொடரியல் அடிப்படையும் ஒருமை — பன்மைப் பகுப்புக்குக் காரணம்.

{ நாம் / நாங்கள் } வந்தோம்
நான் வந்தேன்
நீ வந்தாய்
நீங்கள் வந்தீர்கள்
கண்ணன் தான் நல்லவன் என்று கூறினான்
அவர்கள் தாங்கள் / தாம் நல்லவர்கள் என்று கூறினார்கள்

போன்ற வாக்கியங்களிலும் ஒருமை, பன்மை வேற்றுமை காணப் படுகின்றது.

நான் ஒருவன் வந்தேன்

{ நாங்கள் / நாம் } { இருவர் / மூவர் / ⋮ / நூறுபேர் } வந்தோம்

போன்ற வாக்கியங்களில் காணப்படும் வந்தேன், வந்தோம் ஆகிய வற்றிலும் இப்பண்பினையே காண்கிறோம்.

> ஒருவர் வந்தார்
> மூவர் / ஐவர் .... வந்தார்கள்
> அவர்கள் ஆசிரியர்கள்

போன்ற வாக்கியங்களில் காணப்படும் மூவர், ஐவர்.... போன்றவை வந்தார்கள் என ஒரே வினையை எடுப்பதும் அவர்கள் என்ற பதிலிடு பெயரை எடுப்பதும் ஒருமை, பன்மை என்ற பகுப்பின் அடிப்படைக்கு ஆதாரங்களாகும்.

எனவே சொல்லியல் அடிப்படையிலும் தொடரியல் அடிப் படையிலும் ஒருமை, பன்மைப் பகுப்பு உள்ளது என்பது நன்கு விளங்கும். இதே நிலையைத்தான் பிற மொழிகளிலும் காண் கிறோம். இயற்கை எண் பகுப்பு எல்லா மொழிகளுக்கும் பொது வாயினும் மொழிகளில் காணப்படும் இலக்கண எண் பகுப்பு மொழிகளின் அமைப்பை அடிப்படையாகக் கொண்டது என்பது குறிப்பிடத் தக்கது.

வினைச் சொற்களில் மட்டுமல்லாமல் பல வேறு மொழிகளில் பிற சொற்களிலும் ஒருமை பன்மைப் பகுப்பு காணப்படும். வேற்றுமைச் சொற்கள், பெயரடைகள், சிறப்புச் சுட்டுக்கள் போன்ற பல வேறு சொற்களிலும் காணக்கிடக்கின்றது. எனினும் இவற்றிற்கெல்லாம் காரணம் பெயர்ச் சொற்கள்தான். அவற் றில் காணப்படும் எண் பகுப்பே தொடர் இயைபு அடிப்படையில் (Concord) பிற சொற்களில் உள்ளன. எனவே புதை நிலையில் பெயர்ச் சொற்களிலும் புற நிலையில் பிறவற்றிலும் உள்ளன எனக் கருதலாம். பெயர்ச் சொற்களிலிருந்தே பிற சொற்களில் சில விதிகள் மூலம் கொண்டு வரமுடியும்.

### 3.1.2 பெயரடைகளில் எண் வேற்றுமை

உலக மொழிகள் பலவற்றில் பெயரடைகளில் எண் வேற்று மையைக் காணமுடிவதில்லை. ஆங்கிலம், தமிழ் போன்ற மொழி களில் பெயரடைகள் எந்த விதமான எண் வேற்றுமையுமின்றியே உள்ளன.

நல்ல பையன்; நல்ல பையன்கள்
good boy; good boys

போன்றவற்றில் இப்பண்பைக் காணலாம். ஆங்கில மொழியில்

these boys; those boys
this boy; that boy

என்ற பெயரடையில் எண் வேற்றுமை இருப்பினும் பிற பெயரடைகளில் இல்லை என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

ஆனால் சில மொழிகளில் பெயரடைகளும் எண் வேற்றுமை காட்டி நிற்கின்றன. ஐஸ்லாண்டிக், லுசேஷியன், போலிஷ் போன்ற பல மொழிகள் பெயரடைகளிலும் எண் வேற்றுமை காட்டும். அத்துடன் பால் பகுப்பைக் காட்டும். ஐஸ்லாண்டிக் மொழியில்

rik பணக்காரப் (பெண்)
rikar பணக்காரப் (பெண்கள்)

போன்ற சொற்களையும் லுசேஷியன் மொழியில்

dobry நல்ல (ஆண், ஒருமை)
dobray நல்ல (ஆண், இருமை)
dobri நல்ல (ஆண், பன்மை)

போன்ற சொற்களையும் காணலாம்.

### 3.1.3 வேற்றுமையில் எண் வேற்றுமை

தமிழில் வேற்றுமை உருபுகள் பெயர்ச் சொற்களின் எண்ணுக் கேற்ப மாறுவதில்லை, ஒருமையாயினும் பன்மையாயினும் ஒரே உருபே வரக் காண்கிறோம்.

அவன்–ஐ அவர்கள்-ஐ
மரம்–ஐ மரங்கள்-ஐ

என்பவற்றில் இப்பண்பைக் காணலாம். ஆனால் சில மொழிகளில் வேற்றுமை உருபுகள் ஒருமை—பன்மைக்கேற்ப மாறுகின்றன. வடமொழி, லத்தீன், ஐஸ்லாண்டிக், ஜெர்மன், போலிஷ்.

ஞசேஷியன், செர்போ, கிரோஷியன், ரஷ்யன் போன்ற மொழிகளில் இன்றும் இப்பண்பைக் காணுகிறோம். ஐஸ்லாண்டிக் மொழியில் காணப்படும்

| | | |
|---|---|---|
| dag | = | நாள் |
| dags | = | நாளின் |
| dagar | = | நாட்கள் |
| daga | = | நாட்களின் |

போன்ற சொற்கள் இப்பண்பைக் காட்டும். ஆனல் தமிழ் மொழியில் இந்நிலை இல்லை.

### 3.1.4 சிறப்புச் சுட்டுக்களிலும் எண் வேற்றுமை

ஆங்கில மொழியில் காணப்படும் 'the' என்ற சுட்டு எவ்வித எண் வேற்றுமையையும் காட்டுவதில்லை. the boy, the boys எனக் கூறலாம். ஆனல் ஜெர்மன் போன்ற மொழிகளில் காணப்படும் சிறப்புச் சுட்டுக்கள் எண் வேற்றுமை காட்டும்.


| | | ஆண் | பெண் | அஃறிணை | பன்மை |
|---|---|---|---|---|---|
| ஜெர்மன் | the | der | die | das | die |
| நார்வேஜியன் | the | en | a | et | ene |

வினைச் சொற்களிலும் பிற சொற்களிலும் காணப்படுவன புறநிலை என்று குறிப்பிடப்பட்டது. மேலும் பெயர்ச் சொற்களில் காணப்படும் எண் பகுப்புக்கும் பிறவற்றுக்கும் வேறு ஒரு முக்கியமான வேற்றுமையும் உண்டு. பெயரில் காணப்படுவதே உண்மையான எண் வேற்றுமை காட்டும். பெயரில் வருவது இருவர், மூவர் எனக் காட்டும். வினையில் வருவது செய்யப்படும் வினை இரண்டு, மூன்று எனக் காட்டாது. வினையைச் செய்பவர்களின் எண்ணிக்கையைக் காட்டுமேயல்லாது வினைகளின் எண்ணிக்கையைக் காட்டாது. ஆனால் பெயர்களோ செய்பவன், செய்யப்படுபவன் போன்றவர்களின் எண்ணிக்கையைக் காட்டும். வினையைப் போன்றே பெயரடை, வேற்றுமை, சிறப்புச் சுட்டுக்கள் ஆகியவற்றில் காணப்படும் எண் வேற்றுமை உள்ளது.

## 3.1.5 பல்வேறு நிலைகளில் ஒருமை-பன்மைப் பகுப்பு

முன்னர்க் குறிப்பிட்டது போன்று உலக மொழிகள் பலவற்றில் ஒருமை - பன்மைப் பகுப்பே அதிகமாகக் காணப்படுகின்றது. இந்தோ - ஐரோப்பிய மொழிகள் பலவற்றிலும் ஒருமை-பன்மைப் பகுப்பே உள்ளது. திராவிட மொழிகளில் இப்பகுப்பே உள்ளது. ஆங்கிலம், பிரெஞ்சு போன்ற பல மொழிகள் இப்பண்பைக் கொண்டுள்ளன. பல மொழிகள் முன்பு ஒருமை-இருமை-பன்மைப் பகுப்பைக் கொண்டிருந்த போதிலும் இருமை அழிந்துவிட்ட நிலையில் காணப்படுவதும் இங்குக் குறிப்பிடத் தக்கதாம்.

ஒருமை பன்மைப் பகுப்பும் பலவேறு நிலைகளில் பல மொழிகளில் உள்ளன. சில மொழிகளில் மனித இனத்தைக் குறிக்கும் பெயர்களில் மட்டுமே ஒருமை-பன்மைப் பகுப்பு உள்ளது. இந்நிலையில் பெயர்களை இரண்டு வகையாகப் பிரித்து விடலாம்.




இன்னும் சில மொழிகளில் மூவிடப் பெயர்களில் மட்டுமே இப்பகுப்பு உள்ளது. பிற பெயர்கள் ஒருமை-பன்மை வேற்றுமை காட்டுவதில்லை. இன்னும் சில மொழிகளில் உறவுப் பெயர்கள் மாத்திரமே ஒருமை-பன்மை வேற்றுமை காட்டும்.

பிரிட்டிஷ் கொலம்பியா, வான்கூவர் போன்ற இடங்களில் வாழும் சுமார் 1000 மக்களால் பேசப்படும் குவகிதில் மொழியின்கண் மனித இனத்தைக் குறிக்கும் சொற்களில் மட்டுமே ஒருமை பன்மை காணப்படுகிறது. வட அமெரிக்க மொழியான ஹைடா மொழியில் மூவிடப் பெயர்களிலும் சில உறவுப் பெயர்களிலும் மாத்திரமே இவ்வேற்றுமை உண்டு.

### 3.1.6 ஒருமை - பன்மை - கூட்டம்

சில மொழிகள் ஒருமை - பன்மை காட்டுவதுடன் கூட்டத்தைக் காட்டும் பண்பையும் கொண்டிருக்கின்றன. யானை, யானைகள், யானைக் கூட்டம் எனக் கூறுவதை சுவாகிளி மொழியினர் ஒட்டுக்களாலேயே குறிப்பிடுவர்.

| | | |
|---|---|---|
| simba | = | சிங்கம் |
| simba | = | சிங்கங்கள் |
| ma - simba | = | ஒரு கூட்டம் சிங்கங்கள் |
| unyasi | = | புல் |
| nyasi | = | புற்கள் |
| manyasi | = | புல்திரள் |

### 3.1.6 1 ஒருமை - பன்மை - பெரு அளவு

ஆப்பிரிக்க நாட்டில் காணப்படும் வேறுசில மொழிகள் ஒருமை-பன்மை - பெரு அளவு என்று வேற்றுமை காட்டுவனவாக உள்ளன. சுவாஹு, திக்ரெ, கமீன் போன்ற மொழிகளில் இப்பண்பு காணப் படுகின்றது.

| | | | |
|---|---|---|---|
| nku | = | ஆடு | (சுவாஹு) |
| li - nku | = | ஆடுகள் | |
| ma - nku | = | பெரு அளவு ஆடுகள் | |
| bill | = | பூச்சி | (கமீன்) |
| bil - a | = | பூச்சிகள் | |
| bill - e | = | பெரு அளவுப் பூச்சிகள் | |

### 3 1.7 ஒன்றுக்கு மேற்பட்ட பன்மைகள்

சில மொழிகளில் ஒன்றுக்கு மேற்பட்ட பன்மைகள் உள்ளன.

### 3.1.8 எண் வேற்றுமை இல்லா மொழிகள்

வேறு சில மொழிகளில் ஒருமை பன்மை என்ற எண் வேற்றுமையே இல்லை. நியூமெக்சிக்கோ காட்டுப் பகுதியில் வாழும் அப்பாச்சே மொழியின்கண் ஒருமை-பன்மை என்ற பகுப்பே இல்லை. இந்நிலையை வளர்ந்து விட்ட நாகரீக மொழிகளிலும் காணலாம். கொரிய மொழி, ஜப்பானிய மொழி போன்றவற்றில் சொற்கள்

பொதுவாக எண் பகுப்பைக் காட்டுவதில்லை என்றும் ஒரு சொல்லே வரும் இடத்தை வைத்து ஒருமை பன்மை காட்டும் என்றும் கூறுவர். எடுத்துக்காட்டாக, ஜப்பானிய மொழியில் காணப்படும் ushi என்ற சொல் பசு, காளை, பசுக்கள், காளைகள் என்று பல பொருளைத் தரும். இது போன்றே யுகு என்ற வினைச்சொல்லும்

நான் வருகிறேன்
நீ வருகிறாய்
நாம் வருகிறோம்
நீங்கள் வருகிறீர்கள்

எனப் பொருள்பட்டு அது எடுத்து வரும் பெயர்ச் சொற்களுக்கேற்ப ஒருமை, பன்மையில் வருவது காணத்தக்கது.

இன்னும் சில மொழிகள் பெயர்களில் மட்டும் ஒருமை பன்மை காட்டும். வினைகளில் காட்டுவதில்லை ஆங்கில மொழியில் கூட முன்னிலை, தன்மையில் வரும் வினைச் சொற்கள் எண் வேற்றுமை காட்டுவதில்லை.

{ You / I / They } came/come/will come

இறந்த காலத்திலும் எதிர் காலத்திலும் வரும் வினைச்சொற்கள் எண் வேற்றுமை காட்டுவதில்லை.

{ He / She / It / You / They } come/will come/came

தமிழிலும்கூட செய்யும் என்னும் வாய்பாட்டு வினைமுற்று ஒருமை. பன்மை காட்டுவதில்லை.

{ அது / அவை / அவன் / அவள் } வரும்

போன்றவை இப்பண்பைக் காட்டும்.

### 3.1.9 ஒருமை-இருமை-பன்மை

முன்னர்க் குறிப்பிட்டபடி ஒரு சில மொழிகளில் இப் பகுப்பு காணப்படுகிறது. இந்தோ ஐரோப்பிய மொழிகளில் சமஸ்கிருதம், அவஸ்தன், பழைய பெர்சியன், பழைய ஐரிஷ் போன்ற சில மொழிகளில் காணப்படுகிறது. மேலும் ஒரு சில உராலிக் மொழிகளிலும் உள்ளது. எடுத்துக்காட்டாக செல்கப் (Selkup) மொழியில் இப்பகுப்பு உள்ளது. இருமையையும் பன்மையையும் காட்டும் ஒட்டுகள் தனித் தனியாக உள்ளன.

அத = ரெயிண்டியர்
அதாகி = இரண்டு ரெயின்டியர்
அதத் = ரெயிண்டியர்கள்

போன்ற செல்கப் மொழிச் சொற்கள் இப்பண்பைக் காட்டும். இதைப் போன்றே இம்மொழி வினைச் சொற்களிலும் ஒருமை - இருமை - பன்மைப் பகுப்பைக் காண்கிறோம்.

am-n-ap உண்கிறேன்
am-n-ez இருவர் உண்கிறோம்
am-n-ymzt உண்கிறோம்

ஒருமை-இருமை-பன்மைப் பகுப்பும் மொழிகளின் அமைப்பு அடிப்படையில் உருவானதே. சில மொழிகளில் பெயர்களிலும் பதிலிடு பெயர்களிலும் இப்பண்பு காணப்படும். திபேத்திய-பர்மிய மொழியான லிம்பூ போன்ற பல மொழிகள் இதற்கு எடுத்துக்காட்டுக்களாகும். இன்னும் சில மொழிகளில் பெயர்கள், பதிலிடு பெயர்கள், வினைகள் ஆகியவற்றிலும், வேறு சில மொழி களிலோ பதிலிடு பெயர்கள், வினைகள் ஆகியவற்றிலும், இன்னும் சில மொழிகளில் பதிலிடு பெயர்களில் மட்டிலும் காணப்படும். வெறும் பெயர்களில் மட்டும் காணப்படுவது இல்லை என்பர்.

### 3.1 10 திரட்பெயர்களில் எண் வேற்றுமை

எண்ணப்படு பொருள்களைக் குறிக்கும் பெயர்ச் சொற்களில் தான் எண் பகுப்பு காணப்படும் என முன்னர்க் குறிப்பிட்டோம். இவைகள்தான் ஒன்று, இரண்டு, மூன்று என எண்ணப்படுபவை. ஆனால் சில பொருட்கள் குறிப்பிட்ட ஒரு உருவத்தையோ அல்லது

வடிவத்தையோ கொண்டிருக்காத நிலையில் எண்ண முடியாதவை. எடுத்துக்காட்டாக, தண்ணீர் குறிப்பிட்ட வடிவம் இல்லாதது. இதனை ஒன்று, இரண்டு, மூன்று என எண்ண முடியாது. இதைப் போன்றே தங்கம், வெள்ளி, குற்றம், நியாயம் போன்ற பெயர்ச் சொற்களும் இத்தகையனவே. சில சொற்கள் பருப்பொருட்களைச் சுட்டுவன. இன்னும் சில நுண்பொருட்களைச் சுட்டுவன. எனினும் இவையனைத்தும் திரட்பொருட்களே (Mass). எனவே தான் இவற்றைக் குறிக்கும் பெயர்களையும் திரட்பெயர்கள் (mass nouns) எனக் குறிப்பிடுகின்றனர்.

இவற்றை எண்ண முடியாத நிலையில் இவற்றில் எண் பகுப்பு கிடையாது. ஆனால் பல வகையினைக் குறிப்பிடும் போது

குற்றங்கள், நியாயங்கள்

என்றெல்லாம் குறிப்பிடுவர். இதைப் போன்றே

இரண்டு குற்றங்கள்

எனவும் குறிப்பிடலாம். அளவைக் குறிக்க வேறு வகையான அளவுப் பெயர்களைப் பயன்படுத்துவர். கொஞ்சம், நிறைய போன்றவற்றைப் பயன்படுத்துவர்.

கொஞ்சம் வெண்ணெய்
கொஞ்சம் தண்ணீர்

எனக் குறிப்பிடலாம். எனவே பொதுவாகத் திரட்பெயர்களில் ஒருமை பன்மை வேற்றுமை கிடையாது.

நான் ஒரு மாம்பழம் வாங்கினேன்

எனக் கூறலாம். ஆனால்

*நான் ஒரு தங்கம் வாங்கினேன்

எனக் கூற முடியாது.

நான் ஒரே ஒரு மாம்பழம் வாங்கினேன்
*நான் ஒரே ஒரு தங்கம் வாங்கினேன்

போன்றவற்றில் இவற்றிடையே காணும் வேற்றுமையைக் காண லாம்.

### 3.1.11 தமிழ் மொழியில் எண் பகுப்பு

தமிழ் மொழியில் ஒருமை பன்மைப் பகுப்பே காணப்படுகிறது என்றும் இதற்குக் காரணம் தமிழ் மொழியின் அமைப்பே என்பதையும் முன்னர்க் கண்டோம். இம்மொழியின் பெயர்ச்சொற்களின் அமைப்பு, (பையன், பையன்கள்) பதிலிடு பெயர்கள், வினையாலணையும் பெயர்கள், வினைமுற்றில் காணப்படும் விகுதிகள் போன்றவைதான் இத்தகைய எண் பகுப்புக்குக் காரணம் என்பது மீண்டும் நினைவுகூரத் தக்கது.

| | | |
|---|---|---|
| பையன் | — | பையன்கள் |
| குதிரை | — | குதிரைகள் |
| செடி | — | செடிகள் |
| பெண் | — | பெண்கள் |

போன்ற பெயர்ச் சொற்களின் அமைப்பு ஒருமை பன்மைப் பகுப்பின் காரணத்தைக் காட்டும். இதைப் போன்றே அவன், அவள், அது, அவர்கள், அவை போன்ற சொற்களும்.

பையன் வந்தான்
இரண்டு/மூன்று........பையன்கள் வந்தார்கள்
அவர்களைக் கண்டேன்
குதிரை வந்தது
இரண்டு/மூன்ற/நான்கு குதிரைகள் வந்தன
அவற்றைக் கண்டேன்

போன்ற வாக்கியங்களில் காணப்படும் வினைமுற்றுகளும் பதிலிடு பெயர்களும்

நீ வந்தாய்
நீங்கள் (நீயும், கண்ணனும்) வந்தீர்கள்
நீங்கள் (நீயும், கண்ணனும், இராமனும்) வந்தீர்கள்
நான் வந்தேன்
நாம் (நானும், நீயும்) வந்தோம்
நாம் (நானும், நீயும், இராமனும்) வந்தோம்

போன்றவற்றில் காணப்படும் தன்மை, முன்னிலை பதிலிடு பெயர்களும் வினைமுற்று விகுதிகளும் தமிழில் ஒருமை, பன்மை எண் பகுப்புக்கு அரண் செய்வனவாகும்.

ஒன்றிற்கு மேற்பட்ட அனைத்தும் ஒரே மாதிரியான பதிலிடு பெயர்களையும் விகுதிகளையும் கொண்டிருத்தல் இங்குக் குறிப் பிடத்தக்கது.

தமிழ் மொழியில் காணப்படும் பெயர்கள் பால்-எண் காட்டுவன. இதைப் போன்றே பதிலிடு பெயர்களும் பால் எண் காட்டுவன. அவன் என்பதில் காணப்படும் –வன் ஆண்பால் என்பதையும் ஒருமையையும் காட்டும். –வர், –வர்கள் போன்றவை உயர் திணைப் பன்மை காட்டும். எனவே இவற்றைப் பலர்பால் போன்றவற்றில் காண்போம். ஆனால் தன்மை, முன்னிலை ஆகிய வற்றில் இந்நிலை இல்லை. இவை எண் மட்டுமே காட்டும்.

### 3.1.11 1 ஒருமை

தமிழில் ஒருமை காட்டும் உருபுகளாக -Θ, -ன் ஆகியவை உள்ளன. இவை முன்னர்க் குறிப்பிட்டபடி தன்மை, முன்னிலைப் பதிலிடு பெயர்களில் காணக்கிடக்கின்றன.

–Ф

இது முன்னிலைப் பெயர் அடியான நீ என்பதனுடன் வரும்.

நீ + Ф > நீ

–ன்

னகர வொற்று தன்மைப் பதிலிடு பெயர் அடியுடனும் தற்சுட்டுப் பெயர் அடியுடனும் முன்னிலைப் பதிலிடு பெயரின் வேற்றுமையடியுடனும் வரும்.

நா + ன் > நான்
எ + ன் > என்
தா + ன் > தான்
த + ன் > தன்
உ + ன் > உன்

### 3.1.11.2. பன்மை

தமிழில் காணப்படும் தன்மைப் பன்மை முன்னர்க் குறிப்பிட்ட படி உளப்பாட்டுத் தன்மைப் பன்மை, விலக்கீட்டுத் தன்மைப்

பன்மை என இரு வகைப்படும். இந்நிலையில் இவற்றைப் பன்மையிலிருந்து பிரித்துக் கூறுதலே பொருத்தம்.

பன்மையைக் காட்டும் ஒட்டாக -ங்கள் என்ற ஒட்டே காணப்படுகிறது.

-ங்கள்

நீ, எ–, தா–, த–, உ– ஆகிய பதிலிடு பெயர் அடிகளின் பின்னர் வருதல் காணலாம்.

நீ + ங்கள் > நீங்கள்
எ + ங்கள் > எங்கள்
உ + ங்கள் > உங்கள்
தா + ங்கள் > தாங்கள்
த + ங்கள் > தங்கள்

தங்கள் வாழ்க்கையைப்பற்றி அவர்களுக்குத் தெரியாது
தாங்கள் என்ன செய்கிறோம் என்று அவர்கள்
அறியவில்லை.

-ங்கள் என்ற ஒட்டு வரலாற்று முறையில் நோக்கின் ஒரு இரட்டைப் பன்மை ஒட்டாகும். ம் + கள் என்ற இரு ஒட்டுகள் இணைந்ததன் விளைவே இவ்வொட்டின் ஆக்கம். இத்தகைய நிலையைப் பல இடங்களில் காணலாம்.

யாங்கள், நாங்கள், எங்கள், அண்ணன்மார்கள், அவர்கள், வாத்தியார்மார்கள், நாடாக்கர்மார், வெள்ளாளன்மார்கள், நம்பள், நாம்பள் போன்ற பல சொற்களில் இப்பண்பைக் காணலாம். இன்னும் பேச்சுவழக்கில் நாடாக்கர்மார்கள் போன்ற மூன்று பன்மையைக்கூட காணமுடியும்.

### 3.1.11.3 உளப்பாட்டுத் தன்மைப் பன்மை (First Person inclusive plural)

-ம் என்ற ஒட்டு நா–, ந– என்ற தன்மை ஒருமை அடியுடன் இணைந்து உளப்பாட்டுத் தன்மைப் பன்மையைக் காட்டும்.

நா + ம் > நாம்
ந + ம் > நம்
நாம் வந்தோம்
நம் வீடு இது

### 3.1.11.4 விலக்கீட்டுத் தன்மைப் பன்மை (First person exclusive plural)

-ங்கள்

இவ்வொட்டு நா-, எ- ஆகிய தன்மை ஒருமை அடியுடன் இணைந்து விலக்கீட்டுத் தன்மையைக் காட்டும்.

நா - ங்கள் > நாங்கள்
எ - ங்கள் > எங்கள்
நாங்கள் வந்தோம்
எங்கள் வீடு இது

### 3.2.0 பால் பகுப்பு (Gender system)

உலக மொழிகள் பலவற்றிலும் பால் பகுப்பு உள்ளது. இவ்வாறு பால்காட்டும் மொழிகள் பலவற்றின் பண்பினை எடுத்து நோக்கின், பல்வேறு உண்மைகள் தெரியவரும். மொழிகளில் காணப்படும் பகுப்பு இலக்கணப் பால் பகுப்பு எனப்படும். இயற்கையாக உலகில் மனிதர்களிடையேயும் விலங்கு போன்ற பிறவற்றிடையேயும் காணப்படும் பகுப்பு இயற்கைப் பால் பகுப்பு (natural gender). இலக்கணப்பால் பகுப்பிற்கும் (grammatical gender) இயற்கைப் பால் பகுப்பிற்கும் இடையே வேற்றுமை உண்டு. மனித இனத்திலும் விலங்கினத்திலும் பிற உயிர் வாழ் இனத்திலும் ஆண், பெண் பகுப்பினைக் காணலாம். உயிரற்ற பொருட்கள் பலவற்றில் ஆண், பெண் பகுப்பினைக் காணமுடியாது. இவ்வாறு இயற்கையில் காணப்படும் பால் பகுப்பினையே இயற்கைப் பால் பகுப்பு என்கிறோம். இதனை 'sex' எனவும் அழைப்பர்.

இயற்கைப் பால் பகுப்பினை ஒட்டித்தான் இலக்கணப் பால் பகுப்புக்களும் அமைந்துள்ளன எனக் கூற முடியாது. தமிழ் மொழியில் மனித இனத்தில் ஆணைக் குறிக்கும் சொல் ஆண் பாலாகவும், பெண்ணைக் குறிக்கும் சொல் பெண்பாலாகவும் இருந்த போதிலும் விலங்கினத்தின் ஆண்-பெண் வேற்றுமையைத் தமிழ்ப் பால் பகுப்பு பிரித்துக்காட்டுவதில்லை. ஆண் யானையையும் பெண் யானையையும் குறிக்கும் சொற்கள் அஃறிணை ஒன்றன் பாலாகவே(neuter singular) கருதப்படுகின்றன. இவை மட்டுமின்றி

கை, கால், வீடு போன்ற உயிரற்ற பொருட்களைக் குறிப்பனவும் அஃறிணை ஒன்றன்பாலாகவே கருதப்படுகின்றன.

திராவிட மொழி இனம், தற்காலப் பெர்சியன், தற்கால ஆங்கிலம் போன்றவற்றில் உள்ள இலக்கணப் பால் பகுப்பு ஓரளவுக்கு இயற்கைப் பால் பகுப்புடன் பொருந்தியுள்ளது எனக் கருதலாம.

லத்தீன், ஸ்பானிஷ், இந்தி போன்ற மொழிகளில் இயற்கைப் பால் பகுப்பிற்கும் இலக்கணப் பால் பகுப்பிற்கும் இடையே வேற்றுமை மிகவுண்டு. லத்தீனில் பெண்களைக் குறிக்கும் (famina) போன்ற பெயர்கள் மட்டுமன்றி நட்சத்திரம் (stella) போன்ற ஆண்-பெண் வேற்றுமையற்ற பொருட்களைச் சுட்டும் பெயர்கள் பலவும் பெண்பாலாக இருப்பதும், இது போன்றே ஆண்களைக் குறிக்தும் சொற்கள் (vir = மனிதன்) மட்டுமன்றி, ஆறு (fluvika) போன்ற சொற்களும் ஆண்பாலில் அடங்கியிருப்பதும் தமிழ் மொழியிலிருந்து லத்தீன் மொழிப் பால்பகுப்பு வேறுபட்டிருப்பதைக் காட்டும். ஜெர்மன் மொழியில் பெண்ணைக் குறிக்கும் 'weib' என்ற சொல் அஃறிணை. இந்தி மொழியில் ஆண்களைக் குறிக்கும் சொற்கள் மட்டுமன்றி பழம், வீடு போன்ற சொற்களும் ஆண்பால் சொற்களாகவே உள்ளன. இவையெல்லாம் இயற்கைப் பால் பகுப்பும் இலக்கணப் பால் பகுப்பும் வேறு என்பதை நன்கு காட்டும். இயற்கைப் பால் பகுப்பு பொருள் (semantics) அடிப்படையில் அமைந்தது. ஆனால் இலக்கணப் பால் பகுப்போ மொழியின் அமைப்பு (structure) அடிப்படையில் அமைந்தது. பொருள் எல்லா மொழிக்கும் பொதுவானது. ஆனால் அமைப்போ மொழிகளுக்கு மொழி மாறுபட்டது. இதனால்தான் இலக்கணப் பால் பகுப்பும் மொழிக்கு மொழி மாறுபட்டிருக்கிறது. சில மொழிகளில் ஆண்பால், பெண்பால் பகுப்பு இருக்கும். சில மொழிகளில் ஆண்பால், பெண்பால், அஃறிணை என இருக்கும். சில மொழிகளிலோ உயிர் உள்ளவை (animate) உயிர் இல்லாதவை (inanimate) போன்ற நிலைகள் காணப்படும். இன்னும் சிலவற்றில் பெரியவை, சிறியவை என்ற பகுப்பு இருக்கும்.

### 3.2.1 உயிர்த்திணையும் - உயிரல் திணையும்

அமெரிக்க – இந்திய மொழிகளில் ஒன்றான யுச்சி (Yuchi) மொழிச் சொற்களை அவைகள் ஏற்கும் பின்னொட்டினை அடிப் படையாக வைத்து உயிர்த்திணை (animate) உயிரல் திணை (inanimate) என இருவகையாகப் பிரிப்பர். உயிர்த்திணைகளை மீண்டும் (1) யுச்சி மக்களைக் குறிப்பன (2) பிற மக்களையும் உயிர்ப்பொருள்களையும் குறிப்பன என இரு வகைகளாகப் பிரிப்பர். யுச்சி இனத்தானைக் குறிக்கும்போது -எனொான் என்ற (கொந்த் (க்) -எனொான் = யுச்சி மகன்) ஒட்டினையும் பிற மக்களைக் குறிக் கும்போது -வனொான் (கொந்த்(க்) -வனொான் = வெள்ளையன், பிற இந்தியன். நீக்ரோ) என்ற ஒட்டினையும் ஏற்று வருதல் காண லாம்.

இதுபோன்றே உயிரல்திணைச் சொற்களும் அவைகளின் நிலைமையின் அடிப்படையில் (1) உயரமான பொருட்களைக்குறிப் பன (மரம், உயர்ந்த வீடுகள் போன்று நேராக உயர்ந்து நிற்பன) (2) தள மட்டமான பொருட்கள் (3) வட்டமானவை என மூன்று வகைகளாகப் பாகுபாடு செய்யப்படுகின்றன. முதல் பிரிவைச் சார்ந்தவை -ப என்ற ஒட்டினையும் இரண்டாவது பிரிவு -கெ என்ற ஒட்டினையும் மூன்றாவது பிரிவு -த்ஜி என்ற ஒட்டினையும் ஏற்று வருகின்றன.

**உயிர்த்திணை**

கொந்த் (க்) = எனொான் = யுச்சி மகன்
கொந்த் (க்) = வனொான் = வெள்ளையன், நீக்ரோ
தவ - வனொான் = ஓநாய்

**உயிரல்திணை**

| | | | |
|---|---|---|---|
| யு – ப | = | மரம் | (நேராக நிற்பவை) |
| யு – ப | = | வீடு | (நேராக நிற்பவை) |
| ய – கெ | = | கட்டை | (தளமட்டமானவை) |
| தி – த்ஜி | = | பாறை | (வட்டமானவை) |

- பெயர்
  - உயிர்த்திணை
    - யுச்சிமகள்
    - பிற உயிர் உள்ளவை
  - உயிரல்திணை
    - நேராக நிற்பவை
    - தளமட்ட மானவை
    - வட்ட மானவை

### 3.2.1.1 உயிர்த்திணையில் வேறுபாடு

யுச்சி மொழியைப் போன்றே அமெரிக்க - இந்திய மொழிகளில் ஒன்றான ஹைடா (Haida) மொழிப் பெயர்களும் உயிர்த்திணை, உயிரல்திணை என இரு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப் படுகின்றன. எனினும் உயிர்த்திணையில் யுச்சிமொழியைப் போன்ற பிரிவினை இல்லை. எல்லா இனமக்களும் பிற உயிரினங்களும் ஒரே பகுப்பில் அடங்குதல் காணலாம். ஆனால், உயிரல்திணைச் சொற்கள் (1) நீண்ட வடிவமானவை (2) வட்டமானவை (3) சதுர மானவை போன்று 36 வகைகளாகப் பிரிக்கப்படுகின்றன. இப் பாகுபாடு சொற்கள் ஏற்கும் இனப்பிரிப்பு (Classifiers) ஒட்டினை அடிப்படையாக வைத்து அமைந்துள்ளது. இதுபோன்றே டக்கோட்டா (Dakota) மொழிப் பெயர்களும் அமைந்திருக்கக் காணலாம். ஆனால் இவையனைத்தும் தமிழ் மொழியில் அஃறிணையில் அடங்கி வருதல் காணலாம்.

சில மொழிகளில் உயிர்த்திணைச்சொற்கள், ஆண், பெண் வேற்றுமையில்லாமல், நகருவன, நிலையிலிருப்பன என்ற அடிப்படையில் பாகுபாடு செய்யப்படுகின்றன. சில சியோவன் (வட அமெரிக்க) மொழிகளில் இத்தன்மை காணப்படுகின்றது என்பர். இம்மொழிகளின் உயிரல்திணைப் பெயர்கள் ஹைடா மொழிப் பெயர்களைப் போன்று தளவட்டமானவை, வட்டமானவை, திறப்பவை, நுண்பொருள் குறிப்பவை எனப் பல வகையாகப் பிரிக்கப் படுகின்றன.

- பெயர்
  - உயிர்த்திணை
    - நகருவன
    - நேராக நிற்பன
  - உயிரல்திணை
    - நீளமானவை
    - வட்டமானவை
    - உயரமானவை
    - கூடிக் கிடப்பவை

### 3.3 மனித இனம்—பிற உயிருள்ளவை—உயிரல்லாதவை

இன்னும் சில மொழிச் சொற்கள் (1) மனித இனத்தைக் (human) குறிப்பன (2) உயிர்த்திணை (animate) (3) உயிரல் திணை (inanimate) எனப் பிரிக்கப்படுகின்றன. எடுத்துக்காட்டாக அமெரிக்க-இந்திய மொழிகளில் ஒன்றான சூனி மொழிப் பெயர்களை அவைகள் ஏற்கும் பின்னொட்டுக்களை அடிப்படையாக வைத்து மேற்கண்டவாறு பிரிப்பர். பெயர் அடிச் சொற்களின் (noun stems) பின்னால்-கி என்ற ஒட்டினை இணைத்து மக்களினச் சொற்களையும் -சி அல்லது -(கீ)கொ என்ற ஒட்டினை இணைத்து விலங்கு, செடி, மரம் போன்றவற்றைக் குறிக்கும் சொற்களையும் உண்டு பண்ணுவர். இம்மொழியில் செடி, கொடி போன்றவை உயிருள்ளவைகளாகக் கருதப்படுகின்றன.

தீஸ்வ-கி = இளைஞன் (மணமாகாதவன்)
தொள-சி = ஒருவகைக் கரடி
ஒ-வெ = உணவு
ச-மெ = எறும்பு
பி-(க்)க்லெ = நூல்

இவ்வடிப்படையில் இம்மொழியின்கண் 14 வகையான பெயர்கள் உள்ளன.

### 3.4 பெண்பால்-பிறபால்

அமெரிக்க-இந்தியர்களிடையே வழங்கும் குய்லெயுத் (Quileute) மொழியில் காணப்படும் பெயர்ச் சொற்கள் பெண்பால் சொற்கள் என்றும் பிறபால் சொற்கள் என்றும் இருபிரிவுகளாகப் பிரிக்கப்படுகின்றன. இப்பண்பு இம்மொழியின் மூவிடப்பெயர்

களில் (படர்க்கையில்) நன்கு காணப்படும். மேலும், இப்பெயர்கள் கண்களுக்குப் புலப்படுவன (visible), புலப்படாதன (invisible) எனவும், புலப்படாதன மீண்டும் அறிந்தவை (known) அறியாதவை (unknown) எனவும் பகுக்கப்படுகின்றன. இத்தன்மை அனைத்தும் இம்மொழி வினைச் சொற்களிலும் உள்ளனவாம். சில மொழிகளில் பெண்பால் ஒருமையும், பன்மையும் அஃறிணையாகப் பயன் படுவதும் கவனித்தற்பாலன.

### 3.5 ஆண்பால்—பிறபால்

இன்னும் சில மொழிகளில் ஆண்பால்—பிறபால் என்ற பகுப்பு காணப்படுகிறது.

எனவே மொழிகளில் காணப்படும் பால்பகுப்பு பொருளை அடிப்படையாக வைத்து அன்று என்பது விளங்கும். அங்ஙன மாயின் எல்லா மொழிகளிலும் ஒரே விதமான பால் பகுப்பே இருக்க வேண்டும். பெண்களைக் குறிப்பன எல்லா மொழி யினருக்கும் பெண்ணாகவே இருத்தல் வேண்டும். ஆனால் ஒரு மொழியினர் உயிர்த்திணையில் ஆணோடு அடக்கியும் இன்னொரு மொழியில் பெண்பால் எனத் தனிப்பாலாகவும் மற்றொரு மொழி யில் அஃறிணைப்பாலாகவும் இன்னொரு மொழியில் பிற எல்லாப் பால்கள் ஒன்றாகவும் பெண்பால் தனியாகவும் உள்ளமை நினைவு கூரத்தக்கது. இது போன்றே பிறவற்றைக் குறிக்கும் சொற்களும், இதற்குக் காரணம் மொழிகளின் அமைப்பே.

மொழிகளில் காணப்படும் பதிலிடு பெயர்கள், வினை விகுதிகள் வினையாலணையும் பெயர்களில் காணப்படும் விகுதிகள், சிறப்புச் சுட்டுகள் (definite article), பொதுச் சுட்டுகள் (indefinite article) வினாப் பெயர்கள் (interrogative pronouns), முழுமைப் பதிலிடு பெயர்கள் (Pronouns of totality) போன்றவை பால் பகுப்புக்குக் காரணங்களாக அமைகின்றன.

### 3.6 பால் காட்டும் ஒட்டுக்கள்

எல்லாப் பெயர்களிலும் பால் காட்டும் உருபுகள் இருக்க வேண்டும் என்ற நியதி இல்லை. சிலவற்றில் இல்லாமலும் இருக்கலாம். தமிழ் மொழியில் இந்நிலையைக் காணலாம். இராமன், கண்ணன் போன்றவற்றில் உள்ளன. அகத்தியலிங்கம்

போன்றவற்றில் இல்லை. எனினும் இராமன், கண்ணன் போன்றே அகத்தியலிங்கம் என்ற பெயரும் ஆண்பால் பெயராகக் கருதப்படு கிறது. வேறு சில மொழிகளில் பால் காட்டும் உருபுகளே இருப்பதில்லை. ஆங்கில மொழியில் சிலவற்றுள் உண்டு (god, goddess போன்று); பலவற்றில் இல்லை. (man, woman, boy, girl).

## 3.7 பால் பகுப்பில் மாற்றம்

ஒரே மொழியிலும் காலப்போக்கில் இலக்கணப் பால்பகுப்பில் மாற்றம் ஏற்படலாம். பழைய ஆங்கிலத்தில் wif (wife) என்ற சொல் அஃறிணை wifman (woman) என்ற சொல் ஆண்பால். mus (mouse), crawe (crow) போன்றவை பெண்பால். stan (stone), mona (moon) போன்றவை ஆண்பால். hand, sunne (sun) போன்றவை பெண்பால். ஆனால் இன்று இவை இவ்வாறு கருதப்படுவதில்லை. wife, woman ஆகிய இரண்டுமே பெண்பால் சொற்களாகக் கருதப்படுகின்றன. mouse, crow, stone, moon, hand போன்ற எல்லாச் சொற்களையும் அஃறிணைச் சொற்களாகக் கொள்ளுவர். முந்தியவை she என்ற பதிலீடு சொல்லால் குறிக்கப் படும் பின்னவையோ it என்ற சொல்லால் கூறப்படும்.

## 3.8 தமிழ் மொழியில் பால் பகுப்பு

தமிழ் மொழியில் உள்ள பால் பகுப்பினை எடுத்து நோக்கி னாலும் இவ்வுண்மை புலப்படும். தமிழ் இலக்கண அறிஞர்கள் பெயர்ச் சொற்களை உயர்திணை, அஃறிணை என்றும், உயர் திணையை ஆண்பால், பெண்பால் என்றும், அஃறிணையை ஒன்றன்பால், பலவின்பால் என்றும் பிரிப்பர். இத்தகைய பிரிப்பிற்குக் காரணம் தமிழ் மொழியின் அமைப்பேயாகும்.

தமிழ் மூவிடப் பெயர்களில் காணப்படும் அவர், அவர்கள், யார், எல்லாரும் ஆகிய சொற்களில் ஆண்—பெண் வேற்றுமை இல்லை. இவை பொதுவாக உயர்திணைப் பலர்பாலை உணர்த் தும் சொற்கள். ஆண்பாலுக்கும் பெண்பாலுக்கும் பொதுவானவை. இந்நிலையில்தான் உயர்திணை—அஃறிணைப் பகுப்பினைத் தமிழ் இலக்கண அறிஞர்கள் கண்டு நின்றனர். அவன், எவன் ஆகிய சொற்கள் ஆண்பாலினையும், அவள், எவள் போன்ற சொற்கள் பெண்பாலினையும் காட்டுகின்ற நிலையில்தான் உயர் திணையில்

ஆண்பால், பெண்பால் பகுப்பும், அஃறிணையில் ஒன்றன்பால், பலவின்பால் பகுப்பும் ஏற்பட்டன எனக் கருதலாம். மேலும், இதே நிலையினைத்தான் வினையாலணையும் பெயர்களிலும், முற்றுவினைச் சொற்களின் விகுதிகளிலும் காணுகிறோம்.

தமிழ் மொழியில் காணப்படும் மூவிடப் பெயர்கள், வினாப் பெயர்கள், முழுமைப் பதிலிடு பெயர்கள் போன்ற இன்னோரன்ன பெயர்களும், வினையாலணையும் பெயர், முற்றுவினை விகுதி களுமே பால் பகுப்பிற்குக் காரணம் என்பது நன்கு விளங்கும்.

### 3.9 ஆண்பால் பெயர்கள்

மனித இனத்தில் ஆண்களைக் குறிக்கும் பெயர்ச் சொற்களே ஆண்பால் பெயர்கள். கண்ணன், இராமன் போன்ற சொற்கள் மட்டுமின்றி காமாட்சி, மீனாட்சி, சுந்தரம் போன்ற சொற்களும் ஆண்களைக் குறிக்குமாயின் ஆண்பால் சொற்களே. சில சொற்கள் (அகத்தியலிங்கம், தாணு, பறவைக்கரசு) எந்த விகுதியையும் கொண்டிரா. அவை ஆணைக் குறிப்பதால்

| | |
|---|---|
| அகத்தியலிங்கம்<br>தாணு<br>பறவைக்கரசு | வந்தான்<br>வருவான் |

போன்று ஆண்பால் விகுதிகளைக் கொண்டுவரும்.

இன்னும் சில சொற்களோ பெண்பாலுக்கும் வருவனவாக (காமாட்சி, மீனாட்சி, சுந்தரம்) இருக்கும். எனினும் இவையெல் லாம் ஆண்களைக் குறிக்குமாயின் ஆண்பால் சொற்களே.

இப்பெயர்களைக் குறிக்க, அவன் போன்ற சொற்களைப் பயன்படுத்தலாம்.

கண்ணன் வந்தான், அவன் நல்லவன்
கண்ணன் வந்தான்; அவனைப் பார்த்தேன்
அவன் தான் கண்ணன்
இவன் இராமன்
எவன் கண்ணன்?

இவற்றில் ஆண்பால் விகுதிகளையும் பயன்படுத்துவர்.

வந்தான், வந்தவன், நல்லவன்
இராமன் வந்தான்
இராமன்தான் வந்தவன்
இராமன் நல்லவன்
இராமன் நல்லன்

போன்றவை இத்தன்மையைக் காட்டும்.

ஒரு சில சிறப்புப் பெயர்களிலும், பலவேறு ஜாதிப் பெயர்களிலும், உறவுப் பெயர்களிலும், தொழில் காட்டும் பெயர்களிலும் ஆண்பால் ஒட்டுக்களைக் காணலாம்.

-அன், -ஆன், -வன், -ஞன், -மான், -காரன், -அவன் ஆகிய ஒட்டுக்கள் ஆண்பால் காட்டும்.

எடுத்துக்காட்டுக்கள்

3.9.1 -அன்

இராமன், கண்ணன், நடராஜன்
பாணன், கொல்லன், பள்ளன், இடையன், பறையன்,
வெள்ளாளன், வேடன், கொத்தன், புலையன்
அண்ணன், மாமன், மைத்துனன்
திருடன், செவிடன், தோழன், அரசன், காதலன்,
பாங்கன்

3.9.2 -ஆன்

கண்ணபிரான்
வண்ணான், நாடான், கோனான், பிரான்
மச்சான், அத்தான்
நாட்டான், வடக்கத்தியான்

3.9.3 -வன்

எழில்முதல்வன், சிறுவன், முதல்வன், புதல்வன்,
தலைவன், பகைவன், செல்வன், கள்வன், குயவன்
கிழவன், முடவன், கயவன், உழவன்

3.9.4 -ஞன்

அறிஞன், கலைஞன்

3.9.5 -காரன்

வேலைக்காரன், பால்காரன், வீட்டுக்காரன்

3.9.6 -மான்

சேரமான், கோமான்

3.9.7 -அவன்

முன்னவன், பின்னவன், தென்னவன்

### 3.10 பெண்பால் பெயர்கள்

மனித இனத்தில் பெண்களைக் குறிக்கும் பெயர்களே பெண் பால் பெயர்கள். பொன்னம்மாள் போன்ற பெயர்களில் அம்மாள் போன்ற பெண்பால் ஒட்டுக்கள்(சொற்கள்) உள்ளன. ஆனால் சில சொற்கள் (மீனாட்சி, காமாட்சி) ஆண்பாலுக்கும் பெண்பாலுக்கும் பொதுவாக உள்ளன. இன்னும் சில சொற்களோ (வடிவு பெண்..) எந்தவித ஒட்டுக்களையும் கொண்டிருக்கவில்லை. இப்பெயர்ச் சொற்கள் எல்லாம் பெண்பாலைக் குறிக்குமாயின் பெண்பால் சொற்களே.

இப்பெயர்களைக் குறிக்கப் பதிலிடு பெயர்களாக அவள் போன்ற சொற்களைப் பயன்படுத்துவோம்.

பொன்னம்மாள் வந்தாள். அவள் நல்லவள்.

இத்தகைய சொற்கள் வினைச் சொற்களில் பெண்பால் விகுதிகளை ஏற்கும்.

பொன்னம்மாள் வந்தாள். அவளைக் கண்டேன்.
அவள் பொன்னம்மாள்.
இவள் பொன்னம்மாள்.
எவள் பொன்னம்மாள் ?

வந்தாள், வந்தவள், நல்லவள் போன்ற சொற்கள் இப் பண்பைக் காட்டும்.

முன்னர்க் குறிப்பிட்டபடி ஒரு சில சிறப்புப் பெயர்களிலும் பல்வேறு ஜாதிப் பெயர்களிலும் உறவுப் பெயர்களிலும் தொழில் காட்டும் பெயர்களிலும் பெண்பால் ஒட்டுக்களைக் காணலாம்.

3.10.1 -அள்
மகள், பிறள்

3.10.2 -த்தி
குறத்தி, குயத்தி, கிழத்தி
பள்ளத்தி
ஒருத்தி, முடத்தி

3.10.3 -ஆத்தி
நாடாத்தி
பாப்பாத்தி
வண்ணாத்தி

3.10.4 -ச்சி
ஆய்ச்சி
இடைச்சி
செட்டிச்சி

3.10.5 -அச்சி
செம்படவச்சி
பள்ளச்சி
வெள்ளாளச்சி
தமிழச்சி
வேடச்சி

3.10.6 -ஐ
கொற்றவை
பரத்தை
ஆசிரியை

3.10.7 -ஆள்
மச்சாள்
நாட்டாள்
வடக்கத்தியாள்

3.10.8 -ஆட்டி
பிராட்டி, கண்ணாட்டி

3.10.9 -மாட்டி

பெருமாட்டி

3.10.10 -காரி

வேலைக்காரி
பால்காரி
வீட்டுக்காரி

3.10.11 -அவள்

முன்னவள்
பின்னவள்

3.10.12 -வி

செல்வி
புதல்வி
மாணவி
தலைவி
மனைவி

3.10.13 அம்மாள்

பொன்னம்மாள்
வேலம்மாள்
பகவதியம்மாள்

3.10.14 -ஐ

ஆசிரியை
நடிகை

அம்மாள் என்பது தனியாக வரும்போது வேறு பொருள்படு மாயினும் அது பெயர்களுடன் இணைந்து வரும்போது பெண்பால் காட்டும் ஒட்டாகவே உள்ளது.

### 3.11.0 பலர்பால் பெயர்கள் (Epicene plural)

பலரைக் குறிக்கும் பெயர்களையே பலர்பால் பெயர்கள் என்கிறோம். பொதுவாகப் பல மக்களைக் குறித்துவரும் எல்லாப பெயர்களும் பலர்பால் பெயர்களாகக் கருதப்படும்.

| | |
|---|---|
| இந்தியர்கள் | மக்கள் |
| ஆசிரியர்கள் | வேந்தர்கள் |
| ஆசிரியைகள் | நடிகைகள் |

போன்ற சொற்கள் பலர்பால் சொற்கள்.

பொதுவாக ஆண்பால் பன்மை, பெண்பால் பன்மை என்ற பகுப்பைப் பலமொழிகளில் காணலாம். ஆனால் தமிழில் ஆண்பால் பன்மை, பெண்பால் பன்மை, ஆண்—பெண்பால் பன்மை ஆகிய மூன்றையும் இணைத்தே பலர்பால் பன்மை என்கிறோம். இத்தகைய ஒரு பால்பகுப்பைத் திராவிடமொழிகளில் காணலாம். குறிப்பாகத் தமிழ்மொழியில் இத்தகைய பகுப்பு காணப்படுகிறது. இதற்குக் காரணமும் தமிழ்மொழியில் காணப்படும் அவர்கள் போன்ற மூவிடப் பெயர்களே.

கண்ணனும் இராமனும் வந்தார்கள்

என்பதை

அவர்கள் வந்தார்கள்

எனக் கூறமுடியும். அதாவது, ஆண்பால் பன்மையை அவர்கள் என்ற சொல்லால் கூறமுடிகிறது இதுபோன்றே

கண்ணனும் வள்ளியும் வந்தார்கள்

என ஆண்—பெண் பன்மையையும்

மெல்லியும் கோதையும் வந்தார்கள்

எனப் பெண்பால் பன்மையையும்

அவர்கள் வந்தார்கள்

எனக் கூறமுடிகிறது. இந்நிலையில்தான் ஆண் பன்மை, பெண் பன்மை எனப் பிரிக்காமல் பலர்பால் பன்மை எனத் தமிழ் இலக்கண அறிஞர்கள் வகுத்துள்ளனர். மேலும் இவை அனைத்தும் ஒரே விதமான விகுதியையே கொண்டு முடிகின்றன.

| | | |
|---|---|---|
| கண்ணனும் இராமனும்<br>கண்ணனும் கோதையும்<br>கோதையும் மெல்லியும் | வருகின்றனர்<br>வந்தார்கள்<br>வந்தனர்<br>வருகின்றார்கள் | |

போன்ற வாக்கியங்கள் இப்பண்பினைக் காட்டும்.

இத்தகைய நிலையினை வினையாலணையும் பெயர்களிலும் காணமுடியும்.

| | |
|---|---|
| இராமனும் கண்ணனும்<br>கண்ணனும் மெல்லியும்<br>கோதையும் மெல்லியும் | தான் என்னைப் பார்த்தவர்கள் |

மேலும் எலலாரும் என்ற முழுமைப் பதிலிடு பெயரும் இப் பகுப்புக்குக் காரணமாகும். இதுவும் ஆண் பன்மை, பெண்பன்மை, ஆண்—பெண் பன்மை என்ற மூன்றையும் குறிக்கும் நிலையிலேயே உள்ளது. இப்பண்பினைப் பன்மை குறித்துவரும் வினாப் பெயர் களிலும் (யாரெல்லாம்) காணலாம்.

### 3.11.1 பலர்பால் ஒட்டுக்கள்

பலர்பால் ஒட்டுக்களாகப் பல உள்ளன. பொதுவாக இவ் வொட்டுக்கள் பலவேறு பதிலிடு பெயர்களுடனும், பொதுப்பெயர் களுடனும், சாதிப் பெயர்களுடனும், தொழில் சுட்டும் பெயர் களுடனும் வரும். பதிலிடு பெயர்களில் வரும் ஒட்டுக்கள் பற்றி முன்னர்க் குறிப்பிடப்பட்டது.

–அர், –அர்கள், –வர், –வர்கள், –ஞர், ஞர்கள், –மார், –மார்கள், –கள், –இர் ஆகிய ஒட்டுக்கள் பலர்பால் ஒட்டுக் களாகப் பயன்படுகின்றன.

#### 3.11.1.1 –அர்

இவ்வொட்டு ஆண்பால் ஒட்டாகிய –அன் வரும் இடங்களில் எல்லாம் வருதல் காணலாம்.

| | |
|---|---|
| அரசர் | பார்ப்பனர் |
| சிறுவர் | காதலர் |
| பாங்கர் | செவிடர் |
| திருடர் | தோழர் |

போன்ற சொற்களில் எல்லாம் இவ்வொட்டு வருதல் காணலாம். இப்பெயர்கள் பன்மையைக் காட்டுவதோடு உயர்வு ஒருமையையும் காட்டுவதாக உள்ளன.

3.11.1.2 -அர்கள்

இது ஒரு இரட்டைப்பன்மை ஒட்டாகும் -அர், -கள் என்ற இரு ஒட்டுக்களும் இணைந்த நிலையில்தான் இவ்வொட்டு உருவாயிற்று எனக்கருதலாம். -அர், -கள் ஆகியவை தனித் தனியே நின்று பன்மை காட்டுவது போலவே இதுவும் பன்மை காட்டி நிற்கும். பொதுவாக -அர் போன்ற ஒட்டுக்கள் உயர்வு ஒருமையைக்காட்டி நிற்கும் காரணத்தினால் அதிலிருந்து பன்மையைப் பிரித்து அறியும் பொருட்டே இவ்விரட்டைப் பன்மை ஒட்டுக்கள் தோன்றின எனக்கருதுவர். இந்நிலையை அவர்கள் இவர்கள் ஆகிய பதிலிடு பெயர்களிலும் காணமுடியும். இப் பதிலிடு பெயர்கள் மீண்டும் பன்மையோடு உயர்வு ஒருமையையும் காட்டுதல் நினைவுகூரத்தக்கது. ஆனல் இரட்டைப் பன்மை ஒட்டுக் களைப் பெற்ற பெயர்கள் பன்மையையே காட்டி நிற்கின்றன.

இவ்விரட்டைப் பன்மை வழக்கு -மார்கள், -ஞர்கள், —வர்கள் ஆகியவற்றிலும் உள்ளது. பேச்சு வழக்கில் நாடார்கள்மார்கள், வெள்ளாளர்மார்கள் போன்ற பெயர்களில் மூன்று பன்மை ஒட்டுக் கள் இருப்பது காணத்தக்கது. -கள், -மார், -கள், -அர், -மார், -கள் ஆகியவை இவ்வொட்டுக்களாகும்.

முன்னர்க் குறிப்பிட்டபடி —அர்கள், அர் வரும் இடங்களில் எல்லாம் வந்து பன்மை காட்டும்.

| | |
|---|---|
| அன்பர்கள் | ஆசிரியர்கள் |
| அரசர்கள் | தோழர்கள் |
| தமிழர்கள் | பார்ப்பனர்கள் |
| பாணர்கள் | நாயகர்கள் |
| வேடர்கள் | புலையர்கள் |

போன்றவை எடுத்துக்காட்டுக்களாகும். இவற்றைப் போன்றே பெண்பால் காட்டும் பெயர்களிலும் இவ்வொட்டு வரும்.

| | |
|---|---|
| அரசியர்கள் | சிறுமியர்கள் |
| புதல்வியர்கள் | தலைவியர்கள் |

போன்றவை இந்நிலையைக் காட்டும். இவ்வொட்டு -கள் என்ற ஒட்டுடன் பதில்நிலை வழக்கில் வருவது குறிப்பிடத்தக்கது.

| | |
|---|---|
| தலைவிகள் | தலைவியர்கள் |
| கொழுந்திகள் | கொழுந்தியர்கள் |

இதன்கண் வரும் -அர் பொதுவாகப் பன்மையைக் குறிப்பதாக இருந்தாலும் உயர்வுச் சிறப்பையும் குறிப்பதாகவும் கொள்ளலாம்.

### 3.11.1.3 -வர்

-வன் வரும் பெயர்களில் எல்லாம் -வர் வந்து பன்மை காட்டும். -அர், -அர்கள் போன்று -வர், -வர்கள் போன்றவையும் காணப்படுகின்றன. -அர் போன்றே -வர் உயர்வு ஒருமையையும் காட்டவல்லது.

| | |
|---|---|
| கிழவர் | செல்வர் |
| சிறுவர் | புதல்வர் |
| முதல்வர் | முடவர் |

### 3.11.1.4 -வர்கள்

-வர் போன்றவை உயர்வு ஒருமையையும் காட்டுகிற நிலையில் பன்மையைக் காட்டுதற்கென்றே இரட்டைப் பன்மைகள் உருவாயின எனக் கருதலாம். இந்நிலையில் -வர்கள் பன்மை காட்டும் ஒரு ஒட்டாக உள்ளது. பன்மையைக் காட்டுவதில் -வர், -வர்கள் பதில்நிலை வழக்கில் உள்ளது.

| | |
|---|---|
| செல்வர் | செல்வர்கள் |
| சிறுவர் | சிறுவர்கள் |
| கிழவர் | கிழவர்கள் |
| புதல்வர் | புதல்வர்கள் |
| முடவர் | முடவர்கள் |

### 3.11.1.5 -ஞர்

-ஞன் வரும் இடங்களில் எல்லாம் -ஞர் பன்மை ஒட்டாக

வந்து பன்மை காட்டி நிற்கும்.

| | |
|---|---|
| அறிஞர் | கலைஞர் |

இது உயர்வு ஒருமையிலும் வருவது கருதத்தக்கது.

### 3.11.1.6 -ஞர்கள்

-ஞர் உயர்வு ஒருமையையும் காட்டும் நிலையில் -ஞர்கள் என்னும் இரட்டைப் பன்மை ஒட்டு உருவாயிற்று எனக் கருதலாம். இந்நிலையில் -ஞர்கள் பன்மை ஒட்டாக உள்ளது. -ஞர், -ஞர்கள் ஆகியவை பதில்நிலை வழக்கில் உள்ளன.

| | |
|---|---|
| அறிஞர் | அறிஞர்கள் |
| கலைஞர் | கலைஞர்கள் |
| கொலைஞர் | கொலைஞர்கள் |
| வலைஞர் | வலைஞர்கள் |
| இளைஞர் | இளைஞர்கள் |

### 3.11.1.7 -மார்

இதுவும் ஒரு பலர்பால் ஒட்டு. சில கிளைமொழிகளில் இது பெருவழக்காக உள்ளது. -மான் என்ற ஒட்டிலிருந்து இது உருவாகியிருக்கலாம் எனக் கருதுவர். இது ஆண்பால், பெண்பால் ஒட்டுக்களுக்குப் பின்னரும், ஆண்பால், பெண்பால் பெயர்களுக்குப் பின்னரும் வரும்.

உயர்வு ஒருமை ஒட்டுக்களுக்குப் பின்னரும் வருதல் காணத்தக்கது.

| | | |
|---|---|---|
| அண்ணன் + மார் | > | அண்ணன்மார் |
| அண்ணி + மார் | > | அண்ணிமார் |
| அத்தான் + மார் | > | அத்தான்மார் |
| வெள்ளாளன் + மார் | > | வெள்ளாளன்மார் |
| தங்கை + மார் | > | தங்கைமார் |
| தம்பி + மார் | > | தம்பிமார் |
| தேவர் + மார் | > | தேவர்மார் |

இவ்வாறு ஆண்பால் ஒட்டுக்களுக்குப் பின்னர் வருகிற நிலை வேறு சில ஒட்டுக்களுக்கு இல்லை.

| | | |
|---|---|---|
| அரசன் | : | அரசர் |
| புதல்வன் | : | புதல்வர் |
| அறிஞன் | : | அறிஞர் |

என வருவது இங்குக் குறிப்பிடத் தக்கது. ஆனால் -அர் போன்ற ஒட்டுக்கள் பெண்பால் ஒட்டுக்களுடன் வருதல் உண்டு.

| | | |
|---|---|---|
| அரசி | : | அரசியர்கள் |
| புதல்வி | : | புதல்வியர்கள் |

மேலும் -மார் ஒட்டு -கள் என்ற ஒட்டுக்குப் பின்னரும் வருதல் சில கிளை மொழிகளில் உண்டு.

நாடாக்கள்மார்

இவ்வொட்டும் வேறுசில ஒட்டுக்களும் பதில்நிலை வழக்கிலும் உள்ளன.

| | |
|---|---|
| அரசியர் | அரசிமார் |
| புதல்வியர் | புதல்விமார் |
| தம்பிகள் | தம்பிமார் |
| தங்கைகள் | தங்கைமார் |

### 3.11.1.8 -மார்கள்

இதுவும் ஒரு இரட்டைப் பன்மை ஒட்டாகும். -மார், -கள் என்ற இரண்டு ஒட்டுக்கள் இணைந்து நின்று ஒரே ஒட்டு போன்று உள்ளது. -அர்கள், -வர்கள், -ஞர்கள் ஆகியவை முறையே -அர், -வர், -ஞர் ஆகியவை உயர்வு ஒருமையைக் குறிப்பிட்ட காரணத்தினுல் உண்டான இரட்டைப் பன்மை ஒட்டுக்கள். ஆனால் -மார் உயர்வு ஒருமையைக் காட்டாத நிலையிலும் -மார்கள் என்ற இரட்டைப் பன்மை ஒட்டு உருவாகி இருப்பது இங்குக் குறிப்பிடத் தக்கதாகும். இந்நிலையில் பிற இரட்டைப் பன்மை ஒட்டுக்களுக்கும் இதற்கும் இடையே வேற்றுமையைக் காணலாம்.

இது -மார் வரும் இடங்களில் எல்லாம் வந்து நின்று பன்மை காட்டும்.

| | |
|---|---|
| அரசிமார்கள் | அண்ணன்மார்கள் |
| தம்பிமார்கள் | புதல்விமார்கள் |

இவ்வொட்டு பன்மை ஒட்டுக்களுடனும் வரும்.

| | |
|---|---|
| குருக்கள்மார்கள் | நாடாக்கள்மார்கள் |
| தேவர்மார்கள் | வெள்ளாளர்மார்கள் |

இந்நிலையில் மூன்று பன்மை ஒட்டுக்கள் (–கள், –மார், –கள்) (–அர், –மார், –கள்) வருதல் காணலாம்.

### 3.11.1.9 –கள்

இதுவும் பலவேறு ஆண்பால், பெண்பால் பெயர்களுடனும் வரும். அத்துடன் பலவின்பால் ஒட்டாகவும் உள்ளது. பொது வாக, பால்காட்டும் ஒட்டுக்கள் இல்லாத ஆண்பால் பெயர்களு டனும் (தம்பி போன்று) எல்லாப் பெண்பால் பெயர்களுடனும் வரும்.

| | |
|---|---|
| தம்பிகள் | ஆண்கள் |
| தோழிகள் | சிறுமிகள் |
| பெண்கள் | தந்தைகள் |
| அரசிகள் | தங்கைகள் |

பேச்சு வழக்கில் அண்ணன்கள், மகன்கள், கள்ளன்கள் போன்று ஆண்பால் ஒட்டுக்களுக்குப் பின்னரும் வரும். இந்நிலையில் இது –மார் போன்றவற்றுடன் பதில்நிலை வழக்கில் வரும்.

| | |
|---|---|
| தம்பிமார் | தம்பிகள் |
| தோழிமார் | தோழிகள் |
| தாய்மார் | தாய்கள் |
| அண்ணன்மார் | அண்ணன்கள் |
| அரசிமார் | அரசிகள் |

### 3.11.1.10 –இர்

மகளிர் போன்ற ஒருசில சொற்களில் –இர் ஒட்டு காணப்படுகிறது.

| | |
|---|---|
| மகளிர் | பெண்டிர் |

## 3.11.2 கூட்டுப் பன்மை

பன்மையை ஒரே பொருளின் பன்மையைக் குறிப்பது, பல

வேறு பொருட்களின் பன்மையைக் குறிப்பது என இருவேறு வகையாகப் பிரிக்கலாம். இதுவரை கூறப்பட்டவை அனைத்தும் முன் பிரிவைச் சார்ந்தன. அண்ணமார், தம்பிமார் போன்ற சொற்கள் அண்ணன் பலரையும், தம்பி பலரையும் காட்டும். ஆனால்

அண்ணன்தம்பிமார்
அக்காத்தங்கைமார்
மாணவமாணவியர்கள்
ஆசிரிய ஆசிரியைகள்

போன்ற சொற்கள் ஒன்றுக்கு மேற்பட்ட இனத்தின் பன்மையைக் காட்டுவன. இச் சொற்களில் பன்மை விகுதிகள் இறுதிச்சொற்களுடன்தான் இணைக்கப்படுகின்றன. இத்தகைய சொற்கள் இன்றையத் தமிழில் ஏராளமாகக் காணக்கிடக்கின்றன. (முத்துச் சண்முகன், 1977:84)

இப் பன்மையும் பிற பன்மையைப் போலவே ஒரே பதிலிடு பெயர்களை எடுத்தே வரும். அண்ணன்மார் என்பதை அவர்கள், இவர்கள் என குறிப்பிடுவது போலவே அண்ணன் தம்பிமார் என்பதையும் அவர்கள் இவர்கள் என்று கூறுதல் குறிப்பிடத்தக்கது.

### 3 12.0 ஒன்றன்பால் பெயர்கள் (Neuter Singular)

முன்னர்க் குறிப்பிட்டபடி மனித இனத்தைச் சாராத பிற பொருட்களையும் உயிர் இனங்களையும் குறிக்கும் பெயர்கள் அனைத்தும் அஃறிணையைச் சார்ந்தன. அஃறிணை என்ற சொல் அல் + திணை எனப் பிரிக்கப்படும். உயர்திணை அல்லாத பிற இனம் அனைத்தும் அஃறிணை என்பதை அடிப்படையாகக் கொண்டே இச்சொல் உருவாயிற்று எனக் கொள்ளலாம். இப் பிரிவின்கண் உயிர் உள்ள விலங்கு, பறவை போன்ற உயிரினங் களும், கல், வீடு, மரம் போன்ற உயிர் இல்லாத பொருட்களும் அடங்கும். இத்தகைய பிரிப்புக்கும் காரணம் தமிழ் மொழியின் அமைப்பே என்பது குறிப்பிடத்தக்கது. பசு, காளை, புலி, கரடி போன்ற உயிர் இனங்களைக் குறிக்கும் சொற்களையும், அது என்றே குறிப்பிடுகிறோம். இதைப் போன்றே உயிர் இல்லாத கல், வீடு போன்ற சொற்களையும், அது என்ற சொல்லாலேயே குறிப்பிட்டு

நிற்கிறோம். இந்நிலையில் உயிர் இனங்களுக்கும், உயிர் இல்லாத இனங்களுக்கும் இடையே வேறுபாட்டினை நாம் காண்பதில்லை. இதைப் போன்றே

காளை வந்தது

எனக் குறிப்பிட்டு, எது வந்தது? அல்லது என்ன வந்தது? எனக் குறிப்பிடுகிறோம். இதே நிலையைத்தான்

நான் ஒரு வீடு வாங்கினேன்

என்பதையும் நீ என்ன வாங்கினாய்? எனவும்

இக்காளைகளில் எது நல்லது
இவ்வீடுகளில் எது நல்லது

எனவும் எது, என்ன என்ற பதிலிடு பெயர்களை இட்டுக் குறிப்பிடுகிறோம். இதனால்தான் தமிழ் இலக்கண அறிஞர்கள் உயிர் உள்ளனவற்றையும் உயிர் இல்லாதனவற்றையும் அஃறிணை என இணைத்து நின்றனர்.

மேலும் இவற்றைக் குறிக்கும் விகுதிகளும் ஒன்றாகக் காணப்படுகின்றன.

பசு வந்தது

எனக் குறிப்பிடுவது போலவே

சிக்காகோ வந்தது
வீடு விலைக்கு வந்தது

எனவும் கூறுகிறோம். இவை அனைத்துமே அஃறிணை ஒருமையைக் குறிக்கும் விகுதியாகிய அது என்பதைக் கொண்டு வந்துள்ளது.

இதுமட்டுமின்றி வினையாலணையும் பெயர்களும் உயிர் உள்ளவற்றுக்கும், உயிர் இல்லாதனவற்றுக்கும் ஒன்றாக உள்ளது.

இங்கு வந்தது என் பசு
இங்கு நிற்பது என் மரம்
இங்கு வந்தது என் புத்தகம்

போன்ற வாக்கியங்களில் காணப்படும் வினையாலணையும் பெயர்களாகிய வந்தது, நிற்பது போன்றவை ஒன்றன்பால் பகுப்பின் காரணத்தைக் காட்டும். எனவே இதுகாறும் கூறியவற்றால் களிறு, பிடி போன்றவை ஆண் என்றும் பெண் என்றும் காட்டினும் அது, இது, எது, என்ன போன்ற பதிலிடு பெயர்களின் ஆட்சியும், முற்றுவினைகளில் காணப்படும் விகுதியும், வினையாலணையும் பெயர்களில் காணப்படும் விகுதியும் ஒன்றன்பால் பகுப்பின் காரணத்தைக் காட்டி நிற்கும்.

பொதுவாக ஒன்றன்பால்காட்டும் ஒட்டுக்களைத் தமிழ்ப்பெயர்ச் சொற்களில் காணமுடிவதில்லை. ஒரு பொருளைச் சுட்டும் பெயர்கள் அனைத்தும் ஒன்றன்பால் பெயர்களே. கல், மண், வீடு போன்ற ஆயிரக்கணக்கான சொற்களைக் காணமுடியும். இந்நிலையில் எவ்வித பன்மை காட்டும் ஒட்டும் இல்லாமல் நிற்கும் பெயர்கள் ஒன்றன்பால் காட்டும். பன்மை காட்டுவதற்கே பன்மை ஒட்டுக்களை இணைத்தல் வேண்டும். இந்நிலையைத் தமிழ்மொழியில் மட்டுமன்றி உலகமொழிகள் அனைத்திலும் காணலாம்.

வீடு, நாற்காலி, புலி, கரடி, பசு

போன்ற பொதுப்பெயர்கள் அனைத்தும் ஒன்றன்பால் சொற்களே.

இவை

ஒரு வீடு
ஒரு நாற்காலி
ஒரு புலி

போன்று ஒரு என்ற எண்ணுப் பெயர் அடையையும்,

வீடு ஒன்று
நாற்காலி ஒன்று
புலி ஒன்று

போன்று ஒன்று என்ற எண்ணையும் எடுத்து வரும்.

அண்ணாமலைநகர், நாகர்கோவில், சிக்காகோ போன்ற இடப் பெயர்களும் ஒன்றன்பால் பெயர்களே. இவை சிறப்புப் பெயர்கள் என்ற நிலையில் பொதுவாக ஒரு, ஒன்று போன்ற எண் அடைகளை எடுத்து வருவதில்லை.

*ஒரு சிக்காகோ
*ஒரு நாகர்கோவில்

என்றோ

*சிக்காகோ ஒன்று
*நாகர்கோவில் ஒன்று

என்றோ கூற முடிவதில்லை. காரணம் இவை சிறப்புப் பெயர்கள். குறிப்பிட்ட ஒன்றைக் குறிப்பிடுவதால் எண் அடைகளை இவை எடுப்பதில்லை. இதைப் போன்றே இரண்டு, மூன்று போன்ற எண் அடைகளையும் இவை ஏற்று வருவதில்லை. இந்நிலையில் இவை ஒன்றன்பால் பெயர்களாகும்.

### 3.13.0 பலவின்பால் பெயர்கள் (Neuter plural)

ஒன்றுக்கு மேற்பட்டவற்றைக் குறிக்கும் அஃறிணைப் பெயர்களே பலவின்பால் பெயர்கள். ஒன்றுக்கு மேற்பட்ட எவை ஆயினும் (இரண்டு, மூன்று, நான்கு, ........) இப்பிரிவின்கண் படும்.

உலகமொழிகள் சிலவற்றில் ஒருமை, இருமை, பன்மை என்ற முத்திறப் பாகுபாடு உண்டு என்று முன்னரே கண்டோம். ஆனால் தமிழ்மொழியில் ஒருமை, பன்மை என்ற இருதிற எண் பகுப்பே உள்ளது. பன்மை உயர்திணையில் பலர்பால் என்றும், அஃறிணையில் பலவின்பால் என்றும் அழைக்கப்படும்.

| | |
|---|---|
| வீடுகள் | ஆடுகள் |
| தெருக்கள் | பாக்கள் |

போன்ற சொற்கள் ஒன்றுக்கு மேற்பட்டவற்றைக் காட்டும் நிலையில் பலவின்பால் பெயர்கள் என்று கருதப்படும். இவை

இரண்டு வீடுகள்
மூன்று வீடுகள்
⋮ ⋮
ஆயிரம் வீடுகள்

போன்று ஒன்றுக்கு மேற்பட்ட எண்களைக் குறிக்கும் எண் அடைகளையும்

சில வீடுகள்
பல வீடுகள்
கொஞ்சம் மரங்கள்

போன்று வரையறை இல்லா எண் அடைகளையும் எடுத்துவரும். இத்துடன் இவற்றை

வீடுகள் இரண்டு
வீடுகள் ஆயிரம்
வீடுகள் பல
மரங்கள் கொஞ்சம்

போன்று கூறுதலும் இயலும். எனவே இத்தகைய பகுப்புக்குக் காரணம் பொருளுடன் தமிழ்மொழி அமைப்பும் என்பது விளங்கும்.

அங்கு பல வீடுகள் உள்ளன. அவை பெரியவை.
அந்த வீடுகளில் எவை பெரியவை?

போன்ற வாக்கியங்களில் காணப்படும் அவை, எவை என்ற பதிலிடு பெயர்களும் இப்பிரிவுக்குக் காரணம் என்பது விளங்கும்

மேலும் வினைமுற்றில் காணப்படும் வினைமுற்றின் விகுதிகளும் இப்பகுப்புக்குக் காரணமாகும்.

பல பசுக்கள் வந்தன
பல வீடுகள் உள்ளன

போன்ற வாக்கியங்கள் இப்பண்பினைக் காட்டும். இவற்றைப் போலவே

வந்தவை சில
வராதவை பல
வந்தவற்றைக் கண்டேன்

போன்ற வினையாலணையும் பெயர்களும் இப்பிரிவுக்கு அரண் கட்டி நிற்கும்.

தமிழில் ஒருமை காட்டும் அஃறிணைப் பெயரே பன்மை காட்டும் நிலையும் உண்டு.

பறவை வந்தது
பறவை வந்தன

எனக் கூறுதல் முடியும். இதனை இலக்கண அறிஞர்கள் பால்பகா அஃறிணைப் பெயர்கள் என்பர். ஒன்றுக்கு மேற்பட்ட வற்றைக்காட்டும் அடைகளைப் பலவின்பால் பெயர்கள் எடுத்து வரும்.

இரு பறவை
மூன்று மாடு

எனக் கூறுதல் இலக்கணப்பிழை ஆகாது. பேச்சு வழக்கில் -கள் விகுதி இணைத்தல் மிக அருகியே காணப்படும்.

நான் நாலு வீடு வாங்கினேன்

எனக் கூறுதலே பெரு வழக்கு.

### 3.13.1. பலவின்பால் ஒட்டுக்கள்

பலவின்பால் காட்டும் ஒட்டுக்களாக -க்கள், -கள் ஆகியவை காணப்படுகின்றன.

### 3,13.1.1. -க்கள்

# (C)VCu போன்ற அமைப்புடைய சொற்களுக்குப் பின்னரும்

பசுக்கள் வடுக்கள் தெருக்கள்
பருக்கள் குழுக்கள் கணுக்கள்
உருக்கள்

# (C)V: என்ற அமைப்புடைய சொற்களுக்குப் பின்னரும்

ஈக்கள் ஆக்கள் பூக்கள்
மாக்கள்

# ....... Ca· என்ற அமைப்புடைய சொற்களுக்குப் பின்னரும்

புறாக்கள் பேனாக்கள்
விழாக்கள்

வரும்.

### 3.13 1 2 -கள்

பிற இடங்களில் வரும்.

| | |
|---|---|
| மாடுகள் | ஊர்கள் |
| ஆடுகள் | நகரங்கள் |
| கற்கள் | சொற்கள் |

கற்கள், சொற்கள் போன்றவற்றில் -க்கள் இருப்பதாலேயே லகரம் றகரமாக மாறுகின்றது எனக் கருதலாம். இந்நிலையை ஆட்கள் போன்ற சொற்களிலும் காணமுடியும்.

| | |
|---|---|
| எழுத்துகள் | எழுத்துக்கள் |
| பேச்சுகள் | பேச்சுக்கள் |
| பாட்டுகள் | பாட்டுக்கள் |

போன்ற சொற்களில் -கள், -க்கள் என்ற இரண்டும் பதில்நிலை வழக்கில் வருதல் காணலாம். ஒரு சில கிளை மொழிகளில் -கள்ளும், இன்னும் சில கிளைமொழிகளில் -க்களும் வருதல் உண்டு.

## 3.14 0 உயர்வு ஒருமைப் பெயர்கள் (Honorific singular)

தமிழ் மொழியில் உயர்வு ஒருமைப் பெயர்கள் உள்ளன என முன்னரே கண்டோம். குறிப்பிட்ட ஒருவரையே ஒருவன் என்றும் அல்லது ஒருவர் என்றும் குறிப்பிடுகிறோம். இதைப் போன்றே பெண்பாலாரை ஒருத்தி என்றும் அல்லது ஒருவர் என்றும் குறிப்பிட்டு நிற்கிறோம். இங்குக் காணப்படும் ஒருவர் என்ற சொல் உயர்வு கருதி வந்ததேயாம். இதைப் போன்றே ஒருவரையே

கண்ணன் வந்தார்

என்றும்

கண்ணன் அவர்கள் வந்தார்கள்

என்றும்

கண்ணன் வந்தான்

என்றும் கூறுகிறோம். ஒரு நிலையில் ஒருவரைச் சாதாரணமாகவும் இன்னொரு நிலையில் அவரையே உயர்வாகவும், மற்றொரு நிலையில் மிக உயர்வாகவும் குறிப்பிடுகிறோம். கபிலன் என்றும் பரணன் என்றும் கூறும்அதே புலவர்களைக் கபிலர் என்றும், பரணர் என்றும் கூறும் நிலை உள்ளது. இந்நிலையில் -அர் என்ற ஒட்டு உயர்வு அல்லது மரியாதையைக் காட்டும் ஒட்டாக உள்ளது.

இதைப் போன்றே ஔவை என்றும், ஔவையார் என்றும் கூறு கிறோம். -ஆர் மரியாதை காட்டும் ஒட்டாக உள்ளது. இரும் பிடர்த் தலையார், செம்புலப்பெயல்நீரார், பிசிராந்தையார் போன்ற பெயர்களில் இப்பண்பினையும் ஒட்டினையும் காண்கிறோம்.

உயர்வு ஒருமைப் பெயர்கள், ஒருமையைக் காட்டும் நிலையில் ஒரு என்ற எண் அடையை எடுத்து வரும்.

ஒரு ஆசிரியர்
ஒரு புலவர்
ஒரு நண்பர்

எனக் கூறமுடியும். இந்நிலையில் ஆசிரியர், புலவர் போன்றவை உயர்வு ஒருமைப் பெயர்களாகும்.

### 3.14.1. உயர்வு ஒருமை ஒட்டுக்கள்

பொதுவாகப் பலர்பால் காட்டும் ஒட்டுக்கள் உயர்வு ஒருமை காட்டும் ஒட்டுக்களாகவும் வருகின்றன இந்நிலையில்தான் இரட்டைப் பன்மை ஒட்டுக்களாகிய -அர்கள், -ஆர்கள், -வர்கள், -ஞர்கள் போன்ற இரட்டைப் பன்மை ஒட்டுக்கள் உருவாயின என முன்னர்க் குறிப்பிடப்பட்டது. இந்நிலையில் இவை பன்மைகாட்டும் ஒட்டுக்களாகவே உள்ளன. -மார் ஒட்டு பன்மை காட்டுமே அன்றி உயர்வு ஒருமை காட்டி வருவதில்லை. எனினும் பதிலிடு பெயர்களாகிய அவர்கள், இவர்கள், தாங்கள் போன்றவை இரட் டைப் பன்மையாக இருப்பதோடு உயர்வு காட்டும் நிலையிலும் உள்ளன.

அவர்கள் ஒரு பேராசிரியர்
இவர்கள் ஒரு அரசியல்வாதி

போன்ற வாக்கியங்களில் அவர்கள், இவர்கள் போன்றவை உயர்வு ஒருமைப் பதிலிடு பெயர்களாக வருவது காணலாம்.

உயர்வு ஒருமை காட்டுவனவாக -அர், -ஆர், -வர், -ஞர், அவர்கள், அம்மையார், அடிகள் ஆகியவை உள்ளன. இவற்றுள் பின்னைய மூன்றும் தனிச் சொற்களாகக் கருதப்பட வேண்டியவை.

#### 3 14.1.1 -அர்

-அர் பன்மை ஒட்டு வரும் இடங்களில் எல்லாம் வந்து உயர்வு ஒருமை காட்டும்.

| | | |
|---|---|---|
| தோழர் | கபிலர் | |
| காதலர் | அரசர் | |
| பாணர் | செவிடர் | |
| திருடர் | பரணர் | பார்ப்பனர் |
| அவர் ஒரு பார்ப்பனர் | கபிலர் ஒரு புலவர் | |

3.14.1.2 -ஆர்

-அர் வராத பல பெயர்களின் பின்னர் இது வந்து உயர்வு காட்டும். ஆண் பெண் ஒட்டுக்களுக்குப் பின்னரும் வரும்.

| | |
|---|---|
| அண்ணனார் | தம்பியார் |
| தங்கையார் | தமக்கையார் |
| அண்ணியார் | செட்டியார் |
| அரசியார் | தேவியார் |
| மனைவியார் | மகளார் |
| புதல்வியார் | செல்வியார் |
| சண்முகனார் | இலக்குவனார் |
| இரும்பிடர்த்தலையார் | பிசிராந்தையார் |

போன்ற சொற்களில் -ஆர் உயர்வு காட்டுகிறது.

கண்ணனார் ஒரு சிறந்த பேச்சாளர்.
திலகவதியார் என் மூத்த தமக்கையார்.
இவர் அவருடைய மனைவியார்.

3.14.1.3 -வர்

-வர் பன்மை ஒட்டு வரும் இடங்களில் எல்லாம் இதுவும் வரும்.

| | | |
|---|---|---|
| ஒருவர் | அவர் | |
| புதல்வர் | முதல்வர் | |
| மூடவர் | கிழவர் | பெரியவர் |

அவர் ஒரு செல்வர்.
அவர் எங்கள் முதல்வர்.
கண்ணன் அவருடைய புதல்வர்.

3.14.1 4 -ஞர்

இதுவும் உயர்வு காட்டும் ஒட்டாகப் பயன்படுகிறது.

அறிஞர் கலைஞர்
இவர் ஒரு அறிஞர். அவர் ஒரு கலைஞர்.

3.14.1.5 அவர்கள்

அவர்கள் என்ற சொல்லும் சிறப்புப்பெயர்கள் பதவிப்பெயர்கள் போன்ற பல பெயர்களின் பின்னால் வந்து உயர்வு ஒருமை காட்டும்.

கண்ணன் அவர்கள்
ஆசிரியர் அவர்கள்
அமைச்சர் அவர்கள்
துணைவேந்தர் அவர்கள்
இந்திராகாந்தி அவர்கள்
கண்ணன் அவர்கள் வந்தார்கள்
துணைவேந்தர் அவர்கள் ஒரு ஞானி.

3.14.1.6 அடிகள்

இதுவும் உயர்வு ஒருமை ஒட்டாகவே பயன்படுகின்றது.

காந்தி அடிகள்
இளங்கோ அடிகள்
இராமலிங்க அடிகள்

3.14.1.7 அம்மையார்

பெண்பால் பெயர்களுடன் அதிலும் குறிப்பாகச் சிறப்புப் பெயர்களுடன் வந்து உயர்வு ஒருமை காட்டும்.

இந்திரா அம்மையார்
திலகவதி அம்மையார்
புனிதவதி அம்மையார்

3.14.1.8 அம்மையார் + அவர்கள்

அம்மையார் என்ற சொல்லுக்குப் பின்னரும் அவர்கள் வந்து இரட்டை உயர்வு ஒருமை சொல்லாக நிற்றல் காணலாம்.

இந்திராகாந்தி அம்மையார் அவர்கள்
புனிதவதி அம்மையார் அவர்கள்

போன்ற தொடர்களை இன்றையத் தமிழில் காணலாம்,

—o—

# 4

# வேற்றுமை

## 4.0 வேற்றுமையும் வேற்றுமை என்ற பெயரும்

மனித மொழியில் பலவேறு வகையான வாக்கியங்களைக் காண்கிறோம். எளிய ஒரு வாக்கியத்தில் பலவேறு பெயர்ச்சொற்களையும், பயனிலையாக ஒரு வினைச் சொல்லையும் காணலாம்.

கண்ணன் வந்தான்
கண்ணன் என்னை அடித்தான்
நான் கண்ணனுடன் வந்தேன்
நான் கண்ணனுக்குப் பழம் கொடுத்தேன்
நான் வீட்டில் இருந்தேன்

இவ்வாறு காணப்படும் பெயர்ச்சொற்களுக்கும் வினைச்சொற்களுக்கும் இடையே ஒரு விதமான பொருள் தொடர்பு இருப்பதனையும் உணர்கிறோம். இத்தகைய பொருள் (கருவி, காரணம், இடம் போன்று) தொடர்பைச் சில மொழிகளில் பெயரோடு இணைந்த ஒட்டுக்கள் (suffixes) காட்டி நிற்கின்றன. இத்தகைய ஒட்டுக்கள் இணைந்த பெயர்ச் சொற்களையே 'வேற்றுமைச் சொற்கள்' (என்னை போன்று) என அழைக்கிறோம். பொருள் தொடர்பினைத் தமிழில் 'வேற்றுமைப் பொருள்' எனக் கூறுகிறோம். ஒட்டுக்களை 'வேற்றுமை உருபு' என்பர் மரபு இலக்கண அறிஞர்கள்.

நான் இராமனைப் பார்த்தேன்

என்ற வாக்கியத்தில் பார் என்ற வினைக்கும் நான் என்ற பெயருக்கும் இடையே ஒரு விதமான பொருள் தொடர்பினையும், இவ்வினைக்கும் 'இராமன்' என்ற பெயருக்கும் இடையே

மற்றொருவிதமான பொருள் தொடர்பினையும் காண்கிறோம். முதல் தொடர்பினை எழுவாய் வேற்றுமையென்றும், இரண்டாவது தொடர்பினை – ஐ வேற்றுமையென்றும் குறிக்கிறோம். முதற் பொருளில் பார்த்தல் தொழிலைச் செய்பவன் நான் என்பது விளக்கக் காணலாம். எனவே தொழிலைச் செய்பவனைக் குறிப்பதாக முதல்வேற்றுமை உள்ளது என எண்ணலாம். இரண்டாவதோ பார்த்தல் தொழிலுக்கு ஆளாகிற ஒருவரைக் குறிக்கக் காண்கிறோம். எனவே அந்தத் தொழிலால் பாதிக்கப்படுகிற ஒன்றை இரண்டாவது வேற்றுமையாகக் கருதுகிறோம். இந்நிலையில்தான் தொல்காப்பியம் போன்ற இலக்கணநூல்கள் இவற்றை வேற்றுமை என்று அழைக்கும். ஆங்கிலமொழியில் இதனை 'Case' என்று அழைப்பர்.

'Case' என்ற ஆங்கிலச்சொல் பிரஞ்சுமொழியில் இருந்து உருவானதாகும். இச் சொல்லும் லத்தீன் மொழிச் சொல்லாகிய 'causes' என்ற சொல்லிலிருந்து உருவானது. இதுவும் கிரேக்க மொழிச் சொல்லாகிய 'ptoisis' என்பதிலிருந்து வந்தது. இச்சொல் '*வீழ்ச்சி*' (fall) அல்லது 'மாற்றம்' (change) எனப் பொருள்படும். இப்பொருளிலேயே ஜெர்மன் மொழியிலும், ரஷ்யன் மொழியிலும் வேற்றுமையைக் குறிக்கும் சொற்கள் உள்ளன. பொதுவாக மொழிகளில் வரும் முதலடிச் சொல்லிலிருந்து (absolute form) உருவாகிற நிலையில்தான் மாற்றம் என்ற பொருள் பொருந்தும் எனக் கருதலாம். அச் சொல்லிலிருந்து வேறுபடுகிற (ஒட்டுக்களால்) சொற்கள்தான் வேற்றுமைகளாக வருகின்றன. 'கண்ணன்' என்ற சொல்லிலிருந்துதான் 'கண்ணனை' என்ற சொல்லை உருவாக்குகிறோம். இந்நிலையில் இவற்றை 'Case' என்றும் 'வேற்றுமை' என்றும் அழைப்பது பொருத்தமாகவே உள்ளது.

'இராமன்' என்ற சொல் எந்தவிதமான மாற்றமும் இல்லாமல் நிற்க 'இராமனை', 'இராமனால்', 'இராமனோடு' போன்ற சொற்கள் அதினின்று மாறுபட்டு மாற்றம் கொண்டு வேறுபட்டு நிற்கிற நிலையில்தான் 'வேற்றுமை' என்ற சொல் பொருந்துவதாயிற்று எனக்கருதலாம். சமஸ்கிருதத்தில் இதனை 'விபக்தி' என்று கூறுவர். 'விபக்தி' என்ற சொல் 'மாற்றம்' அல்லது 'வேறுபாடு' (seperation, distinction, modification) எனப்பொருள்

படும் வெறும் அடிச்சொல்லிருந்து மாறுபட்ட நிலையில் இது காணப்படுவதால்தான் இதனை 'வேற்றுமை' என அழைத்தனர் போலும்![1]

பொதுவாக ஒரு பெயர்ச்சொல்லுக்கும், பயனிலையாக வரும் ஒரு வினைச்சொல்லுக்கும் இடையே உள்ள பொருள் தொடர்பு சில ஒட்டுக்களால் வேற்றுமை உருபுகளால் காட்டப்படும்போது தான் அதனை வேற்றுமை என்று அழைத்தனர்.

4.0 1 வேற்றுமை உருபும் பிற ஒட்டுக்களும்

எல்லா ஒட்டுக்களும் வேற்றுமை உருபுகளாகக் கருதப் படுவதில்லை. இதற்குக் காரணம் இவ்வொட்டுக்களைக்கொண்ட பெயர்ச் சொற்களுக்கும், வினைச்சொல்லுக்கும் இடையே உள்ள பொருள் தொடர்புதான். -உம், -தான் போன்ற ஒட்டுக்கள் பொருள் தொடர்பை மாற்றுவதில்லை.

> இராமன் அடித்தான் என்ற வாக்கியத்தை
> இராமனை அடித்தான்

என்று மாற்றும்போது பொருள் மாறிவிடுவதைக் காண்கிறோம். ஆனால்,

> இராமனும் அடித்தான்
> இராமன்தான் அடித்தான்
> இராமனே அடித்தான்

என -உம், -தான், -ஏ போன்ற ஒட்டுக்களை இணைக்கும் போது பொருள் அதிகமாக மாறுவதில்லை. அடித்தவன் இராமன் என்ற நிலையை எல்லா வாக்கியங்களிலும் காணலாம். எனவேதான் -உம், -தான் போன்றவற்றை 'வேற்றுமை உருபுகள்' எனக் கூறு வதில்லை.

---

1 Case is defined in NED as "one of the varied forms of a Substantive, adjective, or pronoun, which express the varied relations in which it may stand to some other word in the sentence"

—Jesperson VII pp. 219-220.

## 4.0.2 பொருள் காட்டும் முறை

பொதுவாக உலக மொழிகளை ஆராயின் சில மொழிகளே வேற்றுமை உருபுகளைக் கொண்டு பொருள் தொடர்பினைக் காட்டுகின்றன. வேறு சில மொழிகளோ வேறு விதமான சில முறைகளைக் கையாண்டு பொருள் தொடர்பினைக் காட்டுதல் காணலாம்.

நான் இராமனை அடித்தேன்

என்ற வாக்கியத்தில் 'ஐ' வேற்றுமை ஒரு விதத் தொடர்பினைக் காட்டுதல் காணலாம். ஆனால் ஆங்கிலம் போன்ற மொழிகளோ இதே பொருளை அச்சொல் வாக்கியத்தில் நிற்கும் இடத்தை அடிப்படையாகக் கொண்டு காட்டுவது கண்கூடு.

John beat Bill

எனக் குறிப்பிடும் போது John அடித்தவன் என்பதும் Bill அடி பட்டவன் என்பதும் விளங்கும். ஆனால் இவ்வாக்கியத்தில் உள்ள பெயர்களின் இடத்தை மாற்றிவிட்டால் பொருள் மாறுபடுகிறது.

Bill beat John

என்று குறிப்பிடும் போது 'Bill' அடித்தவன் என்றும், 'John' அடி பட்டவன் என்றும் பொருள் மாறிவிடக் காண்கிறோம். ஆனால் இந்நிலை தமிழ் மொழியில் இல்லை.

இன்னும் சில மொழிகளில் இத்தகைய பொருள் தொடர்பினை முன் உருபுகளாலும் (prepositions) பின் உருபுகளாலும் (postpositions) காட்டுவர். ஆனால் இவற்றை 'வேற்றுமை உருபுகள்' எனக் கருதுவதில்லை. எனவே இவற்றையும் வேற்றுமையாக மரபிலக்கணங்கள் கருதுவதில்லை. ஆனால் இவற்றையும் வேற்றுமை காட்டும் உருபுகளாகக் கருத வேண்டும் என்பர் பலர்.

## 4.0.3 வேற்றுமைகளின் எண்ணிக்கை

வேற்றுமை மொழிகள் அனைத்தையும் ஆராயின் வேற்றுமைகளின் எண்ணிக்கையும் மாறுபடக் காண்கிறோம். இலத்தீன்

போன்ற சில மொழிகளில் ஆறு வேற்றுமைகள் உள்ளனவாகக் கருதுகின்றனர்.

| | |
|---|---|
| puella | பெண் |
| puella | பெண்ணே |
| puellam | பெண்ணை |
| puellae | பெண்ணின் |
| puellae | பெண்ணுக்கு |
| puella | பெண்ணிடமிருந்து |

என ஆறு வேற்றுமைகளைக் காணலாம். இங்கு ஒரே வடிவம் இரு பொருள்களில் வருதல் காணத்தக்கது. துருக்கி மொழியிலும்

| | |
|---|---|
| ev | வீடு |
| ev-i | வீட்டை |
| ev-in | வீட்டின் |
| ev-e | வீட்டுக்கு |
| ev-de | வீட்டில் |
| ev-den | வீட்டிலிருந்து |

என இந்த ஆறு வேற்றுமைகள் உள்ளன என்று கருதுவர். திராவிட மொழிகளில் எட்டு வேற்றுமைகள் உள்ளன எனக் கருதுகிற நிலையையே காண்கிறோம். வேறுபல மொழிகளில் எட்டுக்கும் அதிகமான வேற்றுமைகள் இருத்தலைக் காணலாம். உராலிக் அல்டைக் மொழிகளில் ஒன்றான ஹங்கேரியன் மொழியில் பதினைந்துக்கும் மேலான வேற்றுமைகள் உள்ளன என்பர். இன்னும் சிலர் இதன்கண் இருபத்தைந்து வேற்றுமைகள் உள்ளன எனக் கருதுகின்றனர். வீடுவரை என்று நாம் குறிப்பிடுவதை இவர்கள் தனி ஒரு வேற்றுமையாகக் கருதி, இதற்கு *terminative* வேற்றுமை என பெயரிட்டுக் காட்டுவர். இதைப் போன்றே வீட்டுக்குள் என்பதை *illative* வேற்றுமை என்றும், வீட்டின்மேல் என்பதை *sublative* வேற்றுமை என்றும், அறையிலிருந்து என்பதை *elative* வேற்றுமை என்றும், மனிதனாக என்பதை *translative* வேற்றுமை என்றும் இன்னோரன்ன பெயர்களால் அழைப்பர்.

இதுபோன்ற நிலையினைப் பின்னிஷ் மொழியிலும் வேறுபல மொழிகளிலும் காணலாம். எனவே சில மொழிகளில் பின் உருபு

களாலும் முன் உருபுகளாலும் வாக்கியங்களில் சொற்கள் நிற்கும் நிலையினாலும் சொல்லப்படும் செய்திகள் சில மொழிகளில் வேற்றுமை உருபுகளால் கூறப்படுகின்றன. எனவே பொருள் அடிப்படையில் ஒன்றாக இருப்பினும் அப்பொருள் காட்டப்படும் விதத்தில் குறிப்பிட்ட ஒரு நிலையை உடையதாக இருப்பின மட்டுமே வேற்றுமை எனப் பண்டை இலக்கண அறிஞர்கள் அழைத்தனர் எனக் கருதலாம்.

தமிழ் மொழியைப் பொறுத்தமட்டில் மரபு இலக்கண அறிஞர் கள் எட்டு வேற்றுமைகள் உள்ளன எனக் குறிப்பிடுவர். கால்டுவெல் போன்ற அறிஞர்கள் கருவி வேற்றுமையிலிருந்து உடனிகழ்ச்சி வேற்றுமையைப் பிரித்துக் காட்டுவர். எனவே கால்டுவெல கருத்துப்படி தமிழ் மொழியில் ஒன்பது வேற்றுமைள் உள்ளன இன்னும் சிலர் 'காரண' வேற்றுமை எனத் தனி ஒரு வேற்றுமை (கோதண்டராமன் 1969 – 88) உண்டு எனக் கருதுவர். எனவே தான் ஒரு மொழியைப் பொறுத்தமட்டில் எத்தனை வேற்றுமை உள்ளன என வரையறுப்பது கடினமாகவே உள்ளது.

வேற்றுமையைப் பற்றிக் குறிப்பிட வந்த தொல்காப்பியர்

''வேற்றுமை தானே ஏழென மொழிப''

என்றும்,

''விளிகொள் வதன்கண் விளியொடு எட்டே''

என்றும் குறிப்பிட்டுப் போந்தார். இவற்றை ஒழுங்குபடுத்திக் கூற வந்த அவர்,

''அவைதாம்,
பெயர். ஐ ஒடு கு
இன் அது கண் விளி என்றும் ஈற்ற''

என்று கூறி நின்றார்.

### 4.0.4 வேற்றுமை ஏற்கும் பெயர்கள்

பொதுவாக, வேற்றுமை உருபுகள் பெயர்ச் சொற்களுடன் வரும் என்பதை அறிவோம். பெயர்ச் சொற்கள் என்று குறிப்பிடும்

போது, பெயர்கள் மட்டுமன்றி, தொழிற் பெயர்கள் (verbal nouns) ஆக்கப் பெயர்கள் (derivative nouns) வினையாலணையும் பெயர்கள் (participial nouns) என்பனவும் அடங்கும்.

நான் கண்ணனைப் பார்த்தேன்
நான் அவனைப் பார்த்தேன்
நான் அவன் வந்ததைப் பார்த்தேன்
நான் அவனுடைய செய்கையை நினைத்தேன்
நான் அங்கு வந்தவனைக் கண்டேன்

ஆகிய வாக்கியங்களில் காணப்படும் வேற்றுமை இந்நிலையினை நன்கு காட்டும். இப்பண்பினை இலக்கண அறிஞர்களும் ஆசிரியர்களும் நன்கு அறிந்துள்ளனர். ஆனால் சில வாக்கியங்களில் காணப்படும் வேற்றுமைச் சொற்கள் பலவேறு திரிந்த நிலைகளில் உருவாகி உள்ளமை இங்கு குறிப்பிடத் தக்கவொன்றாகும். இந்நிலைமை பற்றி இலக்கண அறிஞர்கள் இதுவரை எதுவும் கூறவில்லை.

## 4.0.5 வேற்றுமை உருபும் அவை வரும் இடமும்

நான் அவனைப் போல ஓடுவேன்
நான் அவனைப் போல உனக்கும் தருவேன்
மழையால் குளம் நிறைந்தது

போன்ற வாக்கியங்களில் காணப்படும் வேற்றுமை உருபுகள் உண்மையிலேயே அவை சார்ந்து நிற்கும் அவன், மழை ஆகிய சொற்களுக்கு உரியன அல்ல. ஐகார உருபு அவன் என்ற சொல்லோடு இருப்பினும் உண்மையில் அதற்கு உரியது அன்று.

நான் அவன் ஓடுவதைப் போல ஓடுவேன்
நான் அவனுககுக் கொடுத்ததைப் போல உனக்கும் தருவேன்

என்ற வாக்கியங்களைக் கூர்ந்து நோக்கின் ஐகார உருபு ஓடுவது, கொடுத்தது ஆகிய தொழிற் பெயரோடு ஒன்றியிருக்கக் காணலாம். இவ்வாறு ஒன்றி நின்ற -ஐ உருபும் தொழிற்பெயர்கள் கெட்ட நிலையில் அவன் என்ற எழுவாய்ச்சொல்லுடனும், அவனுக்கு என்ற

குகர வேற்றுமைச் சொல்லுடனும் இணைந்து 'அவனைப் போல' என்ற தொடரினை உருவாக்கி இருக்கக் காணலாம். இந்நிலையில் ஐகாரம் 'அவன்' என்ற சொல்லுடன் பின்னர் வந்து இணைந்தது என்று தெரியவரும் (அகத்தியலிங்கம் – 1977 : 5), தொழிற் பெயர்களும், பெயருடன் முன்னர் இணைந்து நின்ற வேற்றுமை உருபுகளும்கெட ஐகாரம் பின்னர் இணைந்துநிற்கக்காண்கிறோம்.

மழையால் குளம் நிறைந்தது

என்பது,

மழை பெய்ததால் குளம் நிறைந்தது

என்பதிலிருந்து உருவாகியுள்ளது இந்நிலையில் முன்னர் எழுவாயாக நின்ற சொல்லுடன் 'பெய்தது' என்ற பெயர் கெட்ட நிலையில் அதனோடு ஒன்றியிருந்த 'ஆல்' உருபு இணைய 'மழையால்' என்ற சொல் உருவாகியது என்பது மிகத்தெளிவாகும். எனவே வெளிப்படையாக அல்லது புறநிலையில் 'மழை' என்ற சொல் 'ஆல்' வேற்றுமையாக இருப்பினும், முன்னர் இது எழுவாய் வேற்றுமையாக இருந்தமை தெரியவரும். இத்தகைய நிலையினை எத்தனையோ வாக்கியங்களில் நம்மால் காணமுடியும்.

நான் புத்தகத்திற்குப் பணம் கொடுத்தேன்
நான் புத்தகம் வாங்குவதற்குப் பணம் கொடுத்தேன்

போன்ற எத்தனையோ வாக்கியங்கள் இப்பண்பினை நன்கு காட்டும். புறநிலையில் ஒரு வேற்றுமையாக இருப்பது புதை நிலையில் வேறு வேற்றுமையிலிருந்து உருவாயிருக்கக் காண்கிறோம். இந்நிலையினைத் தமிழ் மொழியில் மட்டுமின்றி வேறு பல மொழிகளிலும் நன்கு காணலாம்.

### 4.0.6 வேற்றுமைப் பொருளும் காட்டும் வழியும்

ஒரு வாக்கியத்தில் காணப்படும் பலவேறு சொற்களுக்கிடையே காணப்படும் பொருள் தொடர்பைக் காட்டி நிற்பதே வேற்றுமை என்பது முன்னர்க் கூறப்பட்டது. பொருள் தொடர்பையும் பல வேறு வழிகளில் காட்டலாம். ஒருவனை மற்றொருவன் அடித்ததைக் குறிக்கும் போது

கண்ணன் தம்பியை அடித்தான்
தம்பி கண்ணனால் அடிக்கப்பட்டான்
தம்பி கண்ணனிடம் அடிபட்டான்
கண்ணன் தம்பிக்கு அடி கொடுத்தான்

போன்று பல வழிகளில் குறிப்பிட முடியும். இவை அனைத்தும் அடிபட்டவன் தம்பி என்பதையும் அடித்தவன் கண்ணன என்பதையும் தெளிவாகக் கூறும். முதல் வாக்கியத்தில் கண்ணன் எழுவாயாகவும் இரண்டாவது மூன்றாவது வாக்கியங்களில் தம்பி எழுவாயாகவும் நான்காவது வாக்கியத்தில் தம்பி கு வேற்றுமையாகவும் இருத்தலைக் காண்கிறோம். எல்லாம் ஒரே பொருளைத் தரினும் வேறுவேறு வழிகளில் கூறப்படுதல் காணத் தக்கது. தொழிலைச் செய்யும் கருத்தா ஒரு வாக்கியத்தில் எழுவாயாகவும் பிற வாக்கியங்களில் – ஆல் வேற்றுமையாகவும் –கண் வேற்றுமையாகவும் உள்ளது. கருத்தாப் பொருளைப் பல மாதிரியாகக் கூற முடிகிறது.

## 4.0.7 காரகம், விபக்தி

பொருள் அடிப்படையில் செயப்படு பொருள் வேற்றுமையாக இருப்பது தமிழில் ஐ வேற்றுமையாகவும் எழுவாய் வேற்றுமை யாகவும் உள்ளன. பொருள் அடிப்படையில் வேற்றுமையைக் காரகம் என்றும் அது ஒரு மொழியில் காட்டப்படும் விகுதி நிலை யில் விபக்தி என்றும் சமஸ்கிருத இலக்கணங்கள் கூறும்.

செயப்படு பொருள் என்பது காரகம்; –ஐ வேற்றுமை என்பது விபக்தி. கருவி என்பது காரகம்; – ஆல் வேற்றுமை என்பது விபக்தி. ஒரே காரகம் பல வேறு வழிகளில், அதாவது பல வேறு விபக்தி களால் காட்டப்படலாம். காரகம் எல்லா மொழிகளுக்கும் பொது வானது. காரணம் அது பொருளை அடிப்படையாகக் கொண்ட பெயர். விபக்தி என்பது தனிப்பட்ட மொழிகளை அடிப்படையாகக கொண்ட பெயர். பொதுவாக ஒரு காரகத்தைக் காட்ட ஒரு மொழியில் அடிப்படையான ஒரு வழியைக் கையாளுவர். எடுத்துக் காட்டாகத் தமிழில் செயப்படுபொருளைக் காட்ட –ஐ வேற்றுமை யைப் பயன்படுத்துவர். அதை அடிப்படையாக வைத்துக் கொண்டு புறநிலையில் (தம்பி கண்ணனால் அடிக்கப்பட்டான் என்பது

போன்று) வருவதை ஐ வேற்றுமை வாக்கியங்களிலிருந்து வருவித்துக் கொள்வதாகக் கருதலாம். இதைப் போன்றே ஆங்கில மொழியில் செயப்படு பொருளைக் காட்ட வரிசை முறையைப் பயன்படுத்தி

John beat Bill

எனக் கூறுவர். இதை அடிப்படையாக வைத்துக் கொண்டு

Bill was beaten by John

என்பதை (இதில் செயப்படு பொருள் எழுவாயாக மாறி விடுவதைக் காண்கிறோம்) வருவித்துக் கொள்ளலாம்.

## 4.0.8 புதை நிலையும் புறநிலையும்

புதைநிலை (deep structure), புறநிலை (surface sturcture) என்ற கோட்பாடு மாற்றிலக்கணக் கோட்பாட்டை (transformational theory) ஒட்டியதாகும். நாம் கேட்கும் அல்லது எழுதும் ஒவ்வொரு வாக்கியங்களுக்கும் இவ்விரு நிலைகள் உண்டு எனக் கருதலாம். புதைநிலையில் காணப்படுவது பொருளை அடிப்படையாகக் கொண்டது. புறநிலை அதிலிருந்து உருவாகி ஒரு சில அல்லது பல மாற்று விதிகளின் (transformational rules) காரணமாக மாற்றம் அடைந்து பின்னர் வருவதாகும்.

கண்ணன் ராமனை அடித்தான்

ராமன் கண்ணனால் அடிக்கப்பட்டான்

ஆகிய வாக்கியங்களில் முன்னதைப் புதைநிலை என்றும் பின்னதை (விடுவிப்பதை) புறநிலை என்றும் கூறலாம். புதைநிலை வாக்கியத்துக்கும் அடிப்படையாக இருப்பது பொருள்நிலை என்பதும் இங்குக் கவனிக்கத்தக்கது.

புதைநிலையில் ஒன்றாக இருப்பது புறநிலையில் வெவ்வேறு இலக்கணக் கூறுகளில் வரும். கருத்தா எழுவாயாகவும் ஆல் வேற்றுமையாகவும் இன்னும் பல நிலைகளிலும் வரும். இதைப் போன்றே புதைநிலையில் வெவ்வேறாக இருப்பன புறநிலையில் ஒன்றுபோல் வருதலும் உண்டு.

கண்ணன் அடித்தான்
கண்ணன் அடியுண்டான்
கண்ணன் பரிசு பெற்றான்
கண்ணன் ஆசிரியன்
கண்ணன் இறந்தான்

போன்ற வாக்கியங்களில் வரும் கண்ணன் என்ற சொல் எழுவாய்களாக இருப்பினும் அவை வெவ்வேறு பொருளைத் தரும். இவை புதைநிலையில் வெவ்வேறு நிலையில் இருந்து புறநிலையில் ஒன்றாக உள்ளது. முதல் வாக்கியம் ஒரு தொழிலைச் செய்யும் கருத்தாவைக் காட்டும். இரண்டாவது வாக்கியம் அடியுண்ட அதாவது அடியைப்பெற்ற (patient) தன்மையைக் காட்டும். மூன்றாவது வாக்கியம் நன்மையடைந்த (பரிசு பெற்ற) கண்ணனைக் காட்டும். இது கண்ணனுக்குப் பரிசு கொடுத்தார்கள் என்பதிலிருந்து உருவானது எனக் கருதலாம். கண்ணன் யார் என்பதைக் காட்டுவது அடுத்த வாக்கியம். இறுதி வாக்கியம் கண்ணனுக்கு என்ன நேர்ந்தது என்பதைக் காட்டுகிறது. இந்நிலைகளை ஆராய்ந்து நோக்கின் இவையனைத்தும் எழுவாயாக இருந்த போதிலும் ஒரு பொருளைத் தருவதில்லை என்பது நன்கு விளங்கும். எனவே புறநிலையில் ஒன்றாக இருப்பினும் புதைநிலையில் வெவ்வேறாக இருக்கின்றன.

இதைப் போன்றே

கண்ணன் இராமனை அடித்தான்
இராமனால் கண்ணன் அடிக்கப் பட்டான்

என்பன புறநிலையில் வெவ்வேறாக இருப்பினும் புதைநிலையில் ஒன்றாகும்.

### 4.0.9 ஓர் உருபு, பல பொருள்கள்

1. நான் கண்ணனுடன் வந்தேன்
2. இராமன் சீதையுடன் காடு சென்றான்
3. நான் பணத்துடன் வந்தேன்
4. அவன் வேகத்துடன் பேசினான்

போன்ற வாக்கியங்களில் ஒரே உருபு (உடன்) காணப்படினும்

அவை வெவ்வேறு பொருள்களைத் தந்து நிற்றல் காணலாம். முதல் வாக்கியம்

> நான் கண்ணன் வரும்போது கண்ணனுடன் சேர்ந்து வந்தேன்

என்ற பொருளிலும் இரண்டாவது வாக்கியம்

> இராமன் காடு செல்லும்போது சீதையைக் கூட்டிக் கொண்டு சென்றான்

என்ற பொருளிலும் மூன்றாவது வாக்கியம்

> நான் வரும்போது பணம் கொண்டு வந்தேன்

என்ற பொருளிலும் நான்காவது வாக்கியம்

> அவன் வேகமாகப் பேசினான்

என்ற பொருளிலும் வருதல் காணலாம். ஒரே வேற்றுமை உருபைக் கொண்டிருந்த போதிலும் பலவேறு பொருளில் வருதல் குறிப்பிடத்தக்கது.

இதே நிலையை

1. வீட்டில் பலகாரம் செய்தார்கள்
2. மாவில் பலகாரம் செய்தார்கள்
3. வீட்டில் இருந்தார்கள்
4. தறியில் நெய்தார்கள்
5. ஆரம்பத்தில் பேசினார்கள்
6. ஆன்களில இவன் நல்லவன்
7. அருகில் } வந்தான்<br>அருகே }
8. அவர்கள் போர்க்கள வேகத்தில் வேலை செய்தார்கள்
9. அவர்கள் பேசுகையில் நடந்தது
10. பேனாவில் மை ஊற்றினார்கள்

போன்றவற்றில் வரும் -இல் வேறுவேறு நிலையில் வருதல் காணலாம். இவற்றை

> வீட்டில் வைத்துப் பலகாரம் செய்தார்கள்
> மாவினால் பலகாரம் செய்தார்கள்

தறியால் நெய்தார்கள்
ஆள்களுள் இவன் நல்லவன்
பேனாவுக்கு மை ஊற்றினார்கள்
வேகத்தோடு வேலை செய்தார்கள்

என்றெல்லாம் கூற முடியும்.

வேற்றுமைப் பொருளும் பல மொழிகளில் பலவேறு வகைகளில் காட்டப்படும். எனினும் எடுத்துக்காட்டாகச் செயப்படு பொருள் ஒரு சில மொழிகளில் அதைக் குறிக்கும் சொல் வரும் இடத்தினால் காட்டப்படும் என்றும் சொற்களின் வரிசையை மாற்றினால் பொருள் மாறும் என்றும் கண்டோம்.

John beat Bill
Bill beat John

ஆனால் தமிழ் போன்ற மொழிகளிலோ இந்நிலை இல்லை. வரும் ஒட்டை வைத்தே கூறிவிடலாம். வரிசை முறை பொருளை மாற்றுவதில்லை.

நான் கண்ணனை அடித்தேன்
கண்ணனை நான் அடித்தேன்

என்பவை இப்பண்பைக் காட்டும். ஒரே வேற்றுமைப் பொருள் ஒரு மொழியில் ஒரு மாதிரியாகவும் இன்னொரு மொழியில் வேறு ஒரு மாதிரியாகவும் காட்டப்படுகிறது. ஒரு மொழியிலிருந்து இன்னொரு மொழியில் மொழி பெயர்க்கப்படும் போது எவ்வித துன்பமுமின்றி மொழி பெயர்க்கிறோம். இந்நிலை, புதைநிலை எல்லா மொழிகளுக்கும் பொதுவானது என்பதையும் புறநிலை வேறு வேறாக இருக்கலாம் என்பதையும் காட்டும்.

நான் கண்ணனுக்குப் பணம் கொடுத்தேன்

என்பது ஆங்கில மொழியில்

I gave Kannan some money
I gave some money to Kannan

எனவும் கூறப்படுகிறது. இங்கு வரிசை முறையும் முன்னுருபு முறையும் பயன்படக் காணலாம். ஒரு மொழியில் ஒரு மாதிரி

யாகவும் மற்றொரு மொழியில் மற்றொரு மாதிரியாகவும் ஒரே கருத்துக் கூறப்படுகிறது.

இதைப் போன்று ஒரே மொழியில் கூட வேறுபாடு இருக்கலாம். ஒரு கிளைமொழியில் ஒரு மாதிரியாகவும் இன்னொரு கிளை மொழியில் மற்றொரு மாதிரியாகவும் இருக்கலாம். எடுத்துக் காட்டாகத் தமிழில் கருவி வேற்றுமை -ஆல் என்ற ஒட்டினாலும் -ஐ கொண்டு என்ற சொல்லுருபாலும் காட்டப்படுதல் குறிப்பிடத் தக்கது. சில கிளை மொழிகளில் - ஐ என்ற ஒட்டினாலும் சில கிளை மொழிகளில் - ஐ கொண்டு என்ற சொல்லுருபாலும் காட்டப்படுகிறது.

## 4.0.10 வேற்றுமை உருபுகளும் அவற்றின் முக்கியத்துவமும்

வேற்றுமையின் எண்ணிக்கையும் மொழிக்கு மொழி மாறுபடு கின்றன என முன்னர்க் குறிப்பிட்டோம். திராவிட மொழிகளில் பொதுவாக வேற்றுமைகள் எட்டு எனக் கூற உலக மொழிகள் பலவற்றில் பலவேறு எண்ணிக்கைகளைக் காண்கிறோம். லத்தீன் மொழியில் ஆறு என்றும் கிரேக்க மொழியில் ஆறு என்றும் கூறுவர். ஆனால் ஹங்கேரிய மொழியில் இருபத்தைந்து என்று கூறுவர். தமிழில் வீட்டினுள், வீட்டில், வீட்டுக்கு வெளியே போன்றவற்றை இடவேற்றுமை என்றே குறிப்பிடுவர். ஆனால் இந்நிலை ஹங்கேரிய மொழியில் இல்லை.

எனவே ஒருமொழியில் ஒரு வேற்றுமையின் பகுதியாகக் கருதப் படுவது மற்றொருமொழியில் தனியொரு வேற்றுமையாகக் கருதப் படுகிறது. இதற்குக் காரணம் வேற்றுமைகளின் எண்ணிக்கையை வரையறுக்கும் போது அவை காட்டும் பொருளை மட்டும் அடிப் படையாக வைத்துக் கொள்ளாது அவை எவ்வாறு காட்டப்படு கின்றன. என்பதையும் பொறுத்தே மரபு இலக்கண அறிஞர்கள் வரையறுத்தனர் எனக் கருதலாம்.

இதனைத் தமிழ் இலக்கண அறிஞர்களிடமும் காணலாம். எழுவாய் வேற்றுமை, ஐ வேற்றுமை என்று பெயரிடுவதற்குக் காரணமே உருபை அடிப்படையாக வைத்து வேற்றுமைகளைக் கண்டமைதான் எனக் கூறலாம். மேலும் உடனிகழ்ச்சி வேற்று

மையை மூன்றாவது வேற்றுமையில் தொல்காப்பியர் போன்றோர் அடக்குவதற்கும் கால்டுவெல் போன்றோர் தனியொரு வேற்று மையாகக் கருதுவதற்கும் காரணமே இதுதான். பழந்தமிழில் ஒரு உருபு (–ஆன் உருபு போன்று) வந்தமைதான் தொல்காப்பியர் இரண்டையும் இணைப்பதற்குக் காரணம்

தூங்கு கையான் ஓங்கு நடைய (புறம் 22.1)
கொடி யொடு துவக்குண்டான் (சேனா. 73)

போன்ற எடுத்துக்காட்டுக்கள் இதனைக் காட்டும். கால்டுவெல் காலத்தில் –ஒடு போன்றவை உடனிகழ்ச்சியாக மாத்திரமே வர –ஆன் போன்றவை கருவியில் மாத்திரமே வந்ததால்தான் அவர் இவற்றை எவ்வாறு ஒன்றாகக் கருதலாம் என வினவினார். ஆர்டன் போன்றவர்கள் Instrumental [i] 'By' என்றும் 'Instrumental [ii] of association' என்றும் கூறுவர்.

தமிழ் வேற்றுமையின் எண்ணிக்கையைப் பற்றிக் கூற வந்த தொல்காப்பியர்

"வேற்றுமை தானே ஏழென மொழிப"

என்றும்

"விளிகொள் வதன்கண் விளியோ டெட்டே"

என்றும் கூறிப் போந்தார். தொல்காப்பிய உரையாசிரியர்கள் காலத்திலேயே தமிழில் உடனிகழ்ச்சியையும் கருவி வேற்றுமையை யும் ஒன்ருகக் கருத வேண்டுமா என்ற எண்ணம எழுந்து விட்டது. இதனுல்தான் சேனாவரையர் (74) இவ்வாதத்தை எழுப்பி உடனிகழ்ச்சியையும் கருவியையும் இரண்டு வேற்றுமைகளாகக் கருதல் கூடாது என வாதாடுகிருர்.

இன்றைய நிலையை நோக்கின் இரண்டையும் வெவ்வேருகக் கருதலே பொருத்தம் எனத் தோன்றுகிறது. இரண்டும் தனித்தனி ஒட்டுக்களால் காட்டப்படுகின்றன.

இதைப் போன்றே குகர வேற்றுமையிலிருந்து நோக்க வேற்றுமை (purposive case) மாறுபட்டது எனக் கருதலாம் (Agesthialingom 1967:4). இதே நிலையினைக் கருவி வேற்றுமைக்கும்

காரண வேற்றுமைக்கும் இடையே காணலாம். (கோதண்டராமன், 1970 : 88). இவை பற்றிப் பரக்கப் பேசியுள்ளார் சண்முகம் (1971 : 25-55).

தொல்காப்பியர் போன்ற இலக்கண ஆசிரியர்களும் வேற்றுமை பற்றிப் பேசும் போது அவற்றின் பொருள்களை அடுக்கிச் செல்லுவதும் பொருள் அடிப்படையில் அவற்றைக் காண முற்பட்டனர் என்பதைக் காட்டும். எனினும் வேற்றுமைகளின் எண்ணிக்கை புற நிலையில் காணப்படும் உருபுகளின் அடிப்படையிலேயே வரையறுக்கப்படுகிறது என்பது நன்கு விளங்கும்.

### 4.1 எழுவாய் வேற்றுமை

எழுவாய் வேற்றுமை என்ற பெயர் இவ்வேற்றுமை காட்டும் பொருள் அடிப்படையில் அமைந்ததன்று. முதல் வேற்றுமை என்ற பொருளிலேயே இது முதன்முதல் பயன்பட்டது எனக் கருதலாம். எழுவாய் வேற்றுமை என்ற தொடருக்குப் பொருள் கூற வந்த நச்சினார்க்கினியர் 'முதல் வேற்றுமையாவது' (தொல். சொல். 66) எனக் கூறுதல் இங்குக் கருதத்தக்கது. சேனாவரையரும் ''முதற்கண் பெயர் என்று கூறப்பட்ட வேற்றுமையாவது'' (65) எனக் கூறுவார். மேலும் தொல்காப்பியர் பின்னர் உள்ள வேற்றுமைகளைக் கூறும்போது 'இரண்டாகுவதே', 'மூன்றாகுவதே' என்றெல்லாம் கூறிச் செல்லுவதும் நினைவு கூரததக்கது. எழுவாய் என்ற சொல் 'subject' என்ற பொருளில் உரையாசிரியர்களால் பயன்படுத்தப்பட்ட போதிலும் முதன்முதலாக முதல் வேற்றுமை என்ற பொருளிலேயே வந்துள்ளது என்றும், பின்னர் படிப்படியாக 'subject' என்ற பொருளில் வந்தது எனவும் கருதலாம். இவ்வேற்றுமையைப் பெயர் வேற்றுமை என்றும் குறிப்பர்.

> ''அவைதாம்
> பெயர், ஐ ஒடு கு
> இன் அது கண் விளியென்றும் ஈற்ற''

என்ற நூற்பா (தொல். சொல். 64) இதனைக் காட்டும். பிற வேற்றுமைகளைக் குறிப்பிடும் போது ஐ, ஒடு எனக் கூறுதல் போல இவ்வேற்றுமையைக் கூறவில்லை. இரண்டாம் வேற்றுமை போன்றவற்றிற்கு அவற்றிற்கு என தனித்தனி உருபுகள் இருக்க

இவ்வேற்றுமைக்குத் தனி உருபு இல்லாத நிலையில்தான் இதனைப் பெயர் எனக் குறிப்பிடுகிறார் தொல்காப்பியர். ஆனால் சிலர் வடமொழி இலக்கணங்களை ஒட்டி இதற்கும் $-\varnothing$,-ம் ஆகிய உருபுகள் உண்டு (ஆந்திரனோவ் 1969 : 76) என்று கூறினும் இது உண்மைக்குப் புறம்பாகவுள்ளது மரம் போன்ற சொற்களில் காணப்படும் மகர ஒற்று சொல்லின் உள்ளே அமைந்ததே அன்றி வேற்றுமை உருபு அன்று என்பதை எளிதாக உணரலாம்.

எழுவாய்(subject), வாக்கியத்தில் காணப்படும் பயனிலையைப் போன்று வரும் ஒரு இலக்கணக் கூறாகும். பொதுவாக வாக்கியத்திற்கு இது முதலில் நிற்பதால் இதனை எழுவாய் எனக் கூறினர் எனக் கருதலாம்.

வாக்கியத்தில் எழுவாயாக வருவதைத்தான் எழுவாய் வேற்றுமை எனக் கருதுவர். ஆங்கில இலக்கணிகள் இதனை 'subject' எனக்கூறுவர். எழுவாயாக வரும் பெயருக்கும் பயனிலையாக வரும் சொற்களுக்கும் இடையே தொடர் இயைபு (concord) இருக்கக் காணலாம். உலக மொழிகள் பலவற்றில் இப்பண்பினைக் காண முடியும். இதை வைத்து வாக்கியத்தில் வரும் எழுவாய் எது என அறிந்துவிட முடியும்.

கண்ணன் நேற்று வந்தான்

போன்ற வாக்கியங்களில் கண்ணன் எழுவாய் என்பதை வந்தான் போன்ற சொற்களில் காணப்படும் -ஆன் என்ற விகுதியிலிருந்து உணர்ந்து கொள்ளலாம். இதைப் போன்றே

குழலி வந்தாள்
பசு வந்தது
அவர்கள் வந்தனர்
அவை வந்தன

போன்ற வாக்கியங்களிலும் எழுவாய் எது என அறிந்து கொள்ள முடியும்.

கண்ணன் கை குளிர்ந்தது

என்பதில் கண்ணன் கை என்பதுதான் எழுவாய் என நிர்ணயிக்கலாம். இதைப் போன்றே பல்வேறு மொழிகளிலும் தொடர்

இயைபு மூலம் வாக்கியங்களில் எது எழுவாய் என அறிந்து கொள்ள முடியும். இவ்வாறு வாக்கியத்தின் அமைப்பு அடிப்படையில் வைத்தே எழுவாய் எனக் கூறுகிறோமே அன்றி பொருள் அடிப்படையில் இல்லை என்பது நன்கு விளங்கும். எழுவாய் அனைத்தும் ஒரே பொருளைத் தருவதில்லை என்பதை முன்னரே கண்டோம்.

| | |
|---|---|
| கண்ணன் | அடித்தான் |
| கண்ணன் | அடிக்கப்பட்டான் |
| கதவு | திறந்தது |
| வீடு | விற்றது |
| கத்தி | வெட்டியது |

போன்ற வாக்கியங்களில் காணப்படும் எழுவாய்கள் வெவ்வேறு பொருளில் வரக் காணுகிறோம். முதல் வாக்கியத்தில் எழுவாய் அடித்தவன் யார் என்பதைக் காட்டும். இந்நிலையில் இது அடித்தல் தொழில் செய்தவனை அல்லது கருத்தாவைக் (agent) காட்டும். இரண்டாவது வாக்கியத்தில் உள்ள கண்ணன் அடிக்கப் பட்டவனைக் குறிக்கும். அதாவது செயப்படு பொருளைக் காட்டும். இதைப்போன்றே மூன்றாவது, நான்காவது வாக்கியங்களில் காணப்படும் கதவு, வீடு போன்றவை திறக்கப்பட்டது எது என்றும் விற்கப்பட்டது எது என்றும் சுட்டி நிற்குப. இந்நிலையிலும் இது செயப்படுபொருளைக் காட்டி நிற்கும். ஐந்தாவது வாக்கியத்தில் காணப்படும் கத்தியோ வெட்டுதல் தொழிலுக்கு உபயோகப்படுத்தப்பட்ட கருவி அல்லது ஆயுதம் எது என்பதைக் காட்டும். எனவே இது கருவிப் பொருளைக் குறிக்கும். இந்நிலையில்தான் இலக்கண அறிஞர்கள் எழுவாயினை இலக்கண எழுவாய் (grammatical subject) என்றும், தருக்க எழுவாய் (logical subject) என்றும் கூறுவர். சில பொருள்களைக் குறிப்பதற்கு எழுவாயில் தருக்க எழுவாயையே பயன்படுத்துவர். தருக்க எழுவாய் வாக்கியத்தின் புதை நிலையில் காணப்படுவது.

கண்ணன் அடித்தான்

என்பதில் கண்ணன் என்ற சொல் தருக்க எழுவாய் ஆகும். இதைப் போன்றே

கண்ணன் வந்தான்
கண்ணன் நல்லவன்
கண்ணன் உளன்
கண்ணன் அழகாக இருக்கிறான்.

போன்ற வாக்கியங்களில் காணப்படும் கண்ணன் என்ற சொல் தருக்க எழுவாயாக மட்டுமன்றி இலக்கண எழுவாயாகவும் உள்ளது. அதாவது புதை நிலையிலும் புறநிலையிலும் எழுவாயாக உள்ளது. ஆனால்

கண்ணன் அடிக்கப்பட்டான்
கண்ணன் அடிபட்டான்
சாவி திறந்தது
கதவு திறந்தது
மதுரை வந்தது

போன்ற வாக்கியங்களில் காணப்படும் கண்ணன், சாவி, கதவு, மதுரை ஆகியவை இலக்கண எழுவாயே அன்றி தருக்க எழுவாய் அல்ல. கண்ணன் என்பது புதைநிலையில் செயப்படுபொருள். சாவி என்பது ஆயுதப் பொருள். கதவு என்பது மீண்டும் செயப்படு பொருள். மதுரை என்பது அடைதல் (goal) பொருள். எனவே தருக்க எழுவாயாக இருப்பன எல்லாம் இலக்கண எழுவாயாகவோ இலக்கண எழுவாயாக உள்ளவை அனைத்தும் தருக்க எழுவா யாகவோ இருக்க வேண்டிய நியதி இல்லை.

தமிழில் காணப்படும் வாக்கியங்கள் அனைத்தையும் எடுத்து ஆராயின் பெரும்பாலான வாக்கியங்களில் எழுவாயைக் காணமுடி யும். ஆனால் சில வாக்கியங்களில் எழுவாய் வெளிப்படையாக நிற்ப தில்லை.

நேற்று வந்தான்
இன்று போனான்
உடனே புறப்பட்டு வா
உடனே புறப்பட்டு வாருங்கள்

போன்ற வாக்கியங்களில் எழுவாயைக் காண முடிவதில்லை. எனினும் இவ்வாக்கியங்கள் எழுவாய் இல்லாதவை எனக் கூறமுடியாது. நேற்று வந்தான் என்ற வாக்கியத்தில் எழுவாய் ஒரு ஆண்பால் பெயர் என்பதும், யாரோ ஒருவன் என்பதும் உடனே புறப்பட்டு வா என்பதன் எழுவாய் முன்னிலை ஒருமைப் பெயராகிய நீ

என்பதும் உடனே புறப்பட்டு வாருங்கள் என்பதன் எழுவாய் நீங்கள் என்பதும் புலனாகும். இந்நிலையில் இவை எழுவாய் அற்ற வாக்கியங்கள் அல்ல என்பதும், புறநிலையில் எழுவாய் இல்லாமல் இருப்பினும் புதைநிலையில் எழுவாய் இருந்து பின்னர்க் கெட்ட நிலையில்தான் எழுவாய் இன்றிக் காணப் படுகின்றன என்பதும் விளங்கும். இவ்வாறு எழுவாய் இல்லாமல் இருப்பதற்குக் காரணம் விகுதிகளே என்றும், அவ்விகுதிகளில் இருந்து எழுவாயை அறிந்து கொள்ள முடியும் என்றும் சிலர் கருதுவர். ஆனால் வேறுபல வாக்கியங்கள். இது உண்மையன்று என்பதைக் காட்டும்.

போகலாம்
வரலாம்
போக வேண்டும்
செய்ய வேண்டும்

போன்ற வாக்கியங்களும் எழுவாய் இன்றிக் காணப்படுகின்றன. இவற்றின் விகுதியிலிருந்து எது எழுவாயை நிர்ணயிக்கமுடியாது.

| | |
|---|---|
| நீ<br>நான்<br>அவன்<br>அவள்<br>கண்ணன் | வரலாம் |

போன்றவை மேற்கூறிய வாக்கியத்தின் முழு உருவத்தைக்காட்டும். இந்நிலையில் எது எழுவாய் என்று நிர்ணயிக்க முடியாது. எனி னும் எழுவாய்கள் கெட்டுவிடுவதைக் காணுகிறோம். இதனால் விகுதியே எழுவாய்கள் கெடுவதற்குக் காரணம் எனக் கூறமுடி யாது. ஆங்கிலம் போன்ற மொழிகளில் இத்தகைய நிலையினைக் காணமுடிவதில்லை ஏவல் வினை வாக்கியங்களில் மட்டுமே எழுவாய் கெட்டு நிற்கக் காண்கிறோம். பிற வாக்கியங்களில் எழுவாய் கெடுவதில்லை. தமிழ் மொழியின் பண்பே இவ்வாறு எழுவாய் கெடுவதற்குக் காரணம் எனக் கருதலாம்.

வேறு சில வாக்கியங்கள் எழுவாய் இன்றிக் காணப்படும். எடுத்துக்காட்டாக,

எனக்கு அவனைப் பிடிக்கும்
எனக்கு அவனைத் தெரியும
என்னால் அங்கு போகமுடியும்

போன்ற வாக்கியங்களில் எழுவாயைக் காணமுடிவதில்லை எனக் கருதுவர் சிலர். என்னால், எனக்கு போன்றவை எழுவாய் அல்ல என்றும், வேற்றுமைச் சொற்கள் என்றும் கருதுவர். இன்னும் சிலரோ எழுவாய் இல்லாமல் வாக்கியங்கள் வரமுடியாது என்றும் இந்நிலையில் மேற்படி சொற்களே எழுவாய் எனவும் கூறுவர்.

எழுவாய்க்கு எனச் சில பண்புகளை உலகமொழிகளில் காண லாம். தமிழ் மொழியிலும் ஒரு சில தனிப் பண்புகள் காணக் கிடக்கின்றன.

தான், தன் போன்ற பதிலிடு பெயர்கள் எழுவாய்களுடன் தான் வரும்.

கண்ணன் தான் நல்லவன் என்று சொன்னான்
கண்ணன் தன்னிடம் பணம் இல்லை என்று சொன்னான்
கண்ணன் தன் தம்பியை நம்பவில்லை

போன்ற வாக்கியங்களில் வரும் தான், தன் ஆகியவை எழுவாயாக வரும் பெயரையே குறித்து நிற்றல் காணலாம். பிற வேற்றுமைப் பெயரைக் குறித்து வராது.

*நான் கண்ணனைத் தன் வீட்டிற்கு அனுப்பினேன்
*நான் கண்ணனுக்குத் தன் புத்தகத்தைக் கொடுத்தேன்

போன்ற வாக்கியங்கள் இலக்கணப் பிழையான வாக்கியங்கள். இதற்குக் காரணம் தான், தன் என்பவை எழுவாயைக் குறித்து வருவதே. இந்நிலையில்

கண்ணனுக்குத் தன் தம்பியைப் பிடிக்கும்
கண்ணனுக்குத் தான் நல்லவன் என்று தெரியும்
கண்ணனுக்குத் தன் தம்பியைக் கண்டதும் சிரிப்பு வந்தது
கண்ணனால் தன் வீட்டிற்குப் போக முடிந்தது

போன்ற வாக்கியங்களில் காணப்படும் கண்ணனுக்கு,கண்ணனால்

போன்றவை எழுவாய் எனவே கருதலாம். இதைப் போன்றே இவை தானாகவே போன்ற சொற்களையும் ஏற்று வரும்.

கண்ணனுக்கு இது தானாகவே தெரியும்
கண்ணனால் தானாகவே செய்ய முடிந்தது

போன்ற வாக்கியங்களும் இவை எழுவாயின் பண்புகளைக் கொண்டு விளங்குகின்றன என்பதை உணர்த்தும்.

இந்நிலையில் கண்ணனுக்கு, கண்ணனால் போன்றவை எழுவாய் எனக் கருதப்படத் தக்கவை என எண்ணலாம்.

ஆனால் ஒரு சில வாக்கியங்கள் எழுவாயற்ற வாக்கியங்களாகவே கருதப்படுகின்றன.

அவரைக் காணோம்
அவரைக் காணவில்லை.

போன்ற வாக்கியங்கள் (P. Kothandaraman, 1972: 39-44) எழுவாய் இல்லாத வாக்கியங்கள்.

இந்நிலையில் தமிழிலும் ஒருசில வாக்கியங்கள் எழுவாய் இன்றிக் காணப்படும் என்பதும், ஐரோப்பிய மொழிகளைப் போன்று எழுவாயுடன்தான் வாக்கியங்கள் காணப்படும் என்று கருதுவது உண்மையன்று என்றும் எண்ணலாம். இங்கு எழுவாய் என்று குறிப்பிடப்படுவது எல்லாம் புறநிலை எழுவாயே.

சொற்கள் எழுவாயாக வரும் போது (புதைநிலை) பல்வேறு தொடர்புகளை அவற்றிடையே காணமுடியும்.

உண்டு என்ற பொருளில்

மனிதனுக்கு உயிர் உண்டு.

எது அல்லது யார் எனக் காட்டும் நிலையில்

அவன் கண்ணன்
அவன் ஆசிரியன்
அது மரம்
அவன் அழகன்

கருத்தா பொருளில்

அவன் நடந்தான்
அவன் படித்தான்

இப்பொருள்கள் பிற வேற்றுமைக்கு இல்லாத பொருள்களாகும். இவை தவிர புறநிலையில் வரும் எழுவாய்கள் பிற வேற்றுமைப் பொருள்கள் பலவற்றைக் காட்டி நிற்கும்.

நான் கண்ணனால் அடிக்கப்பட்டேன்
கத்தி வெட்டியது
கதவு திறந்தது
வீடு வந்தது
பாத்திரம் நிறைந்தது

போன்று பல்வேறு பொருள்களில் எழுவாய் வேறு வேற்றுமைப் பொருள்களையும் காட்டி நிற்கும்.

எனவே இதுகாறும் கூறியவற்றால் எழுவாய் எனக் கூறுவது தொடரியலை அடிப்படையாகக் கொண்டது எனவும் இது புதை நிலையில் கருத்தா போன்ற ஒருசில பொருள்களைக் காட்டுமாயினும் புறநிலையில் பலவேறு பொருள்களைக் காட்டவல்லது. எனவும் உலக மொழிகளில் காணப்படும் மிகப் பெரும்பான்மையான வாக்கியங்கள் புறநிலையில் எழுவாயைக் கொண்டு வருமாயினும் ஒரு சில வாக்கியங்கள் எழுவாயின்றிக் காணப்படுகின்றன என்பதும்,எனினும் மொழியைப் பொறுத்தமட்டில் எழுவாய் என்பது ஒரு முக்கியமான இலக்கணக்கூறு என்பதும தமிழ்மொழியில் எழுவாயைக் காட்டும் உருபுகள் எதுவும் இல்லை என்பதும் ஒரு சிலர் வடமொழியை அடியொற்றி உருபுகள் உள்ளன எனக் கூறினும் அது தவறு என்பதும் விளங்கும்.

## 4.2 செயப்படு பொருள் வேற்றுமை

செயப்படு பொருள் வேற்றுமை என்பது பொருள் அடிப்படையிலான பெயராகும். ஒரு வாக்கியத்தின் எந்தப் பெயர் செயப்படு பொருளைக் காட்டுமோ அதுவே செயப்படு பொருள் வேற்றுமைச் சொல் எனக் கருதப்படும். இதனை ஆங்கிலத்தில் 'accu-

sative case' என்றும் 'objective case' என்றும் அழைப்பர்[1] தமிழில் பொதுவாக இவ்வேற்றுமையைக் காட்டும் உருபாக -ஐ இருப்பதால் இதனை -ஐ வேற்றுமை என்பர்.

நான் கண்ணனை அடித்தேன்

நான் கண்ணனைப் பிடித்தேன்

நான் கண்ணனைத் தாக்கினேன்

போன்ற வாக்கியங்களில் காணப்படும் கண்ணனை என்ற சொல் செயப்படுபொருளைக் காட்டுவதால் இதனைச் செயப்படுபொருள் என்பர். எந்தப் பொருளின் மீது வினைச்சொல்லால் காட்டப்படும் செய்கை செய்யப்படுகிறதோ அந்தப் பொருளைக் காட்டுவதே செயப்படுபொருள் (செய்யப்படுகின்ற பொருள்) எனப்படும்[2]. இதனால்தான் இதனைச் செயப்படு பொருள் என்றனர் தமிழ் இலக்கண அறிஞர்கள் (தொல். சொல் 112, 246). செய்கை செய்யப்படுகின்ற பொருள் செயப்படுபொருள். முதல் வாக்கியத்தில் அடித்தல் தொழில் செய்யப்படுபவன் அல்லது அத்தொழிலை அனுபவிப்பவன் கண்ணன். அதனால்தான் கண்ணன் செயப்படுபொருளாகக் கருதப்படுகிறான். இப்பொருளைக் குறிக்கும் நிலையில் தமிழில் -ஐ உருபு உள்ளது. ஆனால்

1. accusative என்ற சொல் லத்தீன் மொழியில் உள்ள accusativus (relating to a complaint or accusation) என்ற சொல்லிலிருந்து உருவானது. லத்தீன் இலக்கணியான வர்ரோ என்பார் இதனை "the case of accusing" என்பார். கிரேக்க மொழியில 'வினையால பாதிககப்பட்ட'' எனப் பொருள்படும் சொலலிலிருந்து வந்ததாகும. இச்சொல் 'cause' என்றும் 'accusation' என்றும் இரு பொருள்பட்ட நிலையில தவறாக இரணடாவது பொருளைக்கொண்டு லத்தீன் மொழியில் மொழிபெயர்த்த நிலையில்தான் இப்பெயர் வந்தது. ஆனால் பிரிசியன என்ற அறிஞர் 'causativus' என எழுதிய போதிலும் பிழைபட்ட மொழிபெயர்ப்பே நிலைபெறுவதாயிற்று.

2. Various definitions have been given of object. The most popular one is that the object denotes the person or thing on which the action of the verb is performed.
—Jesperson: 1955: 157.

நான் அவனை நினைத்தேன்
நான் அவனைப் பார்த்தேன்

போன்றவற்றில் காணப்படுபவைவும் –ஐ வேற்றுமையே. நினைத்தல் செய்கையும் பார்த்தல செய்கையும் 'அவன்' மீது செய்யப்படுவதோ அச்செய்கைகளால் 'அவன்' பாதிக்கப்படுவதோ இல்லை. இந்நிலையில் இவற்றைச் செயப்படுபொருள் எனக் கூறுவது பொருந்துமா என்ற வினா எழுவது இயற்கையே. நினை, பார் போன்ற வினைச் சொற்களும் அடி, கடி, பிடி, தாக்கு போன்ற வினைச் சொற்களும் செயப்படு பொருள் குன்றா வினைச் சொற்களாயினும் பின்னவை தரும் பொருளை முன்னவை தருவதில்லை. செயப்படுபொருள் என்பதற்கு முன்னால் தந்த விளக்கத்தை எடுத்துக்கொண்டால் இவை செயப்படு பொருள் ஆகுமா என்பதும் கேள்விக்குரியதே. இதைப் போன்றே

நான் வந்ததைக் குறிப்பிட்டேன்
நான் வந்ததை எழுதினேன்

போன்ற வாக்கியங்களின் காணப்படும் ஐகார வேற்றுமைச் சொற்களும், செயப்படுபொருளைக் காட்டுமா என்பதும் ஐயத்திற்குரியதே. மேலும்

நான் வீடு கட்டினேன்
நான் புத்தகம் எழுதினேன்
நான் பள்ளம் வெட்டினேன்
நான் ஓட்டை போட்டேன்

போன்றவற்றில் காணப்படும் வீடு புத்தகம், பள்ளம், ஓட்டை போன்றனவும் செயப்படு பொருளா? கட்டுதல் போன்ற செய்கைகள் வீடு போன்றவற்றில் செய்யப்படுவதோ அல்லது அதனால் வீடு போன்றவை பாதிக்கப்படுவதோ இல்லை. கட்டுதலால் உருவாவதே வீடு என்பதை நாம் அறிவோம். ஆனால்

நான் புத்தகத்தைக் கிழித்தேன்
நான் வீட்டை இடித்தேன்

போன்றவற்றில் புத்தகம், வீடு போன்றவை செயப்படுபொருள் தான் எனவே செயப்படுபொருள் என்றால் என்ன என்றும் – ஐ

வேற்றுமை உருபு எதைக் காட்டுகிறது என்றும் நிர்ணயிப்பது கடினம். மேலும்

நான் அவனை அஞ்சினேன்

போன்றவற்றில் அஞ்சு என்ற வினையினால் பாதிக்கப்படுவது நான்; அவன் அல்லன். இந்நிலையில் அவன் என்பதை எவ்வாறு செயப்படுபொருளாகக் கொள்வது? செய்யப்படுவது செயப்படு பொருளானால்

| | |
|---|---|
| வீடு விற்றது | பள்ளம் நிரந்தது |
| துணி வெளுத்தது | கிணறு தூர்ந்தது |
| கதவு திறந்தது | பேனா உடைந்தது |

போன்றவற்றில் விற்கப்படுவது வீடு, வெளுக்கப்படுவது துணி, திறக்கப்படுவது கதவு, நிரந்தது பள்ளம், தூர்ந்தது கிணறு, உடைந்தது பேனா என்ற நிலையில் இவற்றையும் செயப்படு பொருளாக எடுக்க வேண்டாமா? ஆனால் இலக்கண அறிஞர்கள் இவற்றை எழுவாய் வேற்றுமை என்றல்லவா கொள்ளுகிறார்கள் என்ற வினாவும் எழும்பாமல் இல்லை.

செயப்படுபொருள் வரும் (ஐ வேற்றுமை) வாக்கியங்கள் அனைத்தும் (சில விதிவிலக்குகள் தவிர) செயப்படுபொருள் குன்றா வினைகளைக் கொண்டிருக்கும். முன்னே குறிப்பிட்டபடி அடி, பிடி, தாக்கு போன்ற வினைகளும் நினை, பார், கேள் போன்ற வினைகளும் அஞ்சு போன்ற வினைகளும் செயப்படு பொருள் குன்றா வினைகளே. பொதுவாக இவ்வினைகளுடன் தான் -ஐ வேற்றுமைச் சொற்கள் வரும். இச்சொற்களை எழு வாய்ச் சொற்களாக மாற்றிவிட முடியும்.

நான் கண்ணனையடித்தேன்
என்னால் கண்ணன் அடிக்கப்பட்டான்
கண்ணன் அடிபட்டான்
நான் வீடு கட்டினேன்
வீடு என்னால் கட்டப்பட்டது

ஆனால் சில வினைச் சொற்கள் செயப்பாட்டுவினைச் சொல் லாக (passive) மாறுவதில்லை.

கண்ணன் புலியைப் போன்றான்
கண்ணன் புலியை ஒத்தான்

போன்றவற்றைச் செயப்பாட்டு வினை வாக்கியமாக மாற்ற முடிவதில்லை.

இத்தகைய பலவேறு நிலைகளில் இவ்வேற்றுமை வருவதால் மேனாட்டு அறிஞர்கள் வருகிற வினைச் சொல்லை அடிப்படையாக வைத்தே இவ்வேற்றுமையின் (ஐ வேற்றுமை) பொருளை நிர்ணயிக்க முடியும் என்றும், எனவே இதனை "Neutral case" எனக் கருதலாம் என்றும் கூறுவர்.

-ஐ வேற்றுமைச் சொல் செயப்படுபொருள் குன்றா (தெரிநிலை) வினைகளுடன் வருவதுடன் ஒரிரு குறிப்பு வினைகளுடனும் வருதல் காணத்தக்கது.

நான் பணம் உடையன்
அவன் புலி அனையன்

மேலும் ஐ காரம் சில பண்புச் சொற்களுடன் வருதலும் காணத்தக்கது.

அவன் என்னை விட உயரமானவன்
அவன் என்னைப் பார்க்கிலும் உயரமானவன்
அவன் என்னைக் காட்டிலும் உயரமானவன்
அவன் என்னை நோக்க உயரமானவன்

போன்று உயரம், கறுப்பு, வெளுப்பு, வேகம், கட்டை, குள்ளம், சிவப்பு, இரக்கம், கோபம் போன்ற சொற்களுடன் வரும் இத்தகைய வாக்கியங்களைச் செயப்பாட்டுவினை வாக்கியங்களாக மாற்ற முடியாது. காரணம் இவை செயல்வினைகளைக் (action verb) கொண்டிராமையே என எண்ணலாம். போல், உடை, அனை போன்றவையும் இத்தகையனவே.

மேலும் இவ்வேற்றுமை பற்றி, குறித்து, தவிர, ஒழித்து போன்ற ஒருசில பின்னுருபுகளுடன் வரும். பற்றி, குறித்து இரண்டும் பேசு, எழுது, போன்ற ஒருசில வினைகளுடன் வரும்.

தவிர, ஒழித்து என்பவை வரும் பெயர்ச்சொல்லைப் பிரித்துக் காட்டும் நிலையில் வரும்.

என்னைப் பற்றிப் பேசினார்கள்
உன்னைக் குறித்து எழுதினார்கள்
என்னைத் தவிர அனைவரும் வந்திருந்தார்கள்
என்னை ஒழித்து நான்கு பேர் உள்ளனர்

இனிப் பொதுவாக செயப்படுப்பொருளுக்குரிய விகுதிகளைப் பார்ப்போம். இவ்வேற்றுமை காட்டும் உருபுகளாக -ஐ, -∅ ஆகியவை உள்ளன.

4.2.1 -ஐ

பொதுவாக இது உயர்திணைப் பெயர்களுடனும் பதிலிடு பெயர்களுடனும் வெளிப்படையாக வரும்.

நான் கண்ணனைப் பார்த்தேன்
நான் அவனைப் பார்த்தேன்
அவன் என்னைப் பார்த்தான்
அவன் உன்னைப் பார்த்தான்
அவன் யாரைப் பார்த்தான்?

மேலும் குறிப்பிட்ட (specific) பொருள்களைக் காட்டும் பெயர்களுடனும் வந்து நிற்கும்.

அந்த கல்லை எடுத்தான்
அந்த மேசையைச் செய்தான்
இந்த கட்டிடத்தைப் பார்த்தான்

4.2 2 -∅

இது பொதுவாக அஃறிணைப் பெயர்களுடன் வரும். குறிப்பிடாத (nonspecific) பொருள்களைக் காட்டும் பெயர்களுடன் வரும்.

நான் மேஜை செய்தேன்
நான் ஒரு மேஜை செய்தேன்
நான் மரம் நட்டேன்

ஆனால் இச்சொற்கள் திட்டவட்டமான குறிப்பிட்ட ஒரு

பொருளைக் (specific) குறிக்குமானால் முன்னே குறிப்பிட்டபடி -ஐ ஏற்று வரும். தமிழில் குறிப்பிட்ட பொருளைக் கூறும்போது அதற்கென அந்த, இந்த என்றெல்லாம்கூறுவது உண்டு. எனினும் சில நேரங்களில் தனிப் பெயரையும் கூறுதல் உண்டு. அவ்வாறு கூறும் போது -ஐ ஏற்று வரும். (M. Shanmugam Pillai 1977).

4.3 கருவி வேற்றுமை[1]

ஒரு தொழிலைச் செய்ய ஒருவர் பயன்படுத்தும் கருவியைப் பற்றிக் கூறும் வேற்றுமை கருவி வேற்றுமை எனப்படும். இதனை ஆங்கிலத்தில் " Instrumental case " என்பர். பயன்படும் உருபை அடிப்படையாக வைத்து "with case" எனவும் கூறுவர்.[2] (Louis Gray, 1958 : 199). தமிழ் மொழியினரும் ஆன் வேற்றுமை எனக் குறிப்பிடுவது இங்கு உணரத்தக்கது.

பொதுவாகக் கருவி என்ற சொல் அஃறிணைச்சொற்களையே குறிக்கின்ற நிலையில் கத்தி, சாவி, பேனு போன்ற அஃறிணைச் சொற்களையே இவ்வேற்றுமை எடுத்து வருதல் காணத்தக்கது

அவன் கத்தியால் வெட்டினான்
அவன் சாவியால் கதவைத் திறந்தான்
அவன் பேனாவால் எழுதினான்.

போன்ற வாக்கியங்களில் காணப்படும் கத்தியால், சாவியால், பேனாவால் போன்ற வேற்றுமைச் சொற்கள் கருவி வேற்றுமைச் சொற்கள் என்றும் இச் சொற்கள் காட்டும் பொருள் கருவி வேற்றுமைப் பொருள் என்றும் கருதப்படும்.

---

1 The Instrumental case in Tamil (in progress)
—Malliga, M.A. Thesis, Annamalai University.

2 The case - identified with the preposition with-of the inanimate instrument which is the cause of an action or state expressed by the verb, as in: "Huck opened the drawer *with the key*"; "The drawer was opened *with the key* by Huck"; "*The key* opened the drawer"; etc.
—Robert A Palmatier, 1972 76

தமிழில் இப்பொருளைப் பொதுவாக - ஆல் என்ற உருபு காட்டி நிற்கும். முன்னர்க் காட்டிய வாக்கியங்கள் அனைத்தும் - ஆல் உருபினைக் கொண்டே அமைந்துள்ளன.

கருவிப் பொருளையும் இரண்டு மிக முக்கியப் பிரிவுகளாகப் பிரிக்கலாம். செய்வதற்கு உதவியாக இருக்கும் கருவி (ஆயுதம்) என்றும் செய்யும் பொருளாகிய கருவி (பொருள்) என்றும் பிரிக்கலாம்.

கத்தியால் வெட்டினுன்

என்பது முதல் வகையைச் சாரும்.

மண்ணால் குடம் செய்தான்

என்பது இரண்டாவது வகையைச் சாரும்.

இவை இரண்டிற்கும் வேறுபாடுகள் பல உண்டு. (இது பற்றி பின்னர் விளக்கக் காண்போம்.) இந்நிலையில் இவற்றைத் தனித்தனி வேற்றுமையாகக் கருத வேண்டுமா என்ற வினாவும எழாமல் இல்லை. பலர் இவ்விரண்டும் வேறுவேறு வேற்றுமை என்பர்.

### 4. 3. 1 ஆயுத வேற்றுமை

ஒரு செயலைச் செய்வதற்குப் பயன் படும் கருவி அல்லது ஆயுதத்தைக் குறிக்கும் வேற்றுமையையே ஆயுத வேற்றுமை எனக் குறிக்கலாம். இதனை "tool case" என ஆங்கிலத்தில் குறிப்பிடுவர்.

நான் கத்தியால் பழம் வெட்டினேன்
நான் சாவியால் அலமாரியைத் திறந்தேன்
நான் பேனாவால் கதை எழுதினேன்

போன்ற வாக்கியங்களில் காணப்படும் கத்தி, சாவி, பேனா போன்றவை இவ்வேற்றுமைச் சொற்களாகும். இவற்றைக் கத்தியைக் கொண்டு வெட்டினேன் போன்று - ஐக் கொண்டு என்ற சொல் உருபினால் கூற முடியும். இந்நிலையில் இது - ஐ வேற்றுமையா என்ற வினவும் எழும்.

இதைப் போன்றே

கத்தியைப் பயன்படுத்தி வெட்டினேன்
கத்தியை உபயோகித்து வெட்டினேன்

எனவும் கூறலாம். எனவே

நான் வெட்டினேன்
நான் கத்தியைப் பயன்படுத்தினேன்

போன்ற இரு வாக்கியங்களின் சேர்க்கையால் உருவானது எனவும் எண்ணலாம்.

நான் கத்தி வைத்து வெட்டினேன்
நான் கத்தியை வைத்து வெட்டினேன்

போன்று - ஐ வைத்து என்ற சொல் உருபையும் இட்டுக் கூற முடியும். கொண்டு, வைத்து, உபயோகித்து, பயன்படுத்தி போன்றவை செய்தென் வினையெச்சம் என்பதும் இங்குக் குறிப்பிடத்தக்கது. மேலும் இவ்வாக்கியங்களில் கருத்தாவால் வேண்டும் என்றே செய்யப்பட்ட வினைகளாக உள்ளன என்பதும் கவனிக்கத்தக்கது.

ஆயுதங்களைப் பயன் படுத்தும் முறையில் இவை - இல் உருபினை எடுத்து வரும். ஆயுதங்களைக் கீழே வைத்து பயன்படுத்தும்போது இந்நிலையைக் காணலாம்.

அரிவாள் மணையில் நறுக்கினான்
மெஷினில் தைத்தான்
தறியில் நெய்தான்

போன்றவற்றில் - இல் உருபு வரக் காணலாம். இவற்றை

அரிவாள் மணையால் நறுக்கினான்

எனவும் கூறமுடியும்.

மேலும் உடல் உறுப்புகளும் ஆயுதம் போன்று பயன்படுகிற நிலையில்

கையால் அடித்தான்

காலால் உதைத்தான்

என்றெல்லாம் கூறமுடியும். இவற்றையும்

கை கொண்டு அடித்தான்

கால் கொண்டு உதைத்தான்

என்றும் கூறுதல் உண்டு. ஆனால் வேண்டும் என்றே செய்யாமல் தற்செயலாக நிகழும் செயலாக இருப்பின் இவ்வாறு கூறுதல் இயலாது.

கல்லால் உடைந்தது

எனக் கூறுவதை

கல்பட்டு உடைந்தது

எனக் கூறமுடியுமே யன்றி

கல் கொண்டு உடைத்தான்

எனக் கூறுதல் முடியாது.

### 4.3.1.1 உருபுகள்

முன்னர்க் குறிப்பிட்டபடி ஆயுத வேற்றுமையைக் காட்டுவனவாக - ஆல், - இல், - ஐக் கொண்டு, - ஐப்பயன்படுத்தி, - ஐ வைத்து, - ஐ உபயோகித்து ஆகியவை உள்ளன.

| | | | |
|---|---|---|---|
| கத்தி | ஆல் | | வெட்டினான் |
| | இல் | | |
| | யைக் | கொண்டு | |
| | யைப் | பயன் படுத்தி | |
| | யை | உபயோகித்து | |
| | | வைத்து | |

இவற்றுள் -இல் உருபு ஒருசில இடங்களிலேயே வரும் என்பது நினைவுகூரத்தக்கது.

### 4.3.2 பொருள் வேற்றுமை

ஒரு பொருள் சாமான்கள் ஆக்கப்படும்போது அப்பொருளைக் குறித்து வரும் வேற்றுமை பொருள் வேற்றுமை எனப்படும். இதனை "material case" என்பர்.

கல்லால் சிலை செய்தான்
மாவால் பணியாரம் செய்தான்
மரத்தால் மேசை செய்தான்

போன்றவற்றில் காணப்படும் கல்லால், மாவால், மரத்தால் போன்றவை பொருள் வேற்றுமைச் சொற்கள். இவற்றைக்

கல்லில் சிலை செய்தான்
மாவில் பணியாரம் செய்தான்
மரத்தில் மேசை செய்தான்

எனவும்

கல்லைக் கொண்டு சிலை செய்தான்
கல்லை வைத்துச் சிலை செய்தான்
கல்லைப் பயன்படுத்திச் சிலை செய்தான்
கல்லை உபயோகப்படுத்திச் சிலை செய்தான்

எனவும் கூற முடியும். இவற்றை

கற் சிலை
மாவுப் பணியாரம்
மர மேசை

எனவும் மாற்ற முடியும். இவை

கல்லால் செய்த சிலை
கல்லால் செய்யப்பட்ட சிலை
கல்லால் ஆன சிலை

போன்றவற்றின் குறுக்கமாகும்.

மேலும் பொருள்வேற்றுமை எப்போதும் ஆக்க வினைகளைக் கொண்டே வரும். செய், உண்டு, பண்ணு, செதுக்கு, கட்டு, வனை போன்ற வினைகள் வருமேயன்றி வெட்டு, திற போன்ற வினைகளைக்கொண்டு வருவதில்லை (Nilson 1973 : 155).

கல்லால் சிலை செய்தான்

கல்லால் சிலையை வெட்டினான்

ஆனால் ஆயுத வேற்றுமையோ

கத்திக் குத்து

கத்தி வெட்டு

என ஒரு சில இடங்களில் ஆக்கப்பெயரைக் (derived noun) கொண்டு வருவதும் பொருள்வேற்றுமை இவ்வாறு வராததும் கவனித்தற் பாலன.

இதைப்போன்றே ஆயுத வேற்றுமையில் வரும் ஆயுதச் சொல்லை எழுவாயாக மாற்றி

கத்தி வெட்டிற்று; கால் உதைத்தது

சாவி திறந்தது; கை அடித்தது

எனக் கூறுவதும் இவ்விரு வேற்றுமைகளுக்கிடையே காணப்படும் மற்றொரு வேறுபாடு ஆகும்.

இதைப்போன்றே அதில் வரும் ஐ வேற்றுமைச் சொல்லையும் எழுவாயாக மாற்றமுடியும்.

கதவு திறந்தது

அல்மாரு திறந்தது

எனவும் கூற முடியும். ஆனால் இந்நிலையைப் பொருள் வேற்றுமையில் காணமுடியாது.

இவ்வேற்றுமைச் சொற்கள் எதனால், எதைக்கொண்டு, எதைப்பயன்படுத்தி, எதை உபயோகித்து போன்ற வினாக்களுக்கும் பதிலாக அமையும்.

### 4.3.2.1. உருபுகள்

–ஆல், –இல், –ஐக் கொண்டு –ஐ வைத்து, –ஐப் பயன்படுத்தி, –ஐ உபயோகித்து ஆகியவை இதன் உருபுகள்

| | | | |
|---|---|---|---|
| கல்– | ஆல் | | சிலை செய்தான் |
| | இல் | கொண்டு | |
| | ஐக் | பயன்படுத்திச் | |
| | ஐப் | உபயோகித்துச் | |
| | –ஐ | வைத்துச் | |
| | –ஐ | | |

இவ்வுருபுகள் அனைத்தும் பதில்நிலை வழக்கில் உள்ளன.

### 4.3.3. காரண வேற்றுமை

ஒரு நிகழ்ச்சிக்கு அல்லது செயலுக்குக் காரணமாக உள்ளதைக் குறிக்கும் வேற்றுமை காரண வேற்றுமை எனப்படும். இதனைக் ''Causal case'' என்பர். இதனைத்தனியொரு வேற்றுமையாகக் கொள்ளவேண்டும் என்று கோதண்டராமன் (1970 : 88) கூறுவார்.

அவனால் நான் பிழைத்தேன்
மழையால் குளம் நிறைந்தது
அவர்கள் காய்ச்சலால் இறந்தனர்

போன்ற வாக்கியங்களில் காணப்படும் அவனால், மழையால், காய்ச்சலால் போன்ற வேற்றுமைச் சொற்கள் காரண வேற்றுமையைக் காட்டும். இவற்றை

அவன் காரணமாகப் பிழைத்தேன்
மழை காரணமாகக் குளம் நிறைந்தது
காய்ச்சல் காரணமாக இறந்தனர்

எனக் கூறமுடியும்.

பொதுவாகக் காரணம் என்பது ஏதாவது ஒரு செய்கையினால்

தான் வரமுடியும். செய்கைகள் பொதுவாக வினைச்சொற்களால் தான் கூறப்படும். இந்நிலையில்

அவன் ஏதோ செய்ததால் பிழைத்தான்

மழை பெய்ததால் குளம் நிறைந்தது

காய்ச்சல் வந்ததால் பலர் இறந்தனர்

எனக் கூறமுடியும். வினையடிப்படையில் இவ்வேற்றுமை அமைந்திருப்பதால்தான் இது பெரும்பாலும் வந்ததால் போன்று, தொழில் பெயர்களுடன் ஆல், விகுதி பெற்று வரக் காண்கிறோம். மேலும் இவ்வேற்றுமையை

மழை பெய்தது: அதனால் குளம் நிறைந்தது

காய்ச்சல் வந்தது: அதனால் பலர் இறந்தனர்

எனக் கூறுவதும் இது கருதியே தான். சில நிகழ்ச்சிகளைக் குறித்து வரும்போது -இல் உருபு இட்டும் கூறுதல் கவனிக்கத் தக்கது.

மழையில் குளம் நிறைந்தது

காய்ச்சலில் இறந்தனர்

நெரிசலில் பலர் இறந்தனர்

எனக் கூறுவது இங்கு நினைவு கூரத்தக்கது.

#### 4.3.3.1 உருபுகள்

இந்நிலையில் -ஆல், -இல் ஆகிய இரு உருபுகளையும் இவ் வேற்றுமை உருபுகளாகக் கருதலாம்.

#### 4.3.3.1.1 -ஆல்

-ஆல் உருபு எல்லாப் பெயர்களுக்குப் பின்னரும் வரும்.

கண்ணனால் பிழைத்தேன்

அவன் வந்ததால் போனேன்

காய்ச்சலால் இறந்தான்

4.3.3.1.2 -இல்

-இல் உருபு ஒரு சில பெயர்களுக்குப் பின்னர் (நிகழ்ச்சி போன்றவைகளைக் குறிப்பின்) வரும்.

காய்ச்சலில் இறந்தான்
போரில் இறந்தனர்
மழையில் இடிந்தது

இந்நிலையில் காரணத்தைக் காட்டுவதுடன் நேரத்தையும் காட்டும் எனக் கருதலாம்.

போரின் போது இறந்தான்

எனவும் கூறுவது காணத்தக்கது.

4.3.4 உடனிகழ்ச்சி வேற்றுமை

ஒரு நிகழ்ச்சி நடைபெறும் போது இன்னொரு நிகழ்ச்சியும் நடைபெறுமானால் அந்நிகழ்ச்சியைக் குறிப்பதுவே உடனிகழ்ச்சி வேற்றுமை எனப்படும். இதனை ஆங்கிலத்தில் "sociative case" என்றும் "comitative case" என்றும் அழைப்பர்.[1]

இராமன் கண்ணனோடு வந்தான்
இராமன் கண்ணன் கூட வந்தான்
கண்ணனுடன் இராமன் வந்தான்
இராமனோடு கூட கண்ணன் வந்தான்

போன்ற வாக்கியங்கள் உடனிகழ்ச்சிப் பொருளைக் காட்டும். கண்ணனோடு, கண்ணன் கூட, கண்ணனுடன், இராமனோடுகூட ஆகியவை உடனிகழ்ச்சி வேற்றுமைச் சொற்களாகும். கண்ணன் வரும்போது அத்துடன் இராமனின் வரும் நிகழ்ச்சியும் உடனிகழ்

1 The case category of a noun phrase which bears a conjunctive relationship with another noun phrase in the sentence as in: "Tom ran away *with Huck*"; Tom and Huck ran away". The preposition associated with the comitative case is *with*.
—Palmatier, R.A. 1972: 24.

கின்ற நிலையில் தான் இது உடனிகழ்ச்சி வேற்றுமை எனக் கருதப் படுகிறது.

இராமனும் கண்ணனும் வந்தார்கள்

போன்ற வாக்கியங்களும் இராமன் வருகையையும் கண்ணன் வருகையையும் காட்டும். எனினும் இதனை உடனிகழ்ச்சி வேற்றுமை என யாரும் கருதுவதில்லை. இராமனும் கண்ணனும் வருதல் தொழிலைச் செய்தார்கள் எனக் கூறுகிறதேயன்றி இரண்டு பேரும் ஒன்றாக வந்தார்கள் என இவ்வாக்கியம் புலப்படுத்துவதில்லை. இராமன் முன்னும் கண்ணன் பின்னுமோ அல்லது கண்ணன் முன்னும் இராமன் பின்னுமோ வந்திருக்கலாம். இந்நிலையிலும் 'இராமனும் கண்ணனும் வந்தார்கள்' எனக் கூற முடியும். எனவே இதனை உடனிகழ்ச்சி வேற்றுமை எனக் கூற முடியாது.

எங்கள் தாயும் தந்தையும் இறந்துவிட்டார்கள்

போன்ற வாக்கியங்கள் இப்பண்பை நன்றாகக் காட்டும்.

என் தந்தையோடு தாயும் இறந்து விட்டார்

என்று ஒடு உருபு இட்டுக் கூறும்போது கூட உடனிகழ்ச்சிப் பொருளைக் காட்ட வேண்டிய கட்டாயம் இல்லை. இவ்வாக்கியமும் கூட

என் தந்தையும் தாயும் இறந்து விட்டார்கள்

என்ற பொருளைத் தரும். ஆனால் இவ்வாக்கியம் தந்தைக்கு முக்கியத்துவம கொடுத்து நிற்றல் காணலாம். எனவே உடனிகழ்ச்சி வேற்றுமை உடனிகழ்தற் தொழிலை மட்டும் காட்டாமல் -ஒடு இணைந்து வரும் சொல்லுக்கு முக்கியத்துவம் கொடுத்து நிற்றல் காணலாம். இதனால் தான் தொல்காப்பியரும்

''ஒருவினை ஒடுச் சொல் உயர்பின் வழித்தே''

எனக்கூறிப் போந்தார். உயர்பு என்பதற்கு முக்கியத்துவம் எனப் பொருள் கொடுத்தலே பொருந்தும். ஆனால் தொல்காப்பிய

உரையாசிரியர்கள் ''உயர்ந்த பொருளை உணர்த்தும் பெயர் வழித் தோன்றும்'' (சொல் 92) என்றவாறு கூறிப் போந்தமை காணத் தக்கது. மேலும் இவர்கள்

அரசனொடு இளையர் வந்தார்

போன்றவற்றை உதாரணங்களாகக் கொண்டனர். ஆனால்,

என் மனைவியோடு சென்றேன்
என் மகளோடு அவள் பள்ளிக்குச் சென்றேன்

போன்றவை இக்கூற்றுக்கு எதிராக உள்ளமை காணத்தக்கது. இந்நிலையில் எந்தச்செயலை யார் முக்கியமாகச் செய்கிறார்களோ அவர்களைக்குறிக்கும் சொல்லோடு – ஒடு வரும் எனக் கூறுவதே பொருத்தம் எனக் கருதலாம்.

என் மனைவியோடு அவள் ஊருக்குச் சென்றேன்
என் தங்கையோடு சென்றேன்

போன்ற வாக்கியங்கள் அவர்கள் செல்ல நான் அவர்களோடு சென்றேன் என்ற பொருளைத்தரும்நிலை காணத்தக்கது. இத் தகைய நிலையினால்தான் மேனாட்டு அறிஞர்கள் உடனிகழ்ச்சி வேற்றுமை "Principality" பொருளைத்தரும் எனக் கூறிப் போந்தனர். எனவே உடனிகழ்ச்சி வேற்றுமை உடனிகழும் செயலையும் அத்துடன் முக்கியத்துவத்தையும் காட்டும் எனக் கருதல் வேண்டும. (அகத்தியலிங்கம் 1976:1).

4.3.4.1. உருபுகள்

இவ்வுடனிகழ்ச்சி வேற்றுமையைக் காட்டுவனவாக -ஒடு கூட, உடன், -ஒடுகூட, உடன்கூட ஆகிய உருபுகள் வருதல் காணலாம்.

–ஒடு

எல்லாப் பெயர்ச் சொற்களுடனும் வரும்

கண்ணனோடு இராமன் வந்தான்
என்னோடு இராமன் வந்தான்

இந்நிலையில் -உடன், கூட ஆகியவற்றுடன் பதில்நிலை வழக்கில் வரும்.

கண்ணனுடன் இராமன் வந்தான்

கண்ணன் கூட இராமன் வந்தான்

என வருதல் காண்க. -கூட என்பது

கண்ணனுக்குக் கூட இராமன் வந்தான்

எனவும் வரும். ஒடு, உடன், கூட ஆகிய உருபுகள் பதில்நிலை வழக்கில்

கண்ணனோடு இராமன் வந்தான்

கண்ணன் கூட இராமன் வந்தான்

கண்ணனுடன் இராமன் வந்தான்

எனவரினும் கூட என்பது முன்னால் கூறியதுபோன்று -க்கு எடுத்து வருதல் கவனிக்கத் தக்கது. -ஒடு, -கூட ஆகியவை இணைந்தும் வருதல் உண்டு.

அவனோடு கூட வந்தேன்

அவளோடு கூட வந்தேன்

இவ்வாறு இணைந்து வருதலை வேறு வேற்றுமைகளிலும் காண முடிகிறது. (அவனிடத்தில் பேசினேன்).

## 4.4 குறி வேற்றுமை

ஒரு குறிக்கோளைக் காட்டும் வேற்றுமையையே குறிவேற்றுமை என்கிறோம். இதனை ஆங்கிலத்தில் 'goal case' என்று கூறுவர்.

நான் வீட்டுக்குப் போனேன்

நான் வீட்டுக்கு வந்தேன்

போன்ற வாக்கியங்களில் காணப்படும் வீட்டுக்கு போன்ற சொற்கள் குறி வேற்றுமைச் சொற்களாகும். செயலைச் செய்யும்

கருத்தா கொண்டுள்ள குறிக்கோளைக் காட்டும் நிலையில் இவ் வேற்றுமைச்சொற்கள் குறி வேற்றுமைச் சொற்களாக கருதப் படுகின்றன.

பொதுவாகத் தமிழில் இவ்வேற்றுமை -கு உருபை எடுத்து நிற்கக் காண்கிறோம்.

பண்டைத் தமிழ் இலக்கண அறிஞர்கள் குகர உருபை நான் காவது வேற்றுமை உருபாகக் கொள்ளுவர். மேனாட்டு அறிஞர் கள் இத்தகைய வேற்றுமையை 'Dative case' என அழைப்பர். இதனை விளக்க வந்த ஆசிரியர்கள் "the to or for case" எனக் கூறுவர். இலத்தீன் மொழியில் "Dativus" என்னும் சொல்லிலிருந்து உருவானதே "Dative" என்ற சொல். இது கொடுத்தல் என்று பொருள்படும் கிரேக்கச் சொல்லிலிருந்து உருவானதாகும். எனவே 'கொடுத்தல்' பொருளைக் காட்டுவதே பொதுவாக "Dative case" என அழைக்கப்படும் என்பதை உணரலாம்.

நான் கண்ணனுக்குப் பணம் கொடுத்தேன்
நான் இராமனுக்குப் பணம் கொடுத்தேன்

போன்ற வாக்கியங்களும் இவ்வேற்றுமையின்பாற்படும் என்பது உணரத்தக்கதாகும். இந்நிலையில் இவற்றைத் தனியாகக் கொள் ளுவதா, இல்லை இவற்றையும் குறி வேற்றுமையில் அடக்குவதா என்ற எண்ணம் எழுவது இயற்கை. பொதுவாகக் கண்ணனுக்குக் கொடுத்தலும் ஒரு குறிக்கோள் எனக் கொண்டால் இதனையும் குறி வேற்றுமையில் அடக்குவதில தவறு எதுவும் இலலை என எண்ணலாம். குறிக்கோளின் சாயலே கொடை எனக் கொண்டு இவ்விரண்டையும் குறி வேற்றுமையாகக் கொள்ளலாம். வருகிற வினையைக் கொண்டு இவற்றைப் பகுத்துக் காணலாம்.

4.4 1 மேலும் குகர உருபு வேறு பல பொருள்களிலும் வரக் காண்கிறோம்.

எனக்குப் பணம் உண்டு
எனக்கு வீடு இருக்கிறது

போன்ற வாக்கியங்களில் எனக்கு போன்ற சொற்கள் குகர சொற் கள். இவை ஒருவனின் உடைமையைப் பற்றிப் பேசுவதாகவே அமைந்துள்ளது. இவற்றிற்கும்

நான் பணம் உடையேன்
நான் வீடு உடையேன்
நீ பணம் உடையை

போன்ற வாக்கியங்களுக்கும் அதிகமான வேற்றுமை இல்லை என்பதை நாம் உணரலாம். இந்நிலையில் இவை இரண்டும் ஒன்றே என எண்ணலாம். இரண்டும் உடைமைப் பொருளையே தருகின்றன. இந்நிலையில் உடைமை காட்டும் சொற்களிலிருந்து

எனக்குப் பணம் உண்டு
உனக்குப் பணம் உண்டு

போன்றவற்றைக் கொண்டு வருவதே நல்லது. இவற்றைப் போன்றே

நாற்காலிக்கு நான்கு கால்கள் உண்டு
மனிதனுக்கு இரண்டு கைகள் உண்டு

போன்ற வாக்கியங்களிலும் குகர வேற்றுமைச் சொற்கள் காணப் படுகின்றன. இவை பொதுவாக நாற்காலியின் அல்லது மனிதனின் பண்பை இவ்வாறு கூறுகின்றது எனக் கருதலாம். எனவே இவற் றிற்கும் முந்தைய வாக்கியங்களுக்கும் இடையே நல்லதொரு வேற்றுமையைக் காணலாம்.

என்னிடம் பணம் இருக்கிறது

எனக்கூற முடியும். ஆனால்

மனிதனிடம் இரண்டு கைகள் இருக்கின்றன

எனக்கூற முடியாது. இந்நிலையில் குகர உருபு இரண்டு வெவ் வேறான பொருள்களைத் தருகின்றது. ஒன்று இயற்கைத் தன்மை

உடைய பொருள்களைக் காட்டுவது; மற்றொன்று உடைமைப் பொருளைக் காட்டுவது. பின்னதை இரண்டாம் வேற்றுமைப் பொருளிலிருந்து கொண்டு வரலாம். முன்னதைத் தனியாகவே கொண்டுவிடலாம்.

4.4.2 இதைப் போன்றுதான் வேறு சில பொருள்களையும் குகர உருபு காட்டுவதைக் காணலாம்.

எனக்கு இவன் தந்தை
எனக்கு இவர் மைத்துனர்
எனக்கு இவன் மாணவன்

போன்ற வாக்கியங்களில் உறவு முறைகூறப்படுவதைக் காணலாம். இந்நிலை தந்தை, மைத்துனர் போன்ற சொற்களால் தெளிவுறுத்தப்படுகிறது. இந்நிலையிலும் வருகிற பெயரால்தான் இப் பொருள் தெளிவுறுகிறது எனக் கருதலாம்.

4.4.3 தமிழில் மிகப் பெருவாரியான குகர வேற்றுமைச் சொற்கள் உணர்வுப் பண்பைக் (experience) காட்டுவனவாக உள்ளன.

எனக்குத் தெரியும்
எனக்குப் பிடிக்கும்
எனக்குத் தலை வலிக்கிறது
எனக்குக் கை குளிருகிறது
எனக்குக் கால் சுடுகிறது
எனக்கு நன்கு புரிகிறது
எனக்குப் பசிக்கிறது

போன்ற நூற்றுக்கணக்கான வாக்கியங்களைக் காண்கிறோம். இவை அனைத்தும் மனித உணர்வுகளைக் காட்டுவனவாக அமைகின்றன. இந்நிலையில் தான் இவ்வேற்றுமை உணர்வான் தன்மையைக் காட்டுகிறது என மேனாட்டு அறிஞர்கள் கூறிப் போந்தனர் என எண்ணலாம். Fillmore என்பார் இதனை experiencer case என்று அழைப்பதன் காரணமும் இதுவே.

பொதுவாகத் தமிழில் இவ்வுணர்வுச் சொற்கள் குகர வேற்றுமையை அடுத்தே வருகின்றன. ஆயினும் இக்குகரச் சொற்கள் எழுவாய் வேற்றுமையா என்ற வினா அறிஞர்களிடையே உண்டு. எனக்கு அவனைத் தெரியும் போன்ற வாக்கியங்களில் எழுவாய்ச் சொல் இல்லை. ஆனால் எனக்குத் தலை வலிக்கிறது போன்றவற்றில் 'தலை' என்ற சொல்லே வலிக்கிறது என்ற சொல்லின் எழுவாயாக உள்ளது. ஆனால்

எனக்குத் தானாகவே தெரியும்
எனக்குத் தன்னைத் தானே தெரியும்

போன்ற நிலையில் எனக்கு என்பது எழுவாயாகவே கொள்ள வேண்டும். தானாகவே, தன்னைத் தானே போன்ற சொற்கள் எழுவாயுடன் தான் வரும். இதனால் தான் பல இலக்கண அறிஞர்கள் இவற்றையும் எழுவாய்ச் சொற்களாகக் கருதுகின்றனர்.

மேற்கூறிய விளக்கங்கள் அனைத்திலும் உணர்வைக் கொள்ளுபவை குகர வேற்றுமைச்சொற்களே. இந்நிலையில் அவற்றையும் குறி வேற்றுமையாகவே கொள்ளுவர் வேற்றுமை இலக்கணிகள் (case grammarians). எனவேதான் இதனைத் தனி வேற்றுமையாகக் கொள்ளாமல் குறிவேற்றுமையாகவே நாம் கருதுகிறோம்.

4 4.4 மேலும் குகர வேற்றுமைச் சொற்கள்

எனக்குப் பணம் கிடைத்தது

எனக்குப் பரிசு கிடைத்தது

எனக்கு மிட்டாய் வந்தது

போன்ற வாக்கியங்களிலும் வரக் காண்கிறோம். கிடைத்தது போன்ற வினைச் சொற்கள் வருபவை நிச்சயமாக அதனால் பயன் அடைந்தவரைக் குறித்து நிற்கக் காண்கிறோம். இதனால் இத்தகைய நிலையை வைத்து இதனை "Benefactive case" என்று பலர் குறிப்பிட்டு நிற்பதைக் காணலாம். எனினும் பரிசு யாரிடம்

போயிற்று, யாருக்குப் போயிற்று என வினவின் இதுவும் குறி வேற்றுமையின் பாற்படும் என எண்ணலாம்.

அடுத்து

நான் வீட்டிற்குப் பணம் கொடுத்தேன்

நான் புஸ்தகத்திற்குப் பணம் கொடுத்தேன்

போன்ற வாக்கியங்களிலும் குகர வேற்றுமைச் சொற்கள் வரக் காண்கிறோம். இவற்றைப் பொதுவாக நோக்க வேற்றுமை (purposive case) எனக் குறிப்பிடுவர் பலர். இவை பொதுவாக

நான் வீடு வாங்குவதற்காகப் பணம் கொடுத்தேன்

நான் புத்தகம் வாங்குவதற்காகப் பணம் கொடுத்தேன்

போன்ற வாக்கியங்களிலிருந்து உருவானவையாகும். இந்நிலையில் இவை பொதுவாகக் காரிய வேற்றுமை எனக் கருதப்படினும் வாங்குதல் குறிக்கோள் எனக் கொண்டால் இவற்றையும் குறி வேற்றுமையின்பால் அடக்கிவிடலாம்.

இத்தகைய நிலையை வேறு பல வாக்கியங்களில் காணப்படும் குகர வேற்றுமைச் சொற்களிலும் காணலாம்.

### 4.4.5 உருபுகள்

இவ்வேற்றுமையின் உருபுகளாக -க்கு, -உக்கு, -அக்கு ஆகியவற்றைக் காணலாம்.

#### 4.4.5.1 -க்கு

உயிர் எழுத்துக்களின் பின்னாலும் -அன் சாரியைக்குப் பின்னாலும் வரும்.

கம்பி + க்கு > கம்பிக்கு

வீடு + க்கு > வீட்டுக்கு

அது + அன்+க்கு> அதற்கு

இது + அன்+க்கு> இதற்கு

4.4.5.2 -அக்கு

என், உன், நம், தன், தம் ஆகியவற்றிற்குப் பின்னர் வரும்.

என் + அக்கு > எனக்கு

உன் + அக்கு > உனக்கு

நம் + அக்கு > நமக்கு

தன் + அக்கு > தனக்கு

4.4.5.3 -உக்கு

பிற இடங்களில் பின்னர் வரும்.

கால் + உக்கு > காலுக்கு

மீன் + உக்கு > மீனுக்கு

தேள் + உக்கு > தேளுக்கு

மரம் + அத்த்+உக்கு > மரத்துக்கு

அவன்+உக்கு > அவனுக்கு

4.5 -இன் வேற்றுமை

ஐந்தாவது வேற்றுமையாக இதனைக் கருதுவர்.

வீட்டிலிருந்து வந்தான்

வீட்டிலிருந்து கிளம்பினான்

போன்றவற்றை இவ்வேற்றுமையாகக் கருதுவர். மேனாட்டு அறிஞர்கள் இதனை 'ablative case' என்பர். தொழில் நடக்கும் முன் எங்கே இருந்தான் என்பதைக் காட்டும். இந்நிலையில் இதனை இடவேற்றுமையில் அடக்கிவிடலாம் என்பதால் இதனைத் தனியொரு வேற்றுமையாகக் கருதவில்லை.

## 4 6. உடைமை வேற்றுமை

உடைமைப்பொருளை உணர்த்துவதே உடைமை வேற்றுமை என்பது மரபு இலக்கண அறிஞர்கள் தரும் விளக்கம். ஒருபொருள் இன்னொன்றின் உடைமையாகஇருக்கும்போது அவ்வுடைமையைக் குறிப்பதே உடைமை வேற்றுமை. ஆங்கிலமொழியில் இதனைப் "Possessive case" என்பர்.

கண்ணனுடைய வீடு
என்னுடைய பெண்
உன்னுடைய வாழ்க்கை

போன்றவை இவ் வேற்றுமைக்குக் காட்டப்படும் உதாரணங் களாகும்.

இவ்வேற்றுமைக்கும் பிற வேற்றுமைகளுக்குமிடையே ஒரு சில வேறுபாடுகளைக் காணலாம். இதனால் இது ஒரு வேற்றுமை யாகக் கருதப்படவேண்டுமா என்ற வினாவும் எழாமல் இல்லை. எல்லா வேற்றுமைகளும் ஒரு வினையைக்கொண்டு முடிய இவ்வேற்றுமையோ பெயர் ஒன்றையே கொண்டு முடிதல் இவற்றிடையே காணப்படும் மிக முக்கியமான வேறுபாடாகும்.

கண்ணனைக் கண்டேன்
கண்ணனோடு வந்தேன்
கண்ணனுக்குக் கொடுத்தேன்
கண்ணனிடமிருந்து வந்தேன்
கண்ணனிடம் பேசினேன்

போன்றவற்றில் காணப்படும் பல வேறு வேற்றுமைச்சொற்கள் வினைகளைக் கொண்டு முடிவடைய

கண்ணனுடைய வீடு
என் எண்ணம்

போன்றவற்றில் உடைமை வேற்றுமை பெயர்ச்சொற்களைக் கொண்டு முடிவது காணத்தக்கது.

பெயர்ச்சொற்கள் மட்டுமன்றி ஒரு சில இடங்களில் சில இடைச்சொற்களையும் ஏற்று வருதல் உண்டு.

வீட்டின் மேல்
வீட்டின் கீழ்
வீட்டின் முன்னால்
வீட்டின் பின்னால்

போன்றவை இதற்கு உதாரணங்களாகும்.

உடைய என்ற இவ்வேற்றுமையின் உருபே பிற உருபுகளி லிருந்து மாறுபட்டதாக உள்ளது. -ஐ, -ஆல் போன்றவை ஒட் டாக இருக்க உடைய என்பது உடையன் போன்றவற்றில் காணப் படும் குறிப்பு வினையின் பெயரெச்சமாக இருப்பதும்

அவனுடை வீடு

போன்றவற்றில் உடை என்ற அடியே உருபாக வருவதும் காணத்தக்கன. எனவே, இவ்வேற்றுமை உடை என்ற வினைச் சொல்லைக் கொண்ட வாக்கியங்களிலிருந்து உருவானதோ என எண்ணத் தோன்றும்.

கண்ணன் வீடு உடையன் →
கண்ணனுடைய வீடு

இதுபற்றிப்பின்னர்க் காண்போம்.

மேலும் அவனுடை (ய) வீடு, உன்னுடைய சாயல் போன் றவை உடைமை வேற்றுமையாக இருகக

புகழுடை(ய) மன்னன் (புகழை உடைய மன்னன்)
குழையுடை(ய) காது (குழையை உடைய காது)

போன்றவை அவ்வேற்றுமையாக இல்லாமையும் கருதத்தக்கது.

பிற வேற்றுமைகள் பொதுவாக எளிய வாக்கியங்களில் ஒரு தடவைக்கு மேல் வருவதில்லை.

*ராமனைக் கண்ணனைப் பார்த்தேன்.

எனக் கூறுவது முடியாத ஒன்று. ஆனால்

என்னுடைய தலைவருடைய அக்காளின் தம்பி
என் அண்ணனின் மனைவியின் தம்பி

என்றெல்லாம் கூற முடிவதும் இவற்றிடையே உள்ள வேறுபாட் டைக் காட்டும்.

பிற வேற்றுமை உருபுகளுக்குப் பின்னர் பலவேறு ஒட்டுக்களை இணைக்க முடியும். எடுத்துக்காட்டாக

| | |
|---|---|
| கண்ணனையும்<br>கண்ணனையா<br>கண்ணனைத்தான்<br>கண்ணனையே | பார்த்தேன் |

எனக் கூறமுடியும். ஆனால்

*கண்ணனுடையவும் வீடு
*கண்ணனுடையவா வீடு
*கண்ணனுடையதான் வீடு

போன்ற ஒட்டுக்களை இணைக்க முடியாது. இவ்வொட்டுக்கள், உடைய வேற்றுமைச்சொற்களுக்குப் பின்னர்வரும் பெயர்களுடன் தான் இணையுமேயன்றி இவற்றிற்குப் பின்னர் இணைவதில்லை.

கண்ணனுடைய வீட்டையும் இராமனுடைய வீட்டையும் பார்த்தேன்.

எனக் கூறமுடியுமேயன்றி

*கண்ணனுடையவும் இராமனுடையவும் வீட்டைப் பார்த்தேன்

எனக் கூறமுடியாது.

இந்நிலையில் இவை அந்த, பெரிய போன்ற பெயர் அடைகளைப் போன்றுவருதல் கவனிக்கத்தக்கது.

பிற வேற்றுமைச் சொற்களை ஆங்காங்கே இடம் மாற்ற முடியும்.

அவனைக் கண்டேன்
கண்டேன் அவனை
பணம் கொடுத்தேன்
கொடுத்தேன் பணம்

ஆனால் உடைமைச்சொல்லையும் பெயரையும் மாற்றமுடியாது. எப்பொழுதும் உடைமைச் சொல் முன்னும் பெயர் பின்னும் வரும். அந்த வரிசை முறையை மாற்ற முடியாது.

கண்ணனுடைய வீடு

என்பது சரியான நிலை.

*வீடு கண்ணனுடைய

*எண்ணம் என்

எனக் கூறுவது முடியாத ஒன்று.

பொதுவாக இரண்டு பெயர்ச்சொற்கள் இணைந்துவரும்போது அவற்றிடையே சில பொருள் தொடர்புகள் இருப்பதைக்காணலாம்.

மரப் பெட்டி
கிணற்றுத் தவளை
கத்திக் குத்து
மேற்கு நாடுகள்

போன்ற சொற்களில் எல்லாம் சில பொருள் தொடர்புகள் இருக்கக் காண்கிறோம். இந்நிலையில் இவை

மரத்தால் ஆன பெட்டி
கிணற்றில் வாழும் தவளை
மேற்கே இருக்கும் நாடுகள்

போன்றவற்றிலிருந்து உருவானவை என்பதை நாம் அறிவோம். இந்நிலையில்

கண்ணனுடைய வீடு
என்னுடைய பெண்
உன்னுடைய வாழ்க்கை

போன்றவற்றிலும் ஏதாவது பொருள் தொடர்பு இருக்கிறதா என்றும் இருப்பின் அதுஎன்ன என்றும் அதைக்காட்ட வேறு வழி உள்ளதா என்றும் எண்ணுவதில் தவறில்லை. இந்நிலையில் இவை

கண்ணன் வீடு உடையன் > கண்ணனுடைய வீடு
நான் பெண் உடையன் > என்னுடைய பெண்
நீ ஒரு வாழ்க்கை வாழுகிறாய் > என்னுடைய வாழ்க்கை

போன்று உருவானது என்பதையும் காணலாம். எனவே கண்ணனுடைய வாழ்க்கை போன்ற உடைமை வேற்றுமைகள் ஒரு வாக்கியத்திலிருந்து உருவாகின்றன என்றும் இதனால்தான் உடைமை வேற்றுமைச்சொல் பெயர்ச்சொல்லைக் கொண்டு

முடிகின்றது எனவும் எண்ணலாம். இந்நிலையில் இது அடிப்படையிலே பிற வேற்றுமைகளிலிருந்து மாறுபட்டிருக்கக் காண்கிறோம்.

பிற வேற்றுமைகள் ஒருவாக்கியத்தில் இருக்க இவ்வேற்றுமை இரண்டுவாக்கியங்களிலிருந்து (பெயரெச்சம் போன்று) உருவாகியிருக்கக் காண்கிறோம். இதனால்தான் உடைய என்றபெயரெச்சம் இதன் உருபாக உள்ளது என எண்ணுவதில் தவறில்லை.

வந்த பையன்
படித்த பையன்

போன்ற தொடர்கள்

பையன் வந்தான் — பையன்
பையன் படித்தான் — பையன்

என்பவற்றிலிருந்து வருவன என்பதை நாம் அறிவோம். அதாவது பெயரெச்சத்தொடர்கள் இருவாக்கியங்களிலிருந்து வருவன. இவற்றைப் போன்றே

கண்ணனுடைய வீடு
கண்ணனுடைய புத்தகம்

போன்றவையும்

கண்ணன் வீடு உடையன் — வீடு
கண்ணன் புத்தகம் உடையான் — புத்தகம்

போன்ற தொடர்களிலிருந்து உருவானவை. இந்நிலையில் இவையும் இருவாக்கியங்களிலிருந்து உருவானவை ஆகும்.

இவ்வேற்றுமைச் சொற்களை ஆராயின் இவற்றை இரண்டு வகையாகப் பிரிக்கலாம்.

1. உடைமைப் பொருள் காட்டுபவை (possessive)
2. வேறுபல வேற்றுமைப் பொருள் காட்டுபவை (non-possessive)

### 4.6.1. உடைமைப் பொருள் காட்டுபவை

கண்ணனுடைய வீடு
கண்ணனுடைய கை

கண்ணனுடைய குடம்

போன்ற தொடர்களில் காணப்படுவன உடைமைப் பொருளைக் காட்டுவனவாகும். இவற்றைப் போன்றே

கண்ணனின் உயரம்
கண்ணனின் நிறம்
கண்ணனின் வயது
விரலின் நுனி
வீட்டின் முகப்பு
சூரியனின் வெப்பம்

போன்றவையும் உடைமைப் பொருளாகும்.

4.6.2. வேறு பொருள் காட்டுபவை

கண்ணனின் பாட்டு (கண்ணன் பாடிய பாட்டு)

போன்றவை

கண்ணன் பாட்டுப் பாடினான்

போன்ற வேற்றுமைப் பொருளைக் காட்டும். இவற்றைப் போன்றே

கண்ணனுடைய புத்தகம் (கண்ணன் எழுதிய புத்தகம்)
மாணவர்களுடைய விடுதி (மாணவர்களுக்கான விடுதி)
கண்ணனுடைய ரயில் (கண்ணன் போகும் ரயில்)
ரோஜாவின் மணம் (ரோஜாவிலிருந்து வரும் மணம்)
கண்ணனுடைய பல்கலைக்கழகம் (கண்ணன் படித்த பல்கலைக்கழகம்)
சிதம்பரத்தின் வடக்கு (சிதம்பரத்திற்கு வடக்கு)
தண்ணீர்ப் பையன் (தண்ணீர் தரும் பையன்)

போன்றவை பலவேறு வேற்றுமைப் பொருள் காட்டுவது காண்க.

4.6.3

உடைய பொருளையும் தற்கிழமை, பிறிதின்கிழமை என இரண்டு வகையாகப் பிரிப்பர்.

4.6.3.1 தற்கிழமை

பொதுவாக உடைமைப் பொருளையும் அதைக் கொண்டிருக்

கும் பொருளையும் பிரிக்க முடியாத ஒரு நிலை இருக்குமானால் அதைத் தற்கிழமை எனக் கூறலாம்.

என் தலை
என் உடல்
என் கை

போன்றவற்றை இதற்கு உதாரணமாகக் காட்டுவர். எனினும், இயற்கையாக ஒரு பொருளுக்குரியவற்றை எல்லாம் இதன்கண் அடக்குவதில் தவறு இல்லை.

கத்தியின் கூர்மை
தீயின் வெப்பம்
பாலின் வெண்மை

போன்ற பலவும் இதனுள் அடங்கும்.

வீட்டின் பக்கம்
வீட்டின் மேல்
வீட்டின் கீழ்

போன்றவற்றையும் இதனுள் அடக்கலாம்.

4 6.3.2 பிறிதின் கிழமை

உடைமைப் பொருளும் அதைக் கொண்டிருக்கும் பொருளும் பிரிந்து இருக்கும் ஒரு நிலையிருக்குமானால் அதனைப் பிறிதின் கிழமை எனலாம்

என் மனைவி
என் அண்ணன்
என் படம்
என் பாட்டு
என் நண்பன்

போன்றவை பிறிதின்கிழமையாகும்.

## 4.6.4 இவ்வேற்றுமை காட்டும் உருபுகள்

இவ்வேற்றுமையைக் காட்டும் உருபுகளாக -அது, -உடைய, -∅ ஆகியவை உள்ளன.

### 4.6.4.1 -அது

எல்லாப் பெயர்ச் சொற்களுடனும் வரும். எல்லாப் பெயர் களின் பின்னால் வரும் நிலையில் இதுவும் -உடைய,- ∅ என்பனவும் பதில்நிலை வழக்கில் வரும்.

என் - அது → எனது
எனது வீடு
எனது மகன்
எனது எண்ணம்
என்னுடைய வீடு
என்னுடைய மகன்
என்னுடைய எண்ணம்
என் எண்ணம்
என் மகன்

இது -இன் சாரியைக்குப் பின்னரும் வரும்.

வீட்டினது கதவு
மரத்தினது கிளை

### 4.6.4.2 -உடைய

முன்னர்க் குறிப்பிட்டது போன்று இதுவும் -அது மாற்றுருபும் பதில்நிலை வழக்கில் வரும்.

கண்ணனுடைய வீடு
மரத்தினுடைய கிளை
குரங்கினுடைய கால்
அவனுடைய குழந்தை

### 4 6.4.3 -∅

பலவேறு பதிலீடு பெயர்களுடனும், பெயருடனும் வரும்.

என் கால் — வீட்டு வாசல்
உன் கால்
அவன் எண்ணம்

இந்நிலையில் இதுவும் -உடைய, -அது ஆகிய உருபுகளுடன் பதில் நிலை வழக்கில் வரும்.

என்னுடைய கால்
எனது கால்
என் கால்
அவன் கால்
அவனது கால்
அவனுடைய கால்
கண்ணன் வழி
கண்ணனது வழி
கண்ணனுடைய வழி

உடைமை வேற்றுமைச் சொற்களுக்குப் பின்னர்ப் பலவேறு பெயர்கள் வருதலும் காணத்தக்கது.

என்னுடைய மகன், மகள், தந்தை ஆகியோர்
என் மனைவி, மகள் ஆகியோர்
*ஈராக்கின் கப்பல் படை, கடற்படை முதலிய படைகள்*
என்னுடைய மகனும் மகளும்

### 4.6.5 -இன் உடைமை வேற்றுமை உருபா?

வீட்டின் வாசல்
கண்ணனின் போதனை
கரும்பின் பாத்தி

போன்றவற்றில் காணப்படும் -இன் உடைமை வேற்றுமை உருபு எனக் கருதுவர் சிலர் (ஆந்திரனோவ், 1972). ஆனால் இன்னும் *சிலரோ (இராதாகிருஷ்ணன்,* 1975) இதனை வெற்றுருபாகக் கொண்டு இது உடைமை வேற்றுமை உருபு அன்று எனக்கூறுவர்.

வீட்டினுடைய வாசல்
வீட்டினது வாசல்

போன்றவற்றில் - இன் மட்டுமன்றி - உடைய உருபும் காணப்படு கின்ற நிலையில் - இன் வெற்றுருபாகவே உள்ளது. இந்நிலையில் இதனை உடைமை வேற்றுருபாகக் கொள்வது பொருந்தாது.

மேலும் - இன் இவ்வேற்றுமையில் மட்டுமன்றி

வீட்டினுக்கு வந்தான்
வீட்டினைப் பார்த்தான்
வீட்டினால் என்ன பயன்?
வீட்டின் கண் வந்தான்

போன்று பலவேறு உருபுகளுக்கு முன்னரும் வருகிற நிலையில் இதனை வெற்றுருபாகவோ சாரியையாகவோ கொள்ளுதலே பொருந்தும். எனவே

வீட்டின் வாசல்

என்பதை

வீட்டின் + ∅ + வாசல்

எனக் கொண்டு சூனிய உருபாகவே கொள்ளுதல் பொருத்தம்.

## 4 7 இடவேற்றுமை

இடப் பொருளைக் காட்டும் வேற்றுமை இடவேற்றுமை என அழைக்கப்படும். ஆங்கிலத்தில் இதனை "locative case"[1] என அழைப்பர். ஒருசெய்கை நடைபெறுகிற இடத்தைக் குறிப்பிடுவதே இடவேற்றுமை எனக் கருதலாம். பொதுவாகப் பண்டைத் தமிழில் -கண் என்ற உருபு பெரும்பான்மையாக இப்பொருளில் பயன்பட்டதால் இதனைக் 'கண்' வேற்றுமை எனவும் கூறுவர். -இல் உருபும் இப் பொருளில் வருவதால் 'இல்' வேற்றுமை என்றும் அழைப்பர்.

அவன் வீட்டில் இருக்கிறான்
அவன் வீதியில் நடந்தான்
சென்னையில் மாபெரும் ஊர்வலம் நடந்தது

போன்ற வாக்கியங்களில் காணப்படும் இல் வேற்றுமைச் சொற்கள் இடப்பொருளைக் காட்டும். இருத்தல் தொழிலும் நடத்தல் தொழிலும் நடைபெற்ற இடம் வீடாகவும் வீதியாகவும் உள்ள நிலையில்தான் அவை இடவேற்றுமைச் சொற்களாக உள்ளன. இவற்றைப் போன்றே ஊர்வலம் நடந்த இடம் சென்னையாதலால் தான் சென்னையில் என்பது இடவேற்றுமைச் சொல்லாகக் கருதப் படுகின்றது.

---

1 locus + ative என்று பிரிப்பர். இடத்தைக் காட்டும் நிலையில் இது இப்பெயர் பெற்றது.

வீடு, வீதி, சென்னை போன்ற சொற்கள் இடப்பெயர்களாக உள்ளமை இங்குக் குறிப்பிடத்தக்கது. இப்பெயர்களுடன் - இல் உருபு வரும்போது அவை இட வேற்றுமைச் சொற்களாகவே இருக்கும். வீடு, காடு, நாடு, மலை போன்ற பொதுப் பெயர்ச் சொற்களும் சென்னை, அண்ணாமலைநகர், நாகர்கோயில், நியூயார்க் போன்ற சிறப்புப் பெயர்களும் இடப் பெயர்களாகும். இவற்றுடன் இவ்வேற்றுமை உருபு வரும்போது இவை இட வேற்றுமைச் சொற்களாகவே இருக்கும்.

பொதுவாக இவ்வேற்றுமைச் சொற்கள் எங்கு என்ற வினா விற்குப் பதில் தருவனவாக அமையும்.

அவன் எங்கு இருக்கிறான்?
அவன் எங்கு நடந்தான்?
ஊர்வலம் எங்கு நடந்தது?

ஆகியவற்றின் பதில்களாகவே மேலே காட்டிய வாக்கியங்கள் அமைகின்றன.

இவ்வேற்றுமை இடப்பெயர்களோடு மட்டுமல்லாமல் பிற பெயர்களோடும் வரும்.

அவன் நாற்காலியில் இருந்தான்
அவன் கம்பியில் நடந்தான்
அவன் புத்தகத்தில் வைத்தான்

போன்ற வாக்கியங்களில் காணப்படும் நாற்காலி, கம்பி, புத்தகம் போன்றவை இடப்பெயர்களல்ல. எனினும் இவை இடப்பொருளில் வருவது கவனிக்கத்தக்கது. இவற்றை

அவன் எங்கு இருந்தான்?

என எங்கு என்ற வினா இட்டு வினாவுவதுடன்

அவன் எதில் இருந்தான்?

என எதில் என்ற வினாவை இட்டும் வினவ முடியும். ஆனால் இந்நிலையை இடப்பெயர்களில் காணமுடியாது.

*நீ எதில் வாழ்ந்தாய்?

என வினவவோ, அதற்குப் பதிலாக

நான் சென்னையில் வாழ்ந்தேன்

எனவோ கூறமுடியாது. நாற்காலி, கப்பி போன்றவை இடப் பெயர்கள் அல்லவாயினும் இடப் பொருளைக் காட்டி நிற்கும். அதாவது இடவேற்றுமை உருபை ஏற்கும்போது அவை இடப் பொருளைத் தருகின்றது. நடத்தலும் வைத்தலும் நடப்பதற்குரிய இடமாகக் கபபியும் வைப்பதற்குரிய இடமாகப் புத்தகமும் உள்ளன எனக் கருதலாம்.

உயர்திணைப் பெயர்கள் இடப் பெயர்களல்ல. எனினும் இப் பெயர்களும் இவ்வுருபுகளை ஏற்று இடப்பொருள் காட்டும்.

அது என்னிடம் உள்ளது
அது இராமனிடம் உள்ளது

இவை யாரிடம என்ற கேள்விக்கு விடையாக வரும். இவற்றைப் போன்று பலவேறு அஃறிணைப் பெயர்கள், நுண்பொருட் பெயர்கள் போன்றவற்றுடன் இவ்வுருபுகள் வந்து நிறறல் காணலாம்.

அது மரத்தில் தங்கினது
அது என எண்ணத்தில உதித்தது

போன்ற பல வாக்கியங்கள் இப்பண்பைக் காட்டும். எனவே இட வேற்றுமை இடப்பெயர்ச் சொற்களுடன் மட்டுமன்றி வேறு பல சொற்களுடனும் வரும் என்பதும் எனினும் இடப்பெயர்களுடன் வரும்போது ஒரு தனித்தன்மை உடையது என்பதும் விளங்கும்.

இவ்வேற்றுமை இடவேற்றுமை என அழைக்கப்படுமாயினும் இடப்பொருளில் மட்டுமல்லாமல் வேறு சில பொருள்களிலும் வரும் எனக் குறிப்பிட்டோம். இவற்றுள் மிக முக்கியமானது காலப் பொருளாகும். இடப்பொருள் எத்தனை அளவு முக்கியமானதோ அத்தனை அளவு காலப்பொருளும் முக்கியமானதாகும். இவ்வேற் றுமை உருபே காலப் பொருளையும் காட்டும். இதனால்தான் ''வினை செய் இடத்தின் நிலத்தின் காலத்தின்....'' எனத் தொல் காப்பியர் கூறிச் செல்லுவார்.

காலப் பொருளில் வரும்போது காலப் பெயர்களின் பின்னால் இவ்வேற்றுமை உருபுகள் வருவது காணத்தக்கது.

அவன் மாலையில் வந்தான்
நான் காலையில் வந்தேன்
அவன் இரவில் உண்டான்

போன்ற வாக்கியங்களில் காணப்படும் மாலை, இரவு போன்ற சொற்கள் காலப்பெயர்களாகும். இந்நிலையில் இவை 'எப்பொழுது' என்ற வினாவின் பதில்களாக அமையும்.

அவன் எப்பொழுது வந்தான்?
அவன் மாலையில் வந்தான்

இவ்வாறு காலப் பெயர்களுடன் வருவதுடன்

அவன் இறுதியில் வந்தான்
அவன் முதலில் பேசினான்
அவன் நடுவில் எழுந்து போனான்

போன்ற வேறு பெயர்களுடன் வருவதும் காணத்தக்கது. எனினும் இவை இறுதி நேரத்தில், முதல் நேரத்தில் (?) எனிபவற்றின் மாற்றமே என எண்ணலாம். இதே நிலையை இடப்பொருளிலும் காண்கிறோம்.

அவனுடைய வீடு இறுதியில் இருக்கிறது
என்னுடைய வீடு நடுவில் இருக்கிறது
உன்னுடைய வீடு முதலில் இருக்கிறது

போன்ற வாக்கியங்கள் இப்பண்பைக் காட்டும். இவை 'எங்கே' என்பதன் பதிலாக உள்ளன.

### 4.7.1 இடப் பொருளும் காலப் பொருளும் ஒரே வேற்றுமைப் பொருளா?

இல் போன்ற வேற்றுமை உருபுகள் காலப்பொருளும் இடப் பொருளும் காட்டும் நிலையில் இரண்டும் ஒரே வேற்றுமையின் பொருளா; இல்லை, இரண்டு வெவ்வேறு வேற்றுமைப் பொருள் களா என்ற எண்ணம் எழுவது இயற்கை. காலப் பொருளைக் காலப்பெயர்களின் பின் உருபுகள் வரும் நிலையிலும் இடப்பொரு ளைப் பிற பெயர்களின் பின்னால் வரும் நிலையிலும் உணர்த்து கின்றன எனக் கொண்டு ஒரே வேற்றுமையின் இரண்டு பொருள் களாகக் கொள்ளலாம் என எண்ணலாம். இந்நிலையில் தவறு எதுவும் இல்லை.

ஆனால்

அவன் மாலையில் வீட்டில் இருந்தான்
அவன் இறுதியில் நாற்காலியில் அமர்ந்தான்
அவன் இறுதியில் கோபத்தில் நாற்காலியில் அமர்ந்தான்

போன்ற வாக்கியங்களில் ஒரே வேற்றுமை உருபினைக் கொண்ட சொற்கள் பல வருதல் காண்கிறோம். இந்நிலையைப் பொதுவாக வேறு வேற்றுமைகளில் காணமுடிவதில்லை. எனவே காலப் பொருளையும் இடப்பொருளையும் ஒரு வேற்றுமையாகக் கொள்வதா என்ற சிக்கல் எழாமல் இலலை.

மேலும் இவ்வுருபுகள்

அவன் காரில் வந்தான்
அவன் கப்பலில் வந்தான்
அவர் குதிரையில் வந்தார்

போன்ற வாக்கியங்களில் வரும்போது இடப்பெயர்களுடனோ அல்லது காலப் பெயர்களுடனோ வராமல் வாகனப் பெயர்களுடன் வந்துநிற்றல் காண்கிறோம். இவை மட்டுமன்றி

கடிதம் தபாலில் வந்தது

போன்ற வாக்கியங்களும் உள்ளன. இந்நிலையில் இவ்வாக்கியங்கள் எங்கு அல்லது எப்பொழுது என்ற வினாக்களின் விடையாக அமையாமல் எதில் அல்லது எப்படி என்ற வினாவின் பதில்களாக அமைகின்றன.

செயல்கள் நடந்த இடத்தைக் குறிப்பிடுவதுடன் செயல் நடைபெறுகிற பொருளையும் குறிப்பிடுவதாகச் சில வருதல் உண்டு.

மண்ணில் வெட்டினான்
கையில் கடித்தான்
முகத்தில் தடவினான்

போன்ற வாக்கியங்களில் காணப்படும் இல் வேற்றுமைச் சொற்கள் எதில், எங்கு, எப்பொழுது ஆகிய வினாக்களின் பதில்களாக அமைகின்றன.

நிகழ்ச்சிகளைக் குறிக்கும் பெயர்களுடனும் இவை வருகின்றன.

தேர்தலில் வெற்றி பெற்றான்
கூட்டத்தில் பேசினான்

போன்றவற்றிலும் இவ்வுருபுகள் வருகின்றன. இப்பெயர்கள் இடப் பெயர்களல்ல; நிகழ்ச்சிகளைக் குறிக்கின்றன. இவற்றுடன் வரும் -இல் உருபுச் சொறகள் எதில் என்பதன் பதில்களாக வருகின்றன. இவற்றைப் போன்றே கல்யாணம், பாராட்டு விழா, வரவேற்பு போன்ற பல சொற்களுடன் வந்து நிற்கின்றன. இவையும் இடப் பொருள் காட்டும்.

இது மட்டுமன்றி -இல் வேற்றுமை வேறு பல பொருள்களிலும் வரக் காண்கிறோம். காரணப்பொருள், கருவிப்பொருள் (material) போன்றவற்றிலும் வருகின்றது.

அவர்கள் கல்வீச்சில் காயமடைந்தார்கள்
அவர்கள் அழகில் மயங்கினார்கள்
அவன் குடிபோதையில் வீழ்ந்தான்
அவன் கர்வத்தில் அழிந்தான்
அவன் மழையில் நனைந்தான்

போன்ற வாக்கியங்களில் காணப்படும் இவ்வேற்றுமைச் சொற்கள் காரணப் பொருளில் வருதல் கண்கூடு. எதில் என்ற வினாவுக்குப் பதில்களாக அமைந்துள்ள சொற்களே இவை.

கருவிப் பொருளிலும் இவ்வேற்றுமைச் சொற்கள் வரும்.

கல்லில் சிலை செய்தான்
மாவில் அப்பம் செய்தான்

போன்றவை ஒரு பொருளிலும்

தறியில் துணி நெய்தான்
அரிவாள் மணையில் நறுக்கினான்

போன்றவை ஆயுதப் பொருளிலும் வருதல் காணத்தக்கது.

இவை மட்டுமன்றி வினையடையாக (adverb) வருதலும் உண்டு.

புதிய நோக்கில் பார்த்தார்கள்
வேகத்தில் ஓடியது

மக்கள் பெருமளவில் கூடினார்கள்
அவர்கள் உண்மையில் நல்லவர்கள்

போன்ற வாக்கியங்களில் காணப்படுவன இப்பொருளிலேயே வருகின்றன. எப்படிப் பார்த்தார்கள் போன்ற வினாக்களின் பதில்களாகவே இவை அமைகின்றன.

இன்னும் இது பற்றி ஆராயின் ஒருசில புதுப் பொருள்களையும் காணமுடியும். பொதுவாக மொழிகளில் சொல்ல வேண்டிய பொருள்கள் பல இருக்க அவற்றைக் கூறும் உருபுகள் ஒரு சிலவே உள்ளன. இந்நிலையில்தான் ஒரு உருபு பல பொருள்களைக் காட்டி நிற்கக் காண்கிறோம்.

இவ்வேற்றுமை பன்மைப் பெயர்களுடன் வரும்போது ''இடையே'' என்ற பொருளும் உள்ளமை காணத்தக்கது.

அவர்களில் இவன் நல்லவன்
அவற்றில் இது பெரியது

போன்ற வாக்கியங்கள் இப்பண்பைக் காட்டும்.

### 4.7.2 இவ் வேற்றுமை காட்டும் உருபுகள்

-இல், -இடம் போன்ற உருபுகள் மட்டுமன்றி வேறுபல பின்னுருபுகளும் இவ்வேற்றுமைப் பொருளில் வரக் காணலாம்.

வீட்டின் உள்ளே வந்தான்
வீட்டின் வெளியே வந்தான்
வீட்டின் { பக்கத்தில் / அருகில் } வந்தான்
வீட்டின் மேல் இருந்தது
வீட்டின் கீழ் இருந்தது
அவற்றின் இடையே இருந்தது
அவர்களிடையே கலகம் நடந்தது
அவன்பால் எனக்கு உரிமை உண்டு
அதன் முன்னால் வந்தேன்
அதன் பின்னால் வந்தேன்
அதன் பிறகு வந்தேன்
வீடு வரைச் சென்றேன்

போன்ற வாக்கியங்களில் காணப்படும் (உள்) உள்ளே, வெளியே, பக்கம், மேல், கீழ், இடையே, பால், முன்னால், பின்னால், பின், முன், பிறகு, வரை போன்ற பின்னுருபுகளும் இடப் பொருளையும் (சில) காலப் பொருளையும் காட்டும். முன்னர்க் கூறியபடி சில மொழிகளில் இவற்றுள் பல வெவ்வேறு வேற்றுமைகளாகக் கருதப் படுகின்றன. 'வீட்டினுள்' போன்றவை பின்னிஷ் போன்ற மொழி களில் 'inessive' வேற்றுமை என்றும் 'வீட்டின் வெளியே' போன் றவை 'elative' வேற்றுமை என்றும் 'வீட்டின் மேல்' போன்றவை 'adessive' வேற்றுமை என்றும் அழைக்கப்படுகின்றன. எனவே நாம் ஒரு வேற்றுமை எனக் கருதுவதை அவர்கள் பலவேறு வேற் றுமைகளாகக் கருதுகின்றனர்.

இடவேற்றுமை உருபுகளாக -இல், இடம் ஆகிய இரண்டும் இன்று வருதல் காணலாம். கண், கால், கடை, இடை போன்றவை பின்னுருபுகளாகக் கருதப்படுவதுடன் அதிகமாக இன்றைய தமிழில் வருவதில்லை.

4 7.2.1 -இல்

இடவேற்றுமை உருபுகளில் இதுவே மிகப் பெரும்பான்மையாக வருகிறது முன்னர்க் கூறியதுபோல இது பல வேறு பொருள் களில் வருகின்றது. அஃறிணைச் சொற்களுடன் வரும்.

வீட்டில், காட்டில், காலையில், முடிவில்

உயர்திணையில் பன்மைக்குப் பின்னர் வரும்.

| | |
|---|---|
| அவர்களில் | ஆசிரியர்களில் |
| மூவரில் | ஐவரில் |

4.7.2.2 -இடம்

உயர்திணைப் பெயர்களுடன் வரும்.

அவனிடம், கண்ணனிடம், அவர்களிடம்

உயிர்த்திணையிலும் (animate) ஒரோவழி வருதல் உண்டு.

பசுவிடம் பால் இல்லை

4.7.2.3 -இடத்தில்

ஒருசில இடங்களில் இது வருதல் உண்டு. உயர்திணைப் பெயர்களுடன் ஒரோ வழி வருதல் காணத்தக்கது.

அவர்களிடத்தில் எனக்கு நம்பிக்கை இல்லை
அவனிடத்தில் எனக்கு நம்பிக்கை இல்லை

4.7 2.4 -உள்

பன்மைப் பெயர்களுடன் 'இடையே' என்ற பொருளில் வரும். -இல் இத்துடன் பதில்நிலை வழக்கில் உள்ளது.

அவற்றில் இது நல்லது
அவற்றுள் இது நல்லது
அவர்களில் இவன் நல்லவன்
அவர்களுள் இவன் நல்லவன்

4.8 விளி வேற்றுமை

ஒருவரை அல்லது பலரை ஒன்றை அல்லது பலவற்றை அழைக்கும் இலக்கணக் கூறே விளி வேற்றுமை எனப்படும். விளிக்கப்படும் பொருளின் பெயரைப் பயன் படுத்தும் நிலையில் வேற்றுமை உருபுகள் வருவதாலேயே இதனை விளிவேற்றுமை என அழைப்பர். மேனாட்டு இலக்கணிகள் இதனை "vocative case எனக் கூறுவர்[1].

விளிவேற்றுமைக்கும் பிற வேற்றுமைகட்கும் அடிப்படையான வேறுபாடுகள் உண்டு. பிறவேற்றுமைகள் வாக்கியத்தில் காணப்படும் பொருள் தொடர்பைக் காட்டுவது என முன்னர்க் கண்டோம். (இதற்கு விதிவிலக்கானது உடைமைவேற்றுமை என்பதையும் கண்டோம்) ஆனால் விளிவேற்றுமைக்கும் வினைச் சொல்லுக்கும் எந்த விதமான பொருள் தொடர்பும் கிடையாது.

---

1 A vocative is a nominal element added to a sentence or clause, optionally, denoting the one or more people to whom it is addressed, and signalling the fact that it is addressed to them.
Quirk, et. al. 1976:372

இன்னும் தெளிவாகச் சொன்னால் விளி வேற்றுமை வாக்கியத்தின் அக உறுப்பாக இல்லாமல் புற உறுப்பாகவே உள்ளது என்பதை நாம் நன்கு உணர முடியும்.

கண்ணா, நீ வா!

கண்ணா, இராமன் வந்தான்

கண்ணா, நான் போகிறேன்

ஆகிய வாக்கியங்களில் காணப்படும் கண்ணா என்ற விளி வேற்றுமைச் சொல் வாக்கியங்களின் புற உறுப்பாகவே உள்ளது. இது இல்லாமலும் வாக்கியங்கள் உருவாக முடியும். நாம் கூறப் போகும் காரியத்தைக் கேட்கும்படியாக ஒருவரை அழைப்பதற்காகவே, இவ்வேற்றுமைச் சொற்கள் பயன்படுகின்றனவேயன்றி சொல்லப் போகும் செய்தியில் இவை எந்தப்பங்கையும் வகிப்பதில்லை. இந்நிலையில் இதுபிற வேற்றுமைகளிலிருந்து மாறுபட்டு நிற்கக் காண்கிறோம். எனினும் இவையும் பெயரின் அடிப்படையில் தோன்றுவதால் இவற்றையும் விளிவேற்றுமைச் சொற்கள் என்றும் இதனை விளிவேற்றுமை என்றும் கூறினார்கள் என எண்ணலாம். ஆனால் பெயர்கள் தான் விளியாக இருக்க வேண்டும் என்ற நியாயம் இல்லை.

இராமா! அண்ணன்!

கண்ணா! தம்பீ!

பெயர்கள் விளியாக வருவதுபோலவே

டேய்! ஏய்!

ஏடா! ஏடி!

போன்ற சொற்களும் விளியாக வருவதுண்டு. இவைகள் பெயரல்ல என்பதும் எனினும் விளிகளாகப் பயன்படுகின்றன என்பதும் நினைவு கூரத்தக்கன.

இத்தகைய விளிகள் வாக்கியங்களின் முன்னாலோ அல்லது பின்னாலோ வரும் தன்மையன.

அதில் தான், கண்ணா, நீ தவறினாய்
நான் வந்தேன் கண்ணா

என்றும் கூற முடியும். மேலும் டேய், அடி, எடி போன்றவற்றை வாக்கியங்களின் பின்னரும் முன்னரும் காணலாம்.

டேய், அவன் வந்தாண்டா
அடி, அவன் வந்தாண்டி

போன்ற வாக்கியங்கள் ஏராளமாகக் காணக்கிடக்கின்றன. பிற வேற்றுமைகளிலிருந்து இவ்வாறெல்லாம் வேறுபட்டு நிற்கிற காரணத்தால்தான் தொல்காப்பியரும்

விளியொடு எட்டே

எனக்கூறிப் போந்தார் எனக் கருதலாம்.

மேலும் இவ்வேற்றுமைச் சொற்கள் பிற வேற்றுமைச் சொற்களைப் போன்று வேற்றுமையடிகளைக் கொண்டு வருவதில்லை.

மரம்—மரத்தை, மரத்தால்........
ஆடு—ஆட்டை, ஆட்டால் .. ....
கயிறு—கயிற்றை, கயிற்றால் .......

போன்ற வேற்றுமையடிகள் இருக்க, விளிவேற்றுமையோ இத்தகைய வேற்றுமையடிகளைக் கொண்டு வருவதில்லை.

அகத்தியலிங்கம்!
ஆடே!

போன்று வருமேயன்றி வேற்றுமையடிகளைக் கொண்டு வருவதில்லை இந்நிலையிலும் இது பிற வேற்றுமைகளிலிருந்து மாறுபட்டுக் காணப்படுகிறது.

பொதுவாக இவ்வேற்றுமை பல வேறு நிலைகளில் உணர்த்தக் காண்கிறோம்.

4.8.1 —அன் > ஆ

இராமன் > இராமா
கண்ணன் > கண்ணா

கண்ணா நீ வா!
கண்ணா நான் வந்தேன்

போன்று

நீ வா கண்ணா!

போன்று வருதல் பெருவரவிற்றாக உள்ளது. எனினும்

இராமன்!
கண்ணன்!

என வருதலும் உண்டு. இங்கு ஒலி அழுத்தமே விளிவேற்றுமை உருவாக்கப் பயன்படுகின்றன.

4.8.2 -ஏ

| | | |
|---|---|---|
| கோ | - | கோவே! |
| வேந்து | - | வேந்தே! |
| கிளி | - | கிளியே! |
| பூ | - | பூவே! |
| தீ | - | தீயே! |

4.8.3 -இ > ஈ

| | | |
|---|---|---|
| தோழி | - | தோழீ! |
| தம்பி | - | தம்பீ! |

——o——

# உதவிய நூல்களும் கட்டுரைகளும்


| | |
|---|---|
| அகத்தியலிங்கம், ச. 1974 | உலக மொழிகள் (நான்காம் பகுதி) பொன்னகம், அண்ணாமலைநகர். |
| 1976 | 'உளப்பாட்டுத் தன்மைப் பன்மையும் வேறுபாட்டுத் தன்மைப் பன்மையும்' எட்டாவது கருத்தரங்கு ஆய்வுக் கோவை, தொகுதி 2, பக்.497 மைசூர். |
| 1977 | 'வேற்றுமை' ஒன்பதாவது கருத் தரங்கு ஆய்வுக்கோவை, தொகுதி 2, பக். 5, மதுரை. |
| கோதண்டராமன், பொன். 1979 | 'அடிநிலைக்கிளவி கோட்பாடு' மொழி யியல் 3.1, அண்ணாமலைநகர். |
| சண்முகம், செ. வை. 1978 | 'தொல்காப்பியரின் சொல்லியல் கோட் பாடு' மொழியியல் 2.1, அண்ணா மலைநகர். |
| தொல்காப்பியம் | சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை. |
| முத்துச்சண்முகன் 1977 | இக்காலத் தமிழ், முத்துப் பதிப்பகம், மதுரை. |
| வரதராசனார், மு. 1974 | மொழி நூல், சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகம், மதுரை. |
| Agesthialingom, S. 1964 | 'Tamil Numerals' South Asia Languages Progromme, University of Chicago, Chicago. |

1967 *A Generative Grammar of Tamil* Annamalai University, Annamalainagar.

1976 'The So-called Sociative case in Tamil *Dravidian Case System* [collected papers, Ed. by S. Agesthialingom & K. Kushalappa Gowda], Annamalai University, Annamalainagar.

1977 *A Grammar of Old Tamil with Special Reference to Patirruppattu*, Annamalai University, Annamalainagar.

1978 'Participial Noun in Old Tamil' *Journal of Annamalai University* [Humanity] Vol. XXX, Annamalainagar.

Androno, V 1969 *The Standard Grammar of Modern and Classical Tamil*, New Century Book House, Madras.

1972 'Notes on Adjective in Tamil' *Third Seminar on Dravidian Linguistics* [collected papers Ed. by S. Agesthialingom & S. V. Shanmugam], Annamalai University, Annamalainagar.

Arden, A H. 1972 *A Progressive Grammar of the Tamil Language*, The Chiristian Literary Society, Madras

Arlotto, A. 1972 *Introduction to Historical Linguistics*, Haugon Mifflin Company, New York.

Bloch, B 1972 *Outlines of Linguistic Analysis* (First Indian edition, Oriental Book Reprint Corporation, New Delhi.

Bloomfield
1933 — *Language*, Henry Holt & Company, New York.

1961 — *Language History from Language* [Ed. by Harry Hoijer] University of California, Los Angeles.

Elson, B & Pickett, V.
1962 — *An Introduction to Morphology and Syntax*, Santa Ana, California.

Gleason, A. H.
1955 — *An Introduction to Descriptive Linguistics* (Revised edition), Holt, Rinehart Winston, New York.

Harris, Z. S.
1951 — *Methods in Structural Linguistics*, The University of Chicago press, Chicago.

Hockett, C. F.
1954 — 'Two models of Grammatical Description' *Word* 10, Reprinted in *Readings in Linguistics* (Ed. by Martin Joos), American Council of Learned Society, New York.

1958 — *A Course in Modern Linguistics*, The Macmillian Company, New York.

Hughes, John, P
1962 — *The Science of Language*, New York.

Israel, M.
1974 — *The Treatment of Morphology in Tolkappiyam*, Madurai University, Madurai.

Kumaraswami Raja, N.
1975 — 'Tanization and Reflexivization' *The Third All India Conference of Linguitics*, Hyderabad.

Kothandaraman, P. 1969 — *A Contrastive Analysis af Tamil and Telugu*, Ph. D. Dissertation, Department of Linguistics, Annamalai University, Annamalainagar.

1972 — *Studies in Tamil Linguistics* Tamil Nuulagam, Madras.

Lakoff, George 1970 — *Irregularity in Syntax*, Holt, Rine hart&Winston, New York.

Louis H. Gray 1958 — *Foundations of Language*, The Macmillian company, New York.

Lyons, J. 1968 — *Introduction to Theoritical Linguistics*, Cambridge University press, London.

Malliga, S. (In Progress) — *The Instrumental case in Tamil*, M.A. Thesis, Department of Linguistics, Annamalai University, Annamalai nagar.

Matthews, P. H. 1974 — *Morphology*, Cambridge University press, London.

Nida, E. A. 1946 — *Morphology*, The University of Michigan Press, Michigan.

Nilson, Don, L.F. 1973 — *The Instrumental Case in English*, Mouton, The Hague, Paris.

Otto Jesperson 1934 — *Essentials of English Grammar*, Holt, Rinehart & Winston, New York.

1955 — *A Modern English Grammar on Historical principles*, George Allen & Unwin Ltd. London.

Palmatier, Robert, A 1972 — *A Glossary for English Transformational Grammar*, Meredith Corporation New York.

Pike, L. 1956 — *Tone Language* (3rd print) The University of Michigan Press, Michigan.

Quirk et al. 1976 — *A Grammar of Contemporary English* Seminar Press, New York.

Radhakrishnan, S. 1975 — *Genitive in Tamil*, M.A. Thesis Department of Linguistics, Annamalai University, Annamalainagar.

Roberts, Paul 1968 — *Modern Grammar*, Harcourt Brace & World Inc. Chicago.

Robins, R.H. 1967 — *A Short History of Linguistics*, Longmans, London.

Shanmugam, S.V. 1971 — *Dravidian Nouns - A Comparative Study*, Annamalai University, Annamalainagar

Subrahmanyam, P.S. 1968 — 'The Personal Pronouns in Dravidian' *Bullatin of the Deccan College Research Institute*, p. 28. Poona.

# பொருளடைவு


அடி (stem), 21
அடிக்கூறுகள் (selective categories). 67
அடிச்சொற்கள் (stem), 9, 10, 21, 22, 23, 24, 51, 196
அடிநிலைஇலக்கணக்கூறுகள் (primary grammatical categories),68
அடிநிலைக்கிளவி (basic form), 51
அடிப்படை உருவம் (basic form), 46
அடிப்படை எண்ணுப்பெயர்கள் (basic numerales), 129, 135
அடிப்படைச் சொற்கள் (basic vocabulary), 81, 131
அடிப்படைப்பொருள் (basic meaning), 20
அடிப்படை மாற்றுருபு (basic allomorph), 46
அடிவினா (wh—question), 95
அண்ணமாக்கம் (palatalization), 36, 42
அண்மைச் சுட்டுப்பெயர் (proximate demonstrative), 90, 92
அமைப்பு (structure), 2, 48, 74, 131, 167
அமைப்பு மொழியியலாளர்கள் (structuralists), 3, 4, 8, 58
அழுத்தம் (ஒலி) (accent), 17
அளவைப்பெயர் (measure nouns), 63
அஃறிணை(neuter), 67, 75, 76, 88, 91, 97, 100, 111, 129, 152, 172 173, 185
அஃறிணை ஒருமை (neuter singular), 110
அஃறிணை ஒன்றன்பால் (neuter singular), 166
அஃறிணைப் பன்மை (neuter plural), 113, 149
அஃறிணைப் பெயர்கள் (neuter nouns), 188, 222
ஆக்கப்பாடு (derivation), 9, 10, 12
ஆக்கப்பெயர்கள் (derived nouns), 12, 75, 201, 228
ஆக்கவினைகள் (constructive verbs), 227
ஆக்கவொட்டுக்கள் (derivational suffixes), 9, 10, 67

ஆண்பால் (masculine gender), 69, 75, 91, 92, 96, 122, 151, 152, 172, 173
ஆண்பால்—பிறபால் (masculine gender-other gender), 171
ஆயுதவேற்றுமை (tool case), 224, 227, 228

இசை ஒலி (voiced sound), 32, 40, 41
இசையல் (voiceless), 32, 41
இடப்பெயர் (place nouns), 75, 78, 251, 252, 254
இடம்பெயரல் (metathesis), 45
இடவேற்றுமை (locative case) 250—252
இடுகுறிப்பெயர் (arbitrary names), 75
இடை (clitics), 64, 73
இடைச்சுட்டுப்பெயர் (intermediate demonstrative), 92
இடைச்சொல் (clitics), 73 78, 241
இடைவினை (middle verb), 57
இணைப்பாக்கம் (composition) 10
இணைப்புச்சொல் (connectives), 62, 63
இணைப்புச்சொற்கள் (conjunctions), 62, 63, 65
இயற்கை எண் பகுப்பு (natural classification of numbers,) 155
இயற்கைப் பால் பகுப்பு (natural gender) 69, 166, 167
இயற்கைப் பெயர்கள் (inherent nouns), 75
இரட்டிப்பு (reduplication), 29, 51, 59
இரட்டைக்கிளவி (double words). 29
இரட்டைப் பன்மை (double plural), 94, 180—183
இரண்டாவது வினைத்திரிபு (second conjugation), 58
இருமை (dual), 69, 83, 152, 188
இலக்கண எண் பகுப்பு (grammatical classification of numbers), 155
இலக்கணக்கூறுகள் (grammatical categories) 6, 7, 12, 23, 27, 28, 55, 56, 68, 69, 70, 71, 72, 74, 152, 211
இலக்கணப் பால்பகுப்பு (grammatical gender), 69, 166, 167, 172
இலக்கணப் பொருள் (grammatical meaning), 19—21, 23, 30, 67
இலக்கணிகள் (grammarians), 72
இனச்சுட்டா அடைகள் (non-restrictive adjectives), 77
இனப்பிரிப்பு ஒட்டுகள் (classifiers), 169

ஈடுசெய் நீட்டம் (compensatory lengthening), 44

உடனிகழ்ச்சி வேற்றுமை (sociative case), 208, 230—232
உடைமைப் பதிலிடு பெயர்கள் (possessive pronouns), 130, 131
உடைமைப்பொருள் (genative meaning), 235, 236
உடைமை வேற்றுமை (possessive case), 241, 244
உடைமை வேற்றுமை உருபு (possessive case marker), 249
உணர்வான் தன்மை (experience), 237
உயர்திணை (rational class), 67,75,88,91,97,114,129,152,172,222
உயர்திணைப் பன்மை (rational plural), 147
உயர்வு ஒருமை (honorific singular), 99, 180, 181, 191—194
உயர்வுப் ஒருமைப் பெயர்கள் (honorific singular nouns), 191
உயர்வுச் சிறப்பு (honorific), 70, 127
உயர்வுச் சிறப்புப் பதிலிடு பெயர் (honorific pronouns), 93, 94
உயர்வுப் பதிலிடு பெயர்கள் (honorific pronouns), 93, 94
உயிர் இயைபு (vowel hormony), 40
உயிர்த்திணை (animate class), 69, 168, 170
உரசொலி (fricative), 34, 30
உயிரல்திணை (inanimate), 69, 168-170
உயிரில்லாதவை (inanimate), 75, 167
உயிருள்ளவை (animate), 75, 167
உரி (uri), 64, 73
உருபன் (morpheme), 12-24, 30, 31, 47- 49, 52, 59
உருபன் அடிப்படை மாற்றம் (morphologically conditioned alternation), 54
உருபன் அடிப்படையில் வரும் உருபு (morphologically conditioned allomorph), 54
உருபன்களைப் பகுத்தறிதல் (classification of morphemes), 13
உருபனியல் (morphology), 3
உருபு (morph) 6, 14, 27, 29,-31, 47-50, 205, 210, 217, 222 226, 228, 230, 233, 247, 256
உருபு அடிப்படை மாற்றம் (morphologically conditioned alternation), 60
உள் அமைப்பு (internal structure), 2
உள்ளடுக்குப் பதிலிடு பெயர் (universal pronoun), 114
உள்ளொட்டு (infix) ,18, 22 23

உளப்பாட்டுத் தன்மைப் பன்மை (inclusive first person plural), 84, 85, 164, 165
உறவுப் பெயர் (kinsnouns) 75, 79, 158
எச்சங்கள் (participles). 62
எண் (number) , 68. 86. 91, 154- 157
எண் (cardinals), 133-134
எண் பகுப்பு(number classification), 151, 152, 157, 161, 163
எண் பாகுபாடு (number classification),60
எண் பால் பகுப்பு (number gender classification), 151, 122
எண்ணடை (ordinals) 133
எண்ணடை (numerical adjective), 77, 135, 188, 189
எண்ணப்படுபெயர்கள் (count nouns), 68, 75, 77, 101
எண்ணப்படுபொருள் (count nouns), 102 131, 152
எண்ணுப் பதிலிடு பெயர்கள் (numerical pronouns) 106, 111, 115 135, 148
எண்ணுப் பெயர்கள் (numerals), 63, 75, 101, 131, 135, 137-146
எண்ணுப் பெயரடை (numeral adjective) 101, 134, 187,
எதிர்நிலை வழக்கு (contrast), 16, 33, 48
எதிர்மறை (negation), 7
எதிர்நிலை வழக்கு, (contrastive distribution)
எழுவாய் (subject), 68, 71, 74, 80, 125, 126, 202, 208, 211-217
எழுவாய் வேற்றுமை (nominative case), 210, 211, 220, 237
எளிமை (simplicity), 46
ஏவல் வினைவாக்கியங்கள் (imparative sentences), 214
ஒட்டுக்கள் (affixes). 5, 6, 9-12, 20-23, 51, 63, 67, 69, 71, 73 96, 159, 182, 183, 195-197, 243
ஒட்டுக்களை இணைத்தல் (suffixation), 52
ஒட்டுநிலை மொழிகள் (agglutinative languages), 21, 22
ஒட்டு வினா (do-question), 96
ஒருமனப் போக்கு (consistency), 46
ஒருமை (singular) 69, 86, 87, 89-93, 99, 126, 152, 153, 164, 188
ஒருமை-இருமை-பன்மைப் பகுப்பு (singular-dual-plural classification) 158, 161
ஒருமை-பன்மை-கூட்டம் (singular-plural-collective) 159

ஒருமை-பன்மைபகுப்பு (singular-plural classification),153-155,158
ஒருமை-பன்மை பெரு-அளவு (singular-plural-a large amount),159
ஒலி மாற்றம் (sound change), 34
ஒலியன் (phoneme), 13, 14. 26, 36-38
ஒலியன் அடிப்படை மாற்றம் (phonologically conditioned alternation), 54, 60
ஒலியன் அடிப்படையில் வரும் உருபு (phonologically conditioned allomorph), 54
ஒலியன் இயல் (phonemics), 3, 48
ஒலியன் உண்டாக்கும் இடம் (place of articulation), 37
ஒலியியல் (phonetics), 3, 5
ஒழுங்கான மாற்றம் (regular alternation), 60
ஒழுங்கில் மாற்றம் (irregular alternation), 60
ஒன்றன்பால்பெயர்கள் (nuter singular),92,151,152,172,173,185,187

ஓரசை உருபன் (monosyllabic word), 18
ஓரசை மொழி (monosyllabic language), 6
ஓரினமாக்கம் (assimilation) 36, 39-43, 46

கட்டுநிலை உருபன் (bound morpheme), 19, 21
கருத்தா (agent), 212
கருவிப்பொருள் (material case), 255
கருவி வேற்றுமை (instrumental case), 209, 223
காரகம் (karaka-deep case), 203
காரணப்பொருள் (causal meaning), 255
காரணவேற்றுமை (cauasal case), 229
கால எச்சம் (verbal participle), 71
காலக் கிளவி (time noun), 72
காலப் பெயர் (time nouns), 75, 253, 254
காலம் (tense), 71-75
கீழ் உயிர் (low vowel), 41, 42
குவி உயிர் (rounded vowel), 41, 42
குவியல் உயிர் (unrounded vowel), 41
குறிப்பிட்ட பொருள்கள் (specific), 222
குறிப்பிடாத பொருள்கள் (non-specific), 222
குறிப்புப் பெயரெச்சம் (appellative relative participle), 65, 242

குறிப்பு வினைச்சொற்கள் (appellative verb), 65
குறிப்பு வினையெச்சம் (appellative participle), 66
குறி வேற்றுமை (dative case) 234-238
குறைப்பாக்கம் (minus formation) 26
குறைப்பு உருபன் (subtractive morpheme), 25, 26
கூட்டு உருபன் (additive morpheme), 25, 26
கூட்டுப் பன்மை (mixed plural) 184

சிறப்புச் சுட்டுக்கள் (definite articles), 76, 77, 155, 157, 171
சிறப்புப் பெயர் (personal nouns), 75
சிறப்புப் பெயர் (proper nouns), 76-81, 106, 187, 188, 194
சுட்டுக்கள் (articles), 62
சுட்டுப் பெயர்கள் (demonstrative pronouns),63, 88-91, 95, 96, 1 51
சூனிய உருபு (zero morph) 27
செய்திவாக்கியங்கள் (declarative sentences), 95
செயப்படுபொருள் (object), 2 3, 217-222
செயப்படுபொருள் வேற்றுமை (accusative, objective case), 217
செயப்பாட்டுவினை (passive), 220
செயல்முறைகள் (process), 51
செயல்வினைகள் (action verbs), 221
செயல்நிலை இலக்கணக்கூறுகள் (functional categories) 68
செயவென் எச்சம், (infinitive), 71
சேய்மைச் சுட்டுப்பெயர் (remote demonstrative) 90, 92
சேய்மைவழி ஒலிமாக்கம் (distant assimilation) 39
சேர்க்கைமுறை (item and arrangement-IA) 3,52,54,55,58,59
சொல் (word) 3, 5, 6, 8, 10, 15, 18, 23
சொல்லடுக்கு (word and paradigm-WP) 3, 55-58
சொல்லாக்கம் (word formation) 10,12
சொல்லாக்கிகள் (lexical formatives), 11
சொல்லியல் (morphology) 2-9, 48, 56, 61, 153, 155
சொல்வகைப்பாடு (parts of speech), 61, 68
சொற்பாகுபாடு (parts of speech) 63, 65, 68
சொற்பொருள் (lexical meaning), 20, 30, 65, 67
சொற்பொருளியல் (semantics), 3

தருக்க எழுவாய் (logical subject), 212, 213
தற்கிழமை (inalienable), 246, 247
தற்சுட்டுப் பதிலிடு பெயர்கள் (reflexive pronouns), 81, 125-127
தன்முனைப்பு மாற்றம் (automatic alternations), 60, 61
தன்மை (first person), 82, 88, 89, 93, 97, 126
தன்மை ஒருமை (first person singular), 82
தன்மை ஒருமை பதிலிடுபெயர் (first person singular pronoun), 82, 83

தன்மை மூவிடப்பெயர் ((first person pronoun), 82
தனிநிலை உருபன் (free morpheme), 18
தனிநிலை மொழிகள் (isolating languages), 22
திணை(class), 68, 91, 122
திணைப் பகுப்பு (classification of class), 129
திரட் பெயர் (mass nouns), 75, 77, 103, 161, 162
திரியொட்டுக் கூறுகள் (inflected categories), 67
திரிவு (inflection), 9, 12
திரிவொட்டுகள் (inflectional suffixes), 9, 11
திரிவொட்டுச் சொற்கள் (inflectional words), 63
துணைநிலை இலக்கணக் கூறுகள் (secondary grammatical categories), 68
துணைநிலை வழக்கு (complementary distribuition), 16, 32, 48, 139

தெரிவு (selection), 111
தொடர் (phrase), 5, 6
தொடர் இயைபு (concord), 211
தொடர் உருபன் (continuous morpheme), 18, 24
தொடர் ஒலி (continuants), 41
தொடர்வழி ஒரினமாக்கம் (continuous assimilation), 39
தொடரல் உருபன் (discontinuous morpheme), 18, 24
தொடரியல் (syntax), 3-9, 48, 56, 61, 64, 154, 155
தொழிற்பெயர் (verbal nouns), 75, 21.

நாமடி ஒலி (retroflex), 34
நிபந்தனை எச்சம் (conditional participle), 7
நுண்பொருட்பெயர் (abstract noun), 75

நேர்ச்சுட்டு (diectic) 19, 90
நேரக்கிளவி (time word), 72
நேரப்பெயர் (time noun), 7, 78
நோக்க வேற்றுமை (purposive case), 209

பகிர்வுகள் (distribution), 48, 52
பகிர்வுப் பதிலிடு பெயர்கள் (distributive pronouns), 121-124
பகிர்வுப்பொருள் (distributive meaning), 124
பகுப்பொலியன்கள் (segmental phonemes) 17
பகுதிநிலை ஓரினமாக்கம் (partial assimilation), 40
பட்டப்பெயர் (title names), 79
படர்க்கை (third person), 82, 88 93 97
படர்க்கை உயர்வு பதிலிடு பெயர்கள் (third person honorific pronouns), 94
படர்க்கைப் பதிலிடு பெயர்கள் (third person pronouns), 88, 151
படர்க்கைப் பெயர்கள் (third person nouns), 88
படர்க்கை மூவிடப் பெயர்கள் (third person pronouns), 90,91,127
பதில்நிலை வழக்கு (free variation), 16, 33, 182, 184
பதிலிடு சுட்டு (anaphoric), 89, 90
பதிலிடு பெயர்கள் (pronouns), 62, 63, 75, 79-82, 93, 102, 103, 106, 111, 112, 114, 116, 121, 125, 126, 130, 147, 148, 154, 161-164, 171, 215, 222
பதிலிடுபெயர்களின் வகைப்பாடு (classification of pronouns), 81
பதிலீடு (suppeletion), 28, 51
பயனிலை (predicate). 68, 74, 195
பரஸ்பர ஓரினமாக்கம் (reciprocal assimilation), 38
பரஸ்பரப் பதிலிடு பெயர்கள் (reciprocal pronouns), 127
பருப்பொருட்பெயர் (concrete noun), 75,
பலர்பால் (epicene plural), 96, 99, 147, 151, 152, 17 , 182
பலர்பால் பெயர்கள் (epicene plural nouns). 92, 178
பலவின்பால்பெயர்கள் (neuter plural nouns), 9 , 151, 152, 172, 173, 188, 197
பன்மை (plural) 16,29,69,77,83,86-91,99,126,132,153,164,188
பன்மைப் பதிலிடு பெயர்கள் (plural pronouns), 93, 94
பால் (gender), 68, 69, 86-91, 122

பால்பகா அஃறிணைப் பெயர்கள் (numberless neuter nouns), 199
பால்பகுப்பு (gender system), 69, 70, 151, 154, 156, 166, 171, 172
பிறமுனைப்பு மாற்றம் (non-automatic alternation), 60, 61
பிறிதின் கிழமை (alienable), 246, 247
பின் உருபுகள் (post-positions), 198, 221
பின் உயிர் (back vowel), 41, 42
பின்வழி ஓரினமாக்கம் (regressive assimilation), 37, 38
பின்னங்கள் (fractions), 145
பின்னொட்டு (suffix), 18, 22-24
புதைநிலை (deep), 69, 126, 152, 202, 204, 207, 213, 114, 216, 217
புதைநிலை அமைப்பு (deep structure), 4, 204
புறநிலை (surface phenomenon), 69, 152, 157, 202, 204, 207, 213, 214, 216, 217
புறநிலை அமைப்பு (surface structure), 4, 204
பெண்பால் (feminine) 69, 75, 96, 117, 121, 151, 172-174
பெண்பால்-பிறபால் (feminine gender - other gender), 170
பெயர் (noun), 62-64, 67, 68, 73, 161, 201
பெயர் அடைகள் (adjectives), 26, 62,—67, 96, 192, 130, 133, 134, 136, 150, 155—157
பெயர்ச் சொற்கள் (nouns), 9, 11, 66, 67, 71, 73, 76, 79, 80, 151, 156, 157, 170, 197, 241
பெயர்த் தொடர் (noun phrase), 5, 79
பெயர்ப்பாகுபாடு (noun classification), 76
பெயர் வகைப்பாடு (noun classification), 68, 75
பொதுச் சுட்டுகள் (indefinite article), 171
பொதுப் பெயர் (common nouns), 76-78, 115, 117, 122, 123, 125, 148, 149, 187
பொருள் (lexical meaning), 8, 12, 131
பொருள் (notional), 64, 73
பொருள் (semantics), 167, 206
பொருள் வேற்றுமை (material case), 3, 226, 227

மரப்பெயர் (tree names), 75, 79
மனித இனம் (human), 69, 170

மனித இனம்—பிற இனம் (human—non human), 69
மாற்றம் (change), 196
மாற்றடி (stem alternants), 51
மாற்றம் (alternation), 59
மாற்றம் (modification), 51
மாற்றிலக்கணக் கோட்பாடு (transformational theory), 204
மாற்றிலக்கணத்தார் (transformationalists), 5
மாற்றீட்டு உருபன் (replacive morpheme), 25, 27
மாற்றீடு (replacive), 51
மாற்று (alternant), 59
மாற்றுருபு (allomorph), 27, 0—33, 46—52, 60, 136, 158—140, 142, 144
மாற்று விதிகள் (transformational rules), 204
முதல்வினைத்திரிபு (first conjugation), 58
முதலடி (absolute form), 83, 84
முதலடிச்சொல் (absolute form), 196
முழு எதிர்நிலை வழக்கு (minimal pair), 47
முழுநிலை ஒரினமாக்கம் (total or complete assimilation), 40
முழுமை பதிலிடு பெயர்கள் (pronoun of totality), 129, 171, 173
முன்னுருபு (preposition), 62, 63, 67, 198
முன்னுயிர் (front vowel), 41, 42
முன்னொட்டு (prefix), 18, 22, 24
முன்வழி ஒரினமாக்கம் (progressive assimilation), 37
முன்னிலைப் பன்மைப் பெயர் (second person plural), 87
முன்னிலைப் பன்மைப் பதிலிடு பெயர் (second person plural pronun) 87
முன்னிலை (second person), 82, 86, 89, 93, 97, 106
முன்னிலை ஒருமைப் பெயர் (second person pronouns), 86
முன்னிலை உயர்வுப் பதிலிடு பெயர் (second person honorific pronoun), 93
மூவிடப் பெயர்கள் (personal pronouns), 63 81, 82, 127, 158, 170, 172, 173
மெல்வினைகள் (weak verbs), 32, 57
மேல் உயிர் (high vowel), 41, 42

மேலொட்டு (suprafix / simulfix), 24
மேல் பகுப்பொலியன்கள் (suprasegmental phoneme), 17, 18

வருமுறை (distribution), 18
வல்வினைகள் (strong verbs), 33, 57
வல்லொலி / வெடிப்பொலி (plosive), 34, 40, 41
வரையறையில்லா எண்ணுப்பெயர்கள் (indefinite numerals), 132, 146
வரையறையில்லா அஃறிணைப் பன்மை எண்ணுப்பெயர் (indefinite neuter plural numeral), 149
வரையறையில்லாப் பதிலிடு பெயர்கள் (indefinite pronouns), 102, 103, 107, 111
விதிமுறை (item and process—IP), 3, 48, 55, 59
விபக்தி (surface case), 196, 203
வியப்புச்சொற்கள் (interjections), 62, 63, 65
விலக்கீட்டுத் தன்மைப்பன்மை (exclusive first person plural), 84, 85, 164
விளிவேற்றுமை (vocative case), 258—261
வினா அடிகள் (interrogative pronouns), 95, 96, 99, 102
வினாப் பதிலிடு பெயர்கள் (interrogative pronouns), 95, 102, 103 130
வினாப்பெயர்கள் (interrogative pronouns), 81, 95, 98—103. 114, 171, 173, 179
வினா வாக்கியங்கள் (interrogative sentences), 95
வினை (verb), 62—68, 73, 161
வினை அடை (adverb), 62—67. 125, 134. 255
வினைச் சொல் (verb), 9—12, 66, 67, 71, 72, 155, 157, 195, 197
வினைத் தொடர் (verb phrase), 79
வினைப்பாங்குகள் (moods), 72
வினையாலணையும் பெயர்கள் (participial nouns), 171, 173, 186, 187, 189, 201
விளிப்பெயர்கள் (vocative nouns). 81
வேர்ச்சொற்கள் (roots), 20, 21, 27
வேற்றினமாக்கம் (dissimiliation) 36, 43
வேற்றுமை (case), 68, 70—75,195—210,218-229,241,242,250, 252

வேற்றுமை அடி (oblique form), 83—87
வேற்றுமை இலக்கணிகள் (case grammarians), 237
வேற்றுமை உருபு (case marker), 73, 74, 156, 195, 197, 198, 200—202, 206, 208
வேற்றுமைச் சொற்கள் (casal words). 115, 195
வேறுபாடு (seperation, distinction, modification), 196

# MORPHOLOGY

## PART I

## NOUN

BY

PROF. S. AGESTHIALINGOM

Morphological Theories and explanations

Language and its structure

Different Kinds of Morphological Changes in Tamil

Noun Classification in Tamil

Several Kinds of Pronouns in Tamil

Numerals in Tamil

Gender-Number system in Tamil

Case System in Tamil